# ஜீவா—நாரண துரைக்கண்ணன்

இராம. குருநாதன்



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

ஜீவா—நாரண துரைக்கண்ணன்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்திரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

நாகார்ஜுன மலைச்சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.( பட உதவி: நேஷனல் மியூசியம், புது தில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

# ஜீவா—நாரண துரைக்கண்ணன்

இராம. குருநாதன்

சாகித்திய அகாதெமி

*Jeeva-Narana.Duraikkannan* -Monograph in Tamil by Rama Grunathan. Sahitya Akademi, New Delhi, 2002 Rs.25

© சாகித்திய அக்காதெமி

முதல் பதிப்பு 2002

ISBN 81-260-1536-5

**சாகித்திய அக்காதெமி**

இரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை,
புது தில்லி 110001.

விற்பனை
'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி 110 001

மத்தியக் கல்லூரி வளாகம், பல்கலைக்கழக நூலகக்
கட்டடம், டாக்டர் அம்பேத்கார் வீதி, பெங்களூர் 560 001.

சி ஐ.டி. வளாகம், டி டி.டி.ஐ. அஞ்சல், தரமணி,
சென்னை 600 113.

ஜீவன் தாரா பில்டிங், 4ஆவது மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா 700 053.

172, மும்பய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், மும்பய் 400 014

விலை. ரூ 25

அச்சிட்டோர்: ஜோதி எண்டர்பிரைஸ், சென்னை - 5

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | வாழ்வும் வளர்ச்சியும் | 09 |
| 2 | தொண்டுள்ளமும் தோழமை உணர்வும் | 20 |
| 3. | துரைக்கண்ணனின் படைப்புலகம் | 57 |
| 4. | இலக்கியம் பற்றி... | 105 |
| 5. | பத்திரிகையாளர். | 110 |
| 6. | எஞ்சி நிற்கும் புகழ் | 125 |
| 7. | பின் இணைப்பு | 127 |
| 8. | துணைநூல்கள் | 133 |

# ஆசிரியர் உரை

ஜீவா. என்றழைக்கப்பட்ட நாரண துரைக்கண்ணன் முப்பதுகளின் கால கட்டங்களில் புதுமை எழுத்தாளா ராக அடையாளப்படுத்தப் பெற்றார். சுமார் ஐம்பது ஆண்டுகாலங்களாக எழுத்துப் பணியில் தடம் பதித்துத் தமக்கென்று ஒரு முத்திரை பெற்றவர். முப்பது ஆண்டு களுக்கும் மேலாக, ஆனநத போதினி, பிரசண்ட விகடன் ஆகிய இதழ்களில் ஆசிரியர் பணிபுரிந்து எழுத்தாளர் பலரை உருவாக்கிய பெருமை இவருக்கு உண்டு. நாடறிந்த எழுத்தாளர்கள் என்ற தகுதியைப் பின்னாளில் பலர் பெறுவதற்குத் துணை நின்றதால் எழுத்தாளர்களின் எழுத்தாளராகப் போற்றப் பட்டவர். சமூகச் சிந்தனைகள் கொண்ட பல கதைகளுக்கு உடைமையாளர் இவர். நாவல், சிறுகதை, நாடகம் கட்டுரை மொழிபெயர்ப்பு முதலிய இலக்கிய வகைகளில் தம் ஆற்றலைக் காட்டி நூற்றுக்கு மேலான நூல்களைப் படைத்தவர். தமிழ்ச் சான்றோர்களுடனும் அரசியல் தலைவர்களுடனும் கலை இலக்கியப் பெரு மக்களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்ட இவர், அவர்களோடு இணக்கமாகவும், இனிமையாகவும் பழகி வந்த 'சமரசவாதி'. மொழி, பண்பாடு ஆகிய தளங்களில் நின்று இலக்கியம் படைக்க வேண்டும் என்ற குறிக்கோளைக் கொண்டவர். பண்பாட்டு உறவுப் பாலமாக இந்திய இலக்கியம் ஒருமை காணவேண்டும் என்ற உணர்வினர்.

இத்தகைய பெருமைக்கும் சிறப்புக்கும் உரியவரான திரு நாரண. துரைக்கண்ணன் பற்றிய 'இலக்கியப் பதிவுகள்' தமிழில் குறைவே மு. பரமசிவம், தி.நா. அறிவொளி, வி.எஸ்.மணி, முகம் மாமணி முதலியோர் துரைக் கண்ணனின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைத் தொகுத்துத் தந்துள்ளார். இந்தநூல் உருவாக்கம் பெறுவதற்கு

அவர்கள் எழுதிய நூல்கள் பேருதவியாக இருந்தன. குறிப்பிடத்தக்க செய்திகள் பலவற்றையும் அவர்கள் பதிவு செய்துள்ளனர். துரைக்கண்ணன் படைப்புகள் குறித்த விரிவான பார்வைகள் மிகச் சிலவே அந்நூல்களில் இடம் பெற்றன. படைப்பிலக்கியம், இதழியல்துறை ஆகிய இரண்டிலுமாக 'ஜீவா,' ஜீவனுள்ள கருத்துகள் பலவற்றை எவ்வெவ் வகைகளில் தந்துள்ளார் என்பதை இந்த நூல் ஓரளவு விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக் காட்டுகிறது.

எனக்கு, இந்த அரியதொரு வாய்ப்பை சாகித்திய அகாதெமி வழங்கியுள்ளது. இந்திய இலக்கியத்திற்கு அது செய்துவரும் பணி அளப்பரியது. சாகித்திய அகாதெமிக்கும், அதன் உறுப்பினர்கள், பொறுப் பாளர்கள் ஆகியோர் இத்தகைய நல்ல வாய்ப்பை நல்கியமைக்கும் நன்றி கூறவேண்டும். துரைக்கண்ணன் பற்றிய சில நூல்களைத் தந்துதவிய பேராசிரிய நண்பர் மா. ரா. அரசு, திரு ப. சரவணன் ஆகியோர்க்கும் தனிப்பட்ட முறையில் நன்றி செலுத்துகிறேன்.

**இராம. குருநாதன்.**

# 1

# வாழ்வும் வளர்ச்சியும்

> 'எந்தவொரு கால கட்டத்திலும் இலக்கிய ஆர்வத்தைத் தூண்டவும், வளர்க்கவும் சிறந்த படைப்புகள் மட்டும் போதுமானதாவதில்லை. அரவணைத்துச் செல்லும் பண்பும் ஊக்குவிக்கும் இயல்பும் தயக்கமின்றித் தலைமையை தாங்க முன்வரும் மன உறுதியும் படைத்த சில அறிஞர்கள் தேவைப்படுகின்றனர். இந்த நூற்றாண்டில் தமிழ் மொழிக்கு வாய்ந்த அத்தகைய யோரில் நாரண துரைக்கண்ணனும் ஒருவராவர். இளம் எழுத்தாளரிடையே இலக்கிய ஆர்வத்தைத் தூண்டிப் பிரகாசமடையச் செய்த அவருடைய பணி வெகுகாலம் போற்றப்படும்.'

*-அசோகமித்திரன் கட்டுரைகள்*
*என்ற நூலிலிருந்து*

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் தமிழகத்தின் புதிய விழிப் புணர்ச்சியை ஏற்படுத்தியதற்குப் பத்தொன்பதாம் நூற்றாண்டு வடிவமைத்துத் தந்தது. சமூகப் பொருளாதார அரசியல் போக்குகள் அந்நியரின் ஆட்சிக்கு உட்பட்ட காலமாக இருந்தபோதிலும், தமிழகத்தில் சமூக சீர்திருத்தம், ஆன்மிக உணர்வு, விடுதலைத் தாகம் முதலியவை இலக்கிய ஆர்வத்திற்குத் தூண்டுகோல்களாக அமைந்தன அவ்விரு கால கட்டங்களிலும் சமய, சமூகச்சிந்தனை யாளர்கள் மறு மலர்ச்சிக்கு ஊற்றுக்கண்களாக இருந்து, தத்தம் கருத்துகளால் இலக்கிய வடிவங்களில் மாற்றத்தையும் புதுமையையும் புகுத்த விழைந்தனர்.

அவ்விரு நூற்றாண்டுகளிலும் தேசியம், காந்தியம் ஆகியவை முன்னுரிமை பெற்றிருந்தன விடுதலை இயக்கத்திற்கான வேர்கள் ஆழமாகவும் அகலமாகவும் ஊடுருவத் தொடங்கின. சமூக உணர்விலும் ஆன்மிக நோக்கிலும் புதிய இரத்தம் பாய்ச்சிய சான்றோர் பெரு மக்கள், தத்தம் சிந்தனைகளால் தமிழையும்,

தமிழர்களையும் வளப்படுத்த முயன்றனர். இத்தகையோருக்கு இலக்கியம் துணை நின்றது. சமூக மறுமலர்ச்சிக்கும், புதியதொரு இலக்கிய ஆர்வத்திற்கும் மக்களைத் தூண்டுதற்கு முனைந்தனர், இலக்கியப் படைப்பாளர்கள் அத்தகைய படைப்பாளர்களுள் ஒருவர்தாம் நாரண துரைக்கண்ணன்

சென்னை போன்ற பெருநகரங்களுக்கு ஏதாவது ஒரு நோக்கத்தை மனங்கொண்டு குடிபுகுவோர் அன்றும் உண்டு. இன்றும் உண்டு. அப்படிக் குடிபுகுந்த குடும்பங்களில் நாரண. துரைக்கண்ணன் குடும்பமும் ஒன்று மாமல்லபுரத்திற்கு அருகில் உள்ள கழிப்பட்டூர் என்ற ஊரில் நாரண. துரைக்கண்ணன் குடும்பம் வசித்து வந்தது. பொருளாதார மேம்பாடு கருதி அக்குடும்பம் மயிலாப்பூரில் குடி அமர்ந்தது.

மயிலையில் திரு. க.வே.நாராயணசாமி, அலர்மேல்மங்கை ஆகியோரின் தவப் புதல்வனாக 24-08-1906 இல் (பின்னாளில் நாரண துரைக்கண்ணன் என்று அழைக்கப்பட்ட) நடராசன் பிறந்தார் துரைக்கண்ணு என்பது அவருக்கு அமைந்த செல்லப்பெயர். அவருடைய தந்தை கலை, இலக்கிய ஈடுபாடுடையவர். இவற்றில் நாட்டங்கொண்டே நடராசன் என்று பெயரிட்டார் போலும்.

தந்தையறிவு மகனறிவு என்பதற்கு ஏற்ப, துரைக்கண்ணனிடம் இளமையிலிருந்தே கலைகளில் நாட்டம் மிக்கிருந்தது தந்தையிடம் இருந்த இசைப்பயிற்சியும், நுண்கலை உணர்வும் வழிவழிப் பண்பாகத் துரைக்கண்ணனிடம் படிந்திருந்தது. கலைகளில் ஈடுபாடு கொண்ட காரணத்தால் ஓவியம், இசை ஆகிய கலைகளைப் பயின்றார். இவற்றிற்குத் தந்தையே பயிற்சியாளராக ஆனார். நாடகம், நடிப்புப்பயிற்சி ஆகியவற்றிற்கும் தந்தையே குருவாகத் திகழ்ந்தார். இளம்வயதிலேயே தம்மை ஒரு கலைப்பித்தராக வளர்த்துக் கொண்டார்; நுண்கலைக் காதலராகவே மாறினார்; தமிழ் இசையிலும் தமிழ் இலக்கியத்திலும் தமிழர்தம் கலைகளிலும் பேரார்வம் வளர்வதற்கு நாற்றங்காலாக அமைந்தது, இளமை வாழ்க்கை.

பள்ளிப்படிப்பு என்பது அக்காலத்தில் திண்ணைப் படிப்பாக அமைந்திருந்தது. திருவல்லிக்கேணியில் இருந்த 'இந்து பிரைமரி' பள்ளியில் ஐந்தாம் படிவம் வரை படித்தார். இடையில் தடைப்பட்ட படிப்பு, சிலகாலம் வரை தொடர்ந்தது. திருவல்லிக்கேணியில் உள்ள கெல்லட் உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றிய ஆங்கில மொழி ஆசிரியர் மைக்கேல் என்பவரிடம், ஆங்கில மொழிப் பயிற்சி

பெற்றார். தமிழொடு ஆங்கிலத்தையும் மறந்தறியாத இலக்கியவாதி டி.என் சேசாசலம் அவர்களிடம் (டி.என். சேசாசலம் 'கலாநிலையம்' என்ற இலக்கிய இதழை நடத்தியவர்; எழுத்தாளர் பரணீதரனின் தந்தை) ஆங்கிலக் கல்வியோடு அதன் இலக்கியத்தையும் கற்றுக் கொண்டார்.

கலை ஆர்வம் மிக்கவரான துரைக்கண்ணன், இசையையும் அதன் நுட்பங்களையும் கேள்வியறிவால் மட்டுமின்றி, அத்துறையில் வல்லவராக விளங்கிய கலைஞர்களிடமும் கற்றுக் கொண்டார். ஆறுமாத கால எல்லையில், நாதசுரக்கலையை நாதமுனி என்பவரிடம் கற்றார். பிடில் வாசிப்பதை ஆந்திரக் கலைஞரான சாத்திரியாரிட மிருந்து அறிந்திருந்தார். இசைக்கலை ஆர்வம் கொண்ட துரைக்கண்ணன், ஓவியம் வரைவதிலும் மிகுந்த ஈடுபாடுடையவராக இருந்துள்ளார்; இத்தகைய ஆர்வமும் ஈடுபாடும் இவரிடம் இளம்வயது முதலே அரும்பி வளர்ந்தமைக்கு, அவருடைய தந்தையார் விதைத்த கலை உணர்வாகிய வித்தே காரணம் எனலாம்.

கலைபயில் தெளிவும், கல்விப்புலமையும் கொண்ட துரைக் கண்ணனைத் தடைபடச் செய்தது தந்தையின் இறப்பு தந்தை இறந்தபோது துரைக்கண்ணனுக்கு வயது பன்னிரண்டு. பள்ளிக்கல்வி வாழ்க்கைக் கல்வி ஆகிய இவை இரண்டிலும் காலூன்ற முடியாத நிலைக்கு அவரது வயதும் தந்தையின் மரணமும் காரணமாயின. கலைச்சுவையைக் குடும்பச்சுமை அழுத்தியதால் பொருள் தேடும் படலத்திற்குப் புகவேண்டியிருந்தது.

துரைக்கண்ணனின் குடும்பச் சொத்தாக இருந்த வீடுகள், அவரது பதினான்காம் வயதில் விற்கப்பட்டன.கடன்கள் தீர்ந்து வருமானத்திற்கு வேறு முயற்சிகளை மேற்கொள்ளும்படி ஆனது. இருபது ரூபாய் சம்பளத்தில் கையெழுத்துப்படி எடுக்கும் வேலையில் சேர்ந்தார். இளமையில் வறுமையின் பிடியில் சிக்கித் தவித்தார் தொழிலில் ஈடுபாடும் ஊக்கமும் கொண்டு நேரம் கிடைத்தபோது, அச்சுக் கூடத்தில் அச்சுக் கோக்கும் பயிற்சி பெற்றார். அச்சுத் தொழிலில் உள்ள பல்வேறு நுட்பங்களை அறிதற்கு இது வாய்ப்பாயிற்று. இச்சூழ் நிலையில்தான் மயிலையில் உள்ள கிருஷ்ணாம்பேட்டைக்குக் குடிபெயர்ந்தார்.

மயிலையில் அறிஞர் பெருமக்கள் பலர் வாழ்ந்து வந்தனர் மயிலை தந்த மாமணிகளாகத் தமிழறிஞர்களின் சுற்றம் ஒளி கூட்டியது. துரைக்கண்ணனுக்கும் ஒளி ஊட்டியது. சிந்தனைச் சிற்பி சிங்கார

வேலன், கா.நமசிவாயர், உ.வே.சாமிநாதய்யர். மு.இராகவையங்கார், வை.மு.சடகோபாச்சாரியார், கோபால கிருஷ்ணமாச்சாரியார் திரு.வி கல்யாணசுந்தரனார்., சச்சிதானந்தம் பிள்ளை, மகாவித்வான் சண்முகம் பிள்ளை, பா.வே.மாணிக்க நாயகர், கம்பர் விலாசம் சி.ராஜகோபால அய்யங்கார், அபிதான சிந்தாமணி ஆசிரியர் சிங்கார வேலு முதலியார், குப்புசாமி முதலியார், சீனி.வேங்கடசாமி முதலியோர் மயிலையையும் மயிலையைச் சுற்றிய பகுதியையும் தம் உறைவிடங்களாகக் கொண்டனர். சான்றோர் பலர் வாழும் ஊராகவே திகழ்ந்த மயிலை, துரைக்கண்ணனுக்குப் புதிய திசை காட்டத் தொடங்கியது. அறிவுசான்ற உறவு வளர்வதற்கு வாயில் அமைத்துத் தந்தது.

கிருஷ்ணாம்பேட்டையின்கண் உள்ள தீர்த்தாலீச்சுரர் கோயிலுக்குச் சென்று நாள்தோறும் வழிபாடு செய்வது துரைக் கண்ணனுக்கு வழக்கம். அப்பகுதியைச் சார்ந்த சிங்கார வேலு முதலியாரும் குப்புசாமி முதலியாரும் துரைக்கண்ணனிடம் மதிப்பும் அன்பும் கொண்டிருந்தனர். அக்கோயிலில் கணீரென்று பக்தி உணர்வு மேலிடப் பாடிய துரைக்கண்ணனிடம் சிங்கார வேலனாருக்கு நட்பு ஏற்பட்டது. துரைக்கண்ணனின் தமிழார்வத்தை அறிந்து கொண்ட குப்புசாமி முதலியார், தாமே மனமுவந்து அவருக்குத் தமிழ் கற்பிக்க முன்வந்தார். துரைக்கண்ணன் பக்தி இலக்கியத்தில் மிகுந்த ஈடுபாடு கொள்ளக்காரணமாய் இருந்தவர் இவரே[1] இவர் துரைக்கண்ணனுக்கு நன்னூல் போன்ற இலக்கண நூல்களையும் அறியுமாறு செய்தார். அப்போது சென்னை கிறித்தவக் கல்லூரி, தமிழ்ப் பேராசிரியராக இருந்தவர் சற்குணர். துரைக்கண்ணனின் திறனை அறிந்த காரணத்தால் அவரிடம் தனி அன்பு செலுத்தினார். தம் அறிவுக் கண்ணைத் திறந்து விட்டவர் சற்குணரே என்று உள்ளார்ந்த அன்புணர்வோடு பலகாலம் சொல்லி இன்புற்றவர் துரைக்கண்ணன்.

சான்றோர் பலரின் நட்பு அவருக்குக் கிட்டியதால், தம்மால் இயன்றளவு தமிழ் இலக்கியத்தைக் கற்றுக் கொண்டார். யாவரிடமும் பழகும் இனிய இயல்பும் ,தோழமை உணர்வும் பிறரை மதித்துப் போற்றும் பண்பும் இவரை உயர்த்தின. தமிழார்வம் மிக்கிருந்ததால் அறிஞர் பேருரைகளைக் கேட்கச் செல்வது இவரது வழக்கம். தமிழறிஞர் பலரிடம் மனமுவந்து பழகுவதற்கு அது வாய்ப்பாக அமைந்தது. திரு.வி.க., மணி திருநாவுக்கரசு, கா.நமசிவாய முதலியார் முதலியோரை நட்பாகக் கொண்டிருந்தமை இவரது தமிழார்வம் வளரக் காரணமாயிற்று.

அச்சுத் தொழில் பயிற்சியோடு மெய்ப்புத் திருத்துவதும் இவருக்குக் கைவந்த கலையாயிற்று. பின்னாளில் இதழாசிரி யராவதற்கும், எழுத்தாளராவதற்கும் இவர் பிறரிடம் கற்றுத் தெளிந்த கல்வியும் தொழிலில் கொண்ட ஈடுபாடும் காரணமாக இருந்துள்ளன. சமயப்பணியில் இறங்கி 'உழவாரப்படையால் கோயில் திருச்சுற்றுக்களைத் தூய்மைப்படுத்திய தொண்டுள்ளம் ஒரு புறம்! எழுத்தாளனாக இருந்து தமிழ்ச் சமுதாயத்தின் மேம் பாட்டிற்குரிய ஆக்க வழிச்சிந்தனைகளை அள்ளி வழங்கும் நெஞ்சம் மறுபுறம்! இவ்வாறு தம் வாழ்வின் குறிக்கோள், செம்மை சான்ற அறச் சிந்தனையிலும் சமுதாய அக்கறையிலுமாகச் செல்ல வேண்டும் என்பதை நெஞ்சுரமாகக் கொண்டிருந்தார். அவற்றை எழுத்து வடிவில் மக்களுக்கு வழங்கும் வேட்கை தீராததாக வளர்ந்தது.

இலக்கிய வழியிலான கல்வியும் சான்றோர் தொடர்பும் பெற்றிருந்த காரணத்தால் அவருடைய வாழ்க்கை ஓர் இலட்சியக் கனவாகவே உருவெடுத்திருந்தது. மறைமலை அடிகளிடம் இலக்கிய இலக்கணப் பாடங்களையும், சமய நூல்களையும் கற்றும் கேட்டும் அறிந்தபடியால் தம் கனவு நனவாகும் என நம்பியவர் துரைக்கண்ணன்.

இலக்கியக்கல்வி, கற்பனையையும் உணர்ச்சியையும் மிகு விக்கும் என்பது பொது வழக்கு.இஃது உண்மையே என்பது போல, இலக்கியப் படைப்பாளர்களின் வாழ்க்கை அமைந்ததற்குச் சான்றுகள் பல உள்ளன. புலமைக்குச் சொத்து வறுமையே என்றழைக்கப் படுவதுபோல, எழுத்தாளர் பலரின் வாழ்க்கையை வறுமை அலைக் கழிக்காமல் இருந்ததில்லை. துரைக்கண்ணனும் இதற்கு விதிவிலக்கு அல்லர். வறுமைப் புயலில் சிக்கித் தவித்த வாழ்க்கை நிகழ்ச்சிகள் பல, அவரது உடைமைகளாயிருந்தன.எழுத்துத் தொழில், இலட்சியம் மிக்கதுதான். இலட்சங்களை அள்ளி வந்து இல்லக் கதவுகளைத் தட்டும் என்று எதிர்பார்க்கமுடியாது. துரைக்கண்ணன் வாழ்க்கையில் இருந்தது இலட்சியம் மட்டுமே!

துரைக்கண்ணன் 1932 இல் , அதாவது தமது இருபத்தைந்தாவது வயதில் திருமணம் செய்து கொண்டார். இத்திருமணத்திற்கு முன் நடந்த நிகழ்ச்சி, அவரது வாழ்க்கையில் மறக்க முடியாததாக இருந்துள்ளது. 'யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்' என்ற புதினம் தொடராக இதழில் வெளிவந்து நூல்வடிவம் பெற்றது. நூலாக வந்த போது, நாலைந்து குடும்பத்தினர் இவர் மீது வழக்குத் தொடுத்தனர். தமது குடும்பத்தின் அசல் வாழ்க்கையை அம்பலப்படுத்திவிட்டார்

என்று குற்றம் சாட்டினர். அவர் எழுதி வந்த செய்தி அவருக்குப் பெண் கொடுக்க இருந்த் குடும்பம் பற்றியதாகவும் இருந்தது. பெண்வீட்டார் அத்தொடர்கதை தம் குடும்பக் கதையாக இருப்பதை அறிந்து, அவருக்கு மணமுடித்தால் திருமணமான பின் எப்படிச் செயல்படுவாரோ என்பதனை எண்ணி அஞ்சிப்பெண் கொடுக்கவும் மறுத்து விட்டனர் பொதுவாகவுள்ள குடும்ப நடப்பு நிகழ்ச்சியை எழுதப் போய், தமது திருமணச்சூழ்நிலைக்கு மாறாக அமைந்ததை எண்ணி அமைதி அடைந்தாரே யொழிய, மணப்பேச்சு நின்று போனதற்குக் கவலை கொள்ளவில்லை. அதன்பின்னர் மீனாம்பாள் என்ற பெண்ணை மணமுடித்தார். இனிய இல்லறமாக அவரது வாழ்க்கை திகழ்ந்தது.

குடும்ப வாழ்க்கையை விடப் பொதுநல வாழ்விலேயே அவரது வாழ்நாள் பெரிதுமாகக் கழிந்தது பொதுப்பணிகளில் தம்மை இணைத்துக் கொண்டதால், இல்லறக்கடமைகளை அன்போடும் அரவணைப்போடும் துணைவியார் கவனித்துக்கொண்டார். அன்றாடக்கடமைகளைச் செவ்வனே செய்வதில் ஓர் ஒழுங்கு முறையை வகுத்துக்கொண்டு இல்லறத்தை இனிதே நடத்திச் சென்றார் துணைவியார். துணைவியாரின் அன்பான உபசரிப்பும், விருந் தோம்பல் பண்பும் இல்லற வாழ்வை அணிசெய்யும் என்பர். இத்தகைய பண்பாட்டைக் கற்றறிந்த காரணத்தால் மனங்கோணாமல் கடமை ஆற்றினார். துரைக்கண்ணனுக்கு நண்பர்கள் மிகுதி. அவரை இல்லத்தில் வந்து சந்திக்கும் போதும், உரையாடும் நேரத்திலும் விருந்தோம்பல் பண்பு குறையாது.

துரைக்கண்ணன் காலை முதல் இரவு வரை இடைவிடாது உழைப்பவர். பல தரப்பட்ட நண்பர் குழாம் வந்து போகும். அக் குழாத்தோடு பல செய்திகள்-தகவல்கள் பரிமாறப்படும். நண்பர் களிடம் இனிமையாக உரையாடி அன்பாக அனுப்பிவைப்பார். தமக்கு வரும் கடிதங்களுக்கு உடனடியாகப் பதிலிடுவதை வழக்க மாகக் கொள்வார். தம் வாழ்வியல் அனுபவங்களைப்பிறருக்குச் சொல்லியும்; அவர்களின் வாழ்வியல் நிகழ்ச்சிகளைப் பொறுமையோடு செவிமடுத்தும், தக்காங்கு அறிவுரை வழங்கியும் அமைந்தன அவரது அன்றாட நிகழ்வுகள். தாம் இதழ் ஆசிரியராகப் பணியாற்றிய காலங்களில் இதழ்களுக்கான அன்றாட அலுவல்களை ஒருபோதும் மறவாமல் செய்து வந்தார். நூல்களைப் படிப்பது, தகவல்களைச் சேகரிப்பது, கடிதங்கள் எழுதுவது, படைப்புகள் பற்றிய சிந்தனைகளில் மூழ்கியிருப்பது, எழுதக்கூடிய நேரத்தைப் போற்றுவது முதலிய பல்வேறு அன்றாட நிகழ்வுகளில் ஓர் ஒழுங்குமுறையைக்

கடை பிடித்து வந்தார். இவற்றோடு கூடப் பிறர் படைப்புகளைப் படித்து அச்சுக்குக் கொடுப்பது, மெய்ப்புத் திருத்துவது ஆகிய பணிகளையும் தவறாது செய்துவந்தார்.

இல்லத்திலிருந்து கொண்டு இப்பணிகளைச் செய்ததோடு அலுவலகத்திலும் இவை போன்ற பணிகளை மேற்கொண்டார் மாலை நேரங்களில் பொதுநிகழ்ச்சிகள் இலக்கியக் கூட்டங்கள் போன்றவை அவருக்கு மகிழ்ச்சியைத் தந்தன. யார் அழைத்தாலும் இலக்கியக் கூட்டங்களுக்குத் தவறாது செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். வெளியூர் நிகழ்ச்சிகளுக்கும் சென்று திரும்புவார். துணைவியின் மனம் கோணாமலும் அன்னையின் முகம் வாடாமலும் இல்லறக் கடமைகளை வழுவாமல் பார்த்துக் கொண்டதாலும் அவரது இலக்கியப் பயணம் இனிதாகவே சென்றது.

> இல்லற அமைதியும் குடும்பத்தாரின் கட்டுப்பாடான அடக்க இயல்பும் ஒத்துழைப்பும்தான் துரைக் கண்ணனின் இலக்கியப் பொது வாழ்வின் பேரீடு பாட்டிற்கும் வெற்றிகளுக்கும் அடிப்படையாகும்.

எனத் தி.நா. அறிவொளி இவரைப்பற்றிச் சுட்டியிருப்பதை இங்குக் குறிப்பிடவேண்டும். தம் குடும்பத்திடம் பாசத்தைப் பொழியும் அன்பையும், வாழ்க்கைப் பக்குவத்தைப் பற்றிய தெளிவையும் கொண்டவராய்த் திகழ்ந்தார். எனினும் பொதுப்பணிக்கு எனத் தம்மை அளித்ததால், பொழுது போக்கிற்கு என நேரத்தை ஒதுக்குவது இயலுமா? எழுத்தே, பேச்சே பொழுது போக்காகி விட்ட பிறகு, அவற்றை அவர்தாம் போக்கிவிட முடியுமா? அவை இரண்டும் இரண்டற, இணையறக் கலந்திருந்ததால் குடும்பப் பணிகளில் அவரால் அளவாகவே செயல்பட முடிந்தது.

பொது நலப் பணியை மேற்கொண்டிருந்த அவரது வாழ்வில் ஒரு சோக நிகழ்ச்சி நடந்தது. பாரதியார் பாடலை நாட்டுடைமை ஆக்க வேண்டும் என்று இவர் சார்ந்த பாரதி விடுதலைக் கழக அமைப்பு, குரல் கொடுத்தது. அன்றைய சென்னை மாநில முதலமைச்சர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் ஆவன செய்வதாகக் கூறியபடியால், அதன் பொருட்டு நண்பர்களோடு திருநெல்வேலி சென்றார். பாரதியாரின் மனைவி செல்லம்மாள் பாரதியைச் சந்தித்து ஒப்புதல் பெற்றார். அச்சமயம் தம் நான்கு வயதுள்ள பையனை 'டிப்திரியா' காய்ச்சலால் இழக்க நேரிட்டது. இவ்விழப்பு, மிகுந்த துன்பத்தைத் தந்தது. குடும்பப் பொறுப்பைக் காட்டிலும் தமக்களிப்பட்ட கடமையை இனிதே நிறைவேற்றுவதை நோக்கமாகக் கொண்டிருந்தார் என்பதையே இந்நிகழ்ச்சி காட்டுகிறது.

> பாரதிக்கு (பாடலுக்கு) விடுதலை தேடிச் சென்ற நான் இவ்விதம் ஒரே மகனைப் பிரிந்து விடுவேன் என்று கனவிலும் கருதவில்லை.

என இந்த நிகழ்ச்சி பற்றித் துரைக்கண்ணன் சுட்டியிருப்பது, சோகத்தின் சுவடு அவரது நெஞ்சில் ஆழமான வடு ஏற்படுத்தியதை உணர்த்தி நிற்பதாகும். பாரதியிடம் அவருக்கிருந்த பெருத்த ஈடு பாட்டையே இந்நிகழ்ச்சி காட்டுகிறது.

துரைக்கண்ணனுக்கு அதன்பின் விசயலக்குமி, கஸ்தூரி, இராசேந்திரன், குமாரசாமி, உமா ஆகிய மக்கட் செல்வங்கள் பிறந்தனர்.

துரைக்கண்ணன் இதழாசிரியராகப் பணியாற்றிய ஆனந்த போதினி, பிரசண்ட விகடன் ஆகிய பத்திரிகைகள் வழியே அவரது படைப்புகள் வெளிவந்தன. அவரது எழுத்தால் இதழின் செல் வாக்கும் கூடியது. அன்றைய கால கட்டத்தில் அவரது படைப்புகள் மக்களிடம் குறிப்பாகப் பெண்களிடம் பேரும் புகழும் பெற்றன.

> *ஜீவாவின் எழுத்துகள் பெரிதுமாகப் பெண்களைக் கவருவதாக அமைந்திருந்தன. சமையல் கட்டே கதி என்று இருந்த நமது பெண்களைக் கதை படிக்கும் பழக்கத்துக்குக் கொண்டு வந்தவர் கல்கி என்பார்கள். இவருக்கு முன்பே நாரண துரைக்கண்ணன் கதைகளால் பெண்கள் ஈர்க்கப்பட்டார்கள்.*
>
> *(இணையற்ற சாதனையாளர்கள், பக். 332)*

என முக்தா சீனிவாசன் குறிப்பிட்டிருப்பது மிகையான சொற்கள் அல்ல. துரைக்கண்ணன் வெறும் பொழுது போக்கிற்காகக் கதை படைத்தவர் அல்லர். சமூகம் சீர்திருத்தம் பெற வேண்டும், பெண் சமுதாயம் மேனிலை பெறவேண்டும் ஆகிய சிந்தனைகளைத் தம் குறிக்கோள்களாகக் கொண்டு எழுதி வந்தவர் அவற்றால் தமிழ்ச் சமுதாயம் சிறக்கும் என்ற சீரிய வீறுணர்ச்சி அவரிடம் தணியாதிருந்தது.

இளமையில் கற்றது குறைவே யெனினும், வாழ்க்கையாகிய பள்ளியில் நிறையவே கற்றார். தம் ஆற்றலால் எழுத்துலகில் சிறந்து விளங்கினார். உழைப்பாலும் முயற்சியாலும் தன்னம்பிக்கை வளர்த்துப் படிப்படியாக உயர்ந்து படைப்புலகில் தமக்கென்று ஒரு தனி இடம் பெற்றிருந்தார் துரைக்கண்ணன். அச்சுக் கோப்பாளராகத் தொடங்கிய அவரது வாழ்க்கை, மெல்ல மெல்ல ஏற்றம் பெற்று அவரை இதழாசிரியராக, புதினப் படைப்பாளியாக, சிறுகதையாசிரி யராக, நாடகம் எழுதுபவராக, கட்டுரை, ஆராய்ச்சி ஈடுபாடுடைய

வராக, கவிஞராக, மொழிபெயர்ப்பாளராக ஆக்கியதோடு புகழின் உச்சிக்கும் வழி வகுத்தது.

இலக்கிய உலகில் புகழடைந்ததோடு பொதுப்பணிகளிலும் சிறந்திருந்தார். பல அமைப்புகளில் பொறுப்புகள் வகித்து வந்ததால் பலரின் நட்பையும் மதிப்பையும் பெற்றிருந்தார். பாரதி விடுதலைக் கழகம் என்ற அமைப்பைத் தொடங்கியோருள் இவரும் ஒருவர். பாரதி பாடல்களைப் பொதுவுடைமை ஆக்க வேண்டும் என்று முனைந்து செயல்பட்டு அம்முயற்சியின் வெற்றிக்குத் துணை நின்றோருள் ஒருவராக விளங்கினார். தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராகவும், முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தலைவராகவும் இருந்து சிறந்த தொண்டுகளை ஆற்றி வரலானார். தென்னிந்தியப் பத்திரிகையாளர் பெருமன்றம், செங்கை மாவட்டத் தமிழ் எழுத்தாளர் சங்கம், தமிழ்க் கவிஞர் மன்றம் முதலியவற்றில் தலைவராகவும், துணைத் தலைவ ராகவும் பொறுப்பேற்று அவற்றைத் திறம்பட இயக்கி வந்தார்.

அறிஞர் பெருமக்களோடும், அரசியல் தலைவர்களோடும் நெருங்கிப் பழகிய வாய்ப்பினைப் பெற்றிருந்தார். பெரியார், காமராசர், அண்ணா, இராஜாஜி, கருணாநிதி, எம்.ஜி. இராமச்சந்திரன், பக்தவத்சலம் முதலியோரோடு பழகியவர். இவரோடு பழகிய கல்வியாளர்களாக ஆர்க்காட்டுச் சகோதரர்கள், நெ.து. சுந்தர வடிவேலு, தெ.பொ.மீ., மு.வ. முதலியோர் விளங்கினர்.

எழுத்தார்வம் கொண்ட பலரை ஊக்குவித்த பெருமை இவருக்குண்டு. நல்லறிஞர்களை மதித்துப் போற்றி அவர்களுடன் கலந்து பழகியதை மிகவும் கொண்டாடியதோடு, அதனைப் பெருமையாகவும் கருதியவர். அறிஞர் குழாத்தைச் சுற்றமாகக் கருதிப்பேணிய அவர், இளைய எழுத்தாளர்களை ஊக்குவித்து அவர்களின் எழுத்துப் பணிகளுக்கு ஏணியாக இருந்தார். தாம் பணியாற்றிய இதழ்கள் வழியே இளம் எழுத்தாளர்களின் படைப்புகளை வெளியிட்டுப் பாராட்டவும் செய்தார். இதனால் எழுத்தாளர்களின் எழுத்தாளர் என்று போற்றப்படும் அளவிற்கு ஒரு கலங்கரை விளக்கமாக இருந்தார்.

> *தமிழகத்தின் பல பாகங்களில் இருந்தும்இளைஞர்கள் பலர், தம் படைப்புகளை எனக்கு அனுப்பி வந்தனர். அவற்றில் போதிய கற்பனை வளமோ, கதை, கட்டுரை களை உருவாக்கும் திறனோ இல்லாமல் இருந்தாலும்நல்ல 'கரு' இருக்குமானால் அவற்றைச் செப்பனிட்டு வெளியிட்டுப் படைப்பாளிகளை உற்சாகப் படுத்தி வந்தேன்.*

என்ற கூற்று துரைக்கண்ணனின் வாக்கு மூலமாகும். புகழ்மிக்க எழுத்தாளராக வளர்ந்துவிட்ட பிறகு, புதுமுகங்களின் எழுத்துகளைப் புறக்கணிப்பது எழுத்துலகில் உண்டு. இதற்கு விதிவிலக்காக இருந்த துரைக்கண்ணன், இளம்பயிர்களாகிய எழுத்தாளர்களை ஊக்குவித்து உயர்வுமளித்துப் பாராட்டியிருப்பது நல்ல பண்புள்ளத்தைக் காட்டுகிறது. வல்லிக்கண்ணன், ஜீவானந்தம், தொ.மு.சி. ரகுநாதன், கு. அழகிரிசாமி, அகிலன், தீபம். பார்த்தசாரதி, லட்சுமி, முதலிய படைப்பாளிகளையும், பாரதிதாசன், கம்பதாசன், வாணிதாசன், சுரதா, தமிழ் ஒளி, கா.மு.செரிப், கண்ணதாசன் முதலிய கவிஞர்களையும் தாம் ஆசிரியராக இருந்த பத்திரிகைகளில் எழுத வைத்துப் பின்னாளில் அவர்கள் சிறப்பதற்கு ஊக்கியாக இருந்துள்ளார். இலக்கிய உலகில் புரட்சியாளராகவும்பொது வாழ்வில் ஈடுபாட்டோடு இயங்கியவராகவும் இலங்கிய நாரண.துரைக்கண்ணன் இல்லறத்தில் மிகஎளியராக, மிக இனியராக, அன்பின்ஓவியமாக விளங்கினார். அமைதி வாய்ந்த காலைப் பொழுது போன்ற அந்த இல்லற வாழ்வு, துரைக்கண்ணனின் அமைதிப் பண்பின் எதிரொலி போல அமைந்திருந்தது, எனத் துரைக்கண்ணனின் இல்லற வாழ்க்கையைத், தி நா. அறிவொளி மதிப்பிட்டிருப்பது உண்மையே. அன்பும், அமைதியும், பொறுமையும், எளிமையான அடக்கமும்தாம் துரைக்கண்ணனுடைய வாழ்க்கையின் வெற்றிக்கு வழி வகுத்தன.

நல்ல நண்பர்களை அமைத்துக் கொள்ளவும், தேசியத் தலைவர் களோடும், பொதுநலத் தொண்டர்களோடும், தமிழ்ச்சான்றோரோடும் தோழமை உணர்வு ஏற்படுத்திக்கொள்ளவும் மேற்கூறிய இனிய பண்புகளே துணை நின்றன. எழுத்தை மூலதனமாகக் கொண்ட துரைக் கண்ணனுக்குப் பொருளை மூலதனமாகக் கொண்டு உயர வாய்ப்பில்லாமல் போனது. வணிகத் திறனின் நுட்பமறியாது எழுத்தின் துணைக் கொண்டு இலட்சியப் பயணம் மேற்கொண்ட அவர், ஜீவா என்ற பெயரில் பதிப்பகம் ஒன்றைத் தொடங்கினார். 'பொருள்சேர் புண்ணியம்' வாய்க்காத நிலையில் கடன்பட நேர்ந்தது. பதிப்பகம் மூடப்பட்டது இழப்பைச் சரி செய்ய இயலா அளவிற்குச் சென்றதால் நுங்கம்பாக்கம் தொடர் வண்டி நிலையத்திற்கருகில் இருந்த மாடி வீட்டை விற்க நேர்ந்தது. நுங்கம்பாக்கத்தின் அருகில் உள்ள சூளைமேடு என்னும் பகுதியில் சிறிய மனை வாங்கி அங்குக் குடி பெயர்ந்தார். இறுதிநாள் வரை அப் பகுதியிலேயே வாழ்ந்தார்.

எழுபதுக்கு மேற்பட்ட வயதிலும் கூடப் பல கூட்டங்களுக்குச் செல்வதும், இதழுக்கு எழுதுவதுமாக இருந்தார் எழுத்துப்பணி ஒருபுறம். பொதுநலப்பணி மறுபுறம். இவை இரண்டிலுமாக அவரது

காலம் கழிந்தது. தம் எழுபத்தாறாவது வயதில் மனைவியை இழந்தார். ஐம்பதாண்டு இல்லற வாழ்க்கையில், குடும்பத்தைக் கட்டிக் காத்து மக்களை நல்லபடி வளர்த்து ஆளாக்கிய வாழ்க்கைத் துணைவியின் பிரிவு, அவரை மிக வருத்தியதோடு, வாழ்க்கைப் படகைத் தனி ஒருவராக இருந்து செலுத்த வேண்டியிருந்தது.

உடல் உரம் மனநலம் ஆகியன இடைவிடாத உழைப்பாலும், துணைவியாரின் பிரிவாலும் குன்றின. இரவு நேரக் கண்விழிப்பாலும், மெய்ப்புத் திருத்தும் பணியாலும் பார்வையும் மங்கியது இந்த நிலைகளிலும் கூட அவர் தமது பணிகளுக்கு ஓய்வு கொடுத்தாரில்லை. இல்லத்தை விட்டுப் பொதுக்கூட்டங்களுக்கும், பயணங்களுக்கும் செல்வதும் குறையவில்லை; எப்படியிருப்பினும் தனிமை கப்பிய சோகம் மெல்ல அவரை வருத்தி வந்தது. உள்ளம் சோர்ந்த நிலையில் உடலும் தளர்ந்து மெலிந்தது. வாழ்ந்தாக வேண்டும் என்று எண்ணும்போது வாழ்வின் இறுதிக்காலம் மிகவும் விரைகிறது வாழ்வின் இறுதி நாள்களில் மரண தேவன், அவரது உடலை அலைக்கழித்தான், பெருங்காற்று, திறந்து வைத்த சன்னலை இப்படியும் அப்படியும் அலைக் கழிப்பதுபோல்!

ஓர் எழுத்தாளனின் மரணம் என்பது அவ்வளவு சாதாரணமன்று எழுத்தாளியின் உச்ச நிலைப் புகழ் என்பதும் வாழ்வின் இறுதி நாள்களில்தாம் வரும்போலும்! துரைக் கண்ணனுக்கு இறுதி நாள்களில் கூடிவந்த புகழும் விருதும்போல, மரணமும் கூடி வந்தது. 23.7.96 அன்று பகற் பொழுதில் மாரடைப்பால் மரணமுற்றார் அவர். ஜீவா என்னும் ஜீவனுள்ள ஊற்று வற்றியது.

தூய்மையான வாழ்வையும், தொண்டுள்ளத்தையும் கொண்ட துரைக்கண்ணனுக்குத் தொண்ணூறு வயதில் மரணம் கிட்டியது.

---

# 2

# தொண்டுள்ளமும் தோழமை உணர்வும்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பலரும் இந்திய விடுதலை வேள்வியில் பங்கேற்றனர். அன்று இருந்த சூழ்நிலையில் நேரடியாகச் சிலரும் மறைமுகமாகப் பலரும் தங்கள் நாட்டுப்பற்றை எழுத்திலும் பேச்சிலுமாக வெளிப்படுத்தினர். விடுதலை உணர்வை இளைஞரிடத்து ஊட்டி வளர்த்தனர்: ஊக்கப்படுத்தினர். இளமையில் அவ்வுணர்வு பெறுவதற்குத் தக்க வாய்ப்பு, துரைக்கண்ணனுக்குக் கிடைத்தது. திருவல்லிக்கேணியில் உள்ள இருசப்ப கிராமணித் தெருவில் வசித்துவந்த சுப்பிரமணிய சிவா விடுதலைப் போராட்ட வீரர்களுள் ஒருவர். துரைக்கண்ணன் குடியிருந்த இல்லத்திற்கு அடுத்துச் சிவாவின் வீடு அமைந்திருந்தது. இளம்வயதிலேயே துரைக்கண்ணன், விடுலைத் தாகம் கொள்ள வாய்ப்பாக இருந்தது. சுப்பிரமணிய சிவா, ம.சதாசிவம், எவரெஸ்ட் சுந்தரம், ஸ்ரீ பாதசங்கர் முதலிய நாட்டுப்பற்று மிக்க தலைவர்களையும் பொது நலத் தொண்டர்களையும் அறிந்து கொள்ள அவர் வாழ்ந்த பகுதி இடம்தந்தது.

நல்ல நட்பும் நல்லுணர்வும் இளமையிலேயே அமையுமாயின் அதனை இனிய பேறாகக் கருதவேண்டும். தம் கொள்கைக்கும் ஒத்துணர்வுக்கும் ஏற்ப, இணக்கமான நல்ல நண்பர்களைப் பேணிக் கொள்வது என்பது, இளமை வாழ்வில் முன்னேற்றவாசலைத் திறப்பதற்கான திறவுகோல் போன்றது. துரைக்கண்ணன் இனிய நண்பர்களைப் பெற்றதன் வழியாக நாட்டின் நிலைமைகளையும் ஏனைய பல நன்மை பயக்கும் நெறிமுறைகளையும் வாழ்வில் கற்றுக்கொண்டார்.

அன்று நிலவிய தமிழ் இதழ்கள் சில, விடுதலைப் பற்றை மக்களுக்கு ஊட்டி வளர்த்தன திரு.வி.க., சங்கு சுப்பிரமணியம், டி எஸ்.சொக்கலிங்கம் முதலியோர் இதழ்கள் வாயிலாக விடுதலை

எழுச்சி உண்டாக்கியவர்கள். இவர்களை நண்பர்களாகப் பெற்றிருந்த பெருமை துரைக்கண்ணனுக்கு உண்டு.

இவர்களைத் தவிர, பாரதியின் நெருங்கிய நண்பரான பரலி. சு. நெல்லையப்பர் மற்றும் சதாவதானி தெ.கிருஷ்ணசாமி பாவலர் ஆகியோரும் இவருக்கு நண்பராயிருந்தனர். இத்தகைய நண்பர்கள் நாட்டுப்பற்று மிக்கவர்களாக இருந்து விடுதலை வேள்வியில் இறங்கியவர்கள்.

## காந்திய நெறியினர்

துரைக்கண்ணன் சிறுவயது முதலே காந்தியத்தின் மீது பற்றுக் கொண்டவராயிருந்தார். காந்தியம் கூறும் எளிமையை அப்பற்றுக் கொள்வதற்கு முன்பே பெற்றிருந்தார். காந்திய நெறியை அகத்திலும் புறத்தோற்றத்திலும் இறுதிவரை கொண்டிருந்தவர் துரைக்கண்ணன். தம் எண்ணத்திற்கும் எழுத்திற்கும் காந்திய நெறியையே உள்ளடக்கமாகக் கொண்டார்.

காந்தி அரிசன இயக்கம் காண்பதற்கு முன்பே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர் துரைக்கண்ணன். 'தீண்டத் தகாதார் யார்?' என்ற நாடகத்தை 1927 ஆம் ஆண்டில் எழுதிப் பல இடங்களில் அதனை நடத்திக் காட்டினார். 1945ஆம் ஆண்டில் தென்னிந்திய எழுத்தாளர் கருத்தரங்கு, சென்னை இந்தி பிரச்சாரச் சபையில் நிகழ்ந்தது. அதனை மகாத்மா காந்தி தொடங்கி வைத்தார். வ.ராமசாமி(வ.ரா.) அவர்கள் துரைக்கண்ணனைக் காந்தியிடம் அறிமுகப்படுத்தினார். துரைக்கண்ணன், நாட்டுக்குத் தொண்டாற்றிய புகழ்மிக்க தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகளைத் தமிழில் நூலாக எழுதியவர் என வ.ரா., காந்தியடிகளிடம் எடுத்துக்கூறத் துரைக் கண்ணனைப் பாராட்டிக் கைகுலுக்கினார் காந்தி. தமிழகத்திற்கு வந்த சமயங்களில் காந்தியடிகளைச் சந்திக்கத் தவறியதில்லை துரைக்கண்ணன்.

1939முதல் 1945வரை இரண்டாம் உலகப்போர் நடந்த காலங்களாகும். இந்தியாவில் வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்துப் போர்க்குரல் முழங்கிய கால கட்டங்களில் காந்தியின் உரத்த சிந்தனை இந்தியா முழுவதும் எதிரொலித்தது. துரைக்கண்ணன் தாம் இதழாளராக இருந்து நடத்திய பிரசண்ட விகடனில் தலையங்கம், கட்டுரை முதலியவற்றை எழுதித் தமது விடுதலைப் பற்றை வெளிப்படுத்தினார். வெள்ளையர் ஆட்சியைக் கடுமையாக எதிர்த்து எழுதிய காரணத்தால் ஆங்கில அரசு அவரைக் கண்டித்ததோடு

எச்சரிக்கையும் விடுத்தது. துரைக்கண்ணன் மனம் தளராது, 'எங்கள் கொள்கையை விடமாட்டோம்; இது எங்களது தேசியக் கடமை' என்று சொல்லித் தொடர்ந்து ஆங்கிலேய அரசின் ஆதிக்க உணர்வை எதிர்த்துத் தலையங்கங்கள் எழுதிவந்தார். இது அவரிடம் இருந்த நாட்டுப்பற்றையும், கொள்கை உறுதியையும் நன்கு காட்டுகிறது.

காந்தியச் சிந்தனை துரைக்கண்ணனிடம் படிந்திருந்தது போலவே, அன்றைய எழுத்தாளர் சிலரிடமும் நீக்கமற நிறைந்திருந்தது. அவர்களில் கல்கியும் ஒருவர். கல்கிக்கு முன்னரே காந்திய உள்ளடக்கத்தைக் கதைகளில் துரைக்கண்ணன் எழுதிவந்தார். எனினும், கல்கியே, காந்திய எழுத்தாளராகத் தமிழகத்தில் பரவலாக அடையாளப் படுத்தப்பட்டவர்

## பாரதி பற்று

தேசிய உணர்வால் உந்தப்பட்ட துரைக்கண்ணன் தேசியக் கவியான பாரதியார் பாடல்களில் மனம் பறி கொடுத்தவர். பாரதியார் கவிதைகளில் ஈடுபாடு கொண்டதற்கு முன்னர், அவரைக் காணும் வாய்ப்புப் பெற்றிருந்தார். 1916 இல் தமக்குப் பாடஞ்சொல்லிவந்த சுந்தரம் என்பவர் பார்த்தசாரதி பக்த சன சபை சார்பில் ஸ்ரீ ராமநவமி விழாவிற்குப் பாரதியாரை அழைத்திருந்தார். திருவல்லிக்கேணி தெளிசிங்கப் பெருமாள் கோயில் தெருவில் இருந்தது அந்தச்சபை. பாரதியார் தம் தலைப்பாகைத் தோற்றத்தோடு அங்குவந்து 'ஜய பேரிகை கொட்டடா' என்ற பாடலை உரத்த குரலில் பாடினார். அவரைப் பற்றி நன்கு அறிந்திராத நிலையில், அவர் பாடிய பாடலின் முழக்கம் துரைக்கண்ணனை ஈர்த்தது. இந் நிகழ்ச்சியின் போது துரைக்கண்ணனுக்கு வயதுபத்து ஒரு முறை காணும் வாய்ப்புப் பெற்ற துரைக்கண்ணன், பல முறை பாரதி பாடல்களைப் படித்து இன்புற்று மகிழ்ந்தார். பாரதியின் புகழைப் பரப்புவோருள் தம்மையும் ஒருவராகக் கருதிக் கொண்டு செயல்பட்டார்.

பாரதியாரையும் அவரது பாடல்களையும் சிலர் மதிக்காதிருந்தனர். அவர் மகா கவியா இல்லையா என்ற கருத்துப் போர் நடந்தது. கல்கி போன்றோரால் முடுக்கி விடப்பட்ட கருத்துப்போர் எதிர்கொள்ளப்பட்டு மகா கவியே என்று இறுதியாக ஒப்புக்கொண்டனர். வ ரா. போன்றோர் மகாகவியே என மெய்ப்பித்து அதனை ஏற்கச் செய்ததைத் தமிழுலகம் நன்கறியும். அதே போல்க் கல்கியே முன்னின்று எட்டயபுரத்தில் மணிமண்டபம் அமைத்துச்சிறப்பானதொரு விழா எடுத்ததையும் அறியும். பாரதி

மணிமண்டபம் எழுப்பத் தொடக்க முயற்சி எடுத்தோருள் துரைக்கண்ணனும் ஒருவர் என்பது அறியப்பட வேண்டிய செய்தி ஆகும்.

பாரதி பாடல்களைத் தமிழகத்தில் எதிரொலிக்கச்செய்த பெருமைக்கு உரியவர்களில் துரைக்கண்ணனும் ஒருவராவார். பாரதி பாடல்கள் நாட்டுடைமை ஆவதற்குப் பெரு முயற்சி எடுத்துக் கொண்டார். இதற்கு உற்ற துணையாக நின்றவர் அன்றைய முதல்வர் பதவியில் இருந்த ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் ஆவார். பாரதி பாடல்களை அன்றைய நாளில் சில இசைத்தட்டு நிறுவனங்கள் உரிமை கொண்டாடி வந்தன. தட்சிண பாரதி இந்தி பிரச்சார சபையைச் சார்ந்த 'பாரதி பிரசுராலயம்' 'சரசுவதி ஸ்டோர் ' ஆகியவை அவரது பாடல்கள் சிலவற்றைத் தனி உரிமை கொண்டாடின. அவர்களின் இசைவு இல்லாமல் அவற்றை வேறு யாரும் பயன் படுத்த முடியாத நிலை இருந்தது. இதனை மனத்தில் இருத்திய பாரதி அன்பர்கள், அவ்வுரிமையையும் பொதுவுடைமையாக்க வேண்டும் எனக்குரல் கொடுத்தனர். இதற்கிடையே 'பில்கணன்' என்ற திரைப்படத்தில் தி.க. சண்முகம், பாரதி பாடலான 'தூண்டிற் புழுவினைப் போல' என்பதைச் சேர்த்துப் பாடலாக்கியிருந்தார். தனி உரிமை கொண்டாடிய இசைத்தட்டு நிறுவனங்கள் வழக்குரைஞர்வழி அறிக்கை விடுத்தன. பாரதி அன்பர்கள் அதனை வன்மையாகக் கண்டித்தனர். தனி உரிமை பொதுவுடைமை ஆக்கப்பட வேண்டும் என்ற சிந்தனை பாரதி அன்பர்களிடம் ஓங்கவே துரைக்கண்ணன் அக்கருத்தை முன் மொழிந்ததோடு பாரதி பாடல்களைப் 'பொதுவுடைமை ஆக்குக' என்ற தலைப்பில் கட்டுரை தீட்டினார்.

நாரண. துரைக்கண்ணனின் அக்கருத்தினை எழுத்தாளர் வல்லிக் கண்ணன், திருலோக சீத்தாராம் முதலியோர் ஆதரித்தனர். அதன் காரணமாகவே 'பாரதி விடுதலைக் கழகம்' என்ற ஓர் இயக்கத்தை உருவாக்கினர். அதன் தலைவராக வ.ரா இருந்தார். துரைக்கண்ணன் துணைத் தலைவராகவும், செயலாளர்களாக வல்லிக்கண்ணனும், திருலோக சீத்தாராமும் இருந்தனர். கு. அழகிரிசாமி போன்ற எழுத்தாளர்கள் இவர்களின் முயற்சிக்குத் துணை நின்றனர். இவ்வியக்கத்திற்கு மறைமுகமான எதிர்ப்பும் நிலவியது. இருப்பினும் பாரதியார் பாடல்களைப் பொதுவுடைமையாக்க வேண்டும் என்ற சிந்தனையில் தீவிரம் காட்டியதோடு, அதனைத் தீர்மானமாக நிறைவேற்றிச் சட்ட மன்றத்திலும் பேசும்படி முயற்சி எடுத்துக் கொண்டனர்.

முதல்வராக இருந்த ஓமந்தூரார் அதில் ஆர்வங் காட்டலானார். சட்டச் சிக்கல் ஏற்படலாம் என்பதறிந்து தக்க வழக்கறிஞர்களை அணுகினார். 'பாரதியின் எழுத்தைப் பொதுவுடைமையாக்குவதற்குப் பாரதி குடும்பத்தார் தடை சொல்லாமல் இசைவுக் கடிதம் எழுதிக் கொடுக்க வேண்டும்' என்ற கருத்தை மொழிந்தனர். இக்கருத்தினைத் துரைக்கண்ணனுக்கு, 'தினசரி' இதழை நடத்தி வந்த டி.எஸ். சொக்கலிங்கம் கூறவே, அம்முயற்சியில் பாரதி விடுதலைக் கழகம் இறங்கிச் செயற்படத் தொடங்கியது. இதற்காகத் திருநெல்வேலிக்குத் துரைக்கண்ணன், வல்லிக்கண்ணன், தி.க. சண்முகம், கே.பி. கணபதி, அ. சீனிவாசராகவன் ஆகியோர் சென்றனர். திருநெல்வேலிப் பயணத்தால் வெற்றி கண்டனர். பாரதி குடும்பத்தார் எழுதித் தந்த ஒப்புதலின் பேரில், பாரதி பாடல்களைப் பொதுவுடைமையாக்க அரசு அறிவித்தது. தனி உரிமை பெற்றிருந்த இசைத்தட்டு நிறுவனங்கள் எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. அவர்கள் அதற்காக எந்தவித நஷ்ட ஈடும் கேட்கவில்லை. இது அவர்களின் பெருந் தன்மைக்கு எடுத்துக்காட்டாக இருந்ததோடு, பாரதி பாடல்கள் தமிழ் உலகம் எங்கும் பரவ வேண்டும் என்ற சிந்தையில் ஆர்வம் கொண்டதையும் காட்டுகிறது. இதற்குப் பெருமுயற்சி எடுத்துச் செயல்பட்டவர்களில் துரைக்கண்ணன் பங்கு முன்னின்றது. பாரதி விடுதலைக் கழகம், பாரதி பாடல்களைப் பொதுவுடைமை ஆக்குதற்குரிய முயற்சியில் வெற்றி கண்டதால், அதனைக் கொண்டாட விழாவும் எடுத்தது. அவ்விழாவில் எல்லா வகையிலும் துணை நின்ற ஓமந்தூரார்க்கும், தனி உரிமையைப் பெருந்தன்மையோடு விட்டுக் கொடுத்த ஏ.வி.எம். மெய்யப்பச் செட்டியாருக்கும் நன்றி தெரிவித்தது.

பாரதி எழுத்துக்களை நாட்டுடைமை ஆக்குவதற்கு முயன்று வெற்றிபெற்ற துரைக்கண்ணன், பாரதியார் குடும்பத்தார்க்கு நன்றிக் கடன் பட்டிருந்தார். திருநெல்வேலிக்குச் சென்று செல்லம்மாள் பாரதியிடம் ஒப்புதல் மடல் பெற்றபோது, செல்லம்மாள் பாரதி, துரைக்கண்ணனிடம் கூறிய சொற்கள் அவர்தம் நெஞ்சைக் கசியச் செய்தன. பாரதி வாழ்ந்த நாள்களில் தம் குடும்பம் வறுமையில் கழித்த நாள்களை நினைவு கூர்ந்த பாரதியின் துணைவியார், 'அய்யரால் நாங்க எந்தச் சோகத்தையும் அடையலே, மக்களாவது அவரால் சோகமடையட்டும்' என்று கூறி ஒப்புதல் மடலுக்கு இசைவளித்ததைத் திரு. பரமசிவம் 'நாடுபோற்றும் நாரண துரைக்கண்ணன்' நூலில் சுட்டியுள்ளார். முதல்வராக இருந்த ஓமந்தூராரிடம் துரைக்கண்ணன் கேட்டுக் கொண்டதன் பேரில், பாரதி குடும்பத்தினர் ஒவ்வொரு வருக்கும் அன்றைய அரசு ஐயாயிரம் ரூபாய் நிதி அளித்தது

பாரதியிடம் இருந்த பற்றும், தாம் துணைத் தலைவராகப் பாரதி விடுதலைக் கழகத்திற்குப் பொறுப்பேற்றுக் கொண்டு ஆற்றிய கடமையுமே இவ்வாறு துரைக்கண்ணனைச் செயற்படச் செய்தன. விடுதலைக் கழகத்தில் பங்கேற்றதோடு நின்றுவிடாமல், பாரதி புகழை இறுதிவரை பரப்பி வந்தார். பாரதி பற்றிப் பேசும்போதும், அவர் பாடல்களைக் கேட்கும்போதும் பூரித்துப் போனதாக அடிக்கடிக் கூறிக் கொள்வார். இந்தியா முழுவதும் பாரதி புகழ் பரவி நின்றது கண்டு மனம் மிக மகிழ்ந்தார்.

## இதழ்களும் இதழாசிரிய நண்பர்களும்

திறமையும் உழைப்பும் விடா முயற்சியும் இருந்தால் வாழ்வில் ஒளி வீசலாம் என்ற சிந்தனையை எண்ணிச் செயல்பட்ட காரணத்தால், துரைக்கண்ணன் இதழாசிரியப் பணியைத் தொழத் தக்க பணியாகக் கருதி வந்தார். அச்சுக் கோப்பதில் தொடங்கிய அவருடைய தொடக்ககாலப் பணி, இதழியல் பணிக்கு மாறியபோது, அவருக்கிருந்த முன் அனுபவங்கள் முனைப்போடு செயல்பட வைத்தன. அன்றைய நாளில் கூலி குறைவாகப் பெற்றாலும், தமது எழுத்துக்களால் நிறைவடைந்தார்.

இதழ்ப்பணிக்கு வருவதற்கு முன்னர், தமிழிலும், ஆங்கிலத் திலுமாக ஓரளவு தேவையான புலமை பெற்றிருந்தார். அச்சுத் தொழில் அனுபவம் இதழ்ப் பணிக்கு மிக்க உறுதுணையாக விளங்கியது. இதழியல் பணி ஏற்றதற்கு முன்னரே, பத்திரிகைகளில் எழுதிவந்தவர். அதோடு பதிப்புப் பணி அனுபவமும் பெற்றிருந்தார் கம்பர் விலாசம் உ.வே. இராசகோபால் ஐயங்கார், அகநானூறு, நாலடியார் முதலிய நூல்களைப் பதிப்பித்து வந்த காலத்து, அப்பதிப்பு முயற்சிக்குத் துணை நின்றவர் துரைக்கண்ணன். குறிப்புரை, ஒப்பு நோக்குதல், பிழைதிருத்தல், முதலிய பணிகளை மேற்கொண்டு தம் அனுபவத் தேர்ச்சியை அவற்றில் காட்டலானார்.

'அடிசன் கம்பெனி'யில் எழுத்தராக மூன்று ஆண்டுகள் பணிபுரிந்த துரைக்கண்ணன், இதழ்களுக்கு எழுதவும் தொடங்கினார். கலைமகள் விழா பற்றிய 'விஜய தசமி' என்ற கட்டுரையே இவரது முதற் கட்டுரை ஆகும். இது 1927 ஆம் ஆண்டு சுதேசமித்திரன் இதழில் வெளி வந்தது. மித்திரன் ஆசிரியர் லோகநாத நாயக்கர் மேலும் எழுதத் தூண்டினார். அன்றைய காலகட்டத்தில் வெளி வந்த ஓரிரண்டு இதழ்கள் தவிர, அனைத்து இதழ்களிலும் எழுதி வந்தார். தமிழ்நாடு, கலா நிலையம், லோகோபகாரி, தேசபந்து, செந்தமிழ்ச்

செல்வி, சித்தாந்தம், சிந்தாமணி, திராவிடன் முதலிய இதழ்கள் இவரது கட்டுரைகளைத் தாங்கி வந்தன.

துரைக்கண்ணனின் எழுத்து அன்றைய நாளில் பலரையும் ஈர்த்த காரணத்தால், அவரை எழுத்துப் பணிக்குப் பலரும் இழுத்தனர். விடுதலை உணர்வு மிக்கவரும் பாரதி நண்பருமான பரலி.சு. நெல்லையப்பர், லோகோபகாரி என்னும் இதழை நடத்தி வந்தார். இந்து, சுதேசமித்திரன் ஆகிய இதழ்களை நடத்திவந்த சுப்பிரமணிய அய்யரின் பெயரர் திரு சூரிய நாராயணனிடம் நெல்லையப்பர் துரைக் கண்ணனைத் தாம் நடத்திவந்த லோகோபகாரி இதழுக்குத் துணையாசிரியராகப் பணியாற்ற வருமாறு சொல்லி ஒரு மடல் அளித்தார். நெல்லையப்பர் நடத்திய இதழில் துணையாசிரியரானார். இதழியல் பணி இதிலிருந்து தொடங்கியது. துணையாசிரியராகப் பொறுப்பேற்றுத் தம் புலமையையும் திறமையையும் காட்டுவதற்கு வழி ஏற்பட்டது. வ.உ.சி. இராஜாஜி முதலியோரின் கட்டுரைகள் அதில் வெளிவந்தன. இவ்விதழைத் தொடர்ந்து நடத்த இயலாமல் போனது, நெல்லையப்பருக்கும், மூன்று மாதங்களே அதில் பணியாற்றிய துரைக்கண்ணனுக்கும் ஒருவகையில் இழப்பே ஆகும்.

கணக்கராகப் பணியாற்றிக்கொண்டிருந்த துரைக்கண்ணனைத் தாம் அழைத்ததன் பேரில் பொறுப்பேற்கச் சொல்லி, மூன்று மாதங்களுக்குள் இதழ் நின்று போனதால் அவரது வருவாய்க்கு வழி செய்ய இயலாது போயிற்றே என வருந்தினார் நெல்லையப்பர். நாடகக் கலைஞரும் தேசிய விடுதலையில் நாட்டமும் கொண்ட சதாவதானி தெ. பொ.கிருஷ்ணசாமி பாவலர் தேச பந்து இதழ் நடத்திவந்தார். நெல்லையப்பரின் பரிந்துரை பேரில் துரைக்கண்ணன் அவ்விதழுக்குத் துணையாசிரியரானார். அவ்விதழின் அச்சுக் கோப்பாளராக இருந்த தி.க.ஆறுமுகத்தின் நட்பு இவருக்குக் கிடைத்தது. எழுத்து, பேச்சு இவற்றில் திறமை மிக்க ஆறுமுகத்திற்குத் துரைக்கண்ணனின் புலமையை அறியும் வாய்ப்பு ஏற்பட்டது. இவ்விருவரும் சென்னையிலும் அதன் புறநகர்ப் பகுதியிலும் உயிர்ப்பலியைக் கடுமையாக எதிர்த்துக் கருத்து முழக்கம் செய்தார்கள். துரைக்கண்ணனுக்கு வள்ளலார் பற்று ஏற்படக் காரணமாயிற்று இந்நிகழ்ச்சி. பின்னாளில் வள்ளலார் பற்றிய வரலாற்று நாடகம் எழுதுவதற்கும் ஒரு வாய்ப்பைத் தந்தது. தேசபந்து இதழில் ஒன்றரை ஆண்டுகளே பணி புரிந்தார். அவ்விதழ் நின்று போனது. நீதிக்கட்சியினர் தாம் தொடங்கிய 'திராவிடன்' இதழுக்கு அவரை இழுத்தனர். தம் காந்தியக் கொள்கைக்கு எதிரான இயக்கமாக இருந்ததால் முதலில் தயங்கிய துரைக்கண்ணன், 'பேராசிரியர்

கா.நமசிவாய முதலியாரின் அன்பாணைக்குக் கட்டுப்பட்டு, திராவிடன் இதழ்ப்பணியை ஏற்றுக்கொண்டார். தம் கடமை எதுவென உணர்ந்துகவனமாகப் பணியாற்றத் தொடங்கினார். நீதிக் கட்சியின் தலைவராக இருந்த பி.டி. ராஜன் அவ்விதழின் மேலாண்மைப் பொறுப்பை ஏற்றிருந்தார். அக்காலத்தில் செல்வாக்கு மிக்க இதழ்களில் ஒன்றாகத் திராவிடன் திகழ்ந்தது.

திராவிடன் இதழில் புனைகதைகளைத் துரைக்கண்ணன் எழுதத் தொடங்கினார். இவரைக் கதாசிரியராக்கியது இவ்விதழே. திராவிடனில் பணியாற்றிய காலத்தில்தான் இவருக்குப் பெரியாரின் தொடர்பு கிட்டியது. காங்கிரஸ் கொள்கையிலும், காந்திய நெறியிலும் வேரூன்றிய துரைக்கண்ணனுக்குப் பெரியாரோடு ஒத்துப் போகுமாறு பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகள் அவரை ஆட் கொண்டன. திராவிடனில் நான்காண்டுகள் பணியாற்றிய காலங்களில், நல்ல பல கதைகளையும், நாடகங்களையும் எழுதிவந்தார். சமூக சீர்திருத்தக் கருத்துகள் கொண்ட பல இலக்கியப் படைப்புகளைப் படைத்தளித்தார் கதைகளை எழுதி மக்களின் வரவேற்பைப் பெற்றிருந்த துரைக்கண்ணன், சிவஞானபோதம் பற்றிய கட்டுரைகளையும் வெளியிட்டுச் சமயச் சான்றோர்களின் வரவேற்பைப் பெற்றிருந்தார். நல்ல பல படைப்பாக்கங்களோடு வெளிவந்த திராவிடன் பொருளாதார நலிவால் முடங்கிப் போனது.

திராவிடன் இதழில் பணியாற்றிய காலங்களில் ஈ.வெ.ரா.விடம் கொண்ட நட்பு வலிமை பெற்றதாகவே கருதவேண்டும். எதிர் முகாமில் பெரியார் இருப்பினும் எதிரியாகக் கருதவில்லை. 1932 இல் உருசியா சென்று திரும்பிய ஈ.வெ ரா. வுக்கு வரவேற்பு அளிப்பது எனப் பத்திரிகையாளர் சார்பில் முடிவெடுக்கப் பட்டது. அதற்கு முன்னின்றவர் துரைக்கண்ணன். திராவிடன் இதழ் மேலாண்மை இதனை ஏற்காதிருந்த போதிலும் பத்திரிகையாளன் என்ற வகையில்,

> பெரியாருக்குத் தரப்படும் வரவேற்பு அரசியல் கருத்துகளுக்கு அப்பாற்பட்டது; குடியரசு பத்திரிகையின் ஆசிரியர் என்ற நோக்கில் பத்திரிகைகள் அளிக்கும் வரவேற்பு.

என்று அறிக்கை வெளியிட்டார். சென்னை தியாகராயர் நினைவு மண்டபத்தில் துரைக்கண்ணனும், அவருடைய நண்பர்களும் பெரியாருக்குப் பத்திரிகையாளர் என்ற அளவில் சிறப்பாக விழா நடத்தினர். துரைக்கண்ணனுக்கும் பெரியாருக்கும் நட்பு வளரத் திராவிடன் இதழில் பணியாற்றிய காலங்கள் உதவின. துரைக் கண்ணனைக் கொண்டே பல கூட்டங்களையும் நிகழ்ச்சிகளையும்

பெரியார் நடத்தியதற்குத் துரைக்கண்ணனிடம் காணப்பட்ட செயல்திறனே காரணமாகும். திராவிடன் இதழ் நின்று போன பிறகு 'இந்தியா' என்ற இதழில் மூன்று மாதங்கள் பணியாற்றினார். வரதராஜுலு நாயுடு நடத்தி வந்த தமிழ்நாடு இதழுக்குத் துணை ஆசிரியராய் ஆறுமாதங்கள் பணிபுரிந்தார்.

இதழ்ப்பணி என்பது சாதாரணமானதன்று. பல இடர்ப்பாடுகளுக்கும், இன்னல்களுக்குமிடையே நடத்தப்படவேண்டிய இலட்சியப்பணி. இலட்சியத்தை முன்வைத்து வெளிவந்தன அக்கால இதழ்கள் பல. பொருளாதாரம் இதழுக்குரிய அச்சாணி என்பதை உணர்ந்து கொண்டபோது, இலட்சிய இதழ்களால் இதழ்ப்பணிகளைத் தொடரமுடியாமற் போனது. இதழாசிரியர்கள் எத்துணைத் திறமைமிக்கவராக இருப்பினும் அவர்களது இதழாசிரியப் பணி மாறிமாறித் தொடர்ந்து மக்களின் ஆதரவு பெற்றதாய் இருந்தது.

மக்களின் ஆதரவைப் பெற்ற இதழ்களுள் ஒன்றாக ஆனந்த போதினி திகழ்ந்தது. 1915 இல் அதனைத் தொடங்கித் தொடர்ந்து நடத்தி வந்தவர் நா.முனுசாமி முதலியார். அது மாத இதழாகவும் பிறகு வார இதழாகவும் வந்து கொண்டிருந்தது. அவ்விதழின் வெற்றிக்குப் பாடுபட்டவர்களில் ஒருவர் ஆரணி குப்புசாமி முதலியார். அக்காலத்தில் அவர் எழுதிய துப்பறியும் புதினங்களுக்குப் பெருத்த வரவேற்பிருந்தது. ஆனந்த போதினி இதழுக்கு அவரே ஆசிரியராகவும் இருந்தார். அவ்விதழில் பலரும் எழுதிவந்தனர். பல இதழ்களுக்கு முன்னோடியாகவும் திகழ்ந்தது.

1932 இல் துரைக்கண்ணன் ஆனந்த போதினி குழுவில் பணியாற்றத் தொடங்கினார். அதே ஆண்டில் பிரசண்ட விகடன், என்ற மாதம் இருமுறை இதழை ஆனந்த போதினி அச்சகம் வெளியிடத்தொடங்கியது. முப்பத்து மூன்று ஆண்டுகள் ஆனந்த போதினியிலும், பிரசண்ட விகடனிலும் ஆசிரியராக இருந்தார். தாம் பல படைப்புகளை அவற்றில் எழுதிவந்ததோடு, எழுத்தாளர்கள் பலரையும் எழுதவைத்துப் பின்னாளில் அவர்கள் புகழடைவதற்கும் வழியமைத்துத் தந்தார். தமிழறிஞர் பலரின் படைப்புகளை வெளியிடச்செய்த பெருமை அவரைச்சாரும். தமிழையும் தமிழினப் பண்பாட்டையும் போற்றி வளர்த்த இதழ் என்ற பெருமை, அவ்விதழுக்கு உண்டென்றால் அதில் துரைக்கண்ணனின் பங்கும் கணிசமானது.

பிரசண்ட விகடனில் பணியாற்றிய காலங்களில் எத்தனையோ படிப்பினைகளையும் படைப்புகளையும் வழங்கிப் புகழ்மிக்க

இதழாசிரியராகவும் சிறந்த படைப்பாளராகவும் ஆனார். இலட்சக்கணக்கில் அவ்விரு இதழ்களும் அன்றைய நாள்களில் விற்பனை ஆயின. மக்களின் வரவேற்பும் கிடைத்தது. இவ்வகையில் மிகுந்த செல்வாக்கு அடைந்தமைக்குத் துரைக்கண்ணன் படைப்புகளும் காரணமாய் இருந்துள்ளன.

வெறும் பொழுதுபோக்கு என்ற தளத்தில் நின்று வெளிவந்த அன்றைய இதழ்களுக்கு இடையே, மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு மக்களை ஈர்த்த இதழ்கள் வெகு சிலவே. அச்சிலவற்றில் ஆனந்தபோதினி, பிரசண்ட விகடன் ஆகியவை சேரும். பிரசண்ட விகடனில் வெளிவந்த ஒவ்வொரு கதையுமே வாழ்வில் அன்றாடம் காணும் நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அதற்கு என வாசகர் பலர் அமைந்தனர். அன்றைய நாளில் போட்டிப் போட்டுக் கொண்டு இதழ்கள் வாசகர்களைத் தம்பால் ஈர்த்தன. ஆனந்த போதினிக்கு இணையாகக் கருதப்பட்ட ஆனந்த விகடனும், கல்கியும் வெகுசன இதழ்களாக உருவாகியிருந்தன. இருப்பினும் அவை மக்களை அணுகிய முறைக்கும், ஆனந்தபோதினி, பிரசண்ட விகடன் ஆகியவை அணுகிய முறைக்கும் வேறுபாடுகள் இருந்தன.

இதழ்களின் விற்பனையை மையப்படுத்தி வரும் இதழ்களின் தளம் வேறு; பயனுள்ளவற்றை நல்ல ஆக்கங்களுக்காக அமைத்துக்கொண்டு மக்கள் மனத்தில் சமூகத்தை மையப்படுத்தி எழுதிய இதழ்களின் தளம் வேறு. இரண்டாவது வகையில் துரைக்கண்ணனின் செயல்பாடு அமைந்திருந்ததால் அவரது படைப்புகள் வலுவுடையதாக இருந்ததோடு பத்திரிகையையும் வளப்படுத்தின.

துரைக்கண்ணனின் எழுத்துக்கள் முப்பதுகளில் மெல்ல மெல்லக் கனிந்து, அதன்பின்னர் அறுபதுகளின் தொடக்கம் வரை, தீவிரம் குறையாதிருந்தன. இதழியல் படகைச் செலுத்தித் தம் நீண்டதொரு வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்த துரைக்கண்ணனுக்குப் பத்திரிகை உலகமும், படைப்புலகமும் மிகக் கடமைப்பட்டிருந்தன

இவரது வாழ்வில் சந்தித்த பலரின் அனுபவ வெளிப்பாடுகளும், அவரே கண்டறிந்த வாழ்க்கை நுகர்ச்சிகளும் படைப் பாளர்க்குரிய ஆளுமையைத் தோற்றுவித்தன. அவற்றை வெளிக் கொணர்ந்து உதவ இதழியல் துறை துறைமுகமாக விளங்கியது

## 'ஜீவனு'ள்ள பெயர்களில் இருவர்

எழுத்தாளர்கள் சிலர் புனை பெயர்களில் எழுதி வருவது வழக்கம். இலக்கிய வடிவங்களுக்கு ஏற்பப் புனை பெயர் வைத்துக் கொண்டனர் நாரண துரைக்கண்ணனும் பல புனை பெயர்களில் எழுதி வந்தார். தாம் படைத்தளித்த கதைகளை 'ஜீவா' என்ற பெயரில் எழுதினார் கட்டுரையாக இருந்தால் மைவண்ணன், வேள், துலாம், தராசு, களந்தைக்கிழார் என்ற பெயர்களிலும், கவிதையாக இருந்தால் திருமயிலைக் கவிராயர் என்ற பெயரிலும் எழுதலானார். ஜீவனுள்ள படைப்புகளை அளித்து வந்ததால் ஜீவா என்ற பெயரே நிலைத்தது போலும்!

எழுத்தாளராகிய ஜீவாவையும், பொதுவுடைமை வாதியாக அரசியலில் திகழ்ந்த ஜீவாவையும் தமிழுலகம் நன்கறியும். இவ்விருவருக்கும் பல ஒற்றுமைகள் உண்டு; ஒத்த உணர்வும் உண்டு. மறைமலையடிகளால் பெயர் சூட்டப்பட்ட ப. ஜீவானந்தம் தமது பெயரைச் சுருக்கி ஜீவா என்று வைத்துக் கொண்டார். இவ்விருவருமே மறைமலையடிகளின் அன்பிற்குப் பாத்திரமாக இருந்துள்ளனர் பொது வாழ்க்கை, முற்போக்கு எண்ணம், கலை, இலக்கிய நாட்டம், இதழியல் பணி, ஆகியவற்றில் ஈடுபட்டவர்கள்; இருவருமே ஒரே ஆண்டில் பிறந்தவர்கள், மகாத்மாவைச் சந்தித்தவர்கள்; பாரதியார் பாடல்களில் மிக்க பற்றுக் கொண்டவர்கள்; பாரதியார் கவிதைகளைத் தமிழ்ச் சமுதாயத்திற்குக் கொண்டு சென்று பரவலாக்கியவராவர்; இலக்கியத் தளத்தை மக்கள் இலக்கியமாக உருவாக்கி வெற்றி கண்டவர்கள்; நடப்பியல் நெறியை இலக்கியத்தில் போற்றியவர்கள்.

துரைக்கண்ணன் தமது இல்லத்திற்கு 'ஜீவோதயம்' என்று பெயர் சூட்டினார். அப்பெயரில் ஓர் உயிர்ப்பும், ஈர்ப்பும் இருந்த காரணத்தால் அவ்வாறு அமைத்துக் கொண்டார் ஜீவன் உள்ள இலக்கிய ஊற்றாக துரைக்கண்ணனும், பொதுவுடைமை வானில் சுடர்விடும் விண்மீனாக ஜீவானந்தமும் ஒரே புனைபெயர் கொண்டிருந்தது ஒருவகையில் பொருத்தமே!

## தமிழ் தந்த மறைமலையடிகள்

இளம் வயதில் இலக்கிய ஆர்வத்தை வளர்த்துக் கொள்ள விரும்பிய துரைக்கண்ணன் அறிஞர் சிலரின் நூல்களையும், அவர்களது பேச்சினையும் கற்றுக் கேட்டு இன்புற்றார். ஒரு சமயம் மறைமலையடிகளின் சொற்பொழிவைக் கேட்டு அவரது நூல்களைப் படிக்க விரும்பினார். தமிழ் பயில வேண்டும் என்ற வேட்கை

தீவிரமாயிற்று. மறைமலையடிகளிடம் தமிழ் பயில விரும்பிய துரைக்கண்ணன், தம் ஆசையை மடல் எழுதித் தெரிவித்தார். மறைமலையடிகள் மற்றவர் நெருங்க இயலா அளவிற்குத் தமக்கெனத் தனி நெறி வகுத்துக் கொண்டு வாழ்ந்தவர். அவரிடம் பாடம் கேட்பதற்கு முயன்ற துரைக்கண்ணனின் மடலுக்கு இசைவு அளித்தார் துரைக்கண்ணன் அம்மடலைக் கண்டு இதயம் மகிழ்ந்து,

> *கடவுளிடம் இருந்து அழைப்பு வந்திருந்தால் கூட அவ்வளவு மகிழ்வுற்றிருக்க மாட்டேன். அடிகளாரின் அழைப்பு அவ்வளவு கழிபேருவகை அளித்தது*

என்று கூறியதை நோக்க அவருக்கிருந்த கல்வித் தாகமும், அதனை மறைமலையடிகளிடம் பெறவேண்டும் என்ற பேரவாவும் ஒருங்கே புலனாகின்றன. தம் மாணாக்கருள் ஒருவராக அவரைச் சேர்த்துக் கொண்டதற்குத் துரைக்கண்ணன் கடிதம் எழுதியிருந்த முறையே காரணம். ஒன்பது வயதில் தந்தையை இழந்ததையும், பத்தொன்பது வயதில் இருபத்தாறு ரூபாய்ச் சம்பளத்தில் மெய்ப்புத் திருத்துநராகப் பணியாற்ற வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாக்கிய பொருளாதார நலிவையும் குறிப்பிட்டு எழுதியிருந்த மடல் மறைமலை அடிகளின் உள்ளத்தைப் பிணித்தது. துரைக்கண்ணனிடம் அன்பும் பரிவும் காட்டச் செய்தது. மறைமலையடிகள், நேரில் துரைக்கண்ணனிடம் தமது பழைய நினைவலைகளைக் கூறுமாறும் செய்தது.

> *இளமையிலேயேஏற்படும் இவ்விதமானசோதனைகள் ஒரு விதத்தில் நல்லதென்றுதான் எனக்குத் தோன்றுகிறது. இது நம்மைத் தன் முயற்சியில் ஈடுபடுத்துகிறது. வறிய நிலையிலிருந்து வாழ்க்கையில் முன்னேற வேண்டுமே என முயலத் தூண்டுகிறது. இளமையில் ஆதரவு இல்லாததால்தான் நான் முயன்று கற்றறிந்தவரை அடுத்துத் தமிழும் ஆங்கிலமும் அக்கறையாகப் படிக்கத் தொடங்கினேன்*

என மறைமலையடிகளே மனந்திறந்து துரைக்கண்ணனிடம் கூறியதை உணருகிறபோது, அடிகள், அவர் மீது வைத்திருந்த பரிவு புலனாகிறது. துரைக்கண்ணன் முதன்முதலாகத் தம்மை நேரில் சந்தித்த சூழ்நிலை மறைமலை அடிகளைப் பின்வருமாறு நினைக்கச் செய்தது.

> *மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளையின் மேல் பக்தி கொண்டு அவரைப் பார்க்க நாகப்பட்டினத்திலிருந்து திருவனந்தபுரம் சென்றேன். என்னைப் பார்த்து அவர் வியப்படைந்தார்.*

என்ற மறைமலையடிகளின் சொற்கள், தம்மை அதே போன்றதொரு

சூழலில் வியப்பூட்டியதை எண்ணிப் பார்த்துள்ளார், துரைக்கண்ணன். தம் உருவத்தையும் சிறிய வயதையும் அவ்வயதில் இருந்த தமிழ்ப்பற்றையும் கண்டே, மறைமலையடிகள் தமக்கும் அவ்வாறு நிகழ்ந்ததொரு நிகழ்ச்சியை அவரிடம் கூறியது சிலிர்ப்பை உள்ளத்தில் ஏற்படுத்துவதாகும்.

துரைக்கண்ணனுக்குத் தமிழ் கற்பிக்க இசைந்த அடிகள் துரைக்கண்ணன் அலுவலகம் சென்று வந்த நிலையில், வாரத்தில் சனி, ஞாயிறு ஆகிய கிழமைகளில் வந்து பாடங்கேட்குமாறு பணித்தார். சிலப்பதிகாரத்தைக் காலையிலும், சிவஞான போதத்தை மாலையிலுமாக அக்கிழமைகளில் கற்று வந்தார். ஏனைய இலக்கியங்களையும் இவற்றிற்குப் பிறகு கற்றுக் கொண்டார்.

மறைமலையடிகள் துரைக்கண்ணனுக்காகத் தமது அரிய நேரத்தை ஒதுக்கிக் கற்பித்து வந்ததை எப்போதும் அவர் நினைவு கூர்வார். மறைமலையடிகளிடம் கற்ற தமிழ்தான் மறையாத தமிழாக, துரைக்கண்ணனின் எழுத்திலும் எண்ணத்திலும் குடியிருந்தது.

மறைமலையடிகளின் மகன் மறை திருநாவுக்கரசு, தம் தந்தையிடம் துரைக்கண்ணன் பாடங்கேட்டதைப் பின் வருமாறு தெரிவித்துள்ளார்.

> *இந்நூற்றாண்டின் புதுமை எழுத்தாளர்களின் தலைவர்களில் ஒருவராய் விளங்கும் நாரண. துரைக்கண்ணன் என்பார் சென்னை நகரைச் சார்ந்தவர். சான்றோர் குடியில் தோன்றிய அறிஞர். தோற்றத்தால் அவரை அறிஞர் என்று கூற முடியாது.*
>
> *எழுத்தால்தான் அவரை அறிஞர் என்று கண்டு பிடிக்க முடியும். புலமை பெறவேண்டுமென்று துடித்து நின்ற அவர்க்கு வறுமை இயல்பானது தானே! தோற்றப் பொலிவாலும் எளிமையாலும் சிறக்க இயலாத அவர் தம்மறிவு, எழுத்து, ஆன்ற பண்புகளால் அடிகள் உள்ளத்தைக் கவர்ந்தார்.*

*(மறைமலையடிகள் வரலாறு பக்.696-697)*

என்று துரைக்கண்ணன் பற்றி எழுதி இருக்கிறார். அடிகளின் உள்ளம் கவர்ந்த கள்வராகவும், தமிழ்மலையிடம் தஞ்சம் புகுந்த தகவினராகவும் இருந்து சுமார் ஆறாண்டுக் காலங்கள் (1925-1931) பாடங்கேட்டிருக்கிறார். மறைமலை அடிகளின் மகள் நீலாம்பிகையார், சந்திர சேகர ஆசாரியார், சோமசுந்தர முதலியார், பாலசுந்தரம் (இளவழகனார்) ஆகியோர் உடனிருந்து பாடங்கேட்டோருள் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவர்.

தம்மிடம் தமிழ் பயின்ற துரைக்கண்ணனுக்கு இலக்கியம் கற்றுத் தந்ததோடு வாழ்வியல் நெறிகளையும் அறிவுரையாக வழங்கி இருக்கிறார் அடிகள். தம்மாணாக்கர்களுக்கு உரைநடை மீது நாட்டத்தை ஏற்படுத்தினார். செய்யுள் வளம் தமிழில் தொன்று தொட்டே இருந்து வந்ததை மனத்திற் கொண்டு,

> *நீங்கள் எல்லாம் உரைநடையை வலுப்படுத்த வேண்டும். நமக்குக் கவிதைச் செல்வம் நிரம்ப இருக்கிறது. நம் பண்டை இலக்கியங்களெல்லாம் கவிதைகள் தாமே!*

என்பதை எடுத்துக் கூறித் தமிழில் உரைநடை இலக்கியத்தை வளப்படுத்தவும், வலுப்படுத்தவுமான கருத்துகளை அடிகள் வழங்கியுள்ளார். துரைக்கண்ணன் அடிகள் சொன்னதை அமைவுறக் கேட்டுப் பின்னாளில் உரைநடை இலக்கியத்தால் தமிழன்னைக்கு அணிசேர்த்தார்.

மறைமலை அடிகளின் குடும்பத்தாரிடம் அன்பும் பாசமும் கொண்டிருந்தார் துரைக்கண்ணன். அடிகளின் இலக்கிய அரவணைப்பில் திளைத்த அவர், அடிகளின் துணைவியார் அளித்த விருந்தோம்பல் பண்பை நன்றிப் பெருக்கோடு சொல்லிக் கொண்டார். 'நான்கு பிள்ளைகளோடு ஐந்தாவது பிள்ளையாக இருந்து படித்துக்கொள்' என்று அடிகளின் துணைவியார் கூறியதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொண்டார்.

இலக்கியக் கல்வியோடு வாழ்க்கைக் கல்வியையும் அடிகளிடம் கற்றுக் கொண்டார் துரைக்கண்ணன் எதிலும் ஓர் ஒழுங்கு முறையை மேற்கொள்ள அடிகளின் அறிவுரையும், அடிகள் தம் இல்லத்தைத் தூய்மைப்பட வைத்திருந்த ஒழுங்குமே காரணங்களாயின

நூல்படித்தல் என்பது ஆழ்ந்து, ஆய்ந்து கற்பதாக இருக்க வேண்டும்: அறிவு சான்ற நூல்களையே கற்க வேண்டும் மேம்போக்காக எதையும் கற்கக் கூடாது என்பதை யெல்லாம் தம் மாணாக்கர்களுக்கு எடுத்துக் கூறிக் கல்வியறத்தைப் பேணும்படி ஊக்குவித்தவர் அடிகள். இக்கருத்துக்களை உளங்கொண்டு போற்றிய துரைக் கண்ணன் அடிகளின் அறிவுரையை மறவாது ஒழுகியதோடு எழுத்துலகிலும் எழுத்தறம் காத்துவந்தார் எனில் அது மிகையன்று.

மறைமலையடிகளிடம் தமிழொடு சைவமும் கற்றறிந்தார். இளவயது முதலே இறைப்பற்று மிக்கவராக விளங்கிய துரைக்கண்ணன், கோயில் துப்புரவு பணிகளில் ஈடுபட்டும், உழவாரப்படை கொண்டு திருச்சுற்றுகளைத் தூய்மைப் படுத்தியும்

வந்தார். கோயில் கருவறை முன் இறைப் பாடல்களை உளமுருகப்பாடுவார். தமிழொடு இசைபாடல் மறந்தறியாத துரைக்கண்ணன் தமிழையும் சைவத்தையும் போற்றி வந்தவர். தம் நண்பர்கள் சிலரோடு சேர்ந்து 'சைவத் திருநெறிக் கழகம்' என்ற பெயரில் ஓர் அமைப்பைத் தொடங்கியவர் சமயத்துறையில் அவருக்கு ஈடுபாடு தோன்றக் காரணமாக இருந்தவர் அவருடைய தந்தையார். சைவ சாத்திரங்களையெல்லாம் பிற்பாடு நன்கு தெளிந்தாய்ந்து அறிய வாய்ப்பாயிற்று, மறைமலை அடிகளிடம் பயின்ற சமயக் கல்வி.

துரைக்கண்ணன், சைவம் போற்றிய சான்றோர் பலருடன் தோழமை கொண்டிருந்தார் ஞானியாரடிகள், மா.வே நெல்லையப்பர், கா சுப்பிரமணிய பிள்ளை, காந்திமதிநாதர், சச்சிதானந்தம், திரு.வி.க. முதலியோரிடம் கலந்து பழக இவரது சமயப்பற்றும், மொழி உணர்ச்சியும் காரணமாக அமைந்திருந்தன

ஒரு சில சமயங்களில், சமயஞ் சார்ந்த கட்டுரைகளின் போக்கை மறுத்துமிருக்கிறார். ஆனந்த போதினி இதழில் வந்த 'தெய்வம் என்பதோர் சித்தம்' என்ற கட்டுரை குறிப்பிடத்தக்கது ஞானியாரடிகளின் கருத்துக்களை மறுத்து, 'சென்றடையாத திருவுடையான்' என்னும் கட்டுரை சமயத்துறையில் இவர் பெற்றிருந்த புலமைக்குச் சான்றாகும். சிறுவயதில் மறைமலையடிகளிடம் சிவஞான போதம் பாடம் கேட்டவராயிற்றே! ஞானியாரடிகளுக்கே மறுப்புச் சொல்லக் கூடிய அளவில் மதிப்புப் பெற்றிருந்தமைக்கு மறைமலை அடிகள் பயிற்றிய கல்வியும், பாடஞ் சொல்லிய முறையுமே காரணங்களாகும்.

## தமிழ்த் தென்றலின் சுவட்டில்

தமிழ்த் தென்றல் திரு வி.க விடம் மிக்க மதிப்பு வைத்திருந்தார் பொதுமைப்பணிகளில் இருவருமே பேரார்வம் காட்டி வந்ததோடு அவற்றை வினைத் திட்பமறிந்து செயலாற்றுவதில் துடிப்போடு இயங்கினர் திரு.வி.கவின் சொற்பொழிவு எங்கு நிகழினும் அங்குச் சென்று கேட்பதைத் துரைக்கண்ணன் வழக்கமாகக் கொண்டிருந்தார் திரு வி க வின் பேச்சினிமையும், சொல்லும் முறையும் தென்றலின் சுகத்தை அள்ளி வருவது போன்று இருந்தன. இயற்கையின் மாட்சியை அழகியலோடும், இறைமையோடும் இணைத்துக் கூறியதாகவும் அமைந்திருந்தன துரைக்கண்ணனுக்குத் திரு.வி க. விடத்து மிகுதியான ஈடுபாடு ஏற்பட்டது. அவரிடம் அணுக்கமாகப்

பழகி வந்தார்; தமது பணிகளுக்கும் கடமைகளுக்கும் அவரை முன் மாதிரியாகக் கொண்டார்.

திரு வி.க. தொழிற்சங்கத் தலைவராக இருந்தபோது, அவரது தொண்டுள்ளத்தை மிகப் பாராட்டினார் தமிழகத்தில் இந்தி கட்டாயப் பாடமாக்கப்பட்டதை ஈ.வே.ரா. எதிர்த்தபோது, அறிஞர் பலரும் அவரை ஆதரித்தனர் திரு.வி க. எதிர்க்காமல் ஒதுங்கியே இருந்தார் மறைமலையடிகள் தலைமையில் நடந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டில் திரு.வி.க. வரவேற்புக் குழுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆயின் மாநாட்டில் அவர் கலந்து கொள்ளவில்லை. அவருக்குப் பதிலாகத் துரைக்கண்ணனை அப்பொறுப்பில் அமர்த்தினர். அதனைப் பெரியாரே முன்மொழிந்தார்

1927 இல் எழுதிய தீண்டாதார் யார்? என்ற நாடகம், 1931 இல் வெளியான புருடோத்தமன் அல்லது கோனாட்சியின் வீழ்ச்சி என்ற நாவல் ஆகிய இரு படைப்புகளுக்கும் திரு வி.க.விடம் அணிந்துரை பெற்றார் துரைக்கண்ணன்.

இருவருக்கும் மொழிச் சிக்கலில் கருத்து வேற்றுமை நிலவிற்று. அது பின்னர் மறைந்தொடுங்கியது. எனினும் அது அவ்விருவரது நட்பிற்கு இடையூறாய் இருந்ததில்லை. ஒரு சமயம ப. ஜீவானந்தம், துரைக்கண்ணனிடம் நிலவிய நட்பு என்னும் அருங்குணத்தைப் போற்றியுரைத்திருப்பது இங்கு எடுத்துக் காட்டத் தகும்.

> கருத்துவேற்றுமைக்கு மதிப்புக் கொடுத்துப்பழகும் பெருங்குணத்தைத் தமிழ்ப் பெரியார் திரு.வி.க. விற்குப் பின் நாரண. துரைக்கண் ணனிடமே நான் காணலானேன்.

இது துரைக்கண்ணனிடம் இருந்த நட்புப் பாராட்டும் உள்ளத்தை இனிதே விளக்குகிறது.

ஒரு சமயம் திரு.வி.க. கை ரிக்சாவில் துரைக்கண்ணனை ஏறும்படி பணித்தார், துரைக்கண்ணன், தயங்கினார்.

> நான் இலட்சியத்தோடு எளிமையுடன் வாழ்ந்து வருகிறேன்; மனிதனை மனிதனே இழுக்கும் கொடுமையை என்னால் பொறுத்துக் கொள்ள முடிய வில்லை. அதனால்தான் நான் ரிக்ஷாவில் ஏற விரும்பவில்லை.

என்று துரைக்கண்ணன் கூறினார். இதற்கு,

> இப்படிப்பட்ட மக்கள் இதையே நம்பிப் பிழைக்கும் காலம் வரை நாம் அவர்களுக்கு உதவத்தான் வேண்டும்

என்று திரு.வி.க. பதில் கூறினாலும் இவ்வுரையாடலுக்குப் பின்

திரு.வி.க. தாம் செல்லுமிடங்களுக்கு ரிக்சாவைப் பயன்படுத்த வில்லை. இதற்குக் காரணமானவர் துரைக்கண்ணனே. பண்பு பாராட்டும் பெருந்தகைமை இருவரிடமும் இருந்துள்ளது.

திரு.வி.க.வின் இறுதி நாள்கள் மறக்க முடியாதவை. கண் பழுதுபட்டுப் பார்வையற்றிருந்த போதிலும், அவரது எழுத்துக்கள் என்றும் பழுதடைந்ததில்லை. எழுத முடியாமற் போனபோது, வாய் வழியாகச் சொல்ல அதனை எழுத்தாக்கிய பெருமை துரைக் கண்ணனைச் சாரும். திரு.வி.க. சொல்லச் சொல்ல அதனை எழுதுவது அவரது வழக்கமானது. இப்பணியில் மு வ வும், அன்பு கணபதியும் கூடத் தமிழ்த் தென்றலுக்கு இறுதிகாலத்தில் எழுதி உதவினர்.

## வ.ரா.வோடு நட்பு

அறிஞர் அண்ணாவால் அக்கிரகாரத்து அதிசய மனிதர் என்றழைக்கப்பட்ட வ ராமசாமி, (வ.ரா) பாரதியின் நண்பர். இளைஞர் இதயங்களில் பாரதி பற்றை ஊட்டி வளர்த்தவர். விடுதலை இயக்கத்தில் பங்கேற்றவர். சமூக சீர்திருத்தத்தைத் தம் படைப்புகளில் துணிவோடும், துடிப்போடும் எழுதி வந்தவர்.

அன்றைய நாளில் பலராலும் போற்றப்பட்ட மணிக்கொடி பத்திரிகைக்கு வ.ரா ஒரு சமயம் ஆசிரியராக இருந்தார். அவ்விதழில் வெளிவந்த ஒரு கவிதை சங்க இலக்கியத்தை அப்படியே அடியொற்றியிருந்தது. கலித் தொகையில் இடம்பெற்ற 'சுடர்த் தொடி கேளாய்' என்ற குறிஞ்சிக் கலியைப் பெயர்த்து ஓரன்பர் எழுதியதைப் படித்த துரைக்கண்ணன் வ.ரா.வுக்கு மடல் எழுதி, அது 'இலக்கிய மாரீசத்தனம்' எனக்கடுமையாகச் சாடியிருந்தார் துரைக் கண்ணனைக் காண விரும்பிய வ.ரா.வின் சந்திப்பு இருவருக்குமிடையே நட்பைத் தொடக்கி வைத்தது. இலக்கிய நட்பாக மலர்தற்கு, இலக்கியத்தால் வந்த சந்திப்புக் காரணமாயிருந்தது.

1945 இல் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராக வ.ரா. இருக்க வேண்டும் என்று துரைக்கண்ணன் ஆசைப்பட்டார். அவரைத் தலைவராக்குவதற்கு எதிர்ப்பிருந்தது எனினும், துரைக்கண்ணன், புத்தனேரி ரா. சுப்பிரமணியத்தை முன்மொழியச் செய்து வ.ரா. வைத் தலைவராக்கினார். பிரசண்ட விகடனில், வ.ரா.வைப்பற்றி,

> வ.ரா எத்தனையோ எழுத்தாளர்களை உருவாக்கியவர்.
> இளம் எழுத்தாளர் பலரை ஊக்கி, இதழ்களில் எழுத்து
> வெளிவருமாறு செய்து உதவியவர்

என எழுதி வ ரா.வின் தொண்டுள்ளத்தைப் பாராட்டினார் அவருக்கு நிதி அளிப்பு வழங்கவும் முயற்சி மேற்கொண்டார்.

## கல்கி என்னும் கடல்

நாரண. துரைக்கண்ணன் கல்கிக்கு முன்பிருந்தே கதைகள் எழுதி வந்தவர். எழுத்துலகில் ஏற்கெனவே அறிமுகமாகிப் பெயரும் புகழும் பெற்றிருந்தார். கல்கி ஆனந்தவிகடனில் பணியாற்றியபோது, பிரசண்ட விகடனில் ஆசிரியராக இருந்தவர் நாரண. துரைக்கண்ணன். கல்கி, துரைக்கண்ணனிடம் அன்பு பாராட்டியவர். கல்கிக்கு இருந்த செல்வாக்கும் புகழும் துரைக்கண்ணனுக்குச் சற்றே குறைந்திருந்த போதிலும் அவற்றைப் பொருட்படுத்தாத பண்புள்ளத்தைப் பெற்றவர் கல்கி, தம்மை அனைத்து நிலைகளிலும் முன்னிலைப் படுத்திக் கொண்டவர். கல்கிக்குப் பெருமை சேர்வதை ஏற்றுப் போற்றியவர் துரைக்கண்ணன். தம்மைப் போன்ற ஓர் எழுத்தாளர் பெருமைப்படத்தக்க நிலையில் உள்ளார் என்பதை எண்ணியதோடு கல்கிக்குப் புகழ் கிடைத்தால் அது எழுத்தாளராகிய தமக்குக் கிடைத்ததுபோல என்று கூறிப் பெருமிதம் அடைவாராம் பல பொது நிகழ்ச்சிகளிலும், மாநாடுகளிலும் கல்கியை முன்னிலைப் படுத்துவதில் முனைப்புக் காட்டியவர் துரைக்கண்ணன்

தமிழ் எழுத்தாளர் சங்கச் சென்னைக் கிளைக்குக் கல்கியைத் தலைவராக நிறுத்தியபோது, கடும் எதிர்ப்பு இருந்தது க.நா சு. போன்றோர் எதிர்த்தனர். அப்போது மாநிலத் தலைவராக இருந்த துரைக்கண்ணன் எழுத்தாளர் பலரை அணுகிக் கல்கியின் ஆற்றலைக் கூறி ஆதரவு தேடித் தந்தார்.

எந்த ஒன்றையும் சிக்கலுக்கு உள்ளாக்க முயலாமலும், கூடியவரை ஒத்துப்போகும் பண்பினராகவும் விளங்கியவர் துரைக்கண்ணன் என்பதற்குக் கல்கி தொடர்பான ஒரு நிகழ்ச்சி தக்க எடுத்துக் காட்டாகும். துரைக்கண்ணனுக்கு, இளம் எழுத்தாளர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்பதில் இரண்டாவது கருத்து இருந்ததில்லை. 'ஜீவாவின் சிறுகதைகள்' என்ற நூலுக்கு ஆர்.கே சண்முகமும், டி.கே.சியும் முதற் பரிசு தர இருந்தனர். தமிழ் வளர்ச்சிக் கழகம் அவ்வாறு தர இருந்தது. அக்கழகத்தின் குழுவினருள் கல்கியும் ஒருவர். அந்நூலுக்குப் பரிசளிக்க வேண்டாம் எனக் கல்கி கேட்டுக் கொண்டார். அப்பரிசு விந்தனின் முல்லைக் கொடியாள் என்ற சிறுகதைத் தொகுதிக்குக் கிடைக்கக் காரணமாக இருந்தவர் கல்கி.

இது தொடர்பாக, கல்கிக்கும், துரைக்கண்ணனுக்கும் இடையே கருத்துமோதல் இருந்தது எனப் பேசப்பட்டது. ஆனால் இளம் எழுத்தாளர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்ற துரைக் கண்ணனின் நோக்கத்தை அறிந்திருந்த கல்கியின் மனநிலையை சிலரே உணர்ந்திருந்தனர்.

ஜீவாவின் களங்கமில்லாத பொது வாழ்க்கை கல்கியைப் பலமுறைகவர்ந்திருக்கிறது என மு. பரமசிவம் குறிப்பிட்டிருப்பது இவ்விடத்தில் பொருத்திக் காண வேண்டிய ஒன்றாகும்.

கல்கியும், துரைக்கண்ணனும் காந்திய நெறியினர். காந்தியத்தை எழுத்தில் போற்றியவர்கள். இதழியல் துறையில் கல்கிக்கு இணையான புகழைத் துரைக்கண்ணன் ஓரளவு பெற்றிருந்தார்.

பாரதி கலைக்கழகம் கண்ட துரைக்கண்ணன், தம் நண்பர்களின் முயற்சியால், பாரதியார் பாடல்களைத் தேசியமயமாக்கியதைக் கொண்டாடிய வெற்றி விழாவின்போது, தொடக்கத்தில் பாரதி கவிதைகளை ஏற்றுக் கொள்ளாமலிருந்து பின் மகாகவி என்பதை ஏற்ற, கல்கியைத் தலைமைதாங்க அழைத்தார். அவ்விழாவினை நடத்திக் காட்டியதும், தலைமை தாங்க கல்கி இசைந்ததும் இருவருக்குமுள்ள நட்புரிமையை வெளிப்படுத்தும்.

## இராஜாஜி பற்றிய முதல்நூல்

இராஜாஜியின் பக்தராக இருந்தவர் துரைக்கண்ணன் இராஜாஜி சமுதாய சீர்திருத்தத்தில் கொண்டிருந்த அக்கறையே அதற்குக் காரணம். இராஜாஜியின் வாழ்க்கை வைதீகத்தில் படிந்திருந்தாலும், பொது நலனில் அவர் காட்டிய தீவிரமான நடவடிக்கைகள், துரைக்கண்ணனுக்குப் பிடித்திருந்தன. அவற்றில் மதுவிலக்குக் கொள்கை மிகவும் பிடித்திருந்தது. துரைக்கண்ணன் கள் இறக்கும் வகுப்பைச் சார்ந்தவராக இருந்தாலும், மது விலக்கை இளவயது முதலே ஆதரித்து வந்தவர். மதுவிலக்கு, காங்கிரஸ் சபையின் தீர்மானத்தால் நிறைவேற்றப்பட்டு 1937 இல் தமிழகத்தில் நடைமுறைக்கு வந்தது. தமிழகத்தில் கள் இறக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த ஆயிரக்கணக்கானோரின் தொழில் முற்றிலும் பாதிக்கப்பட்டது. துரைக்கண்ணனின் குடும்பமும் அதில் ஒன்றாகும். அதையும் பரந்த நோக்கில் எடுத்துக் கொண்டு மக்கள் பலருக்கும் உரிய நல்லதொரு திட்டமாகவே மதுவிலக்கைக் கருதினார்.

தமிழில் முதன்முதல் இராஜாஜியின் வரலாற்றை எழுதி வெளியிட்டவர் துரைக்கண்ணன். அவ்வாறு அவருடைய வாழ்க்கை

வரலாற்றை எழுதத் தூண்டியதற்கான காரணத்தைக் கூறியுள்ளார்.

> *இராஜாஜியின் சமூக சீர்திருத்தக் கருத்துக்களுக்காகவும் அவர் மது விலக்குக் கொள்கையில் தீவிர ஈடுபாடு கொண்டிருந்ததற்காகவும்நான் அவர்பால் கவரப்பட்டேன். ஆகவே, அப்படிப்பட்ட பெருமானுடைய வரலாற்றை எழுத வேண்டும் என்ற அவா என் உள்ளத்தில் ஏற்பட்டது.*

1934 இல் 'ராஜாஜி சரிதம்' என்ற நூலைத் துரைக்கண்ணன் எழுதி வெளியிட்டார். இது இராஜாஜி எந்தப் பதவியிலும் இல்லாதிருந்த காலத்திற்கு முன்பே எழுதப்பட்டது என்பதைக் குறிப்பிட வேண்டும் எந்தக் குறியெதிர்ப்பும் இல்லாதவர் துரைக்கண்ணன் என்பதையே இது காட்டுகிறது. இந்நூல் பற்றி இராஜாஜி குறிப்பிடும்போது,

> *என் வரலாற்றை எழுதுவதை நான் விரும்ப வில்லை. ஆனால் நீங்கள் வெளியிட்டு விட்டீர்கள். எனக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. உங்களுக்கு என் ஆசீர்வாதம்.*

என்று கூறினார். கல்கி எழுதக் கருதியிருந்த இராஜாஜியின் வாழ்க்கை வரலாற்று நூலுக்கு முன்பே துரைக்கண்ணன் எழுதிய நூல் வெளிவந்தது. 'தன்னை முந்திக் கொண்டதாயும், மாபெரும் மகத்தான சாதனை செய்து, பெயர் பெற்றுவிட்டதாயும் கல்கி பாராட்டினார். முதற் பெருமை துரைக்கண்ணனைச் சாரும். இதன் பின்னர் இராஜாஜியின் வாழ்க்கையை 'நாட்டுக்கு ஒரு நல்லவர்' என்ற பெயரில் கல்கி நூலாக வெளியிட்டார்.

இராஜாஜியின் பல தீவிரமான சமுதாயச் சீர்திருத்தத்தைத் தம் நூலில் துரைக்கண்ணன் வெளிப்படுத்தியுள்ளார். தீண்டாமை, மதுவிலக்கு, ஆலய நுழைவு ஆகியவற்றில் தீவிரமாக இருந்து இராஜாஜி செயல்பட்டதனை நூலில் பதிவு செய்துள்ளார். இந்நூல், இராஜாஜிக்குத் தனிப் புகழ் சேர்த்தது என்பதில் ஐயமில்லை. பல பதிப்புகள் கண்ட இந்நூல், பத்தாண்டுகளுக்கு மேல் அன்றைய நாள்களில் உயர்நிலைப் பள்ளிகளில் பாடமாக இருந்தது. இவ்வாறு, இராஜாஜியின் வாழ்க்கையை 1878-1938 ஆகிய ஆண்டுகளில் இராஜாஜி புரிந்த சாதனைகளை விளக்கி, அவரது காலத்திலேயே வெளிக் கொணர்ந்து தக்க புகழைப் பெற்றார் துரைக்கண்ணன்.

தனிப்பட்ட முறையில், இராஜாஜி கேட்டுக் கொண்டதன்பேரில், அவரது சொந்த வாழ்க்கையில் தேவையில்லாதது என்று கருதிய சில நிகழ்ச்சிகளைப் பதிவு செய்ய வேண்டா எனக் கூறியதால், அடுத்து வந்த பதிப்புகளில் அவற்றைத் துரைக்கண்ணன் அறவே நீக்கிவிட்டார். இந்நூல் வெளிவந்தபோது பலரின் பாராட்டைப்

பெற்றது. இந்நூலின் முன்னுரையை டாக்டர் சுப்பராயன் எழுதியுள்ளார். திரு. பக்தவத்சலம் வெகுவாக இந்நூலைப் பாராட்டினார். இராஜாஜியுடன் மிக நெருக்கமாக இருந்தவர்கள் கூட அறிந்திராத பல செய்திகள் இதில் இடம் பெற்றிருந்தன. அந்த அளவிற்கு இந்நூல், 'தனிமனிதனின் வரலாறாக அமையாமல் தமிழகத்தின் வரலாறாக அமைந்தது' என்று மு.பரமசிவம் சுட்டியிருப்பது பொருத்தமான கூற்றாகும்.

துரைக்கண்ணன், பொதுநலம் கருதிச் சமுதாயம் மேம்பட வேண்டும் என்ற நல்லுணர்வைக் கொண்டிருந்ததற்கு இந்நூல் ஒரு சான்றாகும். மதுவிலக்கை ஆதரித்த துரைக்கண்ணன், குடியின் சீரழிவை உணர்ந்தவர். தம் இனத்துக்குரிய தொழில், கள் இறக்குவது என்பதை அறிந்திருந்தும், தம் சமூகம் தொழில் ஏதுமின்றி வாடுமே என்று கவலையுறாது நாட்டு மக்கள் நலமுற வாழ்வதையே பெரிதும் விரும்பினார்.

> *மது இறக்கும் குலத்தில் பிறந்த நான் மதுவால் அந்தச் சமூகமும், பிற சமூகங்களும் கெட்டொழி வதைக் கண்டு துடிதுடித்த என் இளமனசுக்கு ராஜாஜியின் மதுவிலக்குச் சட்டம் ஒரு வரப்பிரசாதமாகப்பட்டது. நன்றி உணர்ச்சியால் என் மனம் அழுதது*

எனக் குறிப்பிட்டுள்ளார். பொது வாழ்க்கையில் உள்ள அக்கறையை இதன் வழியே புரிந்து கொள்ள முடிகிறது. தன்னலம் கருதாத தகைமைசால் உள்ளம் பெற்ற துரைக்கண்ணன், இராஜாஜியை மதுவிலக்குச் சட்டம் கொண்டு வந்தமைக்காக வெகுவாகப் பாராட்டி நூல் எழுதினாலும், நடுநிலைமையோடு பின்னாளில் இராஜாஜியைச் சில சூழ்நிலைகளால் எதிர்த்த நிகழ்வுகளும் உண்டு. இதழ்களில் இராஜாஜியின் சில கொள்கைகளைப் பின்னாளில் விமர்சனம் செய்துள்ளார்.

## பெரியார் என்னும் பேரிமையம்

பகுத்தறிவுப் பகலவன் எனப்போற்றப்பட்ட பெரியார் ஈ.வே.ரா. தமது பொதுநலத் தொண்டாலும், திராவிட இயக்கத்தாலும் தமிழ் இனத்துக்குத் தம்மை அடையாளப் படுத்தியவர். அரசியலில் புரட்சிப் புயலை அவ்வப்போது உருவாக்கித் தம் கருத்துக்களால் அனைவரையும் உற்று நோக்கச் செய்தவர். அரசியல் அணுகு முறைகளில் கட்சி முன்னணித் தலைவர்களிடம் கருத்துமுரண் கொண்டாலும், அவர்களை மதிப்போடும் மரியாதையோடும்

மதிக்கத் தெரிந்தவர். அவர் உணர்த்திய தன்மானக் கொள்கையும், பகுத்தறிவும் மறக்கற்பாலன அல்ல. நாரண. துரைக்கண்ணனிடம் பெரியாருக்குத் தனி மதிப்பு இருந்தது.

1938 இல் இந்தி கட்டாய மொழியாகக் கொண்டு வரப்பட்டபோது, அதனைத் தீவிரமாக எதிர்த்தவர். 1948 இல் மீண்டும் அது தலை யெடுத்தபோதும் எதிர்த்தார். 1948 இல் நடந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டிற்கு மறைமலை அடிகள் தலைமை தாங்கினார். வரவேற்புக் குழுவிற்குத் தலைவராக இருந்தவர் துரைக்கண்ணன்.

காந்தியத்தில் நம்பிக்கை கொண்டிருந்தாலும் பெரியாரின் கொள்கைகளை மதித்தவர் துரைக்கண்ணன் சமூக சீர்திருத்தக் கருத்துக் களில் தீவிரமாக இருக்கும் துரைக்கண்ணனை சுயமரியாதை இயக் கத்தில் ஏன் சேரக்கூடாது எனப் பெரியார் இவரைக் கேட்டபோது, தாம் கடவுள் நம்பிக்கை உடையவன் எனவும், காந்தியின் கருத்தை மதித்து நடப்பவன் எனவும் கூறி, பெரியாரின் கொள்கையை முற்றுமாக ஏற்க இயலா நிலையைத் தெரிவித்துள்ளார். தம்மிடம் அவ்வாறு வெளிப்படையாகப் பேசியதைக் கேட்டு, துரைக் கண்ணனின் உறுதியான கொள்கையை ஈ.வே.ரா பாராட்டியதுண்டு

ஈ.வே.ரா.வுடன் சுமார் நாற்பதாண்டுக் காலம் நட்பிருந்தது. பெரியாரின் சமூக சீர்திருத்தங்களைப் போற்றிய துரைக் கண்ணன், 1927 இல் எழுதிய 'தீண்டாதார் யார்' என்ற முதல் நாடகம் பெரியாரிடத்து அவரை அறிமுகப் படுத்தக் காரணமாயிற்று தன்மான இயக்க மாநாடுகளில் அந்த நாடகம் இனிதே நடைபெற்று வந்தது.

துரைக்கண்ணனிடம் மதிப்புக் கொண்ட பெரியார், தாம் நடத்திய சாதிய ஒழிப்பு, மொழிப் போராட்டம் முதலிய இயக்க நிகழ்ச்சிகளுக்கும், மகாநாடுகளுக்கும் அவரைத் தலைமை வகிக்கச் செய்வது வழக்கம். பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனையை ஏற்றுக் கொண்டாலும், சமயப்பற்று மிக்கவராகவே விளங்கினார் பெரியார் வலியுறுத்தி வந்த சாதிய ஒழிப்பு, இந்தி மொழி எதிர்ப்பு, சமுதாய சீர்திருத்தம், பெண்கள் முன்னேற்றம் முதலியவை துரைக்கண்ணனுக்கு ஏற்புடையதாக இருந்தன. இவற்றை வரவேற்றுப் பல மேடைகளில் பேசியும், இக் கருத்துக்களை நூல்களில் எழுதியும் வந்தார் பெரியாரின் சிந்தனைகள் பெரும்பான்மையும் தமக்கு உகந்ததாக இருந்ததால், அவரைப் பற்றி நூல் எழுத முனைந்தார் 'ஈரோட்டு வள்ளல்' என்ற வாழ்க்கை வரலாற்று நூலை முதன் முதலாக வெளிக் கொணர்ந்தார்.

பெரியார் உருசியா சென்று திரும்பிய பிறகு, பத்திரிகையாளர் சார்பில் மிகச் சிறப்பான விழா எடுத்தார். அவ்விழா குடியரசு பத்திரிகையின் ஆசிரியர் என்ற நோக்கில் எடுக்கப்பட்ட விழாவாகும். அப்போது திராவிடன் இதழில் ஆசிரியப் பணியில் இருந்தவர் துரைக்கண்ணன். அப்போதுதான் இருவருக்கும் நட்பு வளர்ந்தது. பெரியார் குடியரசு இதழை நடத்தி வந்தபோது, மற்றொரு குடியரசு இதழும் வெளிவந்தது.

தொழிலதிபர் பொள்ளாச்சி நா மகாலிங்கத்தின் உதவியோடு அவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவரத் தொடங்கிய அவ்விதழைத் துரைக்கண்ணன் தம் திருக்கரங்களால் வெளியிட்டார். இவ்விதழில் துரைக்கண்ணன், சில காலம் தமது வாழ்க்கை வரலாற்றை எழுதிவரலானார் அது அரைகுறையாகவே நின்று போய்விட்டது. பெரியார் சிந்தனைகளையும், காந்திய நெறியையும் போற்றிய துரைக்கண்ணன், உடையால் காந்தியாகவும் உள்ளத்தால் பெரியராகவும், வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்.

**காமராசரின் கருணையுள்ளம்**

அரசியல் தலைவர்களில் நின்று நிலவக் கூடிய புகழைப் பெற்றவர்களுள் ஒருவர் அரசியல் வாழ்க்கையில் பெரும்பங்கு ஆற்றியதால், அவருக்கு இலக்கிய நாட்டம் மிக்கிருந்ததா என்று அறிதற்குரிய அடையாளங்கள் இல்லை. எனினும், அவருக்கு இலக்கியத்தாகம் இருந்தது என்கிறார் துரைக்கண்ணன். கட்டுரைகள் எழுத வேண்டும் என்ற ஆர்வம் காமராசருக்கு இருந்துள்ளதைத் தெரிவித்துள்ளார். பிரசண்ட விகடனுக்குக் காமராசர் கட்டுரை எழுதி அனுப்பியதும் உண்டு. அதில் அவரது கட்டுரைகள் சில வெளி வந்தன. இயக்கச் செயற்பாடுகள் அவரை எழுத இயலாமல் செய்தது; அரசியல் முற்றுமாக அவரை அரவணைத்துக் கொண்டது.

காமராசருக்கு இலக்கியத்தாகமும், எழுத வேண்டும் என்ற ஆர்வமும் இருந்திருப்பதைப் பதிவு செய்துள்ளார் துரைக்கண்ணன்.

> *தமிழ் நூல்கள் பெரும்பாலானவற்றையும், ஆங்கில நூல்களையும் அவர் ஊக்கமாகப் படித்துத் தம் அறிவை வளர்த்துக் கொண்டார். அவருடைய இந்த இயல்பு பலருக்குத் தெரியாது. அவர்கள்தாம் காமராசர் படிக்காதவர். ஒன்றும் தெரியாதவர், பிறருடைய உதவியினால்தான் அவர் வளைய வந்து கொண்டிருக் கிறார் என்று சொல்லிக் கொண்டு திரிந்தனர்*

எனக் காமராசரைப் பற்றிக் கூறியிருப்பது நோக்குதற்குரியது. கம்பராமாயணத்தில் காமராசருக்கு இருந்த ஈடுபாட்டையும் துரைக்கண்ணன் தெரிவித்துள்ளார். நடிகர் எம். ஆர். ராதா கேட்டுக் கொண்டதன் பேரில் துரைக்கண்ணன், காமராசரை அழைத்து வந்து ராதாவின் நாடகத்தைக் காணுமாறு செய்தார்.

## அண்ணாவின் அரவணைப்பு

துரைக்கண்ணன் தாம் தோழமை கொண்ட அனைத்துக் கட்சித் தலைவர்களோடும் நட்போடு பழகி வந்தார். பெரியார், ராஜாஜி, காமராசர் ஆகியோருடன் எத்தகைய மதிப்பு வைத்திருந்தாரோ, அதே அளவில் அறிஞர் அண்ணாவிடமும் மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார் அண்ணாவும் நாடகங்கள், புனைகதைகள் எழுதிப் புகழ்பெற்றவர். துரைக்கண்ணன் அண்ணாவுக்கு முன்பிருந்தே எழுதி வந்தவர்.

பல சமயங்களில் அண்ணா, பெரியாரைப் போலவே துரைக்கண்ணனைச் சமூக சீர்திருத்த மாநாடுகளுக்குத் தலைமை தாங்க அழைப்பதுண்டு. நட்புக்கு மிகுந்த மதிப்பளித்து அவரும் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு தலைமை தாங்கியுள்ளார். அண்ணாவின் நாடகங்களுக்குத் தலைமையேற்றுப் பேசியவர் துரைக்கண்ணன் வேலைக்காரி, ஓர் இரவு போன்ற நாடகங்களுக்குத் தலைமை தாங்கியுள்ளார்.

படைப்பாளர் உலகில் அண்ணாவின் புகழை உயர்த்தியதிலும் துரைக்கண்ணனுக்குப் பங்குண்டு கேட்டார்ப் பிணிக்கும் அண்ணாவின் பேச்சில் மிகவும் கொள்ளை கொண்டவர் துரைக்கண்ணன். அவரோடு அணுக்கமாக இருந்ததாலும், கூட்டங்களுக்குச் சென்று வந்ததாலும் அண்ணாவின் பேச்சு அவரை ஈர்த்தது.

1946இல் இரண்டாவது தமிழ் எழுத்தாளர் மாநாடு நடந்தது. அதில் அண்ணாவை அழைத்து வந்து பேச வைத்தார். கல்கியை அழைத்து, அண்ணா நாடகத்திற்குத் தலைமை தாங்கச் செய்தார். இத்தகைய சூழலில்தான் கல்கி அண்ணாவை, 'தென்னாட்டின் பெர்னாட்சா' என்று பாராட்டிப் பேசினார். அண்ணாவின் பேச்சாற்றலையும், எழுத்தின் வலிமையையும் என்றும் போற்றியவர் துரைக்கண்ணன். செங்கற்பட்டு மாவட்ட எழுத்தாளர் சங்கம் உருவாக அண்ணாவும், துரைக்கண்ணனும் காரணமாக இருந்துள்ளனர்.

**உ.வே.சாமிநாதஅய்யரின் உள்ளம்**

தமிழ்நூல்களை அரிதின் முயன்று தேடிப் பதிப்பித்ததோடு, பழங்கால நூல்கள் சிலவற்றிற்குக் குறிப்புரையும், பதிப்புரையும் எழுதித் தம் புகழைத் தமிழ் இலக்கிய உலகில் நிறுவியர்களில் ஒருவர் உ.வே.சா. இளைஞரான துரைக்கண்ணன் அச்சகத்தில் மெய்ப்புத் திருத்திக் கொண்டிருந்தார். உ.வே சா.வின் நூல் ஒன்று அச்சாகிக் கொண்டிருந்தது. அந்நூலைக் கண்டபோது ஒரு பாடல் தவறாக அச்சிடப் பட்டிருந்தது. உ.வே.சா. அதனைச் சரியாகக் கவனிக்காது விட்டிருப்பார் போலும்! திருத்தாமல் விடப்பட்ட பகுதியைத் துரைக்கண்ணன் திருத்தினார். உ.வே.சா.விடம் உதவி யாளராக இருந்த திரு. இராஜகோபால் ஐயங்கார் அச்சாகிக் கொண்டிருந்த இயந்திரத்தை நிறுத்தச் சொல்லி ஒரு படியை எடுத்து, தம்மைப் பின் தொடர்ந்த உ.வே.சா விற்குக் காட்டினார். அப்பிழையைத் திருத்தியது யார் எனக் கேட்கவும், வேலை செய்து கொண்டிருந்த துரைக்கண்ணன் தாம் திருத்தியதாகக் கூறினார். உ.வே.சா. மிகவும் மகிழ்ந்து போனார்.

உ.வே சா. துரைக்கண்ணனின் தமிழறிவை மெச்சினார். தம்மைப் பற்றி விசாரிக்க, தமக்கு ஓரளவு தமிழில் ஆர்வம் உண்டு எனவும், முறையாகத் தமிழ் கற்க ஆவல் உண்டு எனவும் உ.வே.சா. விடம் கூறியுள்ளார். தமக்குச் சொல்லித் தர யாரும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். எனினும், உ.வே.சா.விடம் தமிழ் கற்கும் வாய்ப்பினைத் துரைக்கண்ணன் பெற்றாரில்லை.

உ.வே.சாவிடத்துத் தமிழ் கற்கவேண்டும் என்ற ஆர்வம் துரைக்கண்ணனுக்கு இருந்திருக்கலாம். அவ்வாய்ப்பு யாது காரணத்தாலோ நழுவிப் போனதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாத நிலையில், துரைக்கண்ணன் கிருஷ்ணாம்பேட்டை குப்புசாமி முதலியாரிடம் திருக்குறளையும், மறைமலை அடிகளிடம் ஏனைய தமிழ் இலக்கியங்களையும் கற்றறிந்தார்.

ஒரு சமயம் சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் பட்டப்படிப்பில் முதன்மையாகத் தேர்ந்தவர்களுக்கு ரூபாய் ஆயிரம் பரிசு அளிப்பதெனத் திருவாவடுதுறை ஆதீனம் அறிவித்திருந்தது. 1930 இல் தெ.பொ மீனாட்சிசுந்தரம் முதலாவதாகத் தேறியிருந்தார். ஆனால் உ.வே சா. தம் மாணாக்கராகிய கி.வா. ஜகந்நாதனுக்கு அப்பரிசுத் தொகையை அளிக்க முயன்றார்

துரைக்கண்ணன் இது குறித்து பிரசண்ட விகடனில் ஒரு கட்டுரை எழுதினார். 'ஆயிரம் ரூபாய் அதிர்ஷ்டம்' என்ற தலைப்பில் அக்கட்டுரை வெளிவந்தது.

> வசதியான முறையில் வாழ்ந்து கொண்டிருக்கும் தெ.பொ.மீ. அவர்கட்கு ஆயிரம் ரூபாய் கிடைப்பதை விட, எழுத்தையே நம்பி வாழும் எழுத்தாளர் கி.வா.ஜ அவர்கட்குக் கிடைத்தது அதிர்ஷ்டம் என்றாலும் அவசியமானதாகும்.

என எழுதினார். துரைக்கண்ணன் இவ்வாறு செய்தியை நுட்பமாகவும், செறிவாகவும், பிறர் அறிந்து தக்கவாறு உணர்ந்து கொள்ளுமாறு தம் கருத்தைப் புலப்படுத்தினார்.

## புதுமைப்பித்தனோடு...

எழுத்தாளர்களைப் போற்றிய எழுத்தாளரான துரைக்கண்ணன், புதுமைப்பித்தனோடு தோழமை கொண்டவர்; அவர் தினமணியில் உதவியாசிரியராகப் பணியாற்றி வந்தார் 'தமிழ்ச் சிறுகதை மன்னன்' என்று சிறப்பாகச் சொல்லும் அளவிற்குப் புகழ் படைத்தவர்; ஒரு வகையில் யாரிடமும் சமரசம் செய்து கொள்ளாத இயல்பினர்; அதுவே அவரது தனித்தன்மையாகவும் இருந்தது; அதனால் பல இழப்புகளைப் பெற்றபோதிலும், எழுத்தைப் பொறுத்த வரை ஏற்றம் பெற்றதை மறுப்பாரில்லை.

புதுமைப்பித்தன் கடுமையான திறனாய்வாளர்; தமக்குச் சரி என்று பட்டதை வன்மையாக எழுதியவர் அவரது எழுதுகோல் பதம் பார்க்காத ஆளே இல்லை. எதையும் பட்டவர்த்தனமாக இடித்துரைக்கவும் தயங்காது அவரது எழுதுகோல். துரைக்கண்ணன் எழுதிய இராஜாஜி சரிதத்தைக் கடுமையாகத் தாக்கி விமரிசனம் செய்திருந்தார். தினமணி டி.எஸ். சொக்கலிங்கமே அவ்வாறு தாக்கி எழுதியிருந்ததைக் கடிந்து கொண்டார். புதுமைப்பித்தன் அதையெல்லாம் பொருட்படுத்தவில்லை துரைக்கண்ணனும் இதனைக் கண்டு கொள்ளவில்லை. இருவருக்கும் கருத்து முரண் நிலவியது. துரைக்கண்ணனின் சிறுகதைத் தொகுதியையும் அவ்வாறே கடுமையான விமர்சனத்திற்கு உட்படுத்தியிருந்தார். துரைக்கண்ணன் அதற்காகவும் வருந்தவில்லை. ஒரு சமயம் இருவரும் நேரில் சந்தித்தபோது பார்த்தும் பாராதிருந்த புதுமைப்பித்தனிடம்,

> நான் படைப்பாளி என்ற முறையில் எனக்குச் சரியெனப் பட்டதை எழுதுகிறேன். விமரிசனக் கண்ணோட்டத்தோடு அதை விமர்சிப்பது உங்கள் கடமை. அதற்காக நான் வருத்தப்படவில்லை. நீங்களும் என்னோடு பேசத் தயங்க வேண்டாம்.

என்று கூறினார். இந்த நேரிடை விளக்கம் ஒருவரை யொருவர் புரிந்து கொள்ள உதவியது.

சென்னை மண்ணடியில் உள்ள இலிங்கிச் செட்டித் தெருவில் இருந்த புதுமைப்பித்தன் இல்லத்திற்குத் துரைக்கண்ணன் செல்வார். அவரது இல்லத்தில் விருந்தோம்பலுக்குக் குறைவிருக்காது. அவருடைய துணைவியார் கமலா உபசரிப்பார். ஏறக்குறைய பத்தாண்டுக் காலங்கள் துரைக்கண்ணன், புதுமைப்பித்தன் நட்புத் தொடர்ந்தது

தியாகராஜ பாகவதரின் ராஜமுக்தி படத்தின் திரைக்கதை வசனம் எழுதும் பொருட்டுப் புதுமைப்பித்தன் புனாவிற்குச் செல்ல நேரிட்டது அங்கு அவரது உடல் நலமும் கெட்டது. காசநோய் கண்டது. சென்னைக்குத் திரும்பிய அவர், துணைவியாரோடு புரசைவாக்கத்தில் குடியேறினார். துரைக்கண்ணனுக்குத் தம் கணவரின் உடல்நிலை பற்றியும், பொருளாதாரப் பற்றாக்குறை குறித்தும் ஒரு மடல் எழுதினார் திருமதி கமலா. அதுபோது, துரைக்கண்ணன் தமிழ் எழுத்தாளர் சங்க மாநிலத்தலைவராகவும், கல்கி சென்னை நகரக் கிளையின் தலைவராகவும் இருந்தனர்.

புதுமைப்பித்தனுக்கு நிதி திரட்டுவது தொடர்பான சிந்தனையில் துரைக்கண்ணன் இருந்தார். உடனே நிதி கிடைப்பது அரிதான சூழ்நிலையில் நண்பர்களைக் கலந்தாலோசித்து, திருமதி கமலாவைச் சொந்த ஊருக்கு அனுப்பி வைத்தார்.

கல்கியிடம் புதுமைப்பித்தனின் நிலையையும், அவரது குடும்ப நிலையையும் துரைக்கண்ணன் எடுத்துக் கூறி, ஓர் எழுத்தாளருக்கு உதவ வேண்டிய கடமையையும் உணர்த்தினார். தம்மைப்பற்றித் தாறுமாறாக எழுதி வந்த புதுமைப்பித்தனுக்குத் தாம் எவ்வாறு உதவ முடியும் என்றார் கல்கி புதுமைப் பித்தனுக்கும் கல்கிக்கும் இடையே நிகழ்ந்த கருத்துப் போர், கடுமையான எதிர்ப்புக் கணைகளோடு தொடர்ந்து நிலவியதைத் தமிழ் எழுத்துலகம் அறியும். அனல் கக்கும் அறிக்கைகளைத் தத்தம் புனைபெயர்களில் இருவரும் எழுதி ஒருவரை ஒருவர் தாக்கி வந்தனர். துரைக்கண்ணனும் இதனை நன்கு அறிவார். தம்மையும் புதுமைப்பித்தன் விட்டு வைக்கவில்லை; அவரது எழுதுகோல் தம்மைப் பதம்பார்த்திருக்கிறது; அதற்காகக் கோபம் கொள்வதா, எனக்கூறியும் நம் கடமையைச் செய்வோம் எனப் பக்குவமாக எடுத்துரைத்தும் கல்கியை இசையச் செய்தார் துரைக்கண்ணன் எனினும் எதிர்பார்த்த அளவிற்கு நிதி திரட்ட முடியாமல் இருந்தது.

நாகர்கோவிலில் எழுத்தாளர் மாநாடு நடைபெற்ற சமயம். அந்த நிகழ்வுக்குத் தலைமை வகித்த துரைக்கண்ணன், புதுமைப்பித்தன் மிகவும் கவலைக்கிடமாக இருப்பதறிந்து திருவனந்தபுரம் சென்று பார்த்தார் மிகவும் நோய்வாய்ப்பட்ட நிலையில் இருந்தார் புதுமைப்பித்தன் அக்குடும்பத்துக்கு ஆறுதல் சொல்லிவிட்டு வந்த சில காலங்களுக்குள் அவர் மறைந்துவிட்டார் என்ற செய்தி இலக்கிய உலகைச் சோகமாக்கியது.

புதுமைப்பித்தன் இறப்பிற்குப் பிறகு நிதி திரட்டும் முயற்சியில் சற்றே தீவிரம் காட்டினர் 'செத்த பிறகு தமக்குச் சிலை வைக்காதீர்கள், நிதி திரட்டாதீர்கள்' என்று பாடலின் வழியாகக் கூறியிருந்த புதுமைப்பித்தன் கருத்துக்கு மாறாக நிதி திரட்டுவது என்றே எண்ணிச் செயல்பட்டனர். ஒரு குறிப்பிட்ட தொகை சேர்ந்தவுடன் ஒரு பகுதியைப் புதுமைப்பித்தன் மனைவியிடம் கொடுத்தும், மீதியைச் சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் வீடு வாங்கியும் தன் மதிப்பை எழுத்தாளர் உலகம் உயர்த்திக் கொண்டது. ஓர் எழுத்தாளனுக்குச் செய்ய வேண்டிய கடமையைத் தவறாது செய்தனர். முதலில் புதுமைப்பித்தனைக் கல்கி வெறுத்தாலும் மானிட நேயம் மிக்கவராய்ப் புதுமைப்பித்தன் குடும்பத்துக்கு எழுத்தாளர் சார்பில் நிதியளித்து உயர்ந்தார் கல்கி

**பாரதிதாசனோடு...**

எழுத்தாளர்களுக்கு வறுமை உடன்பிறந்தது போலும்! உலகின் பல பாகங்களில் வாழ்ந்த எழுத்தாளர்களுக்கும், கவிஞர்களுக்கும் இதே நிலைதான் இருந்துள்ளது. புகழ்மிக்க உலகப் படைப் பாளிகளின் வாழ்க்கை அவ்வாறுதான் கழிந்துள்ளது. வறுமையில் இருக்கும்போதுதான், அத்தகையோரின் எழுத்துக்களும் சிறந்திருக்கும் போலும்! கவிஞர்களெனில் கேட்க வேண்டியதில்லை! உலகக் கவிஞர்கள் பலர் இதில் அடங்குவர். தமிழ்க் கவிஞர்களிலும் அத்தகையோர் இருந்தனர் பாரதியும் பாரதிதாசனும் ஏனைய சிலரும் இதற்கு விதிவிலக்கு அல்லர்.

1931 இல் துரைக்கண்ணன் பாரதிதாசனைச் சந்தித்தார். ஆனந்தபோதினி அலுவலகத்தில் அச்சந்திப்பு நிகழ்ந்தது சாதி வேறுபாடுகள் நாட்டில் வேரூன்றி வளர்ந்து வருவதனை மையமிட்ட பேச்சு, அவர்களின் முதல் உரையாடலாக அமைந்தது.

தன்மானக் கவிஞராகவும், பெரியாரின் பாசறைக் கவிஞராகவும் திகழ்ந்த பாரதிதாசன் ஒரு சார்புத் தன்மையில் முடங்கிப் போய்

விட்டதைத் துரைக்கண்ணன் விமர்சித்தார். பாரதிதாசன் போன்றவர்கள் ஒரு கட்சிக்கு மட்டுமே உரியவராகிவிடாமல், மனித சமூகத்திற்கே உரியவராக விளங்கவேண்டும் என்றும் கூறினார். துரைக்கண்ணனின் அறிவுரைக்கு மதிப்புத் தந்ததுபோல், பின்னாளில் பாவேந்தர் பார்வை 'உலகளாவிய பார்வையாகவும், மானிட நேயமிக்கதாயும் விரிந்த தளத்திற்குச் சென்றது. இதனை எண்ணிய துரைக்கண்ணன் கவிஞர்க்குத் தாம் சொல்லிய அறிவுரை வீண்போகவில்லை என்பதில் மகிழ்ச்சி அடைந்தார்.

கவிஞரின் திராவிடர் கழகப் பற்றுக்கும், தம் கட்சியான பேராயக் கட்சிக் கொள்கைக்கும் இடையே வேறுபாடுகள் இருந்த நிலையிலும் பெரியாரையும், பாவேந்தரையும் போற்றாமல் இருந்ததில்லை துரைக்கண்ணன். தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆகியோரின் இயல்புகளையும், ஆற்றலையும் அறிந்து வரலாற்றுக் கண்ணோட்டத்தோடு ஆய்வுக் கட்டுரைகள் எழுதியவர் துரைக்கண்ணன். அந்தக் காலச் சூழ்நிலையில் தன்மான இயக்கத்திற்கு ஓரளவே மதிப்பு இருந்த காலகட்டத்தில் மாற்றுக் கட்சியைச் சார்ந்த ஒருவர், அவ்வாறு அம்மூவரையும் திறனாய்ந்து எழுதியது குறிப்பிடத்தக்க பதிவாகும்.

பாவேந்தரிடம் துரைக்கண்ணனுக்குத் தனித்த ஈடுபாடு உண்டு. முல்லை முத்தையா, புதுமைப்பித்தன், ரகுநாதன் முதலியோர் முல்லைப் பதிப்பகத்தில் கூடி அளவளாவுதல் வழக்கம். பாவேந்தரும் அங்கு வருவார் முத்தையா பாவேந்தருக்குப் பண உதவி செய்வார். அவர் கேட்கும் பொழுதெல்லாம் பணம் கொடுத்து வந்தார். அவரிடம் எந்த ஒன்றுக்கும் கொடுத்த பணத்திற்குக் கணக்கு வைத்துக் கொண்டது கிடையாது.

துரைக்கண்ணன், பாரதிதாசனின் குடும்ப நிலையை உத்தேசித்து அவருக்கு உதவுதல் தொடர்பாகப் பதிப்பாளராகிய முத்தையாவிடம் எச்சரிக்கையாக இருக்கக் கூறினார். பாவேந்தர் செலவு செய்து கொண்டே இருப்பவர் என்று சொல்லியதோடு, அவருக்கு வீட்டை வாங்கித் தர முயலவேண்டும் என்றும் கூறினார். வாடகை வீட்டில் இருந்து வந்த கவிஞருக்கு நிலையாக ஒரு வீடு இருந்ததில்லை. பாவேந்தரின் மாணவர்களாகிய வாணிதாசன், மு.வேலாயுதம், புலவர் மாணிக்கம், தமிழவேள் ஆகியோரின் முகவரிகளைத் தந்து புதுவையில் வீடு பார்க்கச் சொன்னார். அதன்படியே முத்தையா ஒரு வீட்டை விலைக்கு வாங்கினார். பாவேந்தர் பெயருக்குப் பதிவு செய்தார். இம்முயற்சிக்குத் தூண்டுகோலாக விளங்கியோருள்

துரைக்கண்ணனும் ஒருவர். பாவேந்தர் சென்னை வரும்போதெல்லாம் துரைக்கண்ணனைச் சந்திப்பது வழக்கமாக இருந்தது

ஒரு முழுநிலா நாளன்று பாரதிதாசனோடு இன்பச் சுற்றுலா வ்ாகப் படகில் மகாபலிபுரம் சென்று வந்தார் துரைக்கண்ணன். பக்கிங்காம் கால்வாய் வழியாக அந்தப் படகுப் பயணத்தில் இவ் விருவரோடும் ப ஜீவானந்தம், விடுதலை குருசாமி, மயிலை சீனி. வேங்கடசாமி, சாமி.சிதம்பரனார். எஸ்.வி. லிங்கம் ஆகியோர் சென்றனர். பாவேந்தரை மையமாகப் படகில் அமரச் செய்து, நண்பர் குழாம் சுற்றியும் இருந்து களிப்போடு உரையாடிச் சென்றதை நினைவு கூர்ந்துள்ளார் துரைக்கண்ணன் வேங்கடசாமியும், தாமும் கேட்டுக் கொண்டதன் பேரில், பயணத்தின் நினைவாக முழு நிலாவைப் பின்னணியாக வைத்துப் பாடல் புனைந்தார் பாவேந்தர். அப்பயணத்தின் போது பிறந்த பாட்டே 'எனது மகாபலிபுரச் செலவு' என்பதாகும்.

ஒரு சமயம் பொன்னி இதழில் எழுதி வந்தவரும், 'இராஜிநாமா' என்ற நாடகத்தைத் தீட்டியவருமான புகழ்படைத்த பாவேந்தரின் மாணவர் ந. இராசவேலுவின் குழந்தைக்குத் துரைக்கண்ணன் தலைமையில் காதணி விழா நடந்தது. அதில் கலந்து கொள்ள வந்திருந்தார் பாவேந்தர் அந்நிகழ்ச்சியில் துரைக்கண்ணன் பேசிய பேச்சை வெகுவாகப் பாராட்டி மகிழ்ந்தவர் பாவேந்தர்.

துரைக்கண்ணன், பாரதிதாசன் பாடல்களை அவ்வப்போது பிரசண்ட விகடனிலும், ஏனைய மலர்களிலும் வெளியிட்டு வந்தார். துரைக்கண்ணன் பாவேந்தர் பற்றிச் சில கட்டுரைகளைத் தமது இதழிலும் சில கட்டுரைத் தொகுதிகளிலும் எழுதியவர் பாரதிதாசன் குறித்து விளக்கமான ஆய்வுக் கட்டுரையையும் எழுதியுள்ளார். துரைக்கண்ணனும், பாவேந்தரும், பொதுக்கூட்டங்களுக்காகப் பல சமயங்களில் ஒன்றாகவே கலந்து கொண்டு உரையாற்றியுள்ளனர்.

பாரதிதாசனின் திருக்குறள் உரையைக் கையெழுத்துப் படியில் படித்து அதனுடைய சிறப்பை ஆய்வுக்கட்டுரையாக முரசொலியில் வெளியிட்டார் துரைக்கண்ணன். சிறந்த உரையாசிரியருள் ஒருவராகப் பாவேந்தரை நன்கு இனம் காட்டும்படியான கட்டுரையாகும் அது.

பாரதிதாசனுக்குப் பொற்கிழி வழங்கிய குழுவில்துரைக்கண்ணன் இடம்பெற்றிருந்தார்; அப்பொற்கிழி அண்ணாவால் வழங்கப் பட்டதாகும்; பாவேந்தரின் இறுதிநாள்கள் சோதனையாகக் கழிந்ததை எண்ணிப் பெரிதும் வருத்த முற்றார் துரைக்கண்ணன்.

புரட்சிக் கவிஞர் இயற்கை எய்தியதையறிந்து பிரசண்ட விகடனில் 'கவிக்குயில் பறந்தது' என்று தலைப்பிட்டு இரங்கல் உரை ஒன்றைத் தீட்டினார். பாவேந்தரின் பெருமைகளையும், கவித்திறனில் அவருக்கிருந்த புலமையினையும், தணியாதிருந்த தமிழ்ப்பற்றையும், தமிழ் மக்களின் மீது கொண்ட நலத்தையும் தவறாது இரங்கல் உரையில் குறித்திருந்தார்.

பாரதிதாசனின் சில போக்குகள் துரைக்கண்ணனுக்குப் பிடிக்காதிருந்த போதிலும், பாரதிதாசனின் கவிப்புலமை பிடித்திருந்தது. தமிழ், தமிழர், தமிழ்ப்பண்பாடு ஆகிய சிந்தனை களில் தோய்ந்திருந்தமையும் பாரதிதாசனிடத்துப் பற்று வைக்கக் காரணமாகும்.

## நாடறிந்த நண்பர் குழாம்

துரைக்கண்ணன் தாம் பழகிய எல்லோரிடத்தும் அன்பும் மதிப்பும் கொண்டவராகவே திகழ்ந்தார்; வேறுபாடு கருதாமல் பழகி வந்தார், தம் வாழ்நாளில் எதிரிடையான இயக்கங்களோடும் கூட நல்லுறவு வைத்திருந்தார்; தம் இணை எழுத்தாளர்களையும் மதித்துப் போற்றும் குணம் பெற்றிருந்தார்; அறிஞர் பலரோடு அவர் கொண்டிருந்த தொடர்பு பிறைமதி போன்றதாக இருந்தது.

தொடக்க காலத்தில் தமக்கு ஆதரவாக இருந்து தமிழ் படிக்கச் சொல்லிய கா. நமசிவாய முதலியாரிடம் பேரன்பு பூண்டிருந்தவர் துரைக்கண்ணன். முதலியார் மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரி யராகப் பணியாற்றியவர். குழந்தை இலக்கியத்தைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர். தமிழ்ப் படிக்க விரும்பியவர்களுக்குப் பற்பல உதவிகள் செய்வார். அவருடைய மகளுக்குத் தமிழ்ப்பாடம் சொல்லித் தரத் துரைக்கண்ணனை அமர்த்தினார். முதலியார் துரைக் கண்ணனைத் தமிழாசிரியராக்க முயன்றார். ஆனால், படைப்பாளராக ஆகவே அவருள்ளம் விரும்பியது. தமிழறிஞரான மு.வரதராச னாரிடம் நட்புக் கொண்டிருந்தார். ஒரு சமயம் தொழில் மேதை ஜி.டி. நாயுடு துரைக்கண்ணனுக்கு நூல்களை அனுப்ப எண்ணியபோது, அவரது முகவரியைச் சரியாக அறியாதிருந்த நிலையில், அவற்றை மு வ விற்கு அனுப்பி அவரிடம் தரச் சொல்லி இருந்தார். மு.வ. தாமே துரைக்கண்ணன் வீடு சென்று அவற்றைச் சேர்ப்பித்தார். துரைக் கண்ணனின் தலை சிறந்த நாவலான உயிரோவியம் நாடகமாக வெளிவந்தபோது அதற்கு அணிந்துரை தந்தவர் மு.வ. காலத்தால் செய்த தமிழ்த் தொண்டு என அந்நூலுக்குப் பெருமையுடன் அளித்த

அணிந்துரை துரைக்கண்ணனின் புகழுக்கு ஒரு மணிமகுடமாகும் 'வாழ்க்கைக் கலைஞர்' என மு.வ. இவரைப் போற்றியுள்ளார். துரைக் கண்ணனும் தம்மைக் காண வரும் இளைஞரிடம் 'மு.வ. வைப்போல இடைவிடாது உழைத்து முன்னேற வேண்டும்', என்று கூறுவது வழக்கம்.

பன்மொழிப் புலவராகிய தெ பொ. மீனாட்சிசுந்தரனாரிடம் நெருங்கிப் பழகியவர் துரைக்கண்ணன். அவரது பலதுறை அறிவைப் போற்றிப் புகழ்ந்துள்ளார் தாம் எழுதிய சில நூல்களுக்கு அவரிடம் ஆங்கிலத்திலும் தமிழிலும் அணிந்துரை வாங்கி வெளியிட்டுள்ளார். வடலூர் வள்ளலார் நூற்றாண்டு விழாவிற்குத் தெ.பொ. மீயைக் கொண்டு ஏற்பாடுகள் செய்தார். அறிஞர் வெ. சாமிநாத சர்மாவும் துரைக்கண்ணனும் நட்பினராக இருந்துள்ளனர். இவ்விருவருக்கு மிடையே பத்து வயது வேறுபாடுகள் இருப்பினும், இளையவரான துரைக்கண்ணன் சர்மா மீது அளவு கடந்த நட்புப் பூண்டிருந்தார். திரு.வி.க வைக் காணச் சென்றபோது முதன்முதலாக சர்மாவைக் கண்டார். சர்மா திரு.வி.க. வால் அறிமுகப் படுத்தப்பட்டார். அந்த அறிமுகத்திலிருந்து தொடர்ந்த நட்பைப் பேறாகக் கருதினார். சிறந்த பண்புள்ளம் கொண்ட உத்தமராகவே எண்ணி நட்பை வளர்த்தார் திரு வி.க.வின் சொற்பொழிவினைக் கேட்க அவ்விருவரும் சேர்ந்தே செல்வது வழக்கம்.

பெரியாரின் இயக்கத்தைச் சார்ந்த சாமி சிதம்பரனாரிடம் துரைக்கண்ணன் அன்பும் பரிவும் கொண்டு பழகிவந்தார். சாமி சிதம்பரனார் லோகோபகாரிக்குச் சிறிது காலம் ஆசிரியராக இருந்தவர். அப்பணியில் இவரை அமர்த்திய பெருமை துரைக்கண்ணனைச் சாரும் இவ்விருவரும் சூளைமேட்டில் அடுத்தடுத்த தெருக்களில் வசித்து வந்தனர் வாழ்நாள் இறுதிவரை நட்புக் கொண்டிருந்தனர்.

துரைக்கண்ணன் மறக்க முடியாத பெயர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் 'சீராமுலு கம்பெனி', உரிமையாளர் எம்.எஸ் இராமுலு துரைக்கண்ணன் எழுதிய பலருடைய வாழ்க்கை வரலாற்று நூல்களைப் பல ஆயிரம் படிகள் அச்சிட்டு வெளியிட்டவர் இவர். இராமுலு, பெரியாரின் சீடர்; நல்ல நாத்திகர் மகான்களின் வாழ்க்கை வரலாற்றைத் துரைக்கண்ணன் எழுத, அதை அச்சிட்டு வெளியிட்ட அவர், அவற்றைப் படித்து ஆத்திகராக மாறினார் அந்த மாற்றத்திற்குக் காரணம் துரைக்கண்ணன் எழுதிய படைப்புகளே! ஒருமுறை இது குறித்துத் துரைக்கண்ணனிடம்,

> *தங்களின் எழுத்துக்கள் என் வாழ்க்கையைப் பெரிதும் மாற்றிவிட்டன. குறிப்பாக, சங்கரர், ரமணர். சாயிபாபா போன்றவர்களின் வரலாறுகள் என் மனத்தை மாற்றிவிட்டன.*

என இராமுலு தெரிவித்துள்ளார். பாபாவின் பக்தராக மாற்றும் அளவிற்குத் தூண்டுகோலாக இருந்தது துரைக்கண்ணனின் நூல்! அன்றைய அறநிலைய அமைச்சர் கே. வேங்கடசாமி சாய்பாபா விழா ஒன்றில், இராமுலுவைத் துரைக்கண்ணன் எழுத்து மாற்றியது பெரிய வெற்றி என்று கூறியுள்ளார்.

நாரண துரைக்கண்ணனின் எழுத்தால் இராமுலு ஆத்திகராகியதுபோல, அவரது எழுத்தால் பேச்சாளராக உருவானவர் கண்ணதாசன். பள்ளி நாள்களில், நாரண. துரைக்கண்ணன் எழுதிய நூல்களை மனனம் செய்து பேச்சாளரானார். துரைக்கண்ணனின் படைப்புகளில் ஈடுபாடு கொண்டு கண்ணதாசன், அவரிடம் தோழமை கொண்டிருந்தார். ஏற்கெனவே, துரைக்கண்ணனுடன் நெருங்கிய நட்புப் பூண்ட ஏ எல். சீனிவாசன் கண்ணதாசனின் அண்ணனாவார். திராவிட இயக்கங்களோடு தம்பி தொடர்பு கொண்டிருந்ததனை விரும்பாத சீனிவாசன் துரைக்கண்ணனிடம் கண்ணதாசனைத் திருத்துமாறு கேட்டதாக மு.பரமசிவம் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். திருமகள் என்ற இதழுக்குத் துணையாசிரியராகக் கண்ணதாசனைப் பரிந்துரை செய்தவர் துரைக்கண்ணன். கவிஞரின் முதல் திருமணம் துரைக் கண்ணனின் தலைமையில் நிகழ்ந்தது. கண்ணதாசன் என்று தாம் பெயர் வைத்துக் கொண்டமைக்குத் துரைக்கண்ணன் பேரில் வைத்திருந்த குருத்துவ அன்பினால்தான் என்பதை அவரே தெரிவித்ததான குறிப்பை மு பரமசிவம் பதிவு செய்துள்ளார். இது ஆய்வுக்குரியது

நாடகக் கலையில் அன்று சிறந்திருந்த பலரும் துரைக் கண்ணனோடு எவ்விதத்திலேனும் நட்புக் கொண்டிருந்தனர். 1927 இல் 'தீண்டாதார் யார்?' என்ற நாடகத்தை எழுதிச் சமூக சீர்திருத்தக் கருத்து முழக்கக் கூட்டங்களில் நண்பர்களை நடிப்பிக்கச் செய்தார் தன்மான இயக்கத்தைச் சார்ந்த குத்தூசி குருசாமி, திருவாசகமணி கே.எம். பாலசுப்பிரமணியம் முதலியோர் அதில் நடித்துள்ளனர்.

1947 இல் டி.கே எஸ். குழுவினர் துரைக்கண்ணன் எழுதிய உயிரோவியத்தின் நாடக வடிவத்தை அரங்கேற்றினர். இந்நாடகம் இந்திய நாடு மட்டுமன்றி இலங்கை, சிங்கப்பூர், மலேசியா முதலிய கடல் கடந்த நாடுகளிலும் அக்குழுவினரால் நடிக்கப் பெற்றது. அன்றைய நாளில் இந்நாடகத்துக்கு நல்ல வரவேற்பு இருந்தது.

பிரெஞ்சு நாட்டின் தலைநகரான பாரீசில் ஆட்சி செய்த அப்போதைய அரசு, பிரான்சின் இலக்கியக் கழகம் ஆகிய இரண்டும் சேர்ந்து நாடகக் கலைக்காக ஓர் இதழ் நடத்தி வந்தது. அவ்விதழ் உலகின் பல மொழி நாடகங்களில் தலை சிறந்த நாடகத்தைத் தெரிவு செய்து வெளியிடுவது வழக்கம். அங்குத் துரைக்கண்ணனின் 'உயிரோவியம்' நாடகம் சிறந்த நாடகமாகத் தெரிவு செய்யப்பட்டது. 1954 இல் அது உலக நாடகங்களில் சிறந்த நாடகம் எனத் தேர்ந்து துரைக்கண்ணனை அவ்விதழ் போற்றிப் பாராட்டியது.

உயிரோவியம் கல்லூரி மாணவர்கள் பலராலும் நடிக்கப் பெற்றுப் பெருமை அடைந்தது. பெருத்த வரவேற்பைப் பெற்ற அந்நாடகம், ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார், கு. காமராசர், கு. பக்தவத்சலம் முதலானவர்களின் பாராட்டுதலையும் பெற்றிருந்தது. இந்நாடகத்தைச் சிறந்த நாடகாசிரியரான பம்மல் சம்பந்த முதலியார் வெகுவாகப் புகழ்ந்தார்.

> காதலைப் பற்றி மிகத் தூய்மையாகவும் மேன்மையாகவும்
> புனிதமாகவும் சித்திரிக்கப்பட்ட நாடகம்

என்பது பம்மலார் சூட்டிய புகழ்மாலை.

'இந்து' நாளிதழ் உயிரோவியம் நாடகத்தைப் பற்றி வெகுவாகப் புகழ்ந்து எழுதியிருந்தது. ஒரு சமயம் இந்நாடகம் கோவையில் நடைபெற்றபோது, அறநிலையத் துறைத் தலைவராக இருந்த சி.எம் இராமச்சந்திரன், கல்வி அமைச்சர் அவினாசிலிங்கம் முதலியோர் வந்தனர். நாடகம் முடியும்போது சி.எம். இராமச்சந்திரன் கண்ணீர் விட்டே அழுதிருக்கிறார் அதற்கு அவர் சொன்னதாவது:

> இந்நாடகம் நடப்பியல் வாழ்க்கையை உணர்ச்சியுடன் சித்திரித்துக் காட்டுகிறது. இதுநாள்வரை நான் இப்படிப் பட்ட நாடகத்தைக் கண்டதில்லை. இதில்வரும் கதைமாந்தர்கள் குறிப்பாக, கற்பகம், நடராசன், சந்திரசேகரன் போன்றவர்கள் ஒவ்வொரு காட்சியிலும் என்னை அழவைத்து விட்டார்கள். அதனால்தான் என்னையும் மீறி அழுதுவிட்டேன்
>
> *(மு. பரமசிவம் பக். 51)*

என்ற அவரது கூற்றால் உணர்ச்சிப் பிழம்பாக நெஞ்சை நெகிழவைத்த காட்சிகள் அந்நாடகத்தில் இருந்துள்ளன என்பதை உணரலாம். அந்நாடகத்தைத் திரைப்படமாக்கும் முயற்சியில் ஏ.எஸ்.ஏ. சாமி போன்றோர் ஈடுபட்டனர் அம்முயற்சி கைக்கூடவில்லை.

இயக்குநர் கே. சுப்பிரமணியம் நாடகக் கழகம் ஒன்றை உருவாக்கியபோது, நாடக ஆசிரியர்குழுத்தலைவராகப் பங்காற்றியவர் துரைக்கண்ணன். நவாப் டி.எஸ். இராஜமாணிக்கம், எம்.ஆர். ராதா, டி.கே. எஸ். சகோதரர்கள் அதில் உறுப்பினர்களாக இருந்து செயற்பட்டனர் எம்.ஆர். ராதாவுக்கு அவரது நாடகத்தால் செல்வாக்கு உயரவும் இராஜமாணிக்கம் தாம் உறுப்பினராக இருக்க இயலாது எனத்தெரிவிக்கவே நாடகக் கழகம் செயலிழந்தது. துரைக்கண்ணனை நாடி வந்த நாடக நடிகர்கள் பலரை, அன்போடு அரவணைத்து ஆதரவு காட்டினார் கே ஆர். இராமசாமியும், எம்.ஆர். ராதாவும் துரைக்கண்ணனோடு மிக நெருக்கமாயிருந்தனர்.

ஒரு சமயம் எம் ஆர். ராதா தம் நாடகத்தைக் காமராசர் வந்து காண வேண்டும் என்று ஆசைப்பட்டார் துரைக்கண்ணனிடம் கூறி ஏற்பாடு செய்யச் சொன்னார். காமராசர், தமது கட்சி சார்ந்த கருத்தியல் கோட்பாட்டிற்கும் அரசியல் சிந்தனைக்கும் இராதா வேறானவர் என்று கூறியும், தம்மை நாடகங்களில் தாக்கிப் பேசியும் வருகிறாரே என்று உரைத்தும், வர மறுத்தார். ஆயின் துரைக்கண்ணன் கேட்டுக் கொண்டதன் பேரில் வருவதற்கு இசைந்தார். ஒரு காலகட்டத்தில் துரைக்கண்ணனே எம்.ஆர் ராதாவைப்பற்றி மாறாக எண்ணியவர் அவருடைய நாடகமான இரத்தக் கண்ணீரைப் பார்த்த பின் தமது கருத்தைத் திருத்திக் கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மக்களைச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த 'கலைவாணர்' என்.எஸ். கிருஷ்ணனுக்கு, கலைவாணர் பட்டம் வழங்கியதில் துரைக்கண்ணனுக்குப் பங்குண்டு. 1948 இல் பம்மல் சம்பந்த முதலியார் தலைமையில் நடந்த விழாவில் என் எஸ்.கிருஷ்ணனுக்கு அப்பட்டம் அளிக்கப்பட்டது. தமிழ்த் தென்றல் திரு வி.க. அவர்களால் நடராஜா கல்விக் கழக, இரண்டாவது ஆண்டுவிழாவில் கலைவாணர் பட்டம் வழங்கப்பட்டது இதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தவர் துரைக்கண்ணன் அக்கழகம் அளித்த பட்டமே என்.எஸ் கிருஷ்ணனுக்கு நிலைத்தது. கலைவாணர் அப்பட்டத்தையும் விருதினையும் பெற நேரில் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நடிப்பிசைப் புலவர் கே ஆர். இராமசாமி 'கிருஷ்ணன் நாடக சபை' என்ற புதிய நாடகக் குழுவைத் தொடங்க, அதன் ஆலோசனைக் குழுவிலிருந்த துரைக்கண்ணன், அண்ணாவின் நாடகங்களை அரங்கேற்றும்படி கூறினார். அண்ணாவின் வேலைக்காரி நாடகம் அரங்கேறியது. துரைக்கண்ணன் கேட்டுக் கொண்டதன்பேரில் நாடகக் கையெழுத்துப் படியைச் செம்மையுறச் செதுக்கியவர் எம்.எஸ் முத்து

கிருஷ்ணன்; இவர் சங்கரதாஸ் சுவாமிகளின் மாணவர் தஞ்சையில் இந்நாடகம் அரங்கேறியது; தலைமை தாங்கியவர் துரைக்கண்ணன்; அண்ணாவின் எழுத்தாற்றலையும், கே.ஆர். இராமசாமியின் நடிப்பாற்றலையும் தம் தலைமையுரையில் வெகுவாகப் பாராட்டினார்.

டி.கே.எஸ். சகோதரர்களின் நாடகங்கள் பல அன்றைய நாளில் புகழ் பெற்றன. அவர்களைச் சென்னைக்கு அழைப்பித்து அறிமுகப் படுத்திய பெருமை துரைக்கண்ணனைச் சாரும். முதன் முதலாக அவர்களை ஒவ்வொரு பத்திரிகை அலுவலகத்திற்கும் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தினார். எந்தப் பத்திரிகை ஆசிரியர்களிடமும் சென்று உதவி கேட்டிராத துரைக்கண்ணன், டி.கே எஸ். சகோதரர்களின் கலை வளர்ச்சிக்கு ஆதரவு கேட்டுள்ளார். அவர்களின் வளர்ச்சியில் அக்கறை எடுத்துக் கொண்டது, கலை உள்ளம் கொண்டவரின் உண்மையான மனித நேயத்தைக் காட்டவல்லது.

வள்ளலார் மீது ஈடுபாடு கொண்டவர் துரைக்கண்ணன், தமிழக மாவட்டங்கள் தோறும் திருவருட்பா மாநாடுகளைக் கூட்டிய பெருமைக்குரியவர்; வள்ளலாரின் நூற்றாண்டு விழா 1965 இல் நடந்தது; சென்னைத் தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் நடந்த மூன்று நாள் விழாவில் அறிஞர் பலரை ஒன்று திரட்டினார்; அம்மாநாட்டில் கலந்து கொண்டோரின் அன்பாணைக்கு இணங்கி வள்ளலார் பற்றிய வரலாற்றை நூலாக உருவாக்கத் தொடங்கினார்

இதனையறிந்த நாடகக் கலைஞரான டி.கே. சண்முகம், வள்ளலார் வரலாற்றை நாடகமாக ஆக்கித் தரவேண்டு மெனவும், அதில் வள்ளலாராக நடிப்பதாகவும் தம் உள்ளக் கிடக்கையைத் தெரிவித்தார். அந்நூல் நாடக நூலாகவே 'திருவருட் பிரகாச வள்ளலார்' என்ற பெயரில் வெளியிடப் பெற்றது.

1964 இல் துரைக்கண்ணனைத் தமிழ்நாடு சங்கீத நாடகச் சங்கம், சிறந்த நாடகாசிரியர் எனப்பாராட்டிக் 'கலைமாமணி' விருதை வழங்கிச் சிறப்பித்தது.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் துரைக்கண்ணன் நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்தனார் அறக்கட்டளைச் சொற் பொழிவுகளை 1975 ஆம் ஆண்டு ஏப்ரல் 7,8,9 ஆகிய நாள்களில் நிகழ்த்தினார் அச்சொற்பொழிவு தமிழில் நாடகம் (1976) என்ற பெயரில் நூலாக வெளிவந்தது. ஒரு திறனாய்வாளர்க்குரிய தகுதியோடு, படைப்பாளராகிய துரைக்கண்ணன் மிகச் சிறந்த முறையில் தரவுகளைத் தொகுத்துக் கொண்டு அரிய ஆராய்ச்சியைப் பொழிந்தார்.

> பத்திரிகைத் துறையைச் சேர்ந்த ஒருவர் நாடகத் துறையைப் பற்றி இவ்வளவு விரிவான முறையில் சொற்பொழிவோ நூல் ஆக்கமோ செய்ததாகச் செய்தி இல்லை. அந்தப் பணியை முதன் முதலில் செய்தவர் கலைமாமணி ஜீவா அவர்களே ஆவார்
>
> *(மு. பரமசிவம் பக். 61)*

என்ற மதிப்பீடு மிகையானதன்று.

முத்தமிழில் ஒன்றான நாடகத் தமிழிலும் தம் ஆர்வத்தைக் காட்டி நாடகங்களை எழுதியதோடு நின்றுவிடாமல், நாடக உலகத்திற்கு ஆக்கம் சேர்த்த நாடகக் கலைஞர்களை ஒருங்கு கூட்டியும், அவர்களின் உற்ற நண்பராகவும் இருந்து நாடகக் கலைக்குத் தம்மால் சீரிய பணியை ஆற்ற முடியும் என மெய்ப்பித்தார். தமிழ் நாடகத் துறைக்குத் தொண்டு செய்தோருள் அவரும் சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியவர்.!

# 3
# துரைக்கண்ணனின் படைப்புலகம்

நாரண. துரைக்கண்ணன் முழுநேரமும் தம்மை எழுத்துப்பணியில் ஈடுபடுத்திக் கொண்டவர். இலக்கிய வடிவங்களின் பல துறைகளில் தமது ஆற்றலைப் புலப்படுத்தியுள்ளார். இதழாசிரியராக இருந்தது, அவருக்குக் கிடைத்த பேறு எனலாம். அவரது புலமையையும் மிகுந்த ஆர்வத்தையும் காட்டுதற்கு இதழ் ஒரு வடிகாலாக அமைந்திருந்தது. இதழ் வழியாகவே அவருடைய படைப்புகள் அறியப்பட்டன; அறிமுகமாயின. ஏறக்குறைய கல்கிக்கு முன்பே எழுதி வந்தாலும், தமக்குச் சம அளவில் செல்வாக்கு கிட்டவில்லை என்பதற்காக வருந்தினாரில்லை. மாறாகத் தமக்கு எனத் தனித்த ஓர் இடத்தைப் பெற்றிருந்தார். புதுத் தமிழ் முன்னோடிகளில் அவரும் ஒருவர் என்பதை இலக்கிய வரலாற்றுணர்வோடு சிந்திக்க வேண்டும்

> *எண்ணற்ற வாசகர்கள் நினைவில் ஜீவா என்னும் பெயரில் மதிப்புக்குரிய இடம் பெற்றிருக்கும் நாரண. துரைக் கண்ணன் நவ தமிழ்ப் படைப்பிலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்கதொரு பங்கு வகிக்கிறார். சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் புதுத் தமிழ்ப் படைப்பிலக்கியம் ஒரு தடத்தில் எழுத்தாளர் கல்கியின் தலைமையில் விரிவடையத் தொடங்கியபோது வேறு சில தடங்களிலும் இலக்கிய இயக்கங்கள் தோன்றி, புதுத் தமிழ் எழுத்துக்கு வளமூட்டின. இந்த மாற்று அணி உருவாக உழைத்தவர் களில் நாரண துரைக்கண்ணனும் முக்கியமானவர் என்று பலர் அறிய வாய்ப்பிருக்காது.*
>
> *(அசோகமித்திரன் கட்டுரைகள். ப. 153)*

என அசோகமித்திரன் சுட்டிக்காட்டியிருப்பது, துரைக்கண்ணன் தமக்கெனத் தனி இடம்பிடித்து, முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இதழாசிரியராகவும், இலக்கிய வாதியாகவும் தமிழக இலக்கிய

வானில் உலாவந்தவர் என்பதை உணர்த்தும். அவர் படைத்தவை பல்வேறு வகையின. பல்வேறு திறத்தன. இலக்கிய வடிவத்தின் அனைத்து வகைகளிலும் எழுதிப்பார்த்தவர் அவர். அவரது படைப்பாண்மைக்கு வலிமை சேர்த்தது இதழ்ப்பணி என்பது ஒரு கூடுதலான நிலைப்பாடாகும்.

## நாவல்கள்

### கோனாட்சியின் வீழ்ச்சி

துரைக்கண்ணனின் முதல் நாவல் புருடோத்தமன் அல்லது கோனாட்சியின் வீழ்ச்சி என்பதாகும். இது டி.என். சேசாசலம் நடத்திவந்த 'கலாநிலையம்' என்ற இதழில் தொடராக வெளிவந்தது. விடுதலை வேட்கையை மனத்திற்கொண்டு வரலாற்றுப் புனைகதை யாகப் புனையப்பட்ட இந்நாவல் ,தழுவல் வகையைச் சார்ந்தது. லுக்ரீசின் கற்பழிப்பு (Rape of Lucrece) என்ற சேக்ஸ்பியரின் நெடுங்கவிதை இதற்கு மூலநூல். அக்காலத்தில் மேனாட்டுப் படைப்பாளர்களான ரெய்னால்ட்ஸ், வால்ட்டர் ஸ்காட், போன்றோரின் நாவல்களைத் தழுவி எழுதும் மரபு இருந்தது தொடக்க காலத் தமிழ் நாவலாசிரியர்கள் தாம் கற்ற ஆங்கிலக் கல்வியின் பயனாக மேனாட்டு இலக்கியங்களை இவ்வகையிலும் கூட அறிமுகப்படுத்தி எழுதிவந்தனர்.

துரைக்கண்ணன், இந்த வகையில் சேக்ஸ்பியர் படைப்பைத் தழுவி எழுதி நாவலாகப் படைத்தது போலவே, வெள்ளக்கால் ப. சுப்பிரமணிய முதலியார், அகலிகை வெண்பாவில் 'லூக்ரிசின் கற்பழிப்பு' நூலிலிருந்து சில காட்சிகளைப் பெயர்த்து எழுதினார் துரைக்கண்ணன் தாம் கற்ற பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்து பாடல்களை இணைத்து, உரைநடையில், ஒரு காப்பியம் போன்றே இந்நாவலைப் படைத்துள்ளார் படிப்பதற்குக் கடின நடை உடையதாய் இருத்தலின் ஒரு வேளை அக்காலச் சூழ்நிலையில் வரவேற்பினைப் பெற்றிருக்கலாம். இந்நூலைப் படைப்பதற்குப் பண்டித நடையைக் கையாண்டுள்ளார். இதற்குக் காரணம் மறைமலையடிகள், பரிதிமாற் கலைஞர் போன்றோரின் நடைகளை முன்மாதிரியாகக் கொண்டிருந்தமையே எனத் தெரிகிறது. தம்மைக் கலாநிலையம் இதழில் எழுத வைத்த அதன் ஆசிரியர் டி.என். சேசாசலத்தின் நடையும் இவரைப் பாதித்துள்ளது.

இந்நாவல், அழகிய வருணனைகளையும், திருப்பங்களையும் கொண்டுள்ளது.

கற்பை இழந்த புருடோத்தமனின் மனைவி, தன் கணவனையும், பெற்றோர்களையும் அழைத்துத் தான் களங்கப்படுத்தப்பட்டதை அவர்கள் முன்னிலையில் உரைத்துத் தற்கொலை செய்து கொண்டாள். புருடோத்தமன் அதற்குக் காரணமான இளவரசனையும், அரச குடும்பத்தையும் பூண்டோடு அழித்தான். மக்களாட்சியைக் கொண்டு வரச் செய்தான். அதன் பின் பொதிய மலை நோக்கிச் சென்றான் எனக்கதை முடிகிறது.

இந்நாவலின் தொடக்கம், முடிவு ஆகியவை அக்கால மரபுக்கு ஏற்பவே விளங்குகின்றன. திடீர்த் திருப்பங்களையும் ஆங்காங்கே காண முடிகிறது. தமிழ்நடை, இலக்கியஞ் செறிந்து இருப்பதால் படிப்பதற்குரிய வருணனை சொல்லோவியமாக நீள்கிறது. நிகழ்ச்சிகள் கோவையாக அமைக்கப்பட்டிருப்பினும் வருணனைப் பகுதிகள் நிகழ்ச்சிகளை மேலே செல்லாவாறு தடை செய்வன வாயும் உள்ளன. ஆசிரியரின் முதல் முயற்சி வெளிப்படும் வண்ணம், கதை நிகழ்ச்சிகளும், அவற்றைக் கொண்டு செல்லும் விதமும் நன்கு அமைந்துள்ளன.

**யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்?**

துரைக்கண்ணன் எழுதிய 'யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்' என்னும் நாவல், 1932 இல் திராவிடன் என்னும் நாளிதழில் எழுதப்பட்டு, அதன்பின்னர், 'தமிழரசு' என்ற மாதப் பத்திரிகையில் நிறைவுற்றது. 1934 இல் நூல் வடிவம் பெற்றது. இந்நாவல் பரபரப்பை ஏற்படுத்தியதற்குக் காரணம் இளம் விதவையின் வாழ்க்கை அவலத்தை எடுத்துக் கூறிய விதமே ஆகும். காமாட்சி என்ற கைம்பெண்ணின் சோகச் சித்திரத்தை உணர்வு மேலிட ஓவியமாகத் தீட்டியுள்ளார் நூலாசிரியர்.

காமாட்சி நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்தவள்; பதினான்கு வயதில் திருமணம் நடந்தேறியது. அம்மான் மகனை மணக்க ஆசைப்பட்டவளுக்கு, வேறொருவனைக் கைப்பிடிக்க நேர்ந்தது. திருமணமாகிய மூன்றாவது நாள் கணவன் இறந்தான். கைம்பெண் ஆனாள் காமாட்சி. பிறந்தகத்தில் தனிமைத்துயரோடு காலங்கழித்தாள்; ஆன்மநாதன், காமாட்சி குடும்பத்திற்கு எல்லா உதவிகளையும் செய்து வருபவன். அக்குடும்பத்தில் எல்லோர்க்கும் அவனைப் பிடிக்கும்; அக்குடும்பத்தின் மீது அக்கறை கொண்டவன்; ஒரு நாள் காமாட்சி மிகமிக இரங்கிக் கேட்டுக் கொண்டதன்பேரில், காமாட்சி மீது காதலை வளர்க்க நேர்ந்தது. தனியறையில் தனிமையில்

சந்தித்து உறவாடினர். இவர்கள் சந்திப்பை அவளுடைய அண்ணி அறிந்தாள். காமாட்சியின் தந்தைக்கும் தெரியத் தொடங்கியது. காமாட்சியின் இல்லம் வருதற்குத் தடை விதிக்கப்பட்டது. இதற்கிடையே காமாட்சி காதலனைக் காண இனி இயலாது என எண்ணிய நிலையில் பிற ஆடவர்கள் மீது அவளது கண்ணும் மனமும் சென்றன அவ்வீட்டில் பெண்ணாகிய தனக்கொரு நீதியும், தந்தை, தம்பி ஆகியோருக்கு ஒரு நீதியுமாக இருப்பதை உணர்ந்தாள். எனினும், அவளது அலைமனம், ஆடவரை அவாவும் நிலையில், தந்தையால் கண்டிக்கப்பட்டாள்.

> ஆடவன், விவாகம் செய்து கொள்ளாமலே பரத்தையரோடு சேர்ந்து தன் காமத்தைத் தீர்த்துக் கொள்ளலாம். அல்லது ஒருத்தியையோ பல பெண்களையோ வைப்பாக வைத்துக் கொண்டு அவர்களோடு சுகித்து வாழலாம். ஆனால் பெண்களுக்கோ அவ்விதமில்லை. தங்களுக்குக் கட்டக் கூடிய கணவன்மாரோடன்றி மற்ற ஆடவர்களோடு சேரக் கூடாது. பிற ஆடவர்களை மனத்தாலும் நினைக்கக் கூடாது. இச்சமூகக் கட்டுப்பாட்டின்படிப் பார்த்தால், பெண்களுக்கு மறுமணம் செய்து வைத்தல் வேண்டும்
>
> *(யா.ஏ.பெ.பி. பக். 87)*

என்று எண்ணியவள், பிறந்தகத்தில் நாளும் துயரப்படுவதைப் பொறாமலும், காதலனின் ஆதரவு கிடைக்கா நிலையிலும் கடலில் உயிரை மாய்த்துக் கொள்ள இருந்தபோது கண்ணன் என்பவனால் காப்பாற்றப்பட்டாள். பிறகு கண்ணன் வீட்டில் காமாட்சி உள்ளதை ரஞ்சினி என்பவள் மூலம் அறிந்த ஆன்மநாதன், காமாட்சியிடம், உண்மை நிலைகளைக் கூறி அவளது அலை மனத்திற்கு மன்னிப்பு வழங்கி அவளுக்கு வாழ்வு தந்தான்.

காமாட்சியின் சகோதரர்களின் குடும்பம், தந்தையின் தனிப்பட்ட உணர்வுகள், காந்திய நெறியில் வாழ நினைக்கும் ஆன்மநாதனின் சிந்தனை இவற்றைக் கதைப்பின்னலில் கொண்டு சென்றுள்ளார் துரைக்கண்ணன். தன்னைக் காப்பாற்றிய கண்ணனின் குடும்பத்திடம் தன் கதையை - வாழ்க்கை அவலத்திற்கான காரணங்களைக் காமாட்சி கூறுவது போலவே நாவலின் நோக்கு நிலை உள்ளது.

இக்கதை உண்மை நிகழ்ச்சியைக் கொண்டு உருவாக்கப்பட்டதாகும்.

> நான் இந்தக் கதையைச் சித்திரிப்பதற்கு மூல காரணமாக இருந்தவர் மங்கையர்க்கரசி என்னும் பெண்மணியார்.

**அந்நங்கை என் சகோதரி நிலையில் உள்ளவர். அவர் இளமையிலேயே விதவையானவர். அவரைக் கைம்பெண் கோலத்தில் காணும் போதெல்லாம் என் இளம் உள்ளம் தீவிரமாகத் துடிக்கும்... இத்துடிப்புணர்ச்சி நாளடைவில் இக்கதை வடிவாய் பரிணமித்தது என்று சொல்ல வேண்டும்**

*(யா.ஏ.பெ பி. முன்னுரை பக். 5)*

என்று நூலாசிரியர் குறிப்பிடுவதிலிருந்து இதனை உணரலாம் 'நம் சமூகத்தில் விதவை மகளிருக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதிகளை எடுத்துக் காட்டும் நோக்கத்தோடு எழுதப்பட்ட உண்மைக்கதையாகும் (பக்.7) என்றும் சுட்டியுள்ளார். இந்த நாவல் அது வெளிவந்த காலத்தில் மிக்க பரபரப்பை ஊட்டியிருக்கும் என்பதில் ஐயமில்லை. ஒரு பெண்ணின் மனநிலையை - குறிப்பாக இளம்விதவையின் உள்ளக் கிளர்ச்சிகளை உளவியல் பார்வையில் நோக்கியுள்ளது, நாவல். காமாட்சியின் மான அவமானங்களுக்கு அகமும் புறமுமான காட்சிகளும், சூழ்நிலைகளும் காரணமாகி, உளநிலைப் பிறழ்வு ஏற்படுத்துகிறது அவளது அமுக்கப்பட்ட உணர்ச்சிகளும், வீட்டில் அடைப்பட்டிருக்கும் நிலையுமே அவளை உளவியல் பாத்திரமாகக் காணச் செய்கின்றன.

காந்திய நெறியை ஏற்றுக் கொண்டு இளம் விதவைக்கு வாழ்வு தருவதன் மூலம் ஆத்மநாதன் போன்றோர் சமூகசீர்திருத்தம் விழைவதை இறுதியில் நாவலாசிரியர் காட்டியுள்ளார். அன்றைய காலப் பத்திரிகைகள் இந்நாவலின் கருவையும், ஆசிரியரின் நடையையும் பாராட்டி உள்ளன. இந்நூலுக்குச் சிறப்புரையை எழுதிய அசலாம்பிகை அம்மையார், இத்தகைய நூல்களில் செலவிடும் காலத்தை ஒழுக்கம் வளர்க்கும் துறையில் நூல்கள் புனைவதில் செலவிடுதல் நலம்' என்று கூறியது நோக்கத்தக்கது

## உயிரோவியம்

துரைக்கண்ணன் எழுதிய நாவல்களில் மிகச் சிறந்ததாகக் கருதப்படுவது உயிரோவியம் என்ற நாவலாகும். அன்றைய நாளில் இந்த நாவல் மிக்க வரவேற்பைப் பெற்றிருந்தது இது மிகுதியாக விற்பனையான நாவலாகும் அன்றைய கால கட்டத்தில் வாசகர் களைப் பெருமளவில் ஈர்த்ததோடு மட்டுமன்றி, எழுத்துத்துறையிலும், திரைப்படத்துறையிலும் இருந்தோர்க்கு முன் மாதிரியாகவும் அமைந்த நாவலாகும்

கல்லூரியில் தமிழ்ப்பாடம் நடத்துவதற்கு வேலையில் அமர்த்தப் பட்டான் நடராசன். கற்பகம் என்பவள் ஆறாவது பிரிவில் சிறப்புத் தமிழ்ப் படிப்பவள். அவளுக்குத் தமிழ்ப் பாடத்தில் இலக்கியத்தைக் கற்பித்து வந்தான் நடராசன். அவன் பாடம் நடத்தும் முறை ஈர்ப்பை ஏற்படுத்தியது அங்குத் தமிழாசிரியையாக இருப்பவள் மங்களாம் பாள். கற்பகம் அவனிடம் இலக்கியப் பாடம் கற்றுக்கொண்டு வருவதை எண்ணிப் பொறாமைப்பட்ட மங்களாம்பாள், நடராசன் மீது ஆசைப்பட்டாள். என்றைக்கு நடராசன் முதன் முதலாக, கற்பகத்தைக் கண்டானோ அன்றையிலிருந்தே அவன் நெஞ்சில் உயிரோவியமாகப் பதிந்தாள். மங்களாம்பாள் தனக்கு நடராசன் கிடைக்கமாட்டான் என்பதறிந்து சூழ்ச்சி வலை பின்னினாள். அதன் காரணமாக, கற்பகத்தின் தந்தை வேறு ஓர் ஆடவனுக்கு அவளை மணமுடித்தார் மங்களாம்பாளின் சூழ்ச்சி வலைக்கு இவ்வாறு இரையான கற்பகம் மனம் கசிந்தாள். திருமணத்திற்கு முன்பு நடராசனுக்குத் தன் மனத்தைத் திறந்து எழுதிய மடல் அவனுக்குரிய நேரத்தில் கிடைக்கவில்லை. கற்பகத்தின் திருமணத்திற்கு அவன் செல்லவும் இல்லை. திருமணத் திற்குப் பின்பே அவளது உள்ளத்தைப் புரிந்து கொள்ள முடிந்தது. தான் விரும்பியது போலவே, கற்பகம் தன்னை விரும்பியிருந்ததை அவள் தனக்கு எழுதிய அந்த மடல் வழி உணர்ந்தான். அம்மடல் அவனுக்கு உணர்த்திய செய்திகள் பல.

> ...நான் என்னை மறந்தால்தான் தங்களையும் மறக்க முடியும். இவ்வுடலில் உயிர் இருக்கும்வரை தங்கள் நினைவும் என் உள்ளத்தில் இருக்கும். நான்- அல்ல- என் உடல் கலியாணத்தின் வாயிலாக வேறொருவனுக்கு உரிய தாகப் போவதால் இனி நாம் காதலுரிமை கொண்டாடிக் கொள்ள முடியாது. அவ்வளவுதான். ஆனால், சகோதர உரிமையில் இனியும் இயல்பாகப் பழகலாம். நாம் இவ் வுலகில் கொண்ட காதல் உண்மையாக இருக்குமானால், ஏதோ துரதிருஷ்டங் காரணமாக, இப்பிறவியில் நிறை வேறாவிட்டாலும் அடுத்த பிறவியிலாயினும் அது சித்திக்கும் என்பது திண்ணம். இனிவரும் பிறவிகளில்நாம் அவசியம் காதலன் காதலியாகக் கலந்து வாழும் பேற்றை யளிக்க வேண்டும் என்று நான் அநுதினமும் இறைவனை நோக்கி இறைஞ்சித் தவம் செய்து கொண்டிருப்பேன்.

என்ற கற்பகத்தின் மடல், 'கவிநயம் பொருந்திய காப்பியமாகவும், அகப்பொருள் சுவை செறிந்த இலக்கியக் கருவூலமாகவும், அமைந்து அவனது உள்ளத்தை உருக்கியது கற்பகத்தின் திருமணம் முடிந்த நான்காம் நாள் கற்பகத்தின் இல்லத்திற்குச் செல்லும்படி நேரிட்டது.

கற்பகத்தின் கணவன் சந்திரசேகருக்கு அறிமுகப்படுத்தப் பட்டான். ஆனால் அவ்வீட்டில் நடராஜனுக்கு இருந்த மதிப்பும் மரியாதையும் கண்டு அவனும் அவனுடைய நண்பர்களும் நடராசனை வெறுத்தனர்.

கற்பகம் - நடராசன் இருவரும் சந்தித்துத் தனியாகப் பேசிக் கொண்டனர்.

> என் உள்ளமாகிய திரையில் உனது திருவுருவத்தை உயிரோவியமாக அழகொழுக எழுதிப் பார்த்துக் கொண் டிருப்பேன். இதுதான் என் துன்புற்ற நெஞ்சத்துக்கு ஆறுதலாக இருந்துவரும். என் உயிர் உடலைவிட்டு நீங்கிய பிறகும் நான் உன்னைக் காதலியாக அடைந்து களிப்பதற்காகத் தவம் செய்து கொண்டிருப்பேன்

எனக் கூறி அன்பு மேலீட்டால் முத்தம் கேட்கவும், அவள் ஓரடி பின் வாங்கினாள்.

> நான் இவ்வுடம்பைப் பெறுதற்குக் காரணமாயிருந் தவர்கள் - அதை ஒருவனுக்கு ஆட்படுத்தி விட்டார்கள். அதைத் தடுக்க எனக்குச் சக்தியில்லை. எனவே, என் உயிருக்கு நாயகர் நீங்கள்; ஆனாலும் விதி வசத்தால் - பெற்றோர் பிரயத்தனத்தால் என் உடலுக்கு நாயகனாக வேறொருவன் ஏற்பட்டுவிட்டான். ஆதலால் உங்களுடைய விருப்பத்தை நிறைவேற்றி வைக்கக் கூடாத வளாயிருக்கிறேன்...

என்று கூறி ஒழுக்கத்தின் மேன்மையை உணர்த்தியதோடு, அவனிடம் கொண்ட அழியாத காதலை,

> உள்ளுறு புணர்ச்சி ஒன்று போதாதா உத்தமக் காதலர் களாகிய நாம் உண்மையின்பம் துய்ப்பதற்கு! மெய்யுறு புணர்ச்சி எதற்கு?

என்று அறிவுரையைக் கூறியதோடமையாது, அழியக்கூடிய உடம் பால் எய்தும் இன்பத்தை விட, அழியாத உயிரின்பமே நிலைப்பது எனவும் மொழிந்தாள். இவர்களின் இத்தகைய உரையாடல்களை மறைவாகக் கேட்ட சந்திரசேகரன் தனது உண்மை நிலையை உணர்ந் தான். அவளது காதலை அறியாது மணம் செய்து கொண்டமையை மன்னித்தருளுமாறு கற்பகத்திடம் வேண்டினான். அவளது களங்க மில்லாத காதலைப் போற்றி வாழ்த்தினான். அவளை வழிபடத்தக்க வளாகக் கருதினான் அவர்கள் வெளியுலகத்திற்குக் கணவன், மனைவி போலவும், அக உணர்வுலகிற்குச் சகோதர சகோதரி முறை கொண்டாடி வாழ்க்கைத் துணைவர்களாகவும் இருப்பதென எண்ணினர்.

இந்த நாவலின் உயிரோட்டமே கதையிலமைந்த மேற்கண்ட உரையாடலே! காதலர் இருவரின் உணர்வுகளை மோதவிட்டுக் காதலால் கட்டுண்டு அதில் மீளவும் முடியாத தவிப்பு நிலையைத் துரைக்கண்ணன் போல், இத்துணை நேர்த்தியுடனும், கலை உணர்வுபடவும், நெஞ்சம் நெகிழுமாறும் படைத்தவர்கள் சிலரே. அகிலன், கு.ப.ரா. போன்றோர் இவ்வகையினர்

ஒரு படைப்பாளி தன் சொந்த வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப் படைப்புக்கு உரியதாக ஆக்குவதனைத் தன் வரலாற்றுக் கூறுகளமைந்த நாவல் என்பர். இதற்கு ஏற்ப அமைந்த நாவலே 'உயிரோவியம்' ஆகும். துரைக்கண்ணனின் சொந்த வாழ்க்கை நுகர்வே இந்நாவலின் கருவும் களமுமாக அமைகிறது.

கற்பகம் நடராசனை உளத்துள் வரித்துக் கொண்டதும், அதுபோல் அவனது நெஞ்சில் அழியாத உயிரோவியமாய் அவள் நிலைப்பதும் தெய்விகக் காதல் என்று கூறுமாறும், அழியாத காதல் என்று உணர்த்துமாறும் அமைந்துள்ள இப்படைப்பு துரைக்கண்ணனின் படைப்பில் மணிமுடியாக விளங்குகிறது.

> *நெஞ்சில் பல காலமாக நிலை தடுமாறி நின்ற எண்ணங்கள் எழுச்சி பெற்று எழுதத் தூண்டியதால், விளைந்த எழுத்தோவியம்....*

என்பது ஜீவாவாகிய துரைக்கண்ணனின் வாக்கு மூலம். ராணி மேரி கல்லூரியில் ஆறாவது பிரிவில் தமிழைச் சிறப்புப் பாடமாகப் படித்த தமிழறிஞர் ஒருவரின் மகளுக்குத் துரைக்கண்ணன் இலக்கியங் கற்றுத் தந்தபோது ஏற்பட்ட சொந்த அனுபவத்தின் வார்ப்பே உயிரோவியம். மாணவியின் நெஞ்சை அள்ளிய இலக்கிய உணர்வு காதலாக மலர்ந்தபோது, அதனைப் பக்குவமாக அகற்றிவிட எண்ணியதன் வெளிப்பாடே இந்நூலின் பின்னணி எனலாம்.

இந்நூலுக்கு வ ரா அளித்துள்ள அணிந்துரை, பாத்திர வார்ப்பின் உணர்வோட்டத்தையும், அதனை உளம்நையுமாறு நெகிழவைக்கும் உரையாடலையும் மனத்துட் கொண்டு அமைந்துள்ளது.

> *தூய்மை என்று ஏற்படாமலும், கவர்ச்சி என்று சிற்றின்ப மயமாக்காமலும், காதலை எழுத்துச் சித்திரத்தில் வரைவது மிகவும் கடினமான வேலையாகும். இந்த அபூர்வமான வேலையை ஜீவா கலையழகு வாய்ந்த எழுத்துத் திறத்துடன் செய்து முடித்திருக்கிறார் என்பது என் கருத்து*

(வ.ரா.)

எனக் குறிப்பிட்டிருப்பது முற்றிலும் உண்மையே. இந்நாவலின் வெற்றி, கற்பகத்தின் வாய்ச் சொற்களால் வெளிப்படும் தூய்மை எண்ணத்தில் செறிந்துள்ளதெனலாம்.

### தாசிரமணி

தாசிரமணி, பிரசண்ட விகடனில் 1937 ஆம் ஆண்டு தொடராக வெளிவந்த நாவல். 1944 இல் நூல்வடிவம் பெற்றது. இந்த நூலும் சமூக சீர்திருத்த நோக்கில் எழுதப்பட்டது. 'தேவதாசி மசோதா சட்டம்', கொண்டு வரப்பட்டதன் பயனாக, துரைக்கண்ணன், 'தேவதாசிகளின் நிலைமையைக் கூர்ந்து கவனித்து' அவர்களது வாழ்க்கை நுகர்ச்சிகளின் வெளிப்பாடுகளை இந்நாவலில் பதிவு செய்துள்ளார். 'தேவதாசிகள் என்ற விசித்திரக் கூட்டம்' இனியும் இருக்க வேண்டுமா? எனச் சிந்தித்துத் தமிழ் மக்கள் ஒரு முடிவுக்கு வருவதற்காக', எழுதியிருப்பதைச் சுட்டிக்காட்டும் ஆசிரியர், ரமணி என்ற கதாநாயகி மூலம் அக்குலத்துச் சமூக நிலையை வெளிப் படுத்தியுள்ளார்.

ரமணி, நகைக் கடை ஒன்றில், டாக்டர் மனைவி என்று பொய் கூறி வைரமாலையை எடுத்துச் சென்றாள். பத்திரிகையாசிரியன் கலியாண சுந்தரத்தின் நட்பு ஏற்படுகிறது இவள் தாசிக் குடும்பத்தைச் சார்ந்தவள்; அவனோ பிராமண இனத்தன். தன்னைக் குலத் தொழிலில் ஈடுபடுத்த நினைத்த சரசாங்கியை விட்டு விலக எண்ணித் தஞ்சைக்குப் பயணமானாள். வழிப்பயணத்தில் வீரமார்த்தாண்டன் என்ற கொள்ளையனை அவன் செய்த திருட்டுக் குற்றத்திற்காக. ஜமீன்தாரும், ஊர்மக்களும் அவனைக் கட்டிக் கசையடி தந்த காட்சியைக் கண்டு தன் துப்பாக்கியைப் பயன்படுத்திக் காப்பாற் றினாள். வீர மார்த்தாண்டன் கதை இந்நாவலில் துணைக் கதைப் பின்னலாக அமைகிறது.

ரமணி, கலியாணசுந்தரன் இவர்களது காதல், பயணத்திலே தொடர்கிறது. ரமணி தான் தாசி இனத்தைச் சேர்ந்தவள் என்று அவனிடம் கூறியபொழுது, அவன் தாசி சமூகத்தைச் சாடினான். சமூகத்தில் தாசிகள் உருவாக யார் காரணம் என்பதையும், மனித சமூகத்தில் அப்படியொரு தனிப்பிரிவு எப்படித் தோன்றியிருக்க முடியும் என்பதையும் ரமணி சமுதாய உணர்வோடு அவனைச் சிந்திக்கச் செய்தாள்.

> *திமிர் பிடித்த ஆடவர் சிலரது காமவெறிக்கு இரையாகிய மகளிரே நாளடைவில் தாசிகளாகப் பரிமளித்தனர். சுய*

> நலமிக்க ஆடவர்கள் தங்கள் உடலொழுக்கத்துக்கு இன்னும் சௌகரியத்தை ஏற்படுத்திக்கொள்ள கடவுள் பெயரையும், சமயத்தின் பெயரையும் ஆதரவாகக் கொண்டனர் ஆதலால் இக்கூட்டம் அதிகமாகி ஒரு தனி சமூகமாய் விட்டது.
>
> (பக். 152)

என ரமணி, கலியாணசுந்தரனிடம் தாசி இனம் பற்றிய கண்ணோட்டத்தை மொழிந்தாள். 'அவ்வாறு ஓர் இனம் தோன்ற காம வெறி பிடித்த ஆடவர் கூட்டமே காரணம்', எனவும், 'மக்கள் சமூக அமைப்பின் அடிப்படையிலேயே கோளாறிருக்கிறது' எனவும் அவள் முன் வைத்த கருத்துக்கள் சிந்தனையைத் தூண்டும் வண்ணம் காட்டப் படுகின்றன. இதற்கிடையே கதையில், ரமணி யார் என்ற உண்மை யைக் கதையின் திருப்பமாக்கி, இதுநாள் வரை சரசாங்கி, ரமணியை வளர்த்தவள் என்பதும், ரமணி சேத்தூர் சமீன் குடும்பத்தைச் சார்ந் தவள் என்பதும், தான் குழந்தையாக இருந்தபோதே வஞ்சகமாகக் கைமாறி சரசாங்கியால் வளர்க்கப்பட்டவள் என்பதுமான உண்மைகள் கதைப் போக்கில் விரைந்து முடிகின்றன.

தாசிரமணி என்ற இந்த நாவலில் தேவதாசி மசோதா சட்டத்தை வரவேற்றுத் தமிழகத்தில் விபச்சாரம் ஒழிக்கப்பட வேண்டும் என்னும் கருத்தியல் உணர்த்தப்படுகிறது. வீரமார்த்தாண்டன், பிரஹதாம்பாள் ஆகியோர் பற்றிய நிகழ்ச்சிகளும், பிறவும் துணைக்கதைப் பின்ன லாகக் கதைக்குப் பயன்பட்டுள்ளதை அறியலாம். கதையின் இறுதிக் காட்சிகள், ஆசிரியர் பார்வையில் ஒரு தொகுப்புரையாகக் கூறப்பட்டு, வெறுமனே நிறைகின்றன.

**காதலனா? காதகனா?**

1934 ஆம் ஆண்டு 'ஆனந்த போதினி' இதழில் தொடராக வெளிவந்தது காதலனா? காதகனா? என்ற நாவல் இது 1936 இல் நூல்வடிவம் பெற்றது. குறிப்பிட்ட தேதிக்குள் (30.4.1936) இந்நூலை வாங்கினால் பத்தணா விலை உள்ள இந்நாவல் எட்டணாவுக்குத் தரப்படும் என்ற விளம்பரம் பிரசண்ட விகடனில் வெளி வந்தது. கல்லூரி இளைஞர்களைப் பற்றிய கதையாதலின் இதுவும், பரபரப்புடன் விற்பனையாகிப் பல பதிப்புகள் கண்டது

> நவநாகரிகச் சேற்றில் அழுந்திக்கெட்டொழியும் கல்லூரி மாணவிகளுக்கு அறிவுச் சுடர் கொளுத்தும் நவீனம்

என நூலில் கூறப்பட்டுள்ளது. இந்நூலின் நூன்முகத்தில்

> இந்தியாவில் கற்றவர் தொகை மிகக்குறைவு என்று கூறப்பட்டு வந்த காலம் போக, பெற்றோர்கள் தங்கள் மக்களுக்குப் பெரும் பொருள் செலவிட்டு உயர்தரக் கல்வி புகட்டி வரும் நிலையில், அதற்குரிய நற்பயன் ஏற்படா விடில் அது சகித்தற்கு இயலாததொன்றன்றோ? இவ் விஷயம் பற்றி நான் அடிக்கடி சிந்தித்து வந்ததன் பயனாகவே, இந்த நாவல் என் உள்ளத்தில் கருக்கொண்டு கடைசியாக, நூல் வடிவில் இதுபோது வெளி வரலாயிற்று.

எனச் சுட்டியிருப்பது சமூகச் சிந்தனையையும், பண்பாட்டு அக்கறை யையும் உணர்த்துகிறது பெண்களின் முன்னேற்றம் கருதிய துரைக் கண்ணன், அவர்கள் கல்வியில் மிகுந்த ஈடுபாடு கொண்டு நாட்டை யும் சமூகத்தையும் உயர்த்த வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தவே இந்நூலை எழுதினார்.

> வருங்காலச் சந்ததிகளைப் பயக்கும் தாய்மார்களாக வரப்போகும், இளமங்கையரை நல்லொழுக்கத்திலிருந்து இவ்வுலகில் தன்னிகரற்று விளங்கும்படிச் செய்து விடலாம்

என்று மீண்டும் கூறியுள்ளது, பெண்களுக்குக் கல்வி வேண்டும் என்பதில் அவர் கொண்டிருந்த முனைப்பைக் காட்டுகிறது.

கல்லூரி மாணவியான சௌந்தரவல்லியைச் சுற்றி நிகழ்கிறது கதை கார் விபத்தில் சிக்க இருந்த அவளைக் காப்பாற்றினான் சந்திரசேகரன். அவர்களின் சந்திப்பு, காதலாக மலர்ந்தது. கல்லூரி யிலேயே அழகான அவளின் கடைக்கண் பார்வைக்கு ஆடவர் ஏங்கினர். சந்திரசேகரன் நல்லவன் அல்லன்; சூழ்ச்சி செய்பவன்; அவன் கல்லூரி மாணவனே அல்லன் என்பன போன்ற மொட்டைக் கடிதங்கள் சௌந்திரவல்லியைத் திகைக்கச் செய்தன. எனினும், அவன் தான் மருங்காபுரி ஜமீன்தார் மகன் என்றும், கல்லூரியில் பி.ஏ. படித்துவருவதாகவும் கூறி அவளிடம் நெருங்கிப் பழகினான் அவனது வஞ்சக வார்த்தைகளையும், பொய்மை நாடகத்தையும் அவள் அறியவில்லை நண்பன் இராஜ சேகரிடம் தான் கேட்டுக் கொண்டபடி, 'இளைய ராவ்சாகேப்' எனத் தம்மை அழைக்க வேண்டும் என்று கூறி, 'மன்மத பவனத்தில் தங்கினான் அவ்வாறு சௌந்தரவல்லியும், சந்திரசேகரனும் அங்குத் தங்கவே, இராஜசேகரின் தீய எண்ணம் தனி அறையில் இருந்த சௌந்திரவல்லியிடம் சென்றது. அப்போது சந்திரசேகரின் பொய் நாடகத்தையும், அவன் போலி யானவன் என்பதையும் எடுத்துக் கூறினான் இராஜசேகரன்; இதனை உணர்ந்த சந்திரசேகரன் அவனொடு சண்டையிட்டு, மன்மத

பவனத்தை விட்டு வெளியேறினான். ஒருநாள் சந்திரசேகரன் மயக்க மடைந்த சௌந்திரவல்லியை டாக்டர் காந்தாமணியிடம் அழைத்துச் சென்றான். அவள் கர்ப்பமுற்றாள் என்பதைச் சந்திரசேகரனிடம் டாக்டர் கூற, அந்த உண்மை சௌந்தரவல்லிக்குப் புரியுமுன்பே அவளைக் கைவிட்டு ஓடினான். சந்திரசேகரின் நய வஞ்சகத்தை எண்ணி அவன் உண்மையிலேயே காதலனா? அல்லது காதகனா என்று சொல்லி அரற்றி, மானம் போனபின் வாழ்தல் கூடாது என்ற எண்ணம் தலை தூக்க, காவிரியில் பாய்ந்து உயிர் நீத்தாள்

இதன் பிறகும் கதை நீளுகிறது. கப்பலில் எதிர்பாராத விதமாக, சந்திரசேகரனைச் சந்தித்தான் இராஜசேகர். முன்பு ஒருகாலத்தில் நண்பனாயிருந்தும், தம்மை அணுகிப் போலி நாடகம் ஆடச் சொல்லியும் பின்பு அதன் காரணமாகவும், சௌந்திரவல்லி காரணமாகவும் அவனோடு தீராப்பகைக் கொண்டிருந்த இராஜசேகரன் தன் துப்பாக்கியால் சந்திரசேகரசைச் சுட்டு வீழ்த்தினான்

இக்கதையினூடே கல்லூரி மாணவ மாணவிகளின், குறிப்பாக, சுலோசனா, ரமாமணி, கோபால் முதலியோரின் செயல்கள் துணைப் பின்னலாகச் சொல்லப்பட்டு நாவல் நிறைவடைகின்றது. கதை முடிந்து போன நிலையில் நூலாசிரியர் நம்மை அழைத்து, அத்தகைய துணைக் கதைமாந்தர்கள் ஒருவருக்கொருவர் வீழ்த்திக் கொண்டு இறக்கும்படியான முடிவை எடுத்துச் சொல்கிறார். சௌந்திரவல்லி யின் தற்கொலைச் செய்தி பத்திரிகையில் வெளிவந்ததோடு, அவள் இறுதியாக எழுதி வைத்துவிட்டுச் சென்ற கடிதம், படித்த பெண் களுக்கு ஒரு பாடம் போன்று அறிவுரையாக அமைந்து நிறைகிறது

ஆடவரின் காமவலையில் அறிவையும், மனத்தையும் இழப்பதோடு கற்பையும் பறிகொடுத்தவள், சௌந்தரவல்லி. ஆடவரின் மீது இயல்பான நாட்டங்கொண்டு அவர்களுக்குத் தங்களை இரையாக்கி வாழ்க்கையைத் தொடர முடியாமல் சிக்கிச் சீரழிந்து தவிக்கும் பெண்களின் மனப்போராட்டங்களை உணர்வுபட எழுதிச் செல்கிறார் துரைக்கண்ணன்.

**சீமான் சுயநலம்**

சீமான் சுயநலம் 1961 இல் வெளியிடப் பெற்ற நாவலாகும். இந்நாவல் ஓர் அரசியல் நாவல் எனலாம்.

> *அரசியல் நாவல் என்ற பெயருக்கு முற்றிலும் பொருத்த*
> *மாய்த் தமிழில் எழுந்த முதல் நாவல்*
>
> *(புனைகதை வளம் பக். 130)*

என்று மா. இராமலிங்கம் குறிப்பிடுவர். விடுதலைப் போராட்ட காலத்தில் காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்ட உட்பூசலை • அடிப் படையாகக் கொண்டு பின்னப்பட்டுள்ளது தமிழ் நாட்டில் நடந்த உண்மை நிகழ்ச்சிகளை மறைமுகமாக உணர்த்தி, உண்மை மாந்தர்களுக்குக் கற்பனைப் பெயர் தந்து புனையப்பட்டுள்ள கதையாகும்

டாக்டர் ஜம்பு நாதன் பேச்சுத் திறனால் அரசியலில் செல்வாக்குப் பெற்று அமைச்சரவையில் இடம்பெற முயல்பவன். ஆளுங் கட்சியிலிருந்து எதிர்க்கட்சிக்குத் தாவ விரும்பும் அவன், சத்தியப் பிரகாசரின் அறிக்கை இந்தியா வெங்கும் பரவ, சுதந்திரம் நாடுவோர் சங்கத்தில் சேர்ந்தான்; அதில் அவன் உறுப்பினன்; அச்சங்கத்தில் உறுப்பினர்களான பிரம்ம நாயகம், நளினி ஆகிய இருவரும் காதலர்கள். ஜம்புநாதன் நளினி மீது ஆசை வலை விரித்தான்; அவளை அடைவதற்குச் சூழ்ச்சி செய்தான்; சத்தியப் பிரகாசரிடம் நயமாகப் பேசி பிரம்மநாயகத்தை வெளியூருக்கு அனுப்பிவிட்டு நளினியை அடைய முயன்றான். அதனை உணர்ந்த நளினி, அவனை எப்படியாவது பழிவாங்க எண்ணினாள். அன்பு கொண்டவள் போல் நடித்தாள் சத்தியப் பிரகாசரின் இலட்சியங்களுக்கு எதிராக அவனைப் பேசவும் செயல்படவும் வைத்தாள்; ஜம்பு நாதனின் உண்மைத் தோற்றத்தை மக்கள் மன்றத்தில் உணர்த்தி அவனைத் தேசத் துரோகியாகக் காணச் செய்தாள்; இதற்கிடையே ஒரு நாள் ஜம்புநாதன் இறந்ததாகச் செய்தி பரவிற்று நளினி கொலை செய்தாள் என்று கூறப்பட்டதை அவள் மறுக்கவில்லை. ஜம்புநாதனைக் கொலை செய்ததாக நளினி, பிரம்மநாயகம் இருவருமே வழக்கு மன்றத்தில் தனித்தனியாகக் கூற, ஜம்புநாதனை, தான் கொன்றதாகப் புரட்சி இயக்கத் தொண்டன் தியாகராஜன் குரல் கொடுத்தான். நளினிக்கும், பிரம்மநாயகத்துக்கும் ஆயுள் தண்டனை கிடைப்பதோடு கதை நிறைகிறது.

இக்கதையில் இடம்பெறும் ரகுநாத மண்டலம் தமிழ்மாநில மாகவும், சுதந்திரம் நாடுவோர் சங்கம், காங்கிரஸ் இயக்கமாகவும், சத்தியப் பிரகாசம் காந்தியடிகளாகவும் மறைமுகமாகக் குறிக்கப் பட்டுள்ளமையை அறியலாம்.

நாட்டில் விடுதலைப் போராட்டத்தை மக்கள் எதிர்கொண்ட முறை இந்நாவலில் வெளிப்படுத்தப்படுகிறது. அதனைப் படித்தோரும், செல்வந்தர்களும் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு பிழைப்பு நடத்தியதைப் படம் பிடித்துள்ளார் நூலாசிரியர். உண்மைக்கும் பொய்ம்மைக்குமாக நடக்கும் காட்சிகள், அரசியல்,

பொருளாதாரப் பண்பாட்டுத் தளங்களை மையமாக வைத்து இயங்குகின்றன. விடுதலை என்ற களம் எத்தகைய சக்தி வாய்ந்தது! அங்குப் பொய்ம்மைகளும் போலிகளுமே தங்கள் விருப்பப்படி இயங்கி மக்களுக்கு இன்னலையும் துயரையும் இழைக்கிறார்கள் என்பதனை அரசியல் பின்னணியில் ஆழமாக உணர்த்தியுள்ளார் துரைக்கண்ணன்.

> காந்தியத்தின் பேரால், காங்கிரஸ் இயக்கத்தின் பேரால் படித்தவர்களும் பணக்காரர்களும் ஏழை எளியவர்களை அடிமைப்படுத்திச் சுரண்டி, கொழுத்து *தியாகிகளாக* உண்மையான தியாகிகளால் புகழ் பெற்ற வேதனை மிக்க கதைகளைக் கண்திறக்குமா? நாவலில் விந்தன் வெளிப்படுத்துவதுபோல '*சீமான் சுயநலம்*' நாவலில் வெளிப்படுத்துகிறார் ஜீவா. வேறு எவரும் இத்தகைய நாவல்களை எழுதியதில்லை.
>
> (ப. 127)

என விந்தனையும், துரைக்கண்ணனையும் மு.பரமசிவம் கண்ணோட்டம் செய்திருப்பது உண்மையான நோக்காகும்

## தியாகத் தழும்பு

'தியாகத் தழும்பு' 1960 இல் வெளிவந்த நாவலாகும். 1947 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் எழுதத் தொடங்கிப் பொதுப்பணிகளில் ஈடுபட்ட காரணத்தால் நீண்ட இடைவெளிக்குப் பின் வெளிவந்தது.

1942 ஆம் ஆண்டில் நடந்த ஆகஸ்டு புரட்சியைப் பின்னணி யாகக் கொண்டது. அரசியலில் - விடுதலை வேள்வியில் ஈடுபட்ட ஒருவனின் கதை தேவதாஸ், இராமகிருஷ்ணன் ஆகியோரிடத்துத் தியாகராஜன் என்பவன் போராட்ட வரலாற்றைச் சிவப்பிரகாச முதலியார் கதையாக விரித்துச் சொல்வது போன்ற நோக்குநிலையில் கதை சொல்லப்பட்டுள்ளது. நாட்டு விடுதலையில் ஈடுபட்டுத் தியாகத் தழும்பினைப் பெற்ற தியாகராஜனின் குடும்ப வாழ்க்கையையும், அரசியல் வாழ்க்கையையும் விரித்துக் கூறுகிறார் சிவப்பிரகாசர். நாடகப் பாணியிலான உரையாடலாகவே முதல் ஐம்பது பக்கங்கள் நீண்டு அதன் பிறகே கதை தொடங்குகிறது

தியாகராஜனுக்குச் சிவப்பிரகாச முதலியார் நண்பராக ஆனதிலிருந்து, பழைய நிகழ்ச்சிகளை அவர், தம் நண்பர்களிடம் சுவையாகக் கதை போலக் கூறிச் செல்கிறார் தேசிய விடுதலைப் போரில் தியாகராஜன் தீவிரம் காட்டியது, கோட்டையில் யாருமறியா நிலையில் கொடி ஏற்றியது, சத்தியா கிரகப் போரில் ஈடுபட்டது, நாடு

முழுதும் சென்று மதுவிலக்கு பிரச்சாரம் செய்தது, காங்கிரஸ் பிரதிநிதியாக லண்டன் வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்டது, தேசிய மகாசபையான காங்கிரஸில் தலைமை ஏற்றுப் போராட்டங் களை நடத்தியது, சட்ட மறுப்பு, கள்ளுக்கடை மறியல், விதேசித் துணிக்கடை மறியல், போன்ற போராட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டுச் சிறை சென்றது முதலிய தியாகராஜனின் வரலாற்றைச் சிவப்பிரகாச முதலியார் தம் நண்பர்கள் இருவரிடமும் கூறியதைக் கதை தெரிவிக்கிறது.

இதற்கிடையே தியாகராஜனின் குடும்ப வாழ்க்கை நிகழ்ச்சிகள் பின்னப்பட்டுள்ளன. தியாகராஜன் தன் பெற்றோரோடு வசித்து வருதல், வருவாய் மிகுதியும் இல்லாத ஏழ்மை நிலை, தன் மாமா முறைப் பெண்ணான திரிபுரசுந்தரியைத் தனக்கு மணமுடிக்க எண்ணுதல், இவ்விரு குடும்பத்திற்கும் முன்பு நிலவிய குடும்பப் பகை, முதலியவை கதைப் பின்னலில் ஆங்காங்கே வந்து போகின்றன.

இறுதியில் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் ஈடுபட்டுத் தியாகராஜன் சிறைப்படுத்தப்படவும், அவனை மீட்க இளைஞர்கள் சிறைச்சாலையைத் தகர்த்தல், தியாகராஜன் அதனை விரும்பாது சாத்வீக அறப்போராட்டத்தை வலியுறுத்தல் போன்றவை இடம்பெறுகின்றன.

நண்பர்களிடம் கதை சொல்வது போல் கூறிய சிவப்பிரகாச முதலியார், தியாகராஜன் யார்? அவன் இப்போது எங்கே இருக்கிறான் என்று அவ்விருவரையும் கேட்கப் போய், முதலியாரே தியாகராஜனாகக் கதையில் உலவுகிறாரோ என்று படிப்போரை ஐயப்பட வைப்பதுபோல் கதை நிறைகிறது.

இது போன்ற கதையமைப்பும், கதை சொல்லும் உத்தியும் பழைய பாணி என்றாலும், கதைப்பின்னல் அரசியல், குடும்பம் ஆகிய தளங்களில் மாறிமாறிப் படைக்கப்பட்டு விறுவிறுப்பைக் குறைக்கிறது. அரசியலுக்கே முக்கியத்துவம் தந்து எழுதப்பட்டதால், தியாகராஜனின் குடும்பம் பற்றிய பின்னல் இயல்பான போக்கில் செல்கிறது. அக்குடும்ப நிகழ்ச்சிகளின் போக்கு நத்தை நகர்வது போலவே மெல்ல நடைபோடுகிறது.

## நடுத்தெரு நாராயணன்

நடுத்தெரு நாராயணன் 1960 இல் வெளிவந்த நாவலாகும். 1947 இல் எழுதத் தொடங்கி, பல பொதுப் பணிகளில் ஈடுபட்ட

காரணத்தால் இடையில் தடைப்பட்டு, நீண்ட காலத்திற்குப் பின்பே நாவலாக உருவெடுத்தது. இது பிரசண்ட விகடனில் தொடராக வெளி வந்தது துரைக்கண்ணன் நாவல்களிலேயே மிகுதியான பக்கங்களைக் கொண்டது இது.

பண்ணையார் மகள் பூங்கோதை தன் முனைப்பும் துடுக்கும் மிகுந்தவள். தன் தந்தையாரிடம் வேலை செய்யும் முத்துச்சாமி குடும்பன், மகன் கந்தசாமியோடு அவரைக் காண வந்தான் கீழ்ச்சாதியைச் சார்ந்த கந்தசாமி மரியாதை சற்றும் இல்லாதவன் எனவும், ஆணவம் கொண்டவன் எனவும், பூங்கோதை எண்ணினாள். அவன் பி ஏ. ஆனர்சு படித்தவன். அவனை எடுத்தெறிந்து பேசினாலும், அவனிடம் ஏதோ ஓர் ஈர்ப்புச் சக்தி ஆட்கொள்ள, அவனைக் காதலிக்கவும் தொடங்கினாள். அவனைத் தனக்கான இரையாக்கியபோது கருவுற்றாள். இதனை அறிந்த பண்ணையாரும், அவர் வீட்டில் அனைத்துப் பொறுப்புகளைக் கவனிக்கும் பணிப் பெண்ணான தாயம்மாளும் பூங்கோதைக்குக் குழந்தை பிறந்ததும் யாரும் அறியாவாறு குழந்தையை நடுத்தெருவில் விட்டுச் சென்றனர் பூங்கோதையின் மனத்தை மாற்றி தியாகராஜன் என்பவனுக்கு மணமுடிக்க இருந்தனர் பண்ணையாரின் அண்ணன் மகன் மூலம் உண்மையை உணர்ந்து கொண்ட தியாகராஜன் அவ்வீட்டைப் புறக்கணித்தான்

பூங்கோதைக்கும் கந்தசாமிக்கும் பிறந்த குழந்தை இராஜ நாராயணன் என்ற பெயர் பூண்டு ஆலால சுந்தரம் செட்டியார் வீட்டில் வளர்ந்து வந்தான் கல்லூரியில் தனக்கு அறிமுகமான மரியானந்தம் என்ற பேராசிரியரிடம் மதிப்பும் மரியாதையும் கொண்டான் அவரும் இவன் மீது அன்பும் பாசமும் காட்டி வந்தார். இராஜ நாராயணன் வைதீகக் குடும்பத்தைச் சார்ந்த கனகம் மீது காதல் கொண்டிருந்தான். கனகமோ அவனைத் தனக்கு இரையாக்கி இச்சைக்கு உட்படுத்தினாள்.

பேராசிரியர் மரியானந்தத்திற்கு நடந்த பாராட்டு விழாவில் கலந்து கொள்ள வந்திருந்த பண்ணையார், பூங்கோதை ஆகியோரைக் கண்டதும் மேடையிலேயே மரியானந்தம் மயக்கம் போட்டு விழுந்தார். இராஜநாராயணன் அவருக்குத் துணையாக இருந்து பணிவிடை செய்து வந்தான் மரியானந்தம், கந்தசாமியே என்பதை அறிந்து கொண்டாள் பூங்கோதை. தன்னை யாரென்று அவள் அறிந்து கொண்ட காரணத்தால் இராஜநாராயணனுக்கு மடல் எழுதிவிட்டு எங்கோ மறைந்தார் மரியானந்தம் இராஜநாராயணன், தனக்கும், கந்தசாமிக்கும் (மரியானந்தம்) பிறந்தவன் என்பதையும்

அறிந்திருந்தாள் பூங்கோதை. மடல் வழியே தன்னுடைய தந்தை மரியானந்தம் என இராஜநாராயணன் அறியலுற்றான். இராஜ நாராயணனிடம் அன்பும் பாசமும் காட்டி அவனை வளர்ப்பு மகனாக ஆக்கிக் கொள்ள ஆசைப்பட்டாள் பூங்கோதை. இதற்கிடையே ஆலாலசுந்தரம் செட்டியார் தமக்கு வளர்ப்பு மகனாகிய இராஜ நாராயணனுக்கு மணம் செய்விக்கப் பெண் பார்க்கவும், இராஜ நாராயணன் மறுத்தான். தான் அநாதை என அறிந்து கொண்டதும் அவ்வீட்டிலிருந்து வெளியேறினான். பூங்கோதையும், ஆலால சுந்தரமும் அவனைத் தேடினார்கள். இதற்கிடையே, வழியில் கையில் குழந்தையும், கடிதமுமாகச் சுமந்து வந்து இராஜ நாராயணனைக் கண்டு ஒப்படைத்தாள் கனகத்தின் வீட்டு வேலைக்காரி. இராஜ நாராயணனுக்கும், கனகத்திற்கும் பிறந்த குழந்தை அது. மடல் வழியே உண்மை நிலை உணர்ந்த அவன், குழந்தையை ஏந்தியபடி வீதியில் பித்துப் பிடித்தவன்போல் சென்றான். தன்னைப் போலவே தன் மகனும் நடுத்தெரு நாராயணனாகியதை எண்ணிக் கொண்டே சென்றவனை அடையாளங் கண்டனர். அவ்விரு குடும்பத்தினரும், இனி அநாதை என்று கூறுதற்கே இடமில்லை. இரு குடும்பங்களுக்குச் செல்லப் பிள்ளையாக இருந்தவன், இப்போது அவன் பிள்ளையோ மூன்று குடும்பங்களுக்குச் செல்லப் பிள்ளையானான் என்று கதை நிறைகிறது.

இக்கதை பிரசண்ட விகடனில் வெளிவந்த நான்காம் மாதம், பூனாவில் இராணுவக் கணக்கராகப் பணிபுரிந்த எச் வி.எஸ். மணியன் என்ற பிரபல எழுத்தாளர், தெருவில் அநாதையாக விடப்பட்டு இறந்து கிடந்த குழந்தைபற்றிய செய்தியை விளக்கமாகத் துரைக் கண்ணனுக்கு அனுப்பியுள்ளார். இதை உணர்ந்து, உள்ளம் உருகிய ஆசிரியர், 'நடுத்தெரு நாராயணன் வாழ்க்கையை உண்மையின் அடிப்படையில் எழுத வேண்டியது ஆயிற்று' எனக் குறிப்பிட்டுள்ளார்.

துரைக் கண்ணன் இந்நாவல் குறித்து அதன் முன்னுரையில் எழுதியிருப்பதாவது,

> *பத்திரிகை ஆசிரியன் என்ற முறையில் கடமைகளைச் செய்தாக வேண்டும் என்ற கட்டாயம் அவசியம், அவசரம், நிர்ப்பந்தம்; வேண்டுகோள் முதலியவைகளை யொட்டி, நான் எழுதியவை பலவாக, உள்ளத்தையும் உணர்ச்சியையும் உயிர்மூச்சையும் ஒன்றாக்கி எனக்கே ஆத்ம திருப்தியேற்படும் வகையில் செய்த இலக்கிய சிருஷ்டிகள் மிகச்சிலவே. அச்சிலவற்றில் சிறப்பாகக்*

> *குறிப்பிடத்தக்க ஒன்று இந்நாவல். உயிரோவியத்தை அடுத்து எனக்கு நிலைத்த புகழைத் தரத் தக்கவை என நானே நம்புவனவற்றில் இந்நாவலும் ஒன்று.*

என்று துரைக்கண்ணனின் கூற்றுக்கு இந்நாவல் பொருந்தி வரக் காணலாம். முழுதும் சமூகக் கதையாகவுள்ளபடியால் இந்நாவல் அன்றைய நாளில் வரவேற்பைப் பெற்றிருக்கும் என நம்பலாம்.

**தரங்கிணி**

தரங்கிணி 1964 இல் நாவலாக வெளி வந்தது; இந்நாவல் தொடராகப் பத்திரிகையில் எழுதப்படாமல் தனி நூலாக வெளியிடப் பெற்றதாகும். பொருளாதார ஏற்றத் தாழ்வால் மதம் மாறித் திருமணம் செய்து கொள்ளும் இரு குடும்பங்களைப் பற்றியது. 'சாரதா' என்ற பெயரில் அமுதசுரபியில் வெளிவந்த தம் சிறுகதையை நாவலாக ஆக்கிய முயற்சியே இந்நூல் மதம் தொடர்பான சிக்கலையும், வழக்கையும் துரைக்கண்ணன் சந்திப்பதற்கு இக்கதை காரண மாயிருந்தது

தரங்கிணி பள்ளி ஆசிரியரின் மகள்; பிராமண வகுப்பைச் சார்ந்தவள் அவளுடைய நெருங்கிய தோழி காதரீன். காதரீனுடைய சகோதரன் ஜோசப், தரங்கிணியின் அழகில் மயங்கியவன்; அவளைக் கேலி செய்வது வழக்கம். தரங்கிணி அவன் கேலியையும் குறும்பையும் கேட்டுச் சீறி விழுபவள்; எனினும் அவனைத் திருத்த முற்பட்டாள் அவனும் அவள் சொற்களுக்கு மதிப்புக் கொடுத்தான்; தன்னைத் திருத்திக் கொண்டான்; தரங்கிணிக்குத் திருமணம் தடைப் பட்டுக் கொண்டே வந்தது. தரங்கிணியின் தந்தை ஏழைப் பள்ளியாசிரியராக இருந்தமையால், மணமுடிக்க வருவோர் வரதட்சணைக் கேட்கக் கொடுக்க இயலாதிருந்தார். தரங்கிணி திருமணம் தள்ளிக் கொண்டே போனது; காதரீன் குடும்பத்துக்கு இது வருத்தம் தந்தது. செளந்தரராஜன் என்ற பிராமண இளைஞனுக்கு மணமுடிக்க காதரீன் சகோதரன் ஜோசப் முயன்றான். காதரீன் இல்லத்திற்கு வந்து தரங்கணியை மணந்தான். அவளை அழைத்துக் கொண்டு செளந்தரராஜன் பெற்றோர்களைச் சந்திக்கும்போது அவன் மனத்தில் அச்சமும் தயக்கமும் தோன்றின. தனது செயலுக்கு மன்னிப்புக் கோரினான். காலில் விழுந்து வணங்கும் போது தந்தை வாழ்த்தினார் வியப்புடன் அக்காட்சியைக் கண்டு கொண்டிருந்த தாயாரும் சகோதரியும் மணமக்களை வரவேற்று ஆரத்தி எடுத்து மகிழ்ந்தனர், சாதி, மதம் கடந்த நிலையில் மனிதநேயத்தோடு நற்செயல்கள் செய்யப்படுவதனை இந்நாவலில் ஆசிரியர் வரவேற்றுள்ளார்.

**புதுமைப்பெண்**

புதுமைப்பெண் என்ற நாவல் அருணோதயம் வெளியீடாக அறுபதுகளின் இறுதியில் வெளிவந்தது. இது திரைப்படச் சூழலுக்கு ஏற்றதாக எழுதப்பட்ட கதையமைப்பைக் கொண்டது. தலைப்புக்கு ஏற்றவாறு ஒரு பெண்ணின் வீர தீரச் செயல்கள் துப்பறியும் பாணியில் கூறப்பட்டுள்ளன

தன் தோழியரோடு கடற்கரைக்குச் சென்ற இந்திராணியைக் கடலலை ஆட்கொள்ள வேதகிரி அவளைக் காப்பாற்றினான் அவளது அழகில் மயங்கினான் அவள் ஏற்கெனவே திருமணம் ஆனவள் என்பதும், சோமசுந்தரத்தின் மனைவி என்பதும் நண்பர்களால் கூறப்பட அவற்றைப் பொருட்படுத்தாமல் அவளை எப்படியும் மணந்தே தீர்வது என நண்பர்களிடம் சூளுரைத்தான். ரமேஷ் சந்திர சட்டர்ஜி என்னும் வங்காளி ஒருவர் சோம சுந்தரத்தை மேற்படிப்புக்காகச் சீமைக்கு அழைத்துச் சென்றதையும், இன்னும் ஒரு வாரத்தில் சோமசுந்தரம் வரவிருப்பதையும் நண்பன் தாமோதரன் மூலம் அறிந்து கொண்ட வேதகிரி, தற்செயலாகப் பழைய நண்பன் தியாகுவைச் சந்தித்தான் தியாகு, சட்டர்ஜியின் உதவியாளன்; சட்டர்ஜி, சோமசுந்தரத்திடம் ரகசியத் திட்டங்கள் அடங்கிய குறிப்புகளை ஒப்படைத்ததோடு, தன் உதவியாளன் தியாகு நல்லவன் அல்லன் என்ற குறிப்பைச் சொல்லிவிட்டு மாரடைப்பால் இறந்து போனார். இவற்றை ஒட்டுக் கேட்ட தியாகு சோமசுந்தரம் மீது வெறுப்புற்றான் தியாகுவைக் கண்டு வேதகிரி, இந்திராணியைத் தம் வசப்படுத்தும் திட்டத்தைக் கூறவே, இருவருமே இந்திராணியின் கணவன் சோமசுந்தரத்தைச் சிறைக்கு அனுப்பி வைத்தனர். அதற்காக, இன்ஸ்பெக்டர், மாஜிஸ்ட்ரேட் ஆகியோருக்கு இலஞ்சம் கொடுத்துத் தம் திட்டத்தில் வெற்றி பெற்றனர்

இதன்பின்னர் இந்திராணி வீட்டைவிட்டு வெளியேறினாள். வழியில் கார் விபத்தில் சிக்கவே ஜமீன்தார் ஒருவர் காப்பாற்றிய தோடு, தம் மகளைப் போலக் கருதி வளர்த்தார். ஒரு சமயம் தேநீர் விருந்து ஒன்றில் மாஜிஸ்ரேட் விட்டுச் சென்ற நாட்குறிப்பு இந்திராணிக்குக் கிடைக்கவே, மாஜிஸ்டிரேட் தன் கணவன் சிறை செல்வதற்காக வேதகிரியிடம் வாங்கிய இலஞ்சம் தெரிய வருகிறது. மாறுவேடத்தில் வேலைக்காரியாக அவ்வீட்டில் வேலை செய்து மாஜிஸ்டிரேட்டின் செயற்பாடுகளையும், பித்தலாட்டங்களையும் அறிந்தாள். வேதகிரி இன்ஸ்பெக்டராகச் சேர்ந்த பத்தாண்டுகளில் எப்படிக் கயமைத் தனம் கொண்டவனாக இருந்து வந்தான்

என்பதையும் அறிந்தாள். இதற்கிடையே பணப்பங்கீடு காரணமாக இன்ஸ்பெக்டர் வேதகிரிக்கும், தியாகுவுக்கும் பகை மூண்டது. தியாகு, இந்திராணியிடம், நடந்த நிகழ்ச்சிகளுக்குத் தான் காரணம் எனவும், வேதகிரிக்கு உடந்தையாக இருந்து சிறைக்கு அவளுடைய கணவனை அனுப்பி வைக்கத் துணையாய் இருந்ததையும் ஒப்புக் கொண்டான். இந்திராணி தன்னை சி ஐ.டி. எனக் கூறி மாஜிஸ்ரேட்டை மடக்கியவள் வேதகிரியிடமே, அவனது பொய்மைச் செயல் களையும், போலி வாழ்க்கையையும் எடுத்துரைத்தாள். வேதகிரி இந்திராணியைச் சுட முயலவும், தியாகு அங்கு வந்து வேதகிரியைச் சுட்டு வீழ்த்தினான். இந்திராணியின் கணவன், அந்தமானில் எப்போதோ இறந்து போனான். ஜமீன்தார் திருநாவுக்கரசு முதலி யாரின் மாளிகையில் இந்திராணி அரசோச்சியதோடு அறப்பணி களிலும், பிற சமூகப் பணியிலுமாக ஈடுபட்டாள்.

இந்திராணி என்ற பெண்ணைச் சுற்றிக் கதை பின்னப் பட்டிருக் கிறது அக்கால நாவல் மரபுக்கு ஏற்ப, காரில் விபத்துக்குள்ளாதல், பணக்காரரால் காப்பாற்றப்படுதல், மாளிகை வாசம், மாறு வேடத்தில் துப்பறிதல், எதிர்பாராத திருப்பங்களைக் கதையில் திடீரென்று காட்டல், மடல் வழி உண்மை நிலை தெரிதல் முதலிய உத்திகள் நிகழ்ச்சியினூடே இடம் பெற்றுள்ளன. விறுவிறுப்பு ஏற்படும் வண்ணம் சுவையூட்டக் கூடிய வகையில் நாவல் உருவாக்கியதை அந்தக் காலத்தில் காணலாம். இதற்குத் துரைக்கண்ணனும் துணை போயிருப்பதை அவர் படைத்தளித்த நாவல்கள் வழியே காணமுடிகிறது. ஒரு திரைப்படத்திற்கான கதை முயற்சியையே துரைக்கண்ணன் கையாண்டுள்ளார் என்பதற்கு இந்நாவல் சான்றாகிறது. அக்காலத் திரைப்படம் ஒன்றின் காட்சிகள் போலவே, இதில் நிகழ்ச்சிகள் விரிகின்றன

## நாவல்களில் பெண்ணுலகம்

துரைக்கண்ணன் படைத்துள்ள கதைமாந்தர்களில் பெண்களே நினைவில் நிற்கக் கூடியவர்கள் பெண்களின் வாழ்க்கை அவலமே அவரது படைப்புகளில் மிகுதியும் காட்டப்படுகிறது. இவ்வகையில் பெண்களின் எழுத்தாளர் என்று கூறுமளவிற்கு அவர்கள் மீது பரிவும், இரக்கமும் கொண்டு எழுதியுள்ளார். வாழ்க்கைக் கடலில் சிக்கித் தவித்துச் சீரழியும் கதாநாயகிகள் பலரும், ஆடவர்களால் ஏமாற்றப் பட்டவர்களே! ஆடவரைக் காதலித்துத் தம் கற்பை இழந்து வாழ்க்கையை முடித்துக் கொள்ள நினைப்போர் அல்லது ஆடவரைத் தங்கள் காமத்திற்கு இரையாக்கிக் கொண்டு தவிப்போர் ஆகிய

இவ்விரு நிலைகளில் பெண்களின் பேதைமை வெவ்வேறு சூழ் நிலைகளால் காட்டப்படுகிறது கல்வி கற்ற பெண்களாயினும் காதல் வயப்பட்டு வாழ்க்கையை வெறுமையாக்கிக் கொள்வோரே துரைக்கண்ணன் படைத்த கதைமாந்தர்கள். மா. இராமலிங்கம் தமது நூலான 'புனை கதை வளத்'தில் நாரண துரைக்கண்ணன் படைத்துள்ள கதை மாந்தர்களை மதிப்பீடு செய்துள்ளார். அது பின்வருமாறு,

> நாரண.துரைக்கண்ணர் படைத்துக்காட்டும் கதை மாந்தர்கள் பெரும்பாலோர் வாழ்க்கையைக் கசப்புணர்ச்சி யோடு பார்க்கிறவர்களாகவும், மனமுறிவு கொண்டவர் களாகவும், உலகத்தை அடியோடு வெறுத்தொதுங்கித் தனித்திருந்து வாழ நினைப்பவர்களாகவும், நம்பிக்கை யற்றவர்களாகவும் உள்ளனர்.
>
> *(பக். 134)*

என்ற கருத்து ஏற்புடையதே நாரண துரைக்கண்ணன் பாத்திரங்களில் உணர்வுபட அமைந்தோர் பெண்களே! ஆண்களின் வஞ்சக வலைக்குள் அகப்பட்டு மனப் போராட்டங்களுக்கு உள்ளாவோரே மிகுதி விதி விலக்காக உள்ளவர்கள் ஓரிருவரே!

அவரது, பெரும்பான்மையான நாவல்களில் உலாவரும் பெண்கள் கிட்டத்தட்ட ஒரே உள்ளத்தவராக இருக்கின்றனர். வாழ்க்கை முடிவைத் தாங்களே உறுதி செய்யும் மனப்பான்மை யுடையவர்களானாலும், இறுதி இலக்கு என்ற ஒன்றில் நிலைப்பாடு இல்லாதிருக்கிறார்கள். மன உளைச்சலுக்கு ஆளாகி ஏதாவதொன்றில் தஞ்சம் புகுவோராக உள்ளனர் பெண் மாந்தர்கள் மிகச் சிலரே ஒழுங்கான வாழ்க்கை முறைக்கு ஆட்பட்டுள்ளனர். துரைக்கண்ணன் படைத்துள்ள பெண்மாந்தர்களை ஆராயும்போது இது உறுதியாகின்றது.

காமாட்சி (யா.ஏ.பெ.பி ) காவிரி ஆற்றில் பாய்ந்து உயிர்துறக்கிறாள்; பூங்கோதை (ந.நா.) தந்தை வீட்டில் தனித்து வாழ்கிறாள். இந்திராணி (பு.பெ.) அறப்பணியிலும், சமூகப் பணியிலும் ஈடுபடுகிறாள். சௌந்திரவல்லி (கா? கா?) காவிரி ஆற்றில் குதித்து உயிர்விடுகிறாள். புவனசுந்தரி (இ.தி.பா) காட்டுக்குச் சென்று விடுகிறாள். கோகிலா (கோ) அநாதை விடுதியில் தஞ்சம் புகுகிறாள் இவர்கள் அனைவருமே மன உளைச்சலுக்கு ஆளானவர்களே!

காதலனா! காதகனா? முன்னுரையில் அந்நூலைப் பெண்களுக்காக - குறிப்பாகத் தமிழ்நாட்டுப் பெண்களுக்குக் காணிக்கையாக அளிக்கும் துரைக்கண்ணன்,

> வருங்காலச் சந்ததிகளைப் பயக்கும் தாய்மார்கள்களாக வரப்போகும் இளமங்கையரை நல்லொழுக்கத்திலிருந்து வழுவாமல் செய்துவிட்டால், தமிழ்ச் சமுதாயத்தை இவ்வுலகில் விளங்கும்படிச் செய்துவிடலாம். என்ற எண்ணத்துடனேயே இளம்பெண்களைக் கதைப் பாத்திரங்களாக வைத்தே என் கதைகளை அமைத்திருக்கிறேன்

என்று கூறியதோடு, ஆணின் வஞ்சக வலையில் விழாது விழிப்புணர்ச்சியோடு இருக்குமாறும் பெண்களிடத்துக் கேட்டுக் கொண்டுள்ளார்

சேக்ஸ்பியர் படைத்த நாடகங்களில் பார்வை செலுத்திய, ஜான் ரஸ்கின், சேக்ஸ்பியர் படைத்துள்ள கதைமாந்தர்களில் பெண்களே ஆட்பட அமைந்துள்ளனர் என்பர் இதேபோன்று துரைக்கண்ணன் படைப்புகளிலும் பெண்களே ஆட்பட அமைந்து கதையில் ஆதிக்கம் செலுத்துகின்றனர் தாமஸ் ஹார்டியின் நாவல்களில் பெண்களின் ஆளுமை மிகுதி; அவர்கள் படும் சோதனைகளும் மிகுதி அத்தகைய உளங்கொண்டோரே தாமஸ் ஹார்டி படைத்தளித்த பெண்கள்! அவரே போன்று பெண்களைச் சுற்றியே கதையமைப்புக் களனை உருவாக்கிப் படைத்துள்ளார் துரைக்கண்ணன்.

பெண்கள் படைப்பில், உயிரோவியத்தில் வரும் கற்பகமே தனித்து நிற்பவள் அப்படைப்பின் வெற்றிக்கும் அவளே காரணம். காதலித்தவனை உள்ளத்தில் போற்றி, வேறொருவனைக் கைப்பிடித்த நிலையிலும் கூட, வெளியுலகுக்குக் கணவன் மனைவியாகவும், அக வாழ்க்கையில் உடலுறவு இன்றி வாழ்வதெனவும் உறுதியோடு முடிவெடுக்கும் அவள் மனத்திண்மை ஏனைய பெண் பாத்திரங்களைக் காட்டிலும் வித்தியாசமானவளாகக் காட்டுகிறது.

> கற்பகம், தமிழ்நாவல் உலகில் ஓர் அற்புத சிருட்டி லட்சியமும் பிரத்யட்சமும் முரண்படா வகையில் திரல்படச் சேர்த்து வரையப்பட்ட உயிரோவியம் அவள்! பழமையின் சிறப்பும் புதுமையின் உத்வேகமும் அவளிடம் ஒரு சேர விளங்குகின்றன... தமிழ் மண்ணில் மணம் வீசும் கதைப்போக்கு, இலக்கிய வளம் திரம்பிய தமிழ்நடை, உயிர்த்துடிப்புள்ள பாத்திரப் படைப்பு லட்சிய நோக்கு ஆகியவை உயிரோவியம் என்ற நாவலைத் தமிழின் தலைசிறந்த நாவல்களில் ஒன்றாகக் காட்டுகிறது.

எனத் தென்னகம் (14.8.1959) இதழில் பி.சி கணேசன் திறனாய்ந்து எழுதியது உண்மையான பாராட்டாகும்.

## கதை பிறந்த கதை

எழுத்தாளர்களுக்குக் கதை எழுதும்படியான சூழலை உலகில் காணும் காட்சிகளே தருகின்றன 'இந்த உலகமே கதை சொல்லும் நூலகம்' என்பர். உலகில் காணும் ஒவ்வொன்றும் கதைக்குரிய பொருளாகின்றது. காண்பன, கேட்பன, உணர்வன என்று யாவுமே எழுத்துடைமையாளனை உணர்ச்சி பெற வைக்கின்றன. அவற்றைக் கூர்ந்து கவனித்துக் கதைக்குரிய பொருளாக ஆக்குவதில் கை தேர்ந்தவனாவது எழுத்துக் கலைஞனின் திறனெனலாம்.

துரைக்கண்ணனின் படைப்புகள் சில அவரது சொந்த வாழ்க்கையின் வெளிப்பாடுகள் ஆகும்; ஏனையன அவர் கேட்டறிந்ததும், கண்ட காட்சிகளுமாகும் அவற்றை மறவாமல் உள்ளத்துள் ஏற்றி உருவாக்கியவை அவரது படைப்புகள்.

'யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்' என்ற நாவல் உருவாகிய சூழலைத் தம் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார் துரைக்கண்ணன். மங்கையர்க்கரசி என்ற பெண்மணி இளமையில் விதவைக் கோலம் பூண்டவள்; அப்பெண்ணைத் தம் உடன் பிறப்பாகக் கருதிய ஆசிரியர், அவளது கைம்மைக் கோலத்தைக் காணும்போதெல்லாம் உள்ளம் நைந்து, அத்தகைய சகோதரி போன்றோரின் வாழ்விற்கு விடிவு காட்டுதல் வேண்டும் என்ற பரிவை நாவலுள் பதித்துள்ளார். கதையில் காமாட்சி என்ற கற்பனைப் பெயரில் அமைந்தவள் உண்மை வாழ்வில் தாம் கண்ட மங்கையர்க்கரசி என்பதைச் சுட்டியுள்ளார் துரைக்கண்ணன்.

உயிரோவியம் அவரது சொந்த வாழ்க்கையின் எதிரொலி இராணி மேரிக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த தமிழறிஞர் ஒருவரின் மகளுக்குத் தமிழ்ப் பாடம் கற்பிக்க, துரைக்கண்ணன் நியமிக்கப்பட்டார் அப்பெண்மணியிடம் ஏற்பட்ட நட்பு காதலாகியபோது பின்னாளில் கதைக்குரிய களமாகவும் ஆனது. ஆயின் நெருங்கிப் பழகினாலும் நேயமும், நனிநாகரிகமும் போற்றி ஒழுகி வந்தார். அப்பெண்மணியின் குடும்பத்தில் தாமும் ஒருவராக இருந்து, அம்மாணவியின் திருமணத்திலும் கலந்து கொண்டார் இந்த மலரும் நினைவுகளின் மன அசைவினை உள்ளத்தால் மறைந்துவிட முடியாதபடி 'உயிரோவியமாக'த் தீட்டினார்.

சாரதா என்ற சிறுகதை, துரைக்கண்ணன் தேக்கடியில் தம் நண்பர்களோடு சென்றிருந்த சமயம் உதித்த கதையாகும். நாள் தோறும் தாம் நடந்து செல்லும் பேட்டை ஒன்றில், வசித்து வந்த உயர்சாதியைச் சார்ந்த பெண் ஒருத்தி மணமாகாமல் இருந்தாள்.

அப்பெண்ணின் திருமணம் தடைபடுவதற்கு அவளுடைய தந்தையின் ஏழ்மையும் பொருளாதார நலிவுமே காரணங்கள் அவள் ஒருநாள் மதம் மாறிக் கிறித்தவ இளைஞனை மணம் புரிந்து கொண்டாள் இச்செய்தியைத் துரைக்கண்ணன் சிறு கதையாகப் புனைந்தார் இச்சிறுகதையே பின்னாளில் தரங்கிணி என்ற நாவலாக விரிந்தது.

புதுமைப்பெண் என்ற நாவல் ஒரு தேவைக்காக எழுதப்பட்ட கதையாகும். கே பி. சுந்தராம்பாள் தமிழ்த்திரை உலகில் அன்று கோலோச்சியிருந்த காலம் நடிகர் கிட்டப்பாவைத் தவிர வேறு ஆடவருடன் காதலியாகவோ மனைவியாகவோ நடிக்கமாட்டேன் என்று சூளுரையை அந்நடிகை எடுத்ததன் காரணமாக, அவளுக்காக எழுதப்பட்டது இக்கதை. துரைக்கண்ணன், கே பி சுந்தராம்பாளுக்கான வேடத்தை மனத்தில் வைத்து உருவாக்கப்பட்டதாகும். ஆயின் இக்கதை திரைப்படமாகவில்லை

'என் கதைகளின் கதைகள்' என எழுத்தாளர்கள் சுட்டிக் காட்டும்போது, அவர்களின் கதைக்கான கருவும், நிகழ்ச்சிகளும் பெரும்பாலும் சமுதாயத்திலிருந்து கிடைப்பனவாகவே இருக்கும் அவர்கள் தாம் கண்டும், கேட்டும், உணர்ந்த செய்திகளையும், நிகழ்ச்சிகளையும் உருவாக்கிக் கதையாக உலவவிடும்போது, உண்மைச் செய்திகளுக்குக் கற்பனை முலாம் பூசுவதும், கற்பனையை மெய்யே போலக் காட்டுவதும் இயல்பேயாகும். 'ஒரு விதவைப் பெண்ணின் சுயசரிதை' என யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன் கதையைச் சுட்டுவதும், ஏனைய சில கதைகளை உண்மைக்கதைகள் எனக் கோடிட்டுக் காட்டுவதும் அன்றைய நாவல் உலகில் ஒரு விளம்பர உத்தியாக இருந்திருப்பதை இங்கு எண்ணுவதும் பொருந்தும்.

## படைப்புத் தளம்

துரைக்கண்ணனின் படைப்புலகம் மரபு வழியிலான தன்மையுடையது; அவர் படைத்தளித்த இலக்கிய வகைகள் வழியாக, அவரது படைப்பாண்மையையும் ஆளுமையையும் அறியலாம் அவர் காந்திய நெறியினராகத் தம்மைக் கருதி, அந்நெறியில் உறுதி பூண்டவராய் இருந்ததால் காந்திய உள்ளடக்கங்களைத் தமது படைப்புகளில் உணர்த்தினார் தம்மைப் பற்றிய கருத்தியல் நிலையை முன்மொழியும் அவர்,

> *சமூகத்தில் யான் காணும் குறைபாடுகளை எடுத்துக் காட்டவும், அச்சீர்கேடுகளைப் போக்கிச் செய்ய*

> விழையும் சீர்திருத்தங்களைப் புகுத்தவும், நான் கதைகளை எனக்குரிய கருவியாக்கிக் கொண்டிருக்கிறேன். வாழ்க்கையின் உண்மைகளினின்றும் விலகிப்போய் வெறுங் கற்பனையில் மூழ்கி ஒரு கதையை எழுதுவதை விட, சமூகச் சூழல் காலதேச வர்த்தமானங்களை அனுசரித்து, தான் எழுத விரும்பும் நவீனங்களை உருக் கொள்ளச்செய்வது சிறப்புடைத்தாக்கும் என்பதே என்னுடைய எண்ணம்.

என இவ்வாறு கூறியிருப்பது, சமூகம் சார்ந்த சூழலை மையப்படுத்தி, சமூகத்தில் காணப்படும் சீர்கேடுகளைக் களைய எழுத்தைக் கருவியாகக் கொண்டிருந்ததை உணர்த்தும். 'காலத்திற்கேற்ப நூல் இயற்றல் வேண்டும்' என்ற கூற்றிற்கு ஏற்ப, துரைக்கண்ணன் இலக்கிய வகைகளைத் தெரிவு செய்து, கதைகளில் சமூகத்தை எதிரொலிக்கச் செய்தார். கதைகளில் உண்மையை உணர்த்த வேண்டும் என எண்ணினார் அவரது கதைகளில் உருவமும் கட்டுக்கோப்பும் நெகிழந்து காணப்படுகின்றன. நடப்பியல் நெறியோடு கதைகளின் இயங்குதளம் ஓரளவே ஒத்துப் போகிறது தொடக்க காலக் கதைகள் இவ்வாறமைந்தனவே. ஒரு சுழற்சி வட்டத்துக் குள்ளேயே அவரது கதைகளும், பாத்திர வார்ப்பும் இயங்கி வருகின்றன.

எழுத்தாளன், தான் படைக்கும் காலகட்டம் எத்தகையது என்று உணர்ந்து அதற்கேற்றவாறு கதைகளைப்படைக்க வேண்டும் தான் வாழும் காலச்சூழ்நிலையை ஆழமாகப் பதிவாக்க விரும்பும் படைப்பாளன், சமூக உணர்வு மிக்கவனாக இருந்து, சமூகத்திற்குரிய பங்களிப்பைச் செய்யவேண்டும். இவ்வகையில் துரைக்கண்ணன் தாம் எழுதிய கால கட்டத்தை உணர்ந்தும், மாறுதலான கால கட்டத்திற்குட்பட்டும் எழுதி வந்தவர். எனினும் மரபின் ஆளுமையையே அவர்பால் காணலாம். பேராசிரியர் மா இராமலிங்கம்,

> தமிழ் நாவல் வரலாற்றில் ஓர் இடைப்பட்ட காலத்தின் முழுமொத்தமான ஒற்றைப் பிரிதிநிதியாக விளங்குகிறார்...

எனத் துரைக்கண்ணனை மதிப்பிட்டிருப்பது உண்மையே. பிற்காலங்களில் கல்கி கால கட்டம், அகிலன் கால கட்டம், ஜெயகாந்தன் காலகட்டம் என்று திறனாய்வாளர்கள் கருதுவது போன்று துரைக்கண்ணனுக்கும் ஒரு கால கட்டம் இருந்திருக்க வாய்ப்புண்டு. ஆனால் அவர் கால கட்டத்தில் அவ்வாறு அழைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. முப்பதுகளின் மத்தியிலிருந்து

எழுதத் தொடங்கி, இலக்கியத்தின் பல்வேறு வகைகளில் அயராது தம்மை ஈடுபடுத்திக் கொண்ட அவரது தளமும் களமும் அகன்றவை. எனினும், முப்பதுகளில் அவர்தான் 'முதல்தரமான கதாசிரியர்' என்ற மா. இராமலிங்கத்தின் கணிப்பு, துரைக்கண்ணன் கால கட்டத்தை எண்ணச் செய்கிறது. இக்கருத்துக் கணிப்பு உண்மையே என்பது போலவும், அவரது சில வெற்றிப் படைப்புகள் அவரை அவ்வாறு சுட்டியது சரியே என்பதுபோலவும் அமைந்துள்ளன. யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன், உயிரோவியம், சீமான் சுயநலம், நடுத்தெரு நாராயணன், தியாகத் தழும்பு, தரங்கிணி ஆகியவை அவரது இருபத்தோரு நாவல்களில் சிறந்த படைப்புகளாகக் கருதத்தக்கன.

## சிறுகதைகள்

துரைக்கண்ணன் சிறுகதையாசிரியராக உருவாக ஆனந்த போதினி, பிரசண்ட விகடன் ஆகிய இதழ்கள் காரணமாயமைந்தன. சிறுகதைக் கலையை நன்கறிந்தவர் என்பதனை அவரது சில சிறுகதைகள் உணர்த்தும்.

கதைகளில் பொதுவாகச் சமூக சீர்திருத்தத்தை விரும்பும் அவர், பெண்களின் அவல வாழ்வைக் காட்டுவதில் நாட்டங் கொண்டிருந்தார் அவர் காண விழைந்த சமூகம், நல்ல நோக்கங் களையும், சீரிய எண்ணங்களையும் கொண்டது. பெரும்பான்மை யான சிறுகதைகளில் நடுத்தர வர்க்கஞ் சார்ந்த உணர்வுகளும் அவற்றின் பிரதிபலிப்புகளுமே காணப்படுகின்றன. மனிதநேய உறவு களில், உண்மை அன்புக்கு ஏங்கும் தவிப்பும், காதலால் ஏமாற்றப் படும் சூழ்நிலையும், கலை உணர்வில் ஈடுபாடும், தனிமனிதனால் சமூகம் அடையும் கேடும், கூட்டுக் குடும்பத்தில் காணப்படும் அன்பற்ற போக்கும், மாறி வரும் உலகுக்கு ஏற்ப வாழ நினைக்கும் இயல்பும் துரைக்கண்ணன் காட்டும் சிறுகதை உலகமாகும்.

பழைய காலத்திய போக்கிலேயே துரைக்கண்ணன் கதைகளை எழுதி வந்துள்ளார். சிறுகதைகளின் சில நிகழ்ச்சிகள் நாவலாக விரித்துரைக்கக் கூடியன; சிலசமயம் சிறுகதை என்ற உணர்வைக் கடந்து குறுநாவலாக அமைக்கக் கூடிய அளவிற்குச் சென்று விடுகின்றன. ஒருமை உணர்வு சிறுகதையில் மிகவும் போற்றப்பட வேண்டிய உத்தியாகும் பழைய காலத்திய சிறுகதைகளில், கதையின் பக்க எல்லை மிக விரிந்து காணப்படுவதால், அத்தகைய ஒருமை கடைபிடிக்கப்பட்டதில்லை. ஆசிரியரே நம்மை அழைத்துக் கதை கூறுவது அக்கால மரபு எனலாம் இத்தகைய போக்கிலும் இவர் விதிவிலக்கல்லர்

பெரும்பாலும், பெண்ணின் தடுமாற்ற உணர்வு, ஆடவர்க்கு மனத்தை ஒப்படைத்துவிட்டு ஏங்கும் ஏமாறும் உளப்போக்கு, ஆடவர்கள் உலகம் பழிக்கப்படுதல், கணவனின் ஐயம், ஆகியவை இவரது சிறுகதைகளிலும், நாவல்களிலும் பரவலாகக் காணப்படும் பொதுப் பண்பாகும் இவற்றைத் தக்க பின்னணியிலும் நிகழ்ச்சியிலும் தருவது இவரது கதைகளின் பொதுவான களமாக உள்ளது. சபலம், இராஜகுமாரி, கூடப்பிறந்தவள், வேனில் வந்தது, தாயின் சிலை, சந்தேகம், முதலிய சிறுகதைகளில் சிறுசிறு நிகழ்ச்சிகள் வழியேயும், கதைகளின் பாடுபொருள் வழியேயும் மேலே கூறிய கருத்துகள் உணரக் கிடக்கின்றன.

கதைகள், சமூக நோக்கத்திற்கான அடித்தளம் என்ற உணர்வு காரணமாக அன்றைய எழுத்தாளர்கள் வாழ்க்கைப் பிரச்சனையை மையமாகக் கொண்டு எழுதி வந்தனர் வெறும் பொழுது போக்குக் கூறுகள் கொண்ட கதைகள் எழுதி வந்தோர் பலராக இருந்தனர். படிப்போருக்குச் சுவை யூட்டுவதிலும், எப்படிப்பட்ட காதல் புனைவுகளைப் படிப்போர் விரும்புவார்களோ அதற்கு ஏற்றவாறு கதையை உருவாக்குவதிலும் தேர்ந்திருந்தனர். வெகுசன இதழ்களில் இன்று எதிர்பார்க்கப்படுகின்ற படிப்பாளிகளின் சுவையைப் போலவே, அன்றைய காலத்தில் வெளிவந்த வெகுசன இதழ்கள் சில, பொழுது போக்கு என்ற பெயரில் சுவையான செய்திகளைக் கருப்பொருளாகக் கொண்டிருந்தன. பயனுள்ள வற்றையும், படிப்பினைகளைத் தரும் நோக்கையும் கதைகளில் தரவேண்டும் என்ற சிந்தனை அன்றைய காலகட்ட எழுத்தாளர்களில் வெகு சிலரிடமே இருந்துள்ளது. அவர்களில் துரைக்கண்ணனும் ஒருவராவார். தாம் படைக்கும் கதைகள் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற விருப்பத்தைக் கொண்டிருந்தார்.

சாலை இளந்திரையன் தமது நூலான 'சிறுகதைச் செல்வம்' என்ற நூலில் துரைக்கண்ணனின் சிறுகதைகளைப் பற்றிச் சுட்டிக்காட்டும் செய்தி இங்கு எடுத்துக்காட்டத் தக்கது.

> *பிறரெல்லாம் காதல் செய்வதையும் அகஸ்மாத்தாகத் திடீர்க் கல்யாணங்கள் ஏற்படுவதையுமே கருப்பொருள் களாகக் கொண்டு ஆடம்பரப் பொழுதுபோக்குக் கதைகள் புனைந்து கொண்டிருந்த காலத்திலேயே, சிந்தனையைத் தட்டி எழுப்பும் பிரச்சினைக் கதைகள் படைத்தவர் 'ஜீவா'. சமூகத்தின் மேற்போக்கான சலசலப்புகளை ஒதுக்கிவிட்டு மனத்தின் சலனத்தையும், அதன் இயல்புகளையும் விளக்கி உயர்ந்த வழிகாட்டிக் கதைகள் அமைத்த பெருமை*

*யுடைய சிலரில் 'ஜீவா'வுக்கும் ஓர் இடம் உண்டு.*

*(பக். 88)*

என்ற கருத்து, துரைக்கண்ணன் எழுதிவந்த கால கட்டத்தைப் பார்க்க உண்மையாக இருக்கக் காணலாம். அன்றைய கால கட்டத்தில் இதழ் களின் கட்டளைக்கும், வாசகர்களின் எதிர்பார்ப்பிற்கும் ஒத்துப் போனோரிடையே துரைக்கண்ணன் சற்றே மாறுபட்டவராகத்தான் இருந்திருக்க வேண்டும் என்பதற்குச் சில சிறுகதைகள் சான்றளிக் கின்றன.

துரைக்கண்ணன் கதைகள் ஆனந்தபோதினி, பிரசண்ட விகடன் ஆகிய இதழ்களில் வெளிவந்தபோதிலும், இதழுக்கான படைப்பு என்று கருதி வெறும் பொழுதுபோக்காக எழுதாமல், குறிக்கோளை முன்னிருத்தி எழுதினார். எனவே, தமக்கென ஒரு தனிப் பாணியை இதழ்களில் கடைபிடித்து வந்துள்ளதாகத் தெரிகிறது. சமூகத்தில் காணும் பிரச்சினைகளை முன் வைத்து எழுதுவதை இவர் முனைப்பாகக் கொண்டிருந்தார் எனலாம்.

'முத்தம் படா அதரம்' என்ற கதை, மிருநாளினி என்கின்ற தாசி குலத்தைச் சார்ந்த பாடகியாகவும் நடிகையாகவும் இருப்பவளைப் பற்றிய கதையாகும். திருமணம் செய்து கொள்ளாமல் கன்னியாக இருந்த அவளைப் பற்றித் தவறாகப் பேசினாலும் அவள் 'ஆடவரைத் தீண்டாத ஆரணங்காகவே' வாழ்ந்தாள். சிவகுமாரன் என்பவனைத் தனக்கு உதவியாளனாக அமர்த்தினாள். இவ்விருவரைப் பற்றிய வதந்தி ஊராரால் பேசப்பட்டாலும் அதை அவள் பொருட் படுத்தவில்லை தம்மை யாரும் நெருங்க முடியாத அளவிற்கு, நெருப்பாகத் தான் இருந்தாள். கதையில் இடம்பெறும் கதை சொல்லி, ஒருநாள் அவளைப் பேட்டிக் காணச் சென்றான். அவள் ஆடவர் குணத்தின் இழிவு பற்றியும், அவர்கள் காமப் பேய்களாக இருப்பது பற்றியும் கூறியதோடு, தான் தாசிக் குலத்தில் பிறந்த ஒரே காரணத்துக்காக விபச்சாரத் தொழிலை மேற்கொள்ள வேண்டும் என்று நியதி இருக்கிறதா? என்று கதை சொல்லியிடம் பேசினாள். தான் தாசி குலத்தில் பிறந்தாலும் தாய்வழியில் சென்று விபச்சாரச் சேற்றில் அழுந்தச் சிறிதும் விரும்பவில்லை எனத் தன் குலவழி முறையையும் அவனிடம் எடுத்துக் கூறினாள். தன்னைப் பற்றியும், தன் குடும்பத்தைப் பற்றியுமான சுமைகளை அவனிடம் இறக்கி வைத்த மிருநாளினி, முதன் முதலாகத் தன் மனக்குறையைக் கேட்ட கதை சொல்லியிடம் மயங்கினாள். அவனிடத்து உள்ளத்தைப் பறி கொடுத்தாள் தான் குழந்தையாக இருந்தபோதே தம்மை யாரும் எடுத்து முத்தம் கொடுக்கக் கூட இடம்கொடாத அவள், கதை

சொல்லியின் கரம் பிடித்ததோடு, தன் அதரத்தில் முதல் முத்தம் பதிக்க அனுமதித்தாள்.

இக்கதை 1942 ஆம் ஆண்டு பிரசண்ட விகடனில் வெளி வந்த கதை. இக்கதை வெளிவந்தபோது, வாசகர் மட்டும் அல்லாது, எழுத்தாளர்களையும் வெகுவாகக் கவர்ந்தது இக்கதையின் போக்கையும், கருப்பொருளையும் அப்படியே கையாண்ட எழுத்தாளர் சிலர், கதை பண்ணலாயினர் என்று இந்நூலின் (முத்தம் படா அதரம்) பதிப்புரை தெரிவிக்கிறது தாசிரமணி என்ற இவரது நாவலின் கருப்பொருள் இக்கதை தொடர்பானதுதான் தாசிகுலம் என்ற ஒன்றில்லை, ஆடவர்களால் ஏற்படுத்தப்பட்டதே என்பது இவ்விரு கதைகளின் கதாநாயகிகள் கருத்து.

தாசி ஒழிப்புச் சட்டம் பற்றிய மசோதா நிறைவேறியதன் விளைவாக, அக்குலத்தோருக்குச் சமூக அங்கீகாரம் தரப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் எழுதப்பட்ட கதையே 'முத்தம் படா அதரம்'.

'இராஜகுமாரி' என்னும் கதையில் இடம் பெறும் இராஜம், பிச்சை எடுத்து வாழ்வை நடத்துபவள் அவளிடம் பரிவு சாட்டி இல்லத்திற்கு அழைத்து வந்தான் சதானந்தன்; சாலப் பரிந்து அன்பு காட்டியதோடு, தம் குடும்பத்துள் ஒருத்தியாகக் கருதினான்; அவள் கடந்த காலக் கதையைச் சதானந்தத்திடம் கூறினாள், காதலனோடு ரங்கூனுக்கு ஓடிப்போனதையும், காதலன் தன் மிருக இச்சையைத் தீர்த்துக் கொள்ளவே காதல் நாடகமாடியதையும் கூறினாள்; தன்னை மாசுபடுத்த எண்ணியவனிடமிருந்து தப்பித்து வந்தது, கையில் காசு ஏதும் இல்லா நிலையில் பிச்சை எடுக்க நேர்ந்தது முதலிய நிகழ்ச்சிகளைக் கூறினாள். சதானந்தத்திற்கும், அவன் குடும்பத்திற்கும்தான் சுமையாக இருக்க விரும்பவில்லை என்று கூறி விடைபெறுமுன், தன்னை சதானந்தன் ஏற்றுக் கொள்வானா என்று அவனிடமே கேட்க, அறியாமையால் அவதியுற்று அல்லல் அடைந்த அவள், சிறிதும் களங்கம் அற்றவள் என்பதுணர்ந்து அவளை ஏற்றுக் கொண்டான்.

ஆடவரால் வஞ்சிக்கப்படும் பெண்களுக்கு ஆதரவு தர வேண்டும் என்ற காந்தியின் சிந்தனை வெளிப்பாட்டை இக்கதை உணர்த்துகிறது சபல உணர்வு ஆணுக்கு மட்டுமன்று; பெண்ணுக்கும் உண்டு என்பதை இரு வேறுபட்ட கோணங்களில் சிந்தித்துள்ளார் துரைக்கண்ணன். சபலம், வேனில் வந்தது ஆகிய இரு கதைகளும் இத்தகையன.

மைதிலி, திருமணமாகிச் சில குழந்தைகளைப் பெற்றவள்; ஒரு சமயம், குளத்தில் வழுக்கி விழுந்த தன்னைக் காப்பாற்றிய சௌரி ராஜன் என்பவன் மீது அறியாமல் மனம் செல்கிறது. அவனைக் கண்டபோதெல்லாம், ஏதோ ஓர் உள்ளுணர்வு மேலிட, அவன் கூறியபடி அவனைச் சந்திக்கவும் சென்றாள். அவனுடைய கீழ்மையான உணர்வுகளுக்கு அவள் இடந்தரவில்லை. எனினும், அவ்வுணர்வு நீறு பூத்த நெருப்பாக அவளிடத்து உறங்கிச் செறிந்து கிடந்தது ''வாழ்க்கையிலும் வழுக்கிவிடாதிருக்கத் தன்னைக் காப்பாற்ற வேண்டும்'', என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டு தன் மனத்தில் இதுநாள்வரை அழுந்தியிருந்த பாரத்தை இறக்கி வைத்தாள். ஒருமாத காலமாக மனத்தைப் பேயாய் ஆட்டி அலைத்து வந்த விஷயத்தில் வெற்றி கொண்டாள்

இது, திருமணமாகி நான்கு குழந்தைகள் பெற்றவளிடம் காணப்பட்ட சபலம். சௌரிராஜன் தன்னை இரு கரங்களால் தூக்கிக் காப்பாற்றியபோது, அவன் கரங்கள் பட்டதால் அவளது மேனிச் சிலிர்ப்பின் உணர்வலைகள் சபலத்தை உண்டாக்கின. திருமணமாகி நான்கு குழந்தைகளைப் பெற்ற பிறகும், அவளிடத்துச் செறிந்த உணர்ச்சி மெல்லக் கனன்றாலும், அவளிடம் காணப்படும் மனப்பக்குவம் அவளை வெற்றி கொள்ள வைக்கிறது.

'வேனில் வந்தது' என்ற கதையில் வரும், வள்ளியம்மை மிகச் சிறிய வயதிலேயே விதவையானவள்; கலியாண சுந்தரத்தை மறுமணம் செய்து கொள்ளலாம் என்று எல்லோரும் முடி வெடுத்தாலும், அவள் அதற்குத் தடை இட்டாள் ஆனால், அவளால் தன் காம உணர்வுக்குத் தடைபோட இயலவில்லை. அவன் தனிமையில் இருந்தபோது, அவனை 'ஆணாள' நினைத்தாள். இளவயது விதவை என்றறிந்தபோது, அவள் மீது அவனுக்கு இரக்கமே தோன்றியது. மறுமணத்திற்குத் தடை சொல்லாமல் இருந்திருந்தால் பரவாயில்லை; அவனோ இப்போது வள்ளியம்மை யின் தமக்கை கணவன் பொதுவுடைமை இயக்கத்தில் தீவிரமாக இருந்த கலியாணசுந்தரம், வள்ளியம்மைக்கு அறிவுரை கூறி அவளது உணர்வுகளை அடக்கக் கோரினான். வள்ளியம்மை பிழையை உணர்ந்து பாவ மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள்.

வள்ளியம்மையின் உணர்ச்சி, 'சபலம்' கதையில் வரும் மைதிலியினின்றும் வேறுபட்டது இருவரின் உணர்ச்சிகள் பொதுவாக இருப்பினும், சூழ்நிலை வேறுபட்டதாகும். ஒருத்தி, திருமணமான மாகிக் குழந்தைகளுக்குத் தாயாகிய நிலையில் உணர்ச்சிக்கு அடிமையாகிய சூழல்; இன்னொருத்திக்கு ஆணின் உறவையே

அறியாத சூழல். முன்னவளின் உணர்வு, மனசாட்சிக்கு இடம் தரும்படியான நிலை. பின்னவளின் மனஉணர்வு ஆணின் தனிமையை ஆட்கொள்ள அவாவும் உடல் தவிப்பு; உணர்வு நாளங்களின் கட்டுப்படாத இளமை வேகம்; அது ஆற்ற அரிது! அடக்க அரிது!! ஆயின், இருவருமே தம் பிழையுணர்ந்து தம்மைக் கட்டுப் படுத்திக் கொள்கிறார்கள். முன்னவள் பிழை உணர்கிறாள்; பின்னவள் பிழை உணர்த்தப்படுகிறாள். இவ்வாறு இருவரின் அடிமன உணர்ச்சிகளை அலைவுபடுத்திய சூழ்நிலையை உளவியலாகக் காட்ட முயன்றுள்ளார் துரைக்கண்ணன்.

'மலரா மொட்டு',என்னும் கதையிலும் உளவியல் பாங்கான போக்கைக் காணலாம் பருவத்திற்கு வராத ஒருத்தியிடம் உள்ளத்தைப் பறி கொடுத்துவிட்டு, அவளது காதலுக்காக ஏங்குகின்ற இளைஞன் பற்றிய கதை. பெண்ணின் உணர்ச்சியற்ற இயல்பும், ஆணின் உணர்ச்சிக் கொந்தளிப்பும் உளவியல் சூழ்நிலையில் காட்டப்படுகின்றன.

'சந்தேகம்' என்ற பெயரில் இருகதைகள் அமைந்துள்ளன மறுமணம் செய்து கொண்ட கிழவர், தாம் மணந்த இளம்பெண் பற்றிய எண்ணத்தில் தன்னம்பிக்கை யற்றுச் சந்தேகப்படுவதைக் காட்டுகிறது. இதே தலைப்பில் அமைந்த இன்னொரு கதை, மனைவி மீது ஐயங்கொள்ளும் கணவனைப் பற்றியது.

ஒரு மணியக்காரர் வீட்டில் யாரோ தீ வைக்கப்போய் வைக்கோல் போர் எரிந்தது. மணியக்காரர் கள்ளச் சந்தையில் கொள்ளை இலாபம் சம்பாதிக்கும் சமூக விரோதி. தீ வைத்தது கம்யூனிஸ்டு வேலையாகத்தான் இருக்கும் என்றனர். வேடிக்கை பார்க்க வந்தவர்கள் அதோ ஓடுகிறான் என்று பொதுவாகக் கூட்டத்தில் கூற, போலீஸ் தாமோதரனைத் துரத்தியது துரத்தப்பட்ட அவன் தற்செயலாக வேடிக்கை பார்க்க வந்தவன். அவனையே போலீஸ் விடாது துரத்தவும், ஒரு வீட்டினுள் தஞ்சம் புகுந்தான். கணவன் வீட்டினுள் உறங்கிய சூழ்நிலையில் அவனுக்கு அடைக்கலம் தந்தாள் அஞ்சுகம். கணவனோ துரத்தப்பட்டு ஓடிவந்து தஞ்சம் புகுந்த தாமோதரனை அஞ்சுகத்தின் கள்ளக் காதலனாகவே நினைத்தான். தாமோதரனோ தான் கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்தவன் என்றும், செய்யாத தவறுக்கு போலீஸ் தன்னைத் துரத்தியது என்றும் கூறி, விடியும்போது, அவ்வீட்டை விட்டு வெளியேறி விடுவதாகக் கூறி இருந்தான் ஆனால் கணவன் பார்வையிலோ அவன் கள்ளக் காதலன்! அஞ்சுகம் தன் கடமையிலும், குடும்ப அன்பிலும் தவறாதவள். அவள் மீது கணவன் சந்தேகப்

பட்டதோடு தகாத வார்த்தைகளையும் கூறிக் கண்டபடி அடித்துத் துன்புறுத்தினான். வீட்டை விட்டு வெளியேறிய தாமோதரன் சற்றுத் தொலைவில் 'ஐயோ, என்னும் குரல் கேட்டுத் தன்னால் ஒரு பெண் அநியாயமாக அடித்துக் கொல்லப் படுகிறாளே' என்று உள்ளம் நைந்தான் அஞ்சுகம் தேம்பி அழும் குரல் தாமோதரனின் காதுகளில் எதிரொலித்தது. கணவன்-மனைவி சந்தேகம் என்ற உணர்வு வட்டத்துக்குள் கதை சொல்லப்பட்டாலும் அதற்கான பின்னணியை அமைத்துக் கொண்டுள்ள கதைப்பின்னல் அருமை வாய்ந்தது. கதையின் வடிவ உணர்வும், கதைமாந்தரின் இயல்பும், உரையாடலும் நன்கமைந்த துரைகண்ணனின் சில கதைகளில் இதுவும் ஒன்று

இக்கதையைத் திறனாய்ந்த சாலை இளந்திரையன் இதனை ஒரு வெற்றிப்படைப்பாகவே கருதுகிறார்.

> *...தனி மனிதனின் பலவீனமாகக் காட்டி (கணவனின்) மனைவியின் பொறுமை தூய அன்பு ஆகியவற்றாலேயே தாம் கூற விரும்பும் கருத்தை அழுத்தமாக வற்புறுத்தி வெற்றி பெற்றுள்ளார்*
>
> *(சிறுகதைச் செல்வம் பக்.89)*

நிகழ்ச்சிப் பின்னணியிலும், உணர்வு மிக்க உரை யாடலிலும், தனக்கு அடைக்கலம் கொடுத்தவள் படும் துன்பத்தை உணரும் மானிட நேயப் பரிவிலும் இக்கதை நிற்கிறது; நிலைக்கிறது எனலாம்.

இக்கதையைக் கூடுதலான பார்வையில் விளக்க முற்படும் மு பரமசிவம்,

> *சுதந்திரத்திற்குப் போராடிய தலைவர்களையும், தொண்டர் களையும் சுதந்திரத்திற்குப் பின்னர், கொலைக் காரர்கள்,கொள்ளைக் காரர்கள் என்று குற்றஞ்சாட்டி, உண்மையான தியாகிகளைக் களங்கப்படுத்தியது காந்தியம் அல்ல;காட்டுத் தர்பார் என்பதை இக்கதையின் மூலம் வெளிப்படுத்துகிறார் தேசியஉணர்வு மிக்க முற்போக்கு எழுத்தாளர் ஜீவா*
>
> (பக்.134)

என்ற கருத்து, 'சந்தேகம்' கதையில் இடம்பெறும் தாமோதரனின் உரத்த சிந்தனையை நோக்க உண்மையே எனலாம்

சமூக சீர்திருத்தம் பல கதைகளிலும் வெளிப்படுமாறு எழுதியுள்ள துரைக்கண்ணன், சமுதாயச் சீர்கேடுகளுக்குத் தனிமனிதன் காரணமன்று சமுதாயமே என்ற நோக்கிலும், சமூக, அரசியல், சமயம் ஆகிய துறைகளைத் தனிமனிதன் தனது தன்னலத்திற்காகக் கையகப் படுத்திக்கொண்டு போலியாக உலவுகிறான் என்ற பார்வை யிலுமாகக்

கதைப்பொருள்களை அமைத்துள்ளார். 'கொலு பொம்மை', 'வேதாந்த கேசரி', 'பிரதிவாதி பயங்கரம்' முதலிய கதைகளை இவ்வகைகளில் சேர்க்கலாம். இக்கதைகளில் சமுதாய சீர்திருத்தம் பேசுவோரே மக்களை நயவஞ்சகமாக ஏமாற்றுவதையும், பொருளாதாரச் சுரண்டலில் பணம் பறிப்பதையும் காணலாம் இத்தகு போக்கில் அமைந்த இன்னொரு கதை, 'இராவணாகாரம்' என்பதாகும். பெரிய புள்ளியாக இருந்து கொண்டு சமூகவிரோதச் செயலைச் செய்யும் முதலாளித்துவத்திற்கு எதிர்ப்பான குரல் இதில் கேட்கிறது காந்தியத் தொண்டர்கள் நடத்திய கள்ளுக்கடை மறியலை நிகழ்ச்சியாகக் கொண்ட இக்கதையில், பத்மநாபன், போலீஸ்காரராகிய ஆனந்தன் மீது கொள்ளும் பரிவு மானிட நேயத்திற்குத் தக்க எடுத்துக் காட்டாகும்.

கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்ட கும்பலைச் சின்ன முதலாளி யாகிய தம்பியப்பா துப்பாக்கியால் மிரட்டினான் துப்பாக்கி முனையில் ஒடுக்க எண்ணிய அவனை எதிர்த்தான் பத்மநாபன். தனது மார்பைத் திறந்து காட்டித் துணிவோடு நின்றான் தம்பியப்பாவை இரகசிய போலீஸான ஆனந்தன் வண்டியில் ஏற்றி அழைத்துச் சென்றான். பெரிய மனிதரின் பகைக்கு ஆளாக வேண்டாமே எனக் கருதிய போலீசுக் கூட்டத்திற்கிடையே ஆனந்தனின் அச்செய்கை, அதிர்ச்சியைத் தந்தாலும், அக்கூட்டம் ஒதுங்கிக் கொண்டது. காந்தியத் தொண்டனான பத்மநாபன், ஆனந்தனுக்குப் பெரிய புள்ளிகளால் ஆபத்து வந்துவிடக் கூடாதே என்று எண்ணினான்.

துரைக்கண்ணன் தம் கதைகளின் பின்னணி நிகழ்ச்சிகளுக்கு அன்றிருந்த அரசியல் போக்கைக்களமாக எடுத்துக் கொண்டதை அறியலாம் விடுதலைக் கால கட்ட உணர்ச்சிகளின் பதிவுகளையும், அதன் தொடர்பான பிற நிகழ்ச்சிகளையும் தாம் கூறவரும் கதை களுக்குப் பின்புலமாக்கிப் படைத்தமையை அறியலாம் இராவணா காரம், ஜீவனாம்ச வழக்கு, சந்தேகம், வேனில் வந்தது, முதலிய கதை களில் அரசியல் நிகழ்ச்சிகள், மேலெழுந்த வாரியான பின்னணியில் இணைந்து செல்கின்றன. காந்திய நெறியினரான துரைக்கண்ணன் முற்போக்குத் தளத்திலிருந்து கதைகளை இவ்வாறு படைத்துள்ளார். புனைவியல் பாங்கிலான கதைகளையும், நடப்பியல் போக்குடைய கதைகளையும் மரபு, புதுமை சார்ந்த கண்ணோட்டங்களோடு படைத் தளித்துள்ளார். முற்போக்கான நிகழ்ச்சிகளைக் கொண்ட கதைகளில் நடப்பியல் ஓரளவு கைக்கொடுத்துள்ளதை மறுக்க இயலாது

தனிமனித உணர்ச்சி வழி, கலை நயம்மிக்க சிறுகதைகளை வடிவ உணர்வோடும், மனங்கொள்ளத் தக்க வகையிலுமாகப்

படைத்துள்ளார். பிடில்நாத பிரம்மம், தாயின் சிலை முதலிய கதைகள் கலை நேர்த்தியோடு அமைந்துள்ளன. இவை இரண்டிலுமே கலைஞர்கள் இடம் பெறுகிறார்கள் பிடில் நாத பிரம்மத்தில் பிடில் கலைஞர் ஒருவரின் வாழ்க்கை காட்டப்படுகிறது தாயின் சிலை ஒரு சிற்பியின் படைப்புலகம் பற்றியது. இவ்விரண்டுமே கதை ஒருமை கெடாத வகையில் அமைந்த அழகிய சொல்லோவியங்களாகும்.

'பிடில் நாத பிரம்மம்', மிகச் சிறந்த பிடில் கலைஞர். தமிழ் நாட்டையே தம் வாசிப்பால் பைத்தியமாக்கித் தமக்கென்று மிகுதியான இரசிகர்களைப் பெற்றிருந்தார் ஆனால் திடீரென்று வாசிப்பதை நிறுத்திவிட்டதால், இரசிகர்கள் ஏமாற்றத்திற் குள்ளாயினர். அப்படியே வாசித்தாலும், முன்புபோல் சோபிக்க வில்லை பதினாறு ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சியே இதற்குக் காரணம்.. மதுரை மீனாட்சிக் கோயில் ஆயிரங்கால் மண்டபத்தில் நடந்த கச்சேரியில், ஹேமமாலினியைச் சந்தித்த சந்திப்பு காதலாக மலர்ந்தது தனக்கு இசை கற்றுக் கொடுத்த அவரை மணப்பதாக உறுதி கொண்டாள் இதற்கிடையே நாத பிரம்மத்தின் தந்தை மரணப்படுக்கையில் கிடக்கவே, அவரைக் காணச் சென்றவர், மடல் மூலமாக ஹேமமாலினி யிடம் தொடர்பு கொண்டார்

ஆனால் ஹேமமாலினி சில நாட்களுக்குப் பிறகு மடல் இடவில்லை. ஒருநாள் அவளைப் பார்க்க வந்தபோது, யாருடனோ அவள் சென்று கொண்டிருந்தாள் அவரை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அதன் பின்னர்தான் அந்த அதிர்ச்சி அவரை நோயாளி யாக்கியது. காதல் தோல்வியிலிருந்து மீளாத நிலையில், வாசிப்பை நிறுத்தியிருந்த அவர், ஒரு நாள் கச்சேரி செய்தார். அன்று, முதல் வரிசையில் ஹேமா அமர்ந்திருந்தாள் மிக அருமையாகப் பழைய பெருமையை நிலைநாட்டிக் கொண்டிருந்த நாத பிரம்மம், தந்தியை மீட்டி அனைவரையும் ஈர்த்தபோது, ஹேமா முன் வரிசையில் இருப்பது கண்டு அதிர்ந்தார் வாசித்துக் கொண்டிருந்த பிடில் அவருடைய கையிலிருந்து நழுவியது

இக்கதை, சிறுகதைக்கே உரிய ஒருமை உணர்வு குன்றாமல் செல்கிறது. நாதபிரம்மத்தின் இசை உலக மேதைமை அவரது பண்பு வார்ப்பில் இணைந்து செறிந்துள்ளது. காதல் தோல்வியால் நடைப் பிணமாகிய பின் அவரது பிடில் வாசிப்பில் இனிமையில்லாது போனது.

> *நாத பிரம்மத்தின் நெஞ்சமாகிய பிடில் தந்தி மீது நினைவாகிய வில் துள்ளி விளையாடி அவர் வாசித்த பிடில் ஜிலு ஜிலுவென உதிர்க்கும் இனிய சங்கதிப்*

*பிரயோகங்கள் உயரப் போய் மேல்பஞ்சமத்தைத் தொடுவது போல், அவருடைய பழைய நினைவுகள் ஒன்றன் பின்னொன்றாகச் சுழன்று நிகழ்ச்சிகளை அடுக்கிக் கொண்டு இருதயத்தின் அடியில் போய்த் தொட்டுச் சென்ற காலத்திய வாழ்க்கைக் கீதத்தைப் பாடியது, அவர் பழைய நினைவுகளிலிருந்து விடுபட்டு இப்போது தாம் வாசிக்கும் பிடில் வாசிப்பில் பூரண கவனத்தைச் செலுத்துவதற்குச் சிறிது சிரமமாய்த்தான் இருந்தது.*

என்ற வரிகளால் துரைக்கண்ணனின் நடைத்திறமும், சூழ்நிலைக்கு ஏற்ப, அது அமைந்த வெளிப்பாடும் புலனாகிக் கதையோடு ஒன்றச் செய்கின்றன. துரைக்கண்ணனின் இக்கதை உணர்வுடன் அமைந்த நல்ல கதைகளில் ஒன்று எனலாம் வடிவநேர்த்தியும், பின்னோக்கு உத்தியும் கதையை நன்கு உருவாக்கியுள்ளன. குறுநாவலாகச் சற்றே நீண்டிருப்பினும், கதையின் ஒருமை கெடாதவாறு படைத்திருப்பது பாராட்டக்கூடியதாகும்

கலைஞன் தொடர்பான வாழ்க்கையை ஒரு நல்லதொரு நாவலாக ஆக்குதற்குரிய அருமைப்பாட்டைத் தன்னுள் செறித்து வைத்துள்ளதாகவே இக்கதை விளங்குகிறது.

தாயின் சிலை என்னும் கதை, சிற்பியின் வாழ்வில் நடந்த நிகழ்ச்சி பற்றியது. மாதவன், தாய் ஒருத்தியின் வடிவத்தைச் சிற்பமாக உருவாக்க முயன்றான் கண்ணில்லாத குழந்தைக்குத் தாயான காத்தாயி என்பவளைப் பார்த்தபோது தன் எண்ணத்துக்கு வடிவம் கிடைத்ததாக உணர்ந்தான் அவளும் மாடலாகப் போய்வந்தாள். சேரியில் அவளைப்பற்றிய சந்தேகத்திற்கு இது இடந்தந்தது கையிலும் ஓரளவு பணம் புரளவே ஐயம் மேலும் உறுதியாயிற்று. கணவன் இதை அறிந்ததும் மனைவியைக் கண்டித்தான். இருவருமே வாக்குவாதம் செய்தனர் தான் உண்மையானவள், நேர்மையானவள், வாய்மை தவறாதவள் எனக் கணவனிடம் கூறினாலும், அவள் மீது அவன் கொண்ட ஐயம் அவளை அடித்துக் கொடுமைப்படுத்தியது. கண்ணில்லாத குழந்தையோடு கணவனை விட்டுப்பிரிந்தாள். கண்ணில்லாத பிள்ளையை விட்டுவிட்டுத் தற்கொலை செய்ய மனம் வரவில்லை. அந்நிலையில், மாதவனிடம் பிள்ளையை ஒப்படைத்து விட்டு எங்கோ சென்றாள் அந்தப் பிள்ளையோ அம்மா அம்மா என்று அலறிக் கொண்டு, தடுமாறியபடியே தாயின் சிலை அருகே சென்று அதனைக் கட்டிப்பிடித்தான். உணர்வு மேலீட்டால் தன் அம்மாதான் என்று அவன் எண்ணுவதற்கு இடந்தந்தது அச்சிலை.

தான் செதுக்கிய சிலைக்கு உயிர்ப்பு இருப்பதாக மாதவன் உணர்ந்தான். அச்சிலையைச் செதுக்கிய தனது நோக்கம் வெற்றி பெற்றதாக அறிந்து மகிழ்ந்தான்

இக்கதை வடிவ அழகிலும், கதையைக் கொண்டு செல்லும் முறையிலும் உணர்வுபட அமைந்துள்ளது எனலாம். இயல்பான தொடக்கத்தைப் பெற்று, மெல்ல மெல்லக் கதைப் போக்கை வளர்த்துச் செல்லும் உத்தியும், காத்தாயி என்ற சேரித்தாயின் வார்ப்பும் கதைக்கு அழுத்தம் தந்துள்ளன அவ்வழுத்தம் மிக ஆழமாகவும், சிறுகதைக்கே உரிய நுட்பமாகவும் அமைவதற்குக் கதையின் இறுதியில் இடம்பெற்றுள்ள சிறுவனின் செயல் முத்தாய்ப்பாக விளங்குகிறது.

சுவையான சில நிகழ்ச்சிகளை எதிர்பாராத திருப்பத்தோடு அமைத்துக் கதை கூற இயலும் என்பதற்குச் சிதம்பர பாகவதர். எதிர்பாராதது, தந்தையின் வஞ்சம், மணமகன் சத்தியாகிரகம் முதலிய கதைகளை எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்

'சிதம்பர பாகவதர்' நாடக நடிகர்; வேலாயுதம் என்பவன் அவருக்கு உதவியாளனாகச் சேர்ந்தான். அவன் திருட்டுக் குற்றம் ஒன்றில் அகப்பட்டுச் சிறை சென்றவன் இராகவன் என்று பெயரை மாற்றி உதவியாளனாகச் சிதம்பர பாகவதரிடம் வந்து சேர்ந்தான் பாகவதரின் நடிப்புத் திறனை விடத் தம்மால் மிகச் சிறப்பாக நடிக்க முடியும் என்பதை ஒரு சமயம் வாய்விட்டுக் கூறினான். இதனை உணர்ந்தார் பாகவதர் இச்சமயத்தில் அவனைப் பற்றி உண்மைகளைச் சொல்லிவிடுவதாக அவ்வப்போது மிரட்டிப் பணம் பண்ணிய தாமோதரன் அங்கு வந்தான் வேலாயுதத்தை மிரட்டினான் அவனைப் பாகவதரிடம் காட்டிக் கொடுத்துவிடுவதாகக் கூறவே, அவ்வாறே செய்து கொள் எனச் சொல்லிப் பாகவதரை அழைத்து வருவதற்காக உள்ளே சென்றான் பாகவதர் போலவே வேடம் பூண்டு தாமோதரன் முன் வந்து நின்றான் அவ்வேடம் தாமோதரனை நம்பச் செய்தது பணம் கேட்டு இனி வேலாயுதத்தை மிரட்ட இயலாது என எண்ணி வெளியேறினான் தாமோதரன் தாமோதரனாக வந்து வேலாயுதம் என்ற பெயரில் ஒளிந்து கொண்டிருக்கும் இராகவனை மிரட்டியது பாகவதரே இதைப் பாகவதர் இராகவனிடம் கூறியபோது அவன் அதிர்ந்து போனான்.

தன்னைப் பற்றிப் பொறாமைப்பட்டுக் கூறிய சொற்களை உணர்ந்து கொண்ட பாகவதர், வேலாயுதம் வழியிலே சென்று அவனுக்கு உண்மை நிலையை உணர்த்திய விதம், கதைக்குத் திருப்பமாக அமைந்து சுவையையும் ஆர்வத்தையும் ஊட்டுகிறது

'எதிர்பாராதது', என்ற கதையில், பெற்றோர் தங்களுக்கு மணம்பேச முயற்சி செய்தபோது, அண்ணனும், தங்கையும் ஒருவருக்கொருவர் தெரியாதவாறு பத்திரிகையில் விளம்பரம் செய்தார்கள். 'மணமக்கள் தேவை' பகுதியில் அவ்விளம்பரம் இடம்பெற்ற சூழலில் பத்திரிகை அலுவலகத்திற்குச் சென்றார்கள் மணமகன் தேவை என ஜெயந்தியும், மணமகள் தேவை எனக் குமாரசாமியும் விளம்பரப்படுத்தப்போய் அங்கு அதிர்ச்சிக்கு உள்ளாயினர் காரணம் அவர்கள் அண்ணன்-தங்கையராக இருந்ததே! ஒருவருக்கொருவர் தெரியாதவாறு செய்ததன் விளைவு இது

'தந்தையின் வஞ்சம்', என்னும் கதை, தன்னை அவமானப் படுத்திய மகனுக்குப் பாடம் புகட்ட எண்ணிய தந்தையைப் பற்றியது வெளியூரில் மேல் படிப்புப் படிக்கும் தம் பையன் சிதம்பரத்தைக் காணச் சென்றார் கந்தசாமி உடையார். தம் நண்பர்களிடம், கிராமத்துப் 'பண்ணையாள்', எனத் தம்மைச் சொல்லியதைக் கேட்டு மனம் புழுங்கினார், பையனின் மணநிகழ்ச்சியில், மணமகன் அருகே, எல்லோரும் அறியும்படியாகப் பண்ணையாள் போலவே வேடம் பூண்டு நின்றார். முன்பு ஒருமுறை தந்தையிடம் அவ்வாறு கூறியதை நினைத்தான் சிதம்பரம் அதற்கு இன்று பழி தீர்த்துக் கொண்டார் தந்தை என எண்ணி வெட்கினான்

இவ்வாறு, மிகச் சாதாரண நிகழ்ச்சிகளைக் கூடக் கதைக் குரியதாய் ஆக்கிச் சுவைபடக் கூறமுடியும் என்பதற்கு மேலே காட்டிய சிலகதைகள் சான்றுகளாகும்

'கர்நாடகத்தின் தோல்வி' என்னும் கதையும் இன்னொரு வகையில் மேற்கூறிய கருத்தோடு இணைகிறது. 'ஆசாரமும் அனுஷ்டானமும்' கடைபிடிக்கும் சிதம்பர தீட்சதர், தம் வீட்டில் வாடகைக்கு இருக்கும் கிருஷ்ண மூர்த்தியின் அன்றாடச் சிறுசிறு செயல்கள் கண்டு கொதிப்பவா அவற்றில் ஒன்று, காலையில் சவரம் செய்து கொண்டு அவர் முன் எதிர்ப்படுவது! இதற்கிடையே தம் பெண் தாட்சியாயிணிக்கு வரன் பார்க்கச் சென்றார் தம் நண்பரின் மகன், தனக்கு மாப்பிள்ளையாக ஆவ்தை எண்ணிப் பெருமைப் பட்டுக் கொண்டார் மனைவியிடம் பிறகுதான் தெரிந்தது, அந்த மாப்பிள்ளை தன் வீட்டில் குடியிருக்கும் கிருஷ்ணமூர்த்தி என்று! 'கர்நாடக'ப் பேர் வழியான தீட்சதர்க்கு, இப்போது 'ஸேப்டி ரேஸர்' கூட அழகாகத்தான் தெரிந்தது 'எல்லாம் அவாளவாள் சவுகரியம்' என்று சொல்லிக் கொண்டார். கிருஷ்ண மூர்த்தியை மாப்பிள்ளையாக அங்கீகரித்துக் கொண்டபின், அவருக்குக் கிடைத்த தோல்வியல்லவா அது!

குடும்பத்துக்குச் சுமையாக இருக்கக் கூடாது என்ற எண்ணங்கொண்டு பெண்கள் உறுதியான முடிவெடுப்பதைச் சில கதைகள் உணர்த்துகின்றன. இவ்வகையில், சாரதா, ஜீவனாம்ச வழக்கு, வானம் வெளுத்தது ஆகிய கதைகளைக் குறிப்பிடலாம் வரதட்சணை தர இயலாமல், திருமணம் தள்ளிக் கொண்டே போனதால், குடும்பத்திற்கு இனியும் சுமையாக இருக்க வேண்டாம் என எண்ணித் தானே ஒருவனைத் தேர்ந்தெடுத்துத் திருமணம் செய்து கொள்கிறாள் சாரதா (சாரதா) கணவன் தன்னை ஒதுக்கி வைக்க, அண்ணன் வீட்டில் வாழ்ந்து வரும் லோகாம்பாள், அண்ணன், அண்ணி, அம்மா ஆகியோர் கட்டாயப்படுத்திக் கூடுதலான ஜீவானாம்சம் கேட்கக் கையெழுத்திடுமாறு ஆணையிட, வழக்கு, நீதிமன்றம் வருகிறது. தன் மனைவி தன்னுடன் வருவதாக இருந்தால் அழைத்துக் கொள்ளத் தயார் எனக் கணவன் நீதிமன்றத்தில் கூற, 'தனக்கு வாழ்வு வேண்டும்; பணம் அல்ல', என்று கூறித் தான் வளர்ந்த குடும்பத்திற்குச் சுமையாக இருக்க விரும்பாமல், கணவனோடு வாழவே விருப்பம் தெரிவித்து, 'கணவனோடு வாழ உத்தரவு இடுங்கள்' என்பதை வழக்குமன்றத்தில் முழங்கினாள் லோகாம்பாள் (ஜீவனாம்ச வழக்கு), தன் தங்கை அபிராமி, குழந்தைகளோடு தனது இல்லத்திற்கு வரப்போகிறாள் என்பதறிந்த மணமாகாத அக்காள் அஞ்சனா, முதலில் மகிழ்ச்சி அடைந்தாலும், அவர்கள் வீட்டினுள் நுழைந்தபோது, அஞ்சனா முகத்தில் மாறுதல் ஏற்படுகிறது. உள்ளம் சோகம் கப்பிய நிலையில் அவள் தன் அறைக்குள் சென்று படுத்துக் கொள்கிறாள் அபிராமிக்கு ஏன் வந்தோம் என்றாகியது. திரும்பிவிட எண்ணுகிறாள் அவள் முடிவை அறிந்து, பழைய நினைவுகளை மறந்து இயல்பான நிலைக்குத் திரும்பித் தங்கைக் குடும்பத்தோடு ஒன்றி மகிழ்வதற்கு முடிவு எடுக்கிறாள் அஞ்சனா (வானம் வெளுத்தது).

இம்மூன்று கதைகளிலும் குடும்பப் பிரச்சினைகளை அவரவர் களாகத் தமது முடிவான எண்ணங்களால் தீர்மானித்துச் செயல் படுவதனைக் காணலாம் ஆனால் ஒவ்வொருவரின் செயல்பாடு வெவ்வேறு கோணங்களில் அமைந்திருந்தாலும், சூழ்நிலையின் இறுக்கத்தில் அழுந்தித் தமக்கான உறுதிப்பாட்டில் ஒன்றிவிடுகிறார்கள் எனலாம்

> *இவருடைய சிறுகதைகள் பொதுவாகச் சமுதாயப் பிரச்சினைகளைப் பற்றியே இருப்பதனால் பெரும்பாலும் வடிவத்தை மீறிய கதையம்சத்தைக் கொண்டுள்ளன. ஆயினும், அன்று நிலவிய வடிவ உணர்வு இருவருடைய இலக்கிய முயற்சிகளிலும் சிற்சில இடங்களில் சிறப்பாகப்*

*பிரதிபலிக்கக் காணலாம்*

*(தமிழில் சிறுகதை வரலாறும், வளர்ச்சியும் - ப. 59)*

என்ற கூற்றுக்கு ஏற்ப அவருடைய வடிவ உணர்வு சிறிது நெகிழ்ந்து காணப்படுதற்கு அன்றைய காலகட்டமும் ஒரு காரணம் என்பதை உணர வேண்டும் அன்றைய முன்னணி எழுத்தாளர்கள் சிலரிடையே இத்தகு குறைபாடு இருந்தது

கதையம்சம் வடிவத்தை விழுங்கிவிட்டதோ என்று எண்ணுதற்கு, அன்றிருந்த படைப்பாளர்கள் சிறுகதைக்கு என எடுத்துக் கொண்ட களம் பெரிது என்பதை எண்ணிப் பார்க்கலாம் சமூகப் பிரச்சினைகளை, 'விலாவாரியாக'ச் சொல்ல வேண்டும் என்று நினைத்துச் சிறுகதையின் கட்டமைப்பை நெகிழச்சியுறச் செய்துள்ளனர் அதற்கு ஏற்பவே விளக்கமான வருணனைகளையும், நிகழ்ச்சியைக் கூறிச் செல்லும் முறையையும் நீட்டித்தனர். இவற்றால் கதை, ஒருமை உணர்வை விட்டு விலகியிருப்பது இயற்கை யானதுதான். தமிழ்ச் சிறுகதையின் தொடக்ககாலச் சிறுகதையாசிரி யர்களான பாரதி, வ.வே சு. ஐயர், மாதவய்யா ஆகியோரின் சில கதைகளிலும் கூட இத்தகு வடிவ உணர்வு போற்றப்படவில்லை. இவர்களுக்குப் பின் சிலர் வடிவ உணர்விலும், ஒருமைப்பண்பிலும் போதிய கவனம் செலுத்த வில்லையோ என்பதன் அடையாளங்களை ஒரு சில கதைகள் வழி உணர இயலும்

துரைக்கண்ணன் காலத்தில் எழுத வந்த கல்கி, தி ஜ ரங்கநாதன் ஆகியோரை இங்கு ஒப்பு நோக்கலாம்

துரைக்கண்ணன் எழுதி வந்த காலத்தில் கல்கி, தி ஜ ரங்கநாதன் ஆகியோர் பத்திரிகைகளில் சிறுகதைகளைப் படைத்து வந்திருப்பினும், ஒவ்வொருவரும் தனித்தன்மை வாய்ந்தவர்களாக வளர்ந்தனர்; ஏறக்குறைய கதை கூறும் பாணியில் துரைக்கண்ணனும் கல்கியும் ஒரு தன்மையராக இருந்தாலும், நிகழ்ச்சிகளைக் கொண்டு செல்லும் போக்கிலும், சமூகப் பிரச்சினையை அணுகிய முறையிலும் வேறுபாடுகளைக் காட்டத் தொடங்கினர் இம்மூவருமே காந்திய நெறி சார்ந்தவர்களாக இருந்ததால் காந்தியச் சிந்தனைகளைக் கதைப் பொருள் ஆக்குவதில் அக்கறை செலுத்தினர் இதழுலகில் இம் மூவருமே ஈடு பட்டிருந்தவர்கள். சிறுகதை உலகின் தொடக்க கால முயற்சிகளில் இவர்களது பங்களிப்பு எண்ணத்தக்க அளவு மதிப்பு வாய்ந்தது என்பதை மறுப்பதற்கில்லை

கல்கியின் நகைச்சுவை உணர்வை மற்ற இருவரிடம் காணுமாறு இல்லை. துரைக்கண்ணனின் துணிச்சலான சில கருப்பொருளைக்

கல்கியிடம் காண இயலும்; தி.ஜ ரங்கநாதன், வ.ரா.வின் வாரிசு என்றழைக்கப்படுவது போன்றே, துரைக்கண்ணன், வ.ரா.வின் தம்பி என்று மதிக்கப்பட்டவர். கல்கி காலகட்டத்திற்கு முற்பட்ட துரைக் கண்ணனின் நடையில் செந்தமிழ்ப் பயிற்சி தெரிந்தது. காலத்திற்குத் தகுந்தவாறு தம் நடை இயல்பைப் பிறகு மாற்றிக் கொண்டார். தி.ஜ. ரங்கநாதனிடம் அழுத்தமும் ஆழமுமான தொனியுடன் கூடிய நடை காணப்பட்டது. கல்கியோ எல்லோரும் விரும்பிப் படிக்கக் கூடிய இயல்பான / எளிய நடையைக் கைவரப் பெற்றிருந்தார். இம்மூவருமே ஒரு குறிப்பிட்ட காலத்துப் பெருமையை நிலை நாட்டக் கூடிய அளவுக்குச் சமகாலத்தவர்கள். இச்சூழ்நிலைகளை ஆராயும், சிட்டி, சிவபாத சுந்தரம் ஆகிய இருவரும் கீழ்க்காணுமாறு சுட்டியுள்ள குறிப்பு, சரியே எனலாம்

> *தி.ஜ.ரங்கநாதனும் நாரண. துரைக்கண்ணனும் புதிய எழுத்தாளர் தலைமுறையில் மூத்த தலைவர்கள் என்ற மதிப்பையும் மரியாதையையும் பெற்ற சிறுகதை ஆசிரியர்கள். இவர்கள் முயற்சிகளும் இவர்கள் சம காலத்தவரான கல்கியின் முயற்சிகளும், பின்னால் வரப்போகும் சிறுகதை இயக்கத்துக்கு உரம் கொடுத்தன எனலாம்.*
>
> *(தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும் ப 63)*

**நாடகங்கள்**

துரைக்கண்ணன் நாடக ஆசிரியராகவும் திகழ்ந்தவர். அவர் நாடகங்கள் சில, மேடை நாடகமாக நடத்தப்பெற்றுள்ளன. சமூக வரலாற்று நாடகங்கள் சில எழுதியுள்ளார். இவர் எழுதிய தீண்டாதார் யார்? என்ற நாடகம் ஒரு பிரச்சார நாடகமாகும். 1927 இல் எழுதப்பட்ட இந்நாடகம் நாரண. துரைக்கண்ணன் எழுத்துப் பணியைத் தொடங்கிய காலத்தில் எழுதப்பட்டது. துரைக்கண்ணன் அன்றைய கால கட்டத்தில் நிலவிய தீண்டாமை பற்றிய சிக்கலை அடிப்படையாக வைத்து இதனை எழுதியுள்ளார். இது தமிழகத்தின் பல பகுதிகளிலும் நடிக்கப்பெற்றது. சுயமரியாதை இயக்கம் சார்ந்த குத்தூசி குருசாமி, கே.எம் பாலசுப்பிரமணியம் முதலியோர் இந்நாடகத்தில் நடித்துள்ளார்.

தீண்டாமையைக் கருப்பொருளாகக் கொண்டிருப்பினும், காதல் பின்னணியில் கதை நகர்கிறது. பிராமண குலத்தைச் சேர்ந்தவன், அரிசனப் பெண்ணைக் காதலிக்கின்றான் திருமணமும் ஆகிறது. ஆனால் அதன்பின் பல்வேறு சிக்கல்களுக்கு அவர்கள் உள்ளா

கின்றனர். சமுதாயம் அவ்விருவரையும் ஒதுக்கி வைக்கிறது. காதலுக்குச் சாதி இல்லை; மதம் இல்லை என்று கூறினாலும் தடை இருக்கவே செய்கிறது என்பதை அழுத்தமான காட்சிகளில் இந்நாடகம் உணர்த்துகிறது. எல்லாவிதமான தடைகளை மீறித் தங்கள் கொள்கையில் இருவருமே தீவிரமாய் இருக்கிறார்கள். சாதி வேறுபாடுகள் கூடாது என்பதை வலியுறுத்தும்படியான இந்நாடகம் அக்கால கட்டத்தின் எதிரொலி என்பது மட்டுமல்ல; அந்த எதிரொலி இன்றளவும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது. அந்த ஒலி காதலர் இருவரின் நெஞ்சங்களை ஒன்றும் செய்ய இயலவில்லை என்பதை நாடக இறுதியில் காணலாம்

துரைக்கண்ணனின் நாடகங்களில் உயிரோட்டமானதும் உணர்ச்சி கொள்ள வைப்பதும், பலரால் வெகுவாகப் பாராட்டப் பெற்றதுமான நாடகம் 'உயிரோவியம்' ஆகும்; அவர் எழுதிய நாவலின் மாற்று வடிவமே இந்நாடகம்; டி கே.எஸ். சகோதரர்களால் நடிக்கப்பெற்றது பிரான்ஸ் கழகத்தின் வழி உலகின் சிறந்த நாடகமாகத் தெரிவு செய்யப்பட்டது

இந்நாடகம், மேடை ஏறியபோதே கலை உலகின் தனித்த பெருமைக்கு உள்ளாகியது. இந்நாடகம் ஏற்படுத்திய விளைவை மு. பரமசிவம் கீழ்க்காணுமாறு தெரிவிக்கிறார்

> *அக்காலத்தில் தமிழில் பேசுவதும் எழுதுவதும் தரக் குறைவான செயல் என்று காலங்காலமாக ஆங்கில மொழியின்மேல் மோகம் கொண்டிருந்த பலரை ஜீவாவின் உயிரோவியம் தமிழ் படிக்கத் தூண்டியது... தமிழர்களின் பண்பாட்டையும், பாரம்பரியத்தையும் கதை மாந்தர்கள் வழியாகப் பறைசாற்றியது. ஒட்டு மொத்தத்தில் தமிழின் சிறப்பையும், தமிழர்களின் பண்பாட்டையும் ஒரு சேர அறிவதற்குப்பெரிதும் உதவியது உயிரோவியம் நாடகம்.*
>
> *(ப. 50)*

என்று அந்நாடகத்தைப் பற்றி எழுதியுள்ள கருத்து உண்மையே. தூய்மையான காதலன்பை உணர்ச்சிமயமான உயிர்த்துடிப்போடு காட்டிய இந்நாடகம் பற்றி, நாடக ஆய்வாளர்களில் ஒருவரான ஏ.என் பெருமாள், *'இருபதாம் நூற்றாண்டில் தமிழ் நாடகம்'* என்னும் தம் நூலில்,

> *கல்லையும் கனியச் செய்யும் அவலத்தின் பிழிவால் சமுதாயத்தைத் திருத்த ஆசிரியர் முயல்கிறார்.*
>
> *(பக். 269)*

எனக் குறிப்பிட்டுள்ளார்.

கற்பகம், நடராஜன் காதல் தெய்விகமானது; சூழ்ச்சி காரணமாக மணக்க இயலாமல் போகிறது. சந்திரசேகரனை மணக்க நேருகிறது. ஆன்மநேயக் காதல், கற்பகத்தை வேறு திசைக்கு மாற்றுகிறது. உடலால் கணவனையும், உள்ளத்தால் தெய்விகமாக நிலைத்த காதலனையும் எண்ணச் செய்கிறது. உணர்ச்சி மிகுந்த உரையாடலால் இந்நாடகம் சிறந்துள்ளது.

> என் உடலுக்கு நாயகராக வேறொருவர் ஏற்பட்டு விட்டார் ஆதலால், உங்கள் விருப்பத்தை நான் நிறைவேற்றி வைக்க முடியாதவளாயிருக்கிறேன். அவ்விதம் செய்வது என்னைத் தொட்டுத் தாலி கட்டிய உடல். நாயகனுக்குத் துரோகம் செய்வ தல்லவா? கணநேர இன்பத்துக்காக, அற்ப சுகத்திற்காக நியாய வரம்பை மீறிப் போய் விடுவதா? அப்படிச் செய்வோமானால், உத்தமக் காதலர் களாகிய நமக்கும், காமந்தகாரர்களுக்கும் என்ன வித்தியாசம்?

என்ற கற்பகத்தின் உரையாடல் ஈர்ப்புடையதாக விளங்கும் இறுதிப் பகுதியாகும்; தமிழ்ப் பண்பாட்டின் விளக்கமாக அவளது பேச்சு அமைந்திருப்பினும், மனத்தளவில் ஒரு புரட்சியை உண்டு பண்ணி வாழ எண்ணுகிறபோக்கு தமிழுக்குப் புதியது. பெண்ணுக்குப் பெருமை சேர்க்கும் விதத்தில் கற்பகம் பாத்திரம் அமைந்துள்ளது. இதேபோல, நாட்டுணர்வும், சமூகச் சிந்தனையும் இணைந்து பின்னப்பட்ட நாடகமான குமரி முதல் காஷ்மீர் வரை (1968) என்ற நாடகத்திலும் பெண்ணுக்குப் பெருமை சேர்க்கிறார் துரைக்கண்ணன். சமுதாயத்தின் கீழ்மட்டத்தில் இருக்கும் பெண் ஒருத்திதான் அந்நாடகத்தின் மைய அச்சு. இறுதியில் கதையை நிறைவு செய்பவளும் அவளே.

கல்லூரி மாணவர்களிடையே நட்பும் பகையுமான சூழலில் சிவானந்தம், மாணவர் சண்டையில் சிக்கியபோது, ரஜனி என்ற நடை வாசிப்பெண் அவனது காயத்திற்குக் கட்டுப்போட்டாள்; தன்னைப் போலவே துடுக்கும் துணிவு மிக்க அவளிடம் காதல் கொண்டான். போராட்டம் என்றால் போலீஸ் கண்களுக்கு அவன்தான் அகப்படுவான் இதன் காரணமாகச் சில நாள் மறைந்து வாழ்ந்தவன், ஊருக்குச் செல்லவும் அவன் பெற்றோர் அருந்தவம் என்ற பெண்ணை மணமுடிக்க எண்ணினர். மணநாளுக்கு முன் இச்செய்தி ரஜனிக்குத் தெரிந்தது. இதற்கிடையே போலீசு அவனைத் தேடி வேட்டையாட அவனது வீட்டைச் சோதனை போட்டது. ரஜனி, சிவாவை யாருக்கும் தெரியாமல் அழைத்துச் சென்றாள். சிவாவோ

இந்திய ராணுவத்தில் சேர்ந்தான். மகாதேவ் என்று பெயரை மாற்றிக் கொண்டான். இந்திய பாக் போரில் ஈடுபட்டுப் போர் முனையில் வென்றான். அருந்தவம் சிவாவைக் தேடிச் சென்னை வர அவளுக்கு ரஜனி அடைக்கலம் தந்தாள். போக்கிரிகளிடமிருந்து அவளைக் காப்பாற்றித் தன்னோடு வைத்துக் கொண்டாள். இதற்கிடையே, ராணுவத்திலிருந்து குண்டடிபட்ட சிவா சென்னை மருத்துவ மனையில் சேர்ந்தான் இதனைப் பத்திரிகை மூலமாக அறிந்த ரஜனி அவனை அங்குச் சென்று கண்டு உண்மை அறிந்தாள். நடந்த நிகழ்ச்சிகளை அவனுக்குக் கூறி அருந்தவத்தை அவனோடு இணைத்து வைத்துத் தன் காதலைத் தியாகம் செய்தாள் ரஜனி.

> *என்னைப்பத்தி உங்களுக்குச் சிறிதும் சிந்தனையே வாணாம். நான் எப்பிடியோ வாழ்ந்துட்டுப் போவேன் சாக்கடையிலே நெளிஞ்சினிருக்கும் புழு. அதுக்கு இன்ப துன்ப உணர்ச்சி ரண்டும் ஒன்னுதான். அதுபோல, என் இதயமும் இன்ப துன்பங்களாலே அதிகமாப் பாதிக்காது நடுவாலே ஏதோ ஒரு சிறு சபலம்; அது ரண்டொரு நாள்; அதோட விளையாட்டை ஆடிக்காட்டிச்சு. அவ்வளதான். அது எப்போதோ ஓய்ஞ்சி போச்சு. சிறிது நெகிழ்ச்சி ஏற்பட்ட இடமும் மரத்துப் போச்சி*

என்று ரஜனி, தன்னைக் காதலித்த சிவாவிடம் கூறுகிறாள். உயிரோவியத்தில் இடம்பெற்ற கற்பகத்தின் காதலுக்கும் ரஜனியின் காதலுக்கும், வேறுபாடு உண்டு. முன்னவள், உள்ளத்தில் காதலனைப் போற்றி வாழ்பவள். பின்னவளோ, காதலனுக்கு ஒருத்தியைக் கைப்பிடித்துக் கொடுத்துவிட்டுத் தன் உள்ளத்திலிருந்த காதலை வெளியேற்றத் துணிந்தவள், தன் உள்ளத்தையும் உயிரையும் காதலன் கொண்டு போவதாகவே எண்ணி அவளுக்குத் தேம்பி அழத் தோன்றுகிறது இவ்விரு நாடகங்களிலும் பெண் பாத்திர வார்ப்பு கதையை உணர்ச்சிமயமாகக் கொண்டு செல்ல உதவியிருக்கிறது. சிவா குடும்பம், அருந்தவம் குடும்பம் ஆகியன நாடகத்தின் துணைப் பின்னலுக்குத் துணை புரிகின்றன. சிவா இந்திய எல்லைப் போரில் பாகிஸ்தானுக்கு எதிராகச் செய்யும் நிகழ்ச்சிகள் நாட்டுப்பற்றை ஊட்ட வல்லன எனினும் இந்நாடகத்தில் அச்சாணியாக இருந்து செயல் படுபவள் ரஜனியே!

துரைக்கண்ணன், நாடகங்கள் சிலவற்றை அவ்வப்போது இதழ்களில் எழுதியுள்ளார். புலிக்குப் பிறந்தது என்னும் நாடகம் அவற்றில் ஒன்று. இரண்டாம் புலிகேசியை மையமிட்ட இந்நாடகம் அவனுடைய வெற்றியைச் சிறப்பிக்கிறது. கீர்த்திவர்மன், மங்கலீசன்,

விஷ்ணுவர்த்தன், ஜயசிம்மன் முதலிய வரலாற்றுப் புனைவுப் பாத்திரங்களின் உரையாடல்கள் வீறு கொள்ளும்படி அமைந்துள்ளன. புலிகேசி பல்லவ மன்னன் மகேந்திர வர்மனைப் போரில் ஒடுக்கியது கண்டு, மூவேந்தரும் மகிழ்ச்சி அடைவதான உரையாடல் ஒன்று இதில் இடம் பெற்றுள்ளது. பொதுவாகவே வரலாற்று நாடகங்களின் வீறுணர்ச்சியான உரையாடல்கள் இடம்பெறும் இதுவும் அப்படியே.

வள்ளலார் நூற்றாண்டு விழாவின்போது எழுதப்பட்ட நாடகம் திருவருள் பிரகாச வள்ளலார் (1968) ஆகும் உயிரிரக்கக் கோட்பாட்டிலும், சமரச சன்மார்க்கத்திலும் ஈடுபாடும் பற்றும் கொண்ட துரைக்கண்ணன் இறைப்பற்றும் மிககவர். இவை மூன்றையும் கைவரப்பெற்றிருந்த வள்ளலாரின் தொண்டைச் சிறப்பிக்கும் வகையில் அவரது வாழ்க்கை வரலாற்றை மேடை நாடகமாக ஆக்க முயன்ற முயற்சியே இந்நாடகம்! சத்திய ஞான சபை 'ஜீவகாருண்ய ஒழுக்கம்' 'பெண்கள் முன்னேற்றம்', சாதி மதங்கடந்த சன்மார்க்கம் ஆகிய செய்திகளை உரையாடல்கள் வாயிலாக விரித்துரைத்துள்ளார் இதுவும் ஒரு வகையில் சமூக சீர்திருத்தம் பேசும் நாடகமே! பெண்களின் மேன்மையை,

> *பெண்கள் வாழ்வே தியாக வாழ்வு; தவ வாழ்வு தானே!*
> *அவர்கள் பிறர் நலத்துக்குத் தானே வாழ்கிறார்கள் உலக*
> *வாழ்வே, வாழ்வின் மலர்ச்சியே உங்கள் பெண்ணினத்*
> *தால் தானே நடக்கிறது*

என இராமலிங்கர் பெண்களிடத்துப் பேசுவது அவர்களின் தன்னலமற்ற வாழ்வை எடுத்துக் காட்டுவதாகும்.

சமூக நாடகங்களில், காதலையும் சமூகச் சிக்கலையுமே பெரும்பாலும் கருவாகக் கொண்டு படைத்துள்ளார். 'எழுதாத ஓவியம்', என்ற நாடகம் காதலை மையப்படுத்தியது. பெண்ணுக்கு உடல் நோய் இருக்கிறது எனப் பொய் சொல்லிச் சூழ்ச்சி வலையைப் பின்ன அன்பெழிலன் உள்ளத்தில் நேரும் அல்லலும் அவலமும் உணர்வுபடச் சித்திரிக்கப்பட்டுள்ள இந்நாடகத்தில் தமிழ் துள்ளி விளையாடக் காணலாம் நாடகாசிரியரின் இலக்கியத் தாகம் காதல் வேட்கையில் தணியாததாகவே உள்ளது.

அன்பெழிலன் - பாவை காதல், நாடகத்தின் தொடக்கமாக அமைந்து உள்ளத்தைக் கிளர்த்தெழச் செய்கிறது. பாவையை அவன் வருணிக்கும்போது, அவளை இலக்கியமாகவே காண்கின்றான்

> *உன்னைப் பார்த்தால் தமிழாகத் தோன்றுகிறதே! உன்*
> *கண்கள் திருக்குறள்; உன் இதழ்கள் அகநானூறு; உன்*
> *கைகள் தொல்காப்பியம், உன் வாய் புறநானூறு உன்*

> பார்வை குறுந்தொகை; உன் பேச்சு நற்றிணை, உன் அன்பு அகத்தமிழ்! உன் காதல் நிலை ஓர் இலக்கியம்!! உன் சிரிப்பிலே கம்பன் பாட்டின் கள்வெறிக் களிமயக்கம் துள்ளுகிறதே! உன் கண்கள்தாம் திருக்குறளின் காமத்துப் பாலோ!... கண்ணே! பொன் நிலாவின் புதுமை ஒளியும், நரை பழுத்த துறைத் தீந்தமிழின் ஒழுகு நறுஞ்சுவையும், பண் கனிந்தெழு பாடலின்னிசை அமிழ்தும், இயற்கை யின் ஒவ்வொரு வியத்தகு புதுமை எழிலின்பமும் உன்னிடத்தில் ஒளிவிட்டுப் பொலிகிறதே!!

என வரும் பகுதி இனிய நடைத் திறம் வாய்ந்ததாய் உள்ளது. சமூக நாடகங்களில் கூட ஐம்பதுகளிலும், அறுபதின் தொடக்கத்திலும் இதுபோன்ற மொழிநடை, பேச்சுமொழியாக நாடகங்களிலும், திரைப்படங்களிலும் இடம் பெற்றிருந்தது நாடகம் எழுதியதோடு அமையாமல் துரைக்கண்ணன் நாடகத் தமிழ் பற்றிச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் மூன்று நாள் சொற்பொழிவாற்றியுள்ளமையும் நாடகத்தமிழில் அவருக்கிருந்த மிகுதியான ஆர்வத்தைக் காட்டுகிறது.

**கவிதைகள்**

பத்திரிகையாசிரியராக இருந்த துரைக்கண்ணனுக்குப் பன்முகப் பார்வை உண்டு. இலக்கியப் பயிற்சி மிக்க அவர் கவிதை எழுதவும் கற்றிருந்தார். இதழுக்கு எனக் கவிதைகள் அவ்வப்போது எழுதி வந்தார். பழங்கால இலக்கியத்தில் ஈடுபாடும் ஆர்வமும் மிக்கிருந்ததால் செய்யுளியற்றும் முயற்சியும் அவரிடம் காணப்பட்டது. மரபு வழியிலான கவிதைகளை எழுதி இதழில் வெளியிட்டார். இசைக் கலையிலும் ஆர்வமுற்றிருந்த காரணத்தால் இசைப்பாவிலும் ஈடுபாடு காட்டினார் ஆசிரியப்பாவும், விருத்தமும் இயல்பான பாங்கில் அமைந்தன. ஆயினும், அவர் இயற்றிய கவிதைகள் குறைவே இதழுக்காகக் கவிதை எழுதும்போது பல்வேறு புனை பெயர்களை வைத்துக் கொண்டார் எனத் தெரிகிறது

ஆனந்தபோதினியிலும், பிரசண்ட விகடனிலும், அவர் இயற்றிய கவிதைகள் பெரும்பாலும் புனைபெயரிலேயே வெளி வந்தன திருமயிலைக் கவிராயர், களந்தைக் கிழார், நாரணன், நடமாடி, தமிழ்ப்பித்தன், காதல் பித்தன் முதலிய பெயர்களில் எழுதியதாகத் தெரிகிறது. நாடு, மொழி, சமுதாயம், காதல் முதலிய பாடுபொருள்களைக் கொண்டவையாக அவரது கவிதைகள் விளங்குகின்றன விடுதலை உணர்வைப் போற்றும் மரபும், காந்திய நெறியை உளப்படுத்தும் பாங்கும் கவிதைகளில் கூடுதலாக உள்ளன.

தமிழ், தமிழ்ச்சமுதாயம் என்பதை நினைவில் இருத்திய துரைக்கண்ணன், நடமாடி என்ற பெயரில் எழுதிய கவிதை, பாரதியார் பாணியில் அமைந்தது.

*கொட்டு முரசே! கொட்டு முரசே - தமிழ்ச்*
*சிறப்பினையே உலகறியக் கொட்டு முரசே!*
*...... ...... ......*
*சாதி மதத்தை ஒழிப்பாயே - மனச்*
சஞ்சல மதையே தொலைப்பாயே
காத லமுதம் களிப்பாயே - புதுக்
காவியம் புனைந்தே மகிழ்வாயே

காதல் காட்சிகளைக் கவினுறக் கவிதையில் காட்டும் கவிஞராகத் துரைக்கண்ணன் விளங்குவதை,

காரிடை எழுந்த கவினுறு நிலவே
*கருத்தினில் மலர்ந்திடும் கவியே*
*நீரிடை அலர்ந்து நின்றொளி வீசும்*
நிறைமனத் தாமரை எழிலே
போரிடை உலவும் பொருபடை வேல்போல்
போதெனும் சுடர்விழி மாதே
தாரிடை வண்டாய்த் தளிர்நலம் பெற்றுத்
தனித்துயான் மகிழும் நாளென்றோ!

என்ற பாடலடிகளால் காணலாம். கம்பராமாயணப் பயிற்சி மிக்க துரைக்கண்ணன் அந்த வடிவிலே கவிதை எழுதியுள்ளமை நோக்குதற்கு உரியது.

பாரதியின் செந்தமிழ் நாடென்னும் போதினிலே' என்னும் கவிதையை உள்வாங்கிக் கொண்டு, அதன் சாயலில்,

நந்தமிழ் நாடெனும் போதினிலே - துன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே - எங்கள்
மைந்தர்கள் நாடென்ற போதினிலே - ஒரு
*சக்தி யழியுது மூச்சினிலே!*
...... ......
வஞ்சக வீரர்கள் வாழ்நாடு - காமக்
*கஞ்சுக வீரர்கள் வாழ்நாடு - பொய்ம்மை*
*நெஞ்சத்தே கொண்டு அஞ்சாமல் - கூறிடும்*
பஞ்சைகள் வாழும் தமிழ்நாடு
...... .......

எனப் பாடித் தமிழ்நாடு எத்தகைய மக்களைப் பெற்றிருக்கிறது

என்பதனை வேடிக்கையாகத் தெரிவித்துள்ளார்; கதை வழியே கருத்துகளை உணர்த்திய துரைக்கண்ணன், கவிதை வழியேயும் கருத்துரைத்துள்ளார் அவரது கதைத் கவிதைத் திறனுக்கு ஒரு சான்று கடலில் அணில் ஒன்று சிலிர்த்துக் கொண்டு மூழ்கி எழுகிறது; இறைவன் அது குறித்து அணிலிடம் கேட்க, அணில் நடந்த நிகழ்ச்சியைக் கூறுகிறது; பனை மரத்தில் கூடு கட்டப் போய்ப் புயல் அலைத்துவிட்டது, புயல் சாய்த்ததில் அணில் குடும்பம் கடலில் விழுந்தது மனைவி அணிலையும், குஞ்சு அணிலையும் மீட்பதற்காகவே அவ்வாறு மூழ்கி எழுவதாகக் கூறியது. நன்றியும் அன்பும் கொண்டு மனிதர்கள் வாழ்வாராயின் மண்ணில் யாவரும் சுகமாய் வாழ்வர் என இறைவன் அணிலிடம் கூறினார். தம் கையால் அணிலைத் தொட்டார்.

*சிறுவால் நனைத்துச் சிதறுவன்; அதில்நீர்*
*உறுதியாய் உழைத்தால் ஒருநாள் கடைசியில்*
*கடலை வரட்டிக் காக்கும் குஞ்சினை*

என எண்ணிக் குஞ்சு அணிலைத் தொட்டார் இறைவன். சிவன் தன் கையினால் செய்த கோடுபோல் குஞ்சின் முதுகும் கோடிட்டிருந்தது. இக்கதைக் கவிதை, அணில் அரும்பெறும் முயற்சியாலும், விடாத உழைப்பாலும் தன் குடும்பத்தைக் கரைசேர்ப்பதில் கவனமாய் இருப்பதைக் காட்டி, செய்ந்நன்றியிலும் அன்பிலுமாக மனிதம் சிறக்கவேண்டும் என்பதை உணர்த்துகிறது.

இராஜாஜி இறந்தபோது பாடிய கையறு நிலைப்பபாட்டு இரக்கவுணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைந்தது கவிஞர் 'மஹி' தலைமையில் நடந்த அவ்விரங்கற்கூட்டத்தில், துரைக்கண்ணன் கலந்து கொண்டு பாடிய நினைவுக் கவியரங்கப்பாடல் பழந்தமிழ்ப் பாடலை நினைவூட்டும் வகையில் உணர்வுடன் அமைந்துள்ளது

நந்தா விளக்கனைய நாயகனே! நானிலத்தோர்
தந்தாய் தனியறத்தின் தாயே! தயாநிலையே
எந்தாய் இகல்வேந்தர் ஏறே! இறந்தனையே
அந்தோ இனிவாய்மைக்கு ஆர் உளரோ!!

என்பது அவர் பாடிய பாடலின் ஒரு பகுதியாகும்.

துரைக்கண்ணனிடம் 'ஆழ்ந்திருக்கும் கவியுள்ளம்' உண்டு; இதழுக்காகவே பல கவிதைகள் புனைந்தவர்; இலக்கியம் பயின்ற காரணத்தால் அவரது படைப்பிலக்கியத்தில் கவிதையின் ஆளுமை ஓரளவு இருந்துள்ளது தொடக்க காலத்தில் தாம் எழுதிய புதினங் களிலும் சிறுகதைகளிலும், நாடகங்களிலும் பழந்தமிழ்ச் செய்யுள்

களை ஆங்காங்கே எடுத்தாண்டுள்ளார். தொடக்கத்தில் செந்தமிழ் நடை பயின்று வரும்படியாகவே எழுதியதால், அதில் கவிதையின் செல்வாக்கு கைவரப் பெற்றிருந்ததைக் காண இயலுகிறது.

அவரின் இலக்கிய நடைக்கு 'முல்லை' என்ற சிறுகதையையும், புருடோத்தமன் அல்லது கோனாட்சியின் வீழ்ச்சி என்ற புதினத்தையும் சான்று காட்டலாம். அவரது 'எழுதாத ஓவியம்' என்ற நாடகம் கவிதை நடை செறிந்தது. தமிழ்த்தும்பி என்ற பெயரில் அவர் தொடர்ந்து எழுதி வந்த இலக்கியக் கட்டுரைகளிலும் அத்தகைய கவின்மிகு நடையைக் காணலாம் இவையெல்லாம் கவிநுகர்ச்சி மிக்கவர் அவர் என்பதையே நமக்குப் புலப்படுத்துகின்றன.

இந்திய விடுதலை நாளன்று சென்னை வானொலியில் அன்றைய முதலமைச்சர் ஓமந்தூர் பி இராமசாமி ரெட்டியார் தலைமையில் கவியரங்கம் நடந்தபோது, துரைக்கண்ணன் முயற்சியால் கவிஞர் தமிழ் ஒளியும், தொ மு.சி ரகுநாதனும் கவியரங்கேறினர். அவ்விருவரும் அதன்பின் தமிழகத்தில் நல்ல கவிஞர்களாகத் திகழ்ந்தனர் இவ்வாறு கவிஞர்களை ஊக்கியது, துரைக்கண்ணனிடம் இருந்த கவி நுகர்ச்சித் திறமே!

மேடையில் பாடுதற்கென்றே இசைப்பாடல்கள் சிலவற்றைப் புனையலானார் அவற்றை எம்.எஸ். சுப்புலட்சுமி, தண்டபாணி தேசிகர், வி வி. சுப்பிரமணியம் முதலானோர் பாடித் துரைக் கண்ணனின் பாடலுக்குப் பெருமை சேர்த்தனர் இதயகீதம், அருட்கவியமுதம், திருமயிலைக் கவிராயர் கவிதைகள் ஆகிய கவிதை நூல்களை இயற்றியுள்ளார் துரைக்கண்ணன் கவிதைத் துறையில் மிகக் குறைவான நூல்கள் எழுதியிருப்பினும் கடலனையக் கவிதைத் தாகம் அவருக்குள் இருந்துள்ளது! ஆழ்ந்திருக்கும் கவியுள்ளம் காணவல்லதோ?

# 4

# இலக்கியம் பற்றி...

படைப்பாளர்கள் தம் படைப்புகளை வெளியிடும் போது கருத்தியலை முன்னுரையில் தெரிவிப்பது வழக்கம் அம்முன்னுரைகள் வழியே படைப்பாசிரியரின் எண்ணங்களும் நோக்கங்களும் தெரியவரும். படைப்பின் நோக்கம் எவ்வகையிலாயினும் முன்னுரையில் வெளியிடப்பெறும். பெரும்பான்மையான முன்னுரை களில் இலக்கியம் பற்றிய தகவல்களும், நாவலாசிரியரின் கருத்து வெளிப்பாடும் சமூகச் சிந்தனையும் இடம் பெறுதல் மரபாகும். உலகப் புகழ் பெற்ற முன்னுரைகள் பல உள்ளன பல முன்னுரைகள் நல்ல இலக்கியமாகவும் திகழ்ந்துள்ளன. துரைக்கண்ணன் இலக்கியப் படைப்புப்பணியோடு நிற்காமல், பொதுநல அமைப்புப் பணிகளிலும் தொடர்ந்து செயல்பட்டவர் அவர் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள் இலக்கியம், சமுதாயம் சார்ந்தவை களாக இருந்துள்ளன இவருடைய எழுத்து, பேச்சு ஆகியவற்றின் வழியே கலை, இலக்கியம் பற்றிய சிந்தனைகளை அறிய முடிகிறது

இலக்கியம் பற்றிய கருத்துக்களில் துரைக்கண்ணன் கண்ணோட்டம் செய்யும்போது வாழ்வியல் குறிக்கோளையே முன்னின்று நோக்கியுள்ளார் எனத் தெரிகிறது குறிக்கோள் உடையதே இலக்கியம் என்ற கருத்தை ஏற்றுக் கொண்ட அவர், 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்பதை வலியுறுத்தியே இலக்கியத்திற்குப் பொருள் காண்கிறார்

> இலக்கியம் என்பதற்கு உயிர் என்ற ஒரு பொருள் உண்டு. உய் என்ற தாதுச் சொல் உய்த்தல், என்றாகி இறுதியில் உயிர் என்றாயிற்று. உய்த்தல் என்றால் மேல் நோக்கிச் செலுத்துதல் என்று பொருளாகும். எனவே உயிராகிய இலக்கியத்துக்கு மக்களை ஓர் உயர்ந்த இலட்சியத்தில் செலுத்தும் ஆற்றல் இருக்கவேண்டும். அவ்விதம் மக்களை மேலான குறிக்கோள் நோக்கி உய்க்கக்கூடிய இலக்கியங்களே மக்களுக்கு வழங்கப் படவேண்டும்.

என்ற கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறார், வாழ்க்கையை மேம்படுத்த

உயர்ந்த குறிக்கோளை அளிப்பதே இலக்கியத்தின் இலக்கு என்பதை இதனால் அறிந்து கொள்ள முடிகிறது இதனைப் பின்னும் வலியுறுத்துவதாக,

> நல்ல இலக்கியத்துக்கு இருக்கவேண்டிய முக்கியமான நான்கு அம்சங்களில் சொல் நயம், பொருள் நயம், கற்பனை ஆகியவற்றுடன் மக்கள் உள்ளத்தை உயர்த்தும் பண்பு என்ற ஒன்று உயிர் போன்றதாகும். விழுமிய பொருள் பெற இலங்குவதே இலக்கியமாகும்.

என்று அவரது கூற்று அமைகிறது. பாரதி பாடல்களில் கருத்தூன்றிய துரைக்கண்ணன், எழுத்தும் தெய்வம், எழுதுகோலும் தெய்வம் என்ற சிந்தனையை மேற்கொண்டும், செய்யும் தொழிலைத் தெய்வமாக மதித்தும் போற்றி ஒழுகியவர் எழுத்தாளனுக்குரிய கடமையைத் தொழில் பற்றோடு ஆற்றவேண்டும் என்ற சிந்தனை உடையவர்.

> பிழைப்புக்காகப் பொருள் தேடுவதொன்றை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு எழுதாமல், தன் இலக்கியப் படைப்புக்களால் வையக மக்களைப் பாலித்திட வேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத் துடன் உண்மை யான எழுத்தாளன் இலக்கியத் தொண்டு புரிந்து வருகிறான்.... எழுத்தாளன் இலக்கியப் படைப் பொன்றைப் படைத்து முடித்ததும் அவனுக்கு ஏற்படுகிற தொழில் இன்பம் அளவிட்டுச் சொல்ல முடியாத தொன்றாம்.

என வானொலியில் அவர் நிகழ்த்திய உரை எழுத்தாளனுக்குரிய பண்பையும், படைப்பாண்மையில் அவனுக்கு இருக்க வேண்டிய கடமையையும் பொறுப்புணர்ச்சியையும் உணர்த்துகிறது

அறிவையும் ஒழுக்கத்தையும் எழுத்தானது உயர்வு படுத்தவேண்டும் என்பது அவரது நல்லெண்ணம் எழுத்துத் தூய்மை, எண்ணத் தூய்மை ஆகிய இவற்றால் இலக்கியம் உயர்ந்ததாகவும், குறிக்கோளுடையதுவுமாகிச் சமுதாயத்திற்கு நலம் பயக்கும் என்பதை அவ்வப்போது வலியுறுத்தியவர் துரைக்கண்ணன். இலக்கியத்தின் நிலைபேறு அதன் உயர்விலே உள்ளது என்று கூறுகிறார்.

> 'எழுத்தாளர்கள் உயர்ந்த படைப்புக்களாகவே உருவாக்க வேண்டும்.அப்போதுதான் இலக்கியங்கள் நீடுழி வாழும்'

என எழுத்தாளர் சங்கத்தொடக்கவிழா ஒன்றில் அவர் பேசியதை இங்கு எடுத்துக் காட்டுவது பொருந்தும்.

யாருக்காக எழுதுகிறோம்? எதற்காக எழுதுகிறோம்? என்று ஒருகணம் சிந்தித்தால், அக்கேள்விகள் மக்களுக்கே என்று விடை கூறும் சமுதாய மக்களை மறந்த இலக்கியம் இலக்கியமாகாது என்ற கருத்து யாவரும் அறிந்த ஒன்று மக்களின் வாழ்க்கை முறைகளைக் காட்டும் இலக்கியம் மக்களுக்கு நல்ல படிப்பினைகளை ஊட்ட வேண்டும் என்ற கருத்துடைய்வர் துரைக்கண்ணன்.

> மக்களுக்காக இலக்கியம் என்ற கருத்துடையவன் நான்;சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டு அதன் முன்னேற்றத்திற்காகத்தான் இலக்கியம் படைக்கப்பட வேண்டும்

என்பது அவரது ஆணித்தரமான கூற்று

இலக்கியம், வெறும் பொழுது போக்குக்காக இருப்பதன்று, பொழுது தானாகப் போகும் அதனை யாரும் போக்க வேண்டிய தில்லை.' என்று இராஜாஜி குறிப்பிடுவார் பயன் பாடுடையதே இலக்கியம் என்ற சிந்தனையை அவர் முன்வைப்பார் காந்திய நெறியில் வந்த இராஜாஜியைப் போலவே, இலக்கியம் பயனுடைய தாக அமையவேண்டும் என்பவர் துரைக்கண்ணன்

> இலக்கியம் வெறும் பொழுது போக்குச் சாதனமல்ல. இலக்கியம் பாட்டுக் கச்சேரி,பந்தாட்டம், நாடகம், நடனம், சினிமா முதலியன போன்று பொழுது போக்குக்குக்குரியதாயிருந்தால், அது இலக்கியம் என்று பெயர் பெற முடியாது. மக்களுக்கு அறிவு இன்பம் ஊட்டுவதற்கும் மனித வாழ்வின் இலட்சியங்களை உள்ளத்தில் பதியவைப்பதற்குமான சாதனமே இலக்கியம் என்பது என் கருத்து.

என்ற கூற்று, கலை வாழ்க்கைக்காக என்னும் கருத்தை அடியொற்றியது. காந்திய, மார்க்சிய, திராவிட இலக்கியக் கோட்பாடுகள் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் இலக்கியம் மக்களுடையதே என்ற கருத்தை முன்வைப்பனவாம்.உள்ளடக்கத்தை முதன்மைப்படுத்துவதே அவற்றின் நோக்கம் இலக்கியத்தில் கருத்து முழக்கமாகிய பிரச்சாரம் தலைதூக்கக் கூடாது; இலக்கியம் என்பது பிரச்சாரத்திற்கு அன்று; அது ஓர் அழகு கலை வெளிப்பாடு என உருவவாதிகளும், கலைநேர்த்தி யாளர்களும் எண்ணுவதுண்டு.

ஒரு காலத்தில் திராவிட இயக்கப் படைப்புகள், வெறும் கொள்கைப் பிரச்சாரமே என்று சொன்னதுண்டு இயக்க வழியிலான படைப்புகள் தம் கொள்கைகளை இலக்கியப்படைப்பாகத் தரும்போது, அதில் பிரச்சாரம் நுழையாமல் இருக்க முடியாது.

இலக்கியத்தில் அது முனைப்பாகத் தெரியக் கூடாது. வெளிப் படையாக இல்லாமல் கலை நேர்த்தியில் அது செறிந்து இருத்தல் வேண்டும் என்ற கூற்றும் திறனாய்வுலகில் உண்டு. துரைக்கண்ணன் இவ்விரண்டு கருத்து களுக்கும் மதிப்புத் தருகிறார்.

> *இலக்கியமே ஒரு பிரச்சாரம்தான். மக்களுக்கு அறிவு இன்பம் பயப்பதும் மக்களின் வாழ்க்கைப் பிரச்சனை களுக்கு வழிகாட்டக் கூடியதுமான இலக்கியம் ஒரு விதத்தில் பிரசார சாதனம் என்பதில் ஐயமில்லை... எந்தக் கருத்தை அல்லது கொள்கையை எடுத்து இலக்கியம் வாயிலாக இயம்புவதால் இருந்தாலும் இலக்கிய மரபு, நயமும் குன்றாமல் இருக்கவேண்டும். இலக்கியத்தை முழுக்க முழுக்கப் பிரசங்க மேடையாக்கி விடக்கூடாது.*

எனக் குறிப்பிடும்போது கருத்தை வலியுறுத்தும் போக்கிற்கு முதன்மை தந்துள்ளார் எனலாம். அதே சமயம் கலை உணர்வோடும் இலக்கியம் படைக்கப்படவேண்டும் என்பதிலும் கருத்திருத்துகிறார். இவை இரண்டுமே துரைக்கண்ணன் படைப்புகளில் கலந்து மிடைந்து செறிந்து இருப்பதனை அவரது படைப்புகளைப்படித்தோர் உணர்ந்து கொள்வர்.

இலக்கியம் படைப்பதில் பழமையையும் புதுமையையும் போற்றுவர் சிலர். சிலர் பழமையைப் பெரிதும் போற்றிப் பேணிக் கொள்வதும், சிலர் புதுமையையும் மாற்றத்தையும் ஏற்றுப் போற்றுவதும் கண்கூடு. துரைக்கண்ணன் பழமையில் பற்றுடையவர்; புதுமையைப் போற்றுபவர். பழைய இலக்கியங்களை மறவாது போற்றும் மாண்பினர் புதுமையான கருத்தோட்டங்களிலும் ஈடுபாடு உடையவர் இவ்விரண்டையும் கலந்து தம் படைப்புகளைப் படைத்தளித்துள்ளார். பழமைக்குப் பழமையாயும், புதுமைக்குப் புதுமையாயும் இருந்து இலக்கியம் படைத்தவர்; பழைமையின் ஆணிவேரை அறிந்து கொண்டே புத்திலக்கியத்தில் பொலிவு சேர்த்துள்ளார். எழுத்தாளன், மரபைப் போற்ற வேண்டும் என்ற இயல்பு உடையவர்.

காலமாறுதலுக்கு ஏற்ப இலக்கியம் உருவாக வேண்டும் என்பதும் இன்றியமையாதது என்று கருதினார். இவற்றை மனத்திட்கொண்டு சில கருத்துக்களை முன் வைக்கிறார்.

> *கால தேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப இலக்கியங்கள் உருவாவது இயற்கை. அவ்வக்கால மக்களின் அறிவு வளர்ச்சி, பண்பாட்டுக்கு இயைந்தவாறு இலக்கியம் படைக்கப் பட்டால்தான் இலக்கியம் இயற்றப்படுவதன்*

> இலட்சியம் நிறைவேறும். மக்களின் வயதுக்கும் வளர்ச்சிக்கும் ஏற்றவாறு ஆடைகள் தைத்து அணிந்து கொள்ளுவது போல, இலக்கியங்களும் அவ்வக்கால நிலைக்கேற்பப் படைக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட வேண்டும்

எனக் கருத்துரைக்கிறார். மேலும்,

> பழைய இலக்கியங்களை நிரம்பப் படித்து ஆராய்ந்து தேர்ந்தால் புதிய இலக்கியங்களைப் படைக்கும் ஆற்றல் உண்டாகும்.

எனவும் கூறிப் பழமையைப் போற்றுகிறார் துரைக்கண்ணன் பழைய இலக்கியங்களில் ஆர்வமும் ஈடுபாடும் கொண்டதோடு மறைமலையடிகள் போன்ற தமிழறிஞரிடம் பாடம் கேட்டவர் இதனால்தான் துரைக்கண்ணன் படைப்புகளில், சங்க இலக்கியம், பக்தி இலக்கியம் முதலானவற்றிலிருந்து மேற்கோள் காட்டிப் பேசும் கதைமாந்தர்களைக் காணமுடிகிறது.

படைப்பில் கற்பனை, உண்மை ஆகிய இரண்டையும் கலந்து தரும் துரைக்கண்ணன், உண்மையைக் கலையாகக் காட்டுவதையே இலக்கியமாகக் கொள்கிறார். 'உண்மைக் கதைகள்' மனித இதயத்தைப் பண்படுத்தி உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்வனவாய் அமையும்', என வலியுறுத்தியுள்ளார் 'யதார்த்தம் என்ற பெயரில் மனித வாழ்க்கையை அப்படியே தோலுரித்துக் காட்டுவது இலக்கியத்திற்குப் பொருந்தாது' என்கிறார் 'சமூக நிகழ்வில் காணப்படும் 'ரஸாபாசங்களை', அப்படியே சித்திரித்துக் காட்டுவது கூடாது', என்பது அவரது எண்ணம்.

# 5
# பத்திரிகையாளர்

இதழாசிரியராக முப்பதாண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி வந்த பெருமைக்கு உரியவர் துரைக்கண்ணன். ஆனந்த போதினியிலும், பிரசண்ட விகடனிலும் ஆசிரியராக இருந்த காலங் களில் கடமை தவறாது உழைத்து வந்த அவர், தமிழ் நாட்டில் எழுத் தாளர் பலரை உருவாக்கிய சிறப்புக்கும் புகழுக்கும் உரியவரானார். இதழ்ப்பொறுப்பு அவருக்குக் கிடைத்த பின்னர், இடைவிடாத முயற்சியும் உண்மையான ஈடுபாடும் கொண்டு இதழை உருவாக்கினார்.

தமிழ்நாட்டில் மிகுதியாக விற்பனையான அன்றைய கால கட்ட இதழ்களுள் ஆனந்த போதினியும் ஒன்று. அவ்விதழ் வணிகநோக்கில் ஒரு புதுமையைச் செய்தது அவ்வக்காலப் பின்னணியை இது தொடர்பாக எடுத்துக்காட்டும் எம். தேவசகாய குமார்,

> *உலகப்போரும் தொடர்ந்து நடந்த தீவிர அரசியல் கிளர்ச்சிகளும் பத்திரிகை வாசிக்கும் பழக்கத்தைப் பாமர மக்களிடையே அதிகரிக்கச் செய்தன. பட்டணத்தில் குவிந்து கொண்டிருந்த நடுத்தர வர்க்கத்தினரின் பொழுது போக்கிற்கும் பத்திரிகையின் சேவை தேவைப் படலாயிற்று. உப்புச் சத்தியா கிரகம் போன்ற அரசியல் கிளர்ச்சிகள் வலுத்தபோது, பத்திரிகைகளைச் சின்னச் சின்ன ஊர்களிலும் ஏஜெண்ட் வைத்து விற்பனை செய்யும் வழக்கம் தோன்றியது. பத்திரிகைகள் சந்தா தாரர்களையே நம்பியிருக்கும் காலம்போய், இலாபகரமான தொழிலாக மாறுவதற்கான எல்லாச் சூழ்நிலைகளும் இங்குத் தோன்றலாயின. அவை பெரும்பாலும் அஞ்சல்வழி வியாபாரத்தின் கேட்லாக்குகளாகத்தான் வெளிவந்தன...*
>
> *(தமிழ்ச்சிறுகதை வரலாறு பக்.46)*

எனத் தெரிவித்து ஆனந்தபோதினியும் அவற்றில் ஒன்று என்கிறார் வணிக உத்தி மூலம் வெகுசன இதழாக இருந்து அதிகமாக விற்ற

இவ்விதழ், ஆரணி குப்புசாமி முதலியார் எழுதி வந்த தொடர்கதை மூலமும் விற்பனையைக் கூட்டியது. துரைக்கண்ணன் ஆசிரியராகப் பொறுப்பேற்ற பின்னரும் அதன் விற்பனை கூடிற்றே ஒழியக் குறையவில்லை ஓர் இதழுக்குரிய வெகுசனக் கூறுகள் இருப்பினும் அதில் வெளிவந்த படைப்புகள் மக்களைப் பெரிதும் ஈர்த்தன. எல்லாக் கூறுகளும் பொருந்த அமையினும், தகுதியான படைப்புகளை வெளியிடுவதில் கவனம் செலுத்தத் தொடங்கியது.

துரைக்கண்ணன் பிரசண்ட விகடனில் ஒரு சமயம் தெரிவித் திருந்த செய்தி, ஆனந்தபோதினிக்கும் பொருந்தும்.

> *வெறும் பொழுதுபோக்கு என்ற நிலையிலிருந்து மாறிச் சிறந்த அரசியல், இலக்கியம், உயர்ந்த நகைச்சுவைக் கட்டுரைகள் வெளிவரும் முறையில் ஒரு நல்ல மாறுதலை ஏற்படுத்திய பெருமை சில பத்திரிகைகளுக்கு உண்டு. அவற்றில் (பிரசண்ட) விகடனும் ஒன்று... விகடன் கூடுமானவரை தரமான கதைகளையும் கவிதைகளையுமே கொடுக்க முயல்வான்.*
>
> *(பிரசண்ட விகடன் ஏப்ரல் 1954)*

என்று கூறியிருப்பதிலிருந்து அவருடைய வெளிப்பாடு நமக்குப் புலனாகும் ஆசிரியப் பணியிலிருந்து பொறுப்பாற்றியதனை 'ஆத்மசுத்தியோடு' செய்து வந்ததாகச் சுட்டியுள்ளார். ஓர் இதழுக்கான தயாரிப்பு எப்படி அமைந்திருக்க வேண்டும் என்ற சிந்தனை அகத்திலும் புறத்திலும் இருந்து கொண்டே இருக்குமாறு பத்திரிகைப் பணி புரிந்தவர் அவர்

சிறுகதை, நாவல், நாடகம், கவிதை, கட்டுரை, கடிதம், மொழிபெயர்ப்பு, ஆராய்ச்சி, வாழ்க்கை வரலாறு, விமர்சனம், தலை யங்கம் முதலியவற்றில் கவனம் செலுத்தித் தமது பன்முக ஆற்றலைக் காட்டுதற்கு இதழைக் கருவியாகக் கொண்டிருந்தார். பிரசண்ட விகடனிலும் ஆனந்த போதினியிலும் வெளிவந்த அவரது தலையங் கங்கள், அரசியல், சமுதாயம் ஆகியவற்றை அனல் பரக்க அலசும் படி இருக்கும் கருத்துத் தெளிவோடும், துணிவான நெஞ்சோடும் அவற்றை எழுதிவந்தார். ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்தும், பிரிட்டிஷ் போக்கைக் கண்டித்தும் எழுதி வந்த அவர், இந்தியா விடுதலை அடைந்த பின்னரும் நாடு எங்கே போய்க் கொண்டிருக்கிறது என்பதைச் சாட்டையடியாக உணர்த்தும் தலையங்கங்களாக எழுதித் தம் எழுத்தாண்மையைக் காட்டினார். நாட்டுப்பற்றிலும் மொழிப் பற்றிலுமான அவரது கருத்துக்கள் வரவேற்பினைப் பெற்றிருந்தன சமுதாய விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் தலையங்கங்களும் அவ்வாறே.

**தலையங்கம்**

காந்தியத்தைப் போற்றும் துரைக்கண்ணன் காந்திய நெறிகளைப் பல்வேறு கோணங்களில், அரசியல், சமுதாயம், சமயம் ஆகிய தளங்களில் நின்று தலையங்கமாக ஆக்கியுள்ளார்.

> *பெயரளவுக்கு அவர் பெயரை அடிக்கடிச் சொல்வதாலோ அவர் தினத்தைக் கொண்டாடுவதாலோ, மட்டும் காந்தி அடிகளுக்கு மதிப்புக் காட்டுவதாகாது. வணக்கம் செலுத்துவதாகாது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறையே பிறக்கக் கூடிய பெரிய மகானான காந்தியடிகளை நம் ஒப்பற்ற தலைவராகப் பெறும் பேறு பெற்ற நாம், அவருக்கு உண்மையான அன்பு காட்டி நாமும் நல்வாழ்வு வாழ வேண்டுமானால், பிறநாட்டு மக்களும் பாராட்டக் கூடிய பெருமை பெறவேண்டுமானால் காந்திய நெறி நின்று நல்வாழ்வு வாழ்வதுதான்*
>
> *(காந்தியம் வாழ்க - அக் 6; 1953 -பிரசண்ட விகடன்)*

என்ற தலையங்கத்தில் தமது காந்தியப் பற்றைத் தெரிவிப்பதோடு, நல்வாழ்வு பெற நாட்டுமக்களுக்கு அருமருந்து காந்தியமே என்று கூறியுள்ளார். தம் காந்தியப் பற்றை இறுதிவரை விடாது வாழ்ந்தவர் அவர்.

துரைக்கண்ணனின் அரசியல், சமூகத் தலையங்கங்களில் நடுநிலையான கண்ணோட்டம் நிறைந்திருக்கும் பண்டித மாளவியா, தாழ்த்தப்பட்டவர்களுக்கான ஆலய நுழைவு குறித்து விதித்த நிபந்தனையைப் பற்றிய தலையங்கம், 'மந்திரத்தால் மாங்காய் விழுமா?' என்ற தலைப்பில் வெளி வந்தது.

> *டாக்டர் அம்பேத்கர் நமக்கு இந்து மதம் தேவை இல்லை சமத்துவம் அளிக்கும் வேறுமதத்தைத் தழுவ முனைவோம் என்று முழக்கம் செய்தது நாசிக் ஜில்லாவில் தான். இந்த முழக்கம் இந்தியாவெங்கும் கேட்டது... சமீபத்தில் மாளவியாஜி போன்றவர்கள் தீண்டாமை விலக்கின் பொருட்டுத் தீவிரமாய் ஈடுபட்டு வருவதற்கும் டாக்டர் அம்பேத்கர் பேச்சேதான் காரணம். பண்டித மாளவியாஜி அவர்கள் டாக்டர் அம்பேத்கர் பேச்சை மதிப்பற்றதாகச் செய்வதற்கே அதி தீவிரமாய் முயன்று வருகிறார். தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கல்வி வசதியும் பொருளாதார நிலை உயர்வுக்கு வழியும் ஏற்படுத்திக் கொடுத்தால் அவர்களின் நிலைமை வெகு விரைவில் உயர்ந்துவிடும். என்பதில் ஐயமில்லை. காந்தி யடிகள் தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வியறிவைப் பெருக்கு*

> வதிலும் கைத்தொழில் வசதிகளை ஏற்படுத் துவதிலும் கருத்தைச் செலுத்தி வருதல் பெரிதும் கவனிக்கத் தக்கதாகும். மாளவியாஜி அவர்கள் வெறும் மந்திர தீக்ஷைகளிலும், ஹிதோபதேசங்களிலும் காலத்தைக் கடத்தாமல் காந்தியடிகளோடு ஒத்துழைப்பதன் மூலம் உருவான வேலையில் ஈடுபடவேண்டும். மந்திரத்தால் மாங்காய் விழாது என்பதை விரிக்கவும் வேண்டுமா?
>
> *(பிரசண்ட விகடன். 1954)*

என்ற தலையங்கம், காந்திய நெறியில் தாழ்த்தப் பட்டோர்க்கான ஆக்கங்கள் செயல்படுத்தப்பெற வேண்டும் என்ற உணர்வை விதைப்பதோடு, மாளவியாவின் உள் நோக்கத்தையும் தெரிவிக்கிறது

துரைக்கண்ணனின் கருத்தியல் கோட்பாடுகளில் பெண் களுக்கான முன்னேற்றமும் ஒன்றாகும் தமது படைப்புகளில் பெண்மாந்தர்களை உளங்கொளுமாறு படைத்து, அவர்களின் வாழ்வியலை அவலம் நிறைந்ததாய் - ஆடவருலகம் அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதாய் உருவாக்கி இரக்கங்கொள்ள வைப்பதைப் பார்க்கலாம் பெண்கள் கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் உயர வேண்டும் என்பது அவரது அவா.

'அல்லி ராஜ்யம் உதயம்' என்ற தலையங்கம், பெண்களின் சம உரிமையையும் முன்னேற்றத்தையும் வலியுறுத்துகிறது.

> ஐரோப்பாவில் பெண்கள் தங்கள் உரிமையை நிலைநாட்டிப் போராட்டம் நிகழ்த்தியது போல், இந்தியப் பெண்மணிகள் போராட மாட்டார்கள் என்று உறுதியாகக் கூற முடியுமா? ஆகவே ஆடவர்கள் தாராள மனப் பான்மையோடு அல்லாவிடினும் தங்கள் தற்காப்புக்கும் சுயநலத்துக்குமாகவாகிலும் - பெண்மணிகளுக்குச் சமத்துவ உரிமையளிக்க முந்திக் கொள்ள வேண்டுவது அத்தியாவசியம்
>
> *(பிரசண்ட விகடன் ஏப்ரல் 1936)*

பெண்களுக்கான சமத்துவத்தைப் போற்றியுள்ளமையும், ஆடவர் களின் இதுகுறித்த செயற்பாடுகள் எவை என்பதையும் இத் தலையங்கம் வழி உணர்த்தியுள்ளார்.

மொழிப்பற்று மிக்க துரைகண்ணன் பல தலையங்கங்களில் அது தொடர்பான செய்திகளை அவ்வப்போது எழுதி வந்துள்ளார். தமிழ், தமிழ்நாட்டில் எத்தகைய நிலையை அடைந்து வருகிறது என்பதை அது குறித்த கட்டுரைகளிலும், தலையங்கங்களிலும் விளக்கமாகவும், அழுத்தம் தந்தும் வெளிப்படுத்தியுள்ளார் தமிழ் ஆட்சிமொழியாதல் வேண்டும், கோயில்களில் தமிழ்வழிபாடு வேண்டும் கல்வியைத்

தாய்மொழி வழிக் கற்பிக்க வேண்டும், பாடத் திட்டங்களில் தமிழ் இடம்பெறவேண்டும் என்பன போன்ற கருத்துகளைத் தம் தலையங் கங்களில் தீட்டியுள்ளார். அதேபோல் தமிழ் இலக்கியத்தை உலகறியச் செய்வதிலும் மிகுந்த அக்கறை செலுத்தியதோடு, எவ்வகையிலும் தமிழைப் பழிப்பவரைக் கடுமையாகச் சாடுவதையும் காணலாம்.

தமிழ் ஆட்சிமொழியாக வேண்டும் என்ற கருத்தை ஆனந்த போதினியில் விளக்கும் துரைக்கண்ணன், பிறமொழிச் சொற்களைக் களைந்து, எல்லோர்க்கும் புரியும் விதத்தில் தமிழில் கலைச் சொற்களை உருவாக்குவதற்கு முயல வேண்டும் என்பதை முன்மொழிகிறார்.

> *தாய்மொழியில் விஞ்ஞானம் முதலிய விஷயங்களுக்குச் சரியான வார்த்தைகள் கிடைக்க வில்லையானால், எளிதாகப் புரியக் கூடிய வகையில் புதுச் சொற்களை ஆக்கவேண்டும். அது சாத்திய மில்லாமல், அன்னிய மொழியில் வழங்குவதையே தமிழ்ப்படுத்தி உபயோகிக் கலாம். அன்னிய மொழியை அறவே உபயோகிக்கக் கூடாது என்பது விஞ்ஞானம் முதலிய கலைச் சொல் விஷயங்களில் சரியல்ல; விஞ்ஞான முதலிய விஷயங் களுக்கு உபயோகிக் கத்தகுந்த தமிழ்ச் சொற்கள் இருந்தும் அவற்றை உபயோகிக்காமல் அநாவசியமாக, சோம்பேறித் தனமாக அன்னிய மொழிகளை உபயோகிக்க முற்படு வோர் பெற்ற தாய்க்குத் துரோகம் செய்தோராவர்.*
>
> *(ஆனந்தபோதினி ஏப்ரல் 14,1955)*

கலைச் சொற்களை உருவாக்க வேண்டும் என்ற கருத்தை இப்பகுதியில் அவர் கூறும்போது, அதற்கான முயற்சிகளிலும் தமிழர் இறங்கிச் செயல்பட வேண்டும் என்பதையும் தெரிவிக்கிறார்; தமிழர் (அறிஞர்களின்) நிலை கண்டு சாடியுள்ளதையும் கவனிக்க வேண்டும். அன்றைய நாளிலே இத்தகு மொழி உணர்வையும், தமிழுக்கு நேர்ந்துள்ள நிலையையும் எண்ணியுள்ளார்

தமிழுக்குத் தொண்டு செய்யும் உணர்விலும், அதன் மேனிலை ஆக்கத்திலும் தமிழர்கள் செயல்படாமலும், குன்றிப்போயும் உள்ளதாகக் கருதும் அவர், தமிழர்கள் மொழிப்பற்றில் கவனம் செலுத்தக் கோருகிறார். ஒரு சமயம், தமிழக வரவு - செலவுத் திட்டத்தின்போது, அமைச்சர்கள் விளக்கமும் பதிலும் தமிழில் அளித்ததைக் கீழ்க்காணுமாறு குறிப்பிட்டுள்ளார்.

> *சென்னை சட்டசபையில் நடந்த பட்ஜெட் விவாதத்தின் போது மந்திரிகள் அங்கத்தினர்களுக்குத் தமிழிலேயே*

> பதிலளித்தும் விளக்கம் கொடுத்தும் இருக்கிறார்கள். இந்த மாறுதலைக் காண நம்மில் சிலருக்குத் தாங்கவில்லை. மொழிப் பற்றும், இனப்பற்றும் மிகவுடைய மலையாளி களும், கன்னடர்களும் தங்களுக்குள்ள சலுகைகளை இழந்துவிட விரும்பவில்லை.
>
> *(ஆனந்த போதினி, மார்ச் 14, 1955)*

என்ற கருத்து மொழிபற்றிய உணர்விற்கும் இனம் பற்றிய சிந்தனைக்கும் சான்றாகும்.

இலக்கிய ஒருமைப்பாட்டையும், இந்திய இலக்கியம் என்ற ஓர் உருவாக்கத்தையும் வளர்க்க வேண்டும் என்ற முனைப்பைத் துரைக்கண்ணன் ஒரு தலையங்கத்தில் வெளிப்படுத்தியுள்ளார்.

> இந்திய மொழிகளில் வழங்கிவரும் முக்கிய மொழி களிலும் உண்டாகி இருக்கும் இலக்கிய வளர்ச்சியை நன்றாக அறிந்து ரசித்து அனுபவிக்கக்கூடிய வசதி களையும் அரசாங்கமும் பி.இ.என் போன்ற செல்வாக்கு வாய்ந்த ஸ்தாபனங்களும் செய்து தரவேண்டும்.
>
> *(பிரசண்ட விகடன் 1.5.1954)*

என இந்திய இலக்கிய வளர்ச்சிக்குரிய ஆக்கச் சிந்தனையை அத்தலையங்கத்தில் விளக்கிச் செல்கிறார்.

எந்தக் கருத்துகளையும் துணிவோடு தெளிவுறுத்தி அறிவுறுத்தும் போக்கினைத் தலையங்கத்தில் காணமுடிகிறது அரசியல், சமுதாயம் சமயம், பொருளாதாரம், கலை, இலக்கியம் பற்றிய அனைத்துத் துறைகளிலும் தம் கருத்தை வன்மையாக எடுத்துக் கூறி நடுநிலையான முடிவுகளை இறுதிப்பகுதியில் பெய்து தலையங்கத்தை நிறைவு செய்வது வழக்கம். மாணவர்கள் அரசியல்வாதிகளின் பிடியில் சிக்கி எவ்வாறெல்லாம் அவர்களைப் பகடைக்காய்களாக ஆக்கிக் கொண்டு தங்களை முன்னேற்றிக் கொள்கிறார்கள் என்பதை,

> மாணவர்களின் வரம்பு மீறிய செயல்களுக்கும் அவர்களிடையே காணப்படும் கட்டுக்கடங்காத தன்மைக்கும் பல காரணங்கள் உள்ளன. ஆனாலும் சுதந்திரம் கிடைத்த பின் பட்டம் பதவியாசை பிடித் தலைந்து வரும் அரசியல்வாதிகளும், பல கட்சித் தலை வர்களும் தங்களுடைய சுயநல விருப்பங்களைப் பூர்த்தி செய்து கொள்வதற்காகக் கையாளும் 'தகிடு தத்தங்கள்' அவர்களை உபயோகப்படுத்தி வருவதுதான்.
>
> *(ஆனந்தபோதினி மார்ச் 14, 1954)*

என இவ்வாறு சுட்டிக்காட்டியிருப்பது அன்றைய மாணவருலகைப் பற்றிய மதிப்பீடாகும்.

தமிழர் பண்பாடு பற்றிச் சிந்திக்கும்போது சமூகக் கண்ணோட்டம் சிறந்த முறையில் வெளிப்படுத்தப் பெறுகிறது. அவருடைய கட்டுரைகள் பலவாறான துறைகளில் ஆழ்ந்து நோக்கப்பட்டுள்ளன. எளிய நடையில் தெளிவாக விளக்கிச் செல்லும் பாங்கில், ஒவ்வொன்றையும் சிந்தித்து எழுதியுள்ளார். தமிழரின் எண்ணங்கள் சிலவகைகளில் இன்னும் கூர்மையடையாதிருக்கின்றது என்ற ஆதங்கத்தைத் தமிழரின் வழிபாட்டுணர்வில் எடுத்துக் காட்டுகிறார். 'தமிழுக்கு எதிரி தமிழரே' என்ற கட்டுரை ஒன்றில், தெரிவிக்கும் கருத்தை இங்குச் சுட்டலாம்.

> கோயில்களில் ஆண்டவனுக்கு அருச்சனை செய்வது மக்களுக்குத் தெரிந்த தமிழிலேயே இருந்தால் நன்றாயிருக்கும் என்று சொன்னால், இத்தகைய குதர்க்கப் புத்தி கூடாது என்று தமிழர்களிலேயே பலர் கூறுகின்றனர்.... நம் நாட்டுக்கு, நம் இனத்துக்கு, நம் மொழிக்கு, நம் கலை நாகரிகத்துக்கு அன்னியர் யாரும் விரோதிகளில்லை. அவர்கள் விரோதிகளாயிருந்து நமக்குக் கேடு இழைக்க முடியாது. நம்மவர்கள்தான் விரோதிகளாக இருந்து வருகிறார்கள்.
>
> *(ஆனந்தபோதினி மே 15, 1950)*

என்ற சிந்தனை எந்தக் காலத்திற்கும் பொருந்தக்கூடிய ஒன்றே!

## கலை இலக்கியத் திறனாய்வு

துரைக்கண்ணனின் கலை இலக்கியத் திறனாய்வுகள் போற்றத் தக்கவை. 'நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க்கு அணி என்பது போல, காய்தல் உவத்தல் இன்றித் தம் கருத்துக்களை எடுத்துக் கூறியுள்ளார் இன்னார் இனியார் என்று பார்க்காமல் கலை, இலக்கியத் திறனாய்வுகளை விளக்கமாகவும், ஆணித்தரத்தோடும், கூர்மையான பார்வையோடும் ஆழ்ந்து நோக்கி எழுதக் கூடியவர் என்பதை உணர முடிகிறது. திரைப்படம், நாடகம் முதலியவற்றைத் துணிவோடு திறனாயும் பாங்கு வியக்க வைக்கிறது

கலை பற்றிய திறனாய்வுகள் நான்கு பக்கங்கள் கூட விரிந்து சென்றுள்ளன. விரிவாகவும் விளக்கமாகவும் திரைப்படம்/நாடகம் இவற்றைப் பற்றி ஒவ்வொரு கூறினையும் கவனத்தோடு அலசி ஆராய்ந்து கருத்து முடிவுகளைப் பளிச்சென்று உணர்த்தியுள்ளமை எண்ணிப் பார்க்கக் கூடியது காட்சி, நடிப்பு, ஒளிஒலி அமைப்பு, இயக்கம் ஆகிய தொழில் நுட்பங்களையெல்லாம் நுணுகி நோக்கி ஆராய்ந்து எழுதியுள்ளார் எத்தகைய பெரிய படத் தயாரிப்

பாளராகவோ, நடிகராகவோ இருப்பினும் அவர்களுக்கு இணங்கி விடாமல், தம் நிலைப் பாட்டிலிருந்து இறங்கிவிடாமல் தமக்கென்று முத்திரை பதிக்கும்படியான திறனாய்வுகளை எழுதி வந்தவர் அவர்.

மனோகரா படத்தில் (சிவாஜி நடித்த படம் வேறு) பம்மல் சம்பந்த முதலியார் நடித்தார் சிறந்த நாடக ஆசிரியரான அவர், புருடோத்தமன் என்ற பாத்திரத்தில் நடித்தார். அவரைப்பற்றி எழுதுகிறார்:

> கிழஅரசன் புருடோத்தமனாக திரு.சம்பந்த முதலியார் வேடம் தரிப்பதற்குத் தகுதி வாய்ந்தவரே. ஆயினும், பட்ட மகிஷியிருக்க தோழி வசந்த சேனையைக் காதற்கிழத்தியாகக் கொண்ட அரசனுக்குரிய உடற்கட்டு இவரிடமில்லை. இவர் முகத்தில் திரை விழுந்து உடல் தளர்ச்சி யுற்றுக் காணப்படுகிறார். அதனாலேயே இவரால் ராஜனுக்குரிய கம்பீரத்தைக் காட்ட முடியவில்லை என நினைக்கிறேன். புருடோத்தமன் வசந்தசேனையோடு சரச சல்லாபம் செய்து கொண்டிருக்கையில் முகபாவத்திலும் பேச்சிலும் இவர் காதலுணர்ச்சியை இன்னும் நன்றாக வெளிப்படுத்தி இருக்கலாம். முதலியார் புருடோத்தமனாக நடிக்காது டைரக்ட் செய்யும் அளவோடு நின்றிருக்கலாம்.

என நாடகப் பேராசானாக விளங்கிய பம்மல் சம்பந்த முதலியாரை திறனாய்வு செய்துள்ளார் அன்றைய கால கட்டத்தில் மிகப் பிரம்மாண்டமாகத் தயாரிக்கப்பட்ட புகழ்பெற்ற படமான ஜெமினியின், 'ஔவையார்' பலரது கடும் திறனாய்வுக்கு உள்ளானது இப்படத்தில் நடித்த புகழ்மிக்க பாடகரான கே பி. சுந்தராம்பாள் பற்றித் துரைக்கண்ணன்,

> கே.பி.சுந்தராம்பாளுக்குக் கிழப்பருவத்துக்கு ஏற்ப முகச்சுருக்கங்கள் தோன்ற மேக்கப் செய்திருக்க வேண்டும். தலை நரையை மட்டும் படிப்படியாகக் காட்டி வந்திருக்கிறார்கள்.... ஔவை பாத்திரத்தையே நையாண்டி செய்வது போலிருந்தது. அவர் பேச்சும் நடையும் சுந்தராம்பாள்தான் எனச் சொல்லுகிறதே ஒழிய, ஔவையை நினைவுபடுத்தவில்லை. அவர் ஔவை யாராக நடிக்கச் சிரமம் எடுத்துக் கொள்ளவே இல்லை. பாட்டினாலேயே பேர் வாங்கிவிடலாம் என்ற பெருமிதத் துடன் வேஷத்தைக் கூடச் சரியாகப் போட்டுக் கொள்ளாமல் திரையில் தோன்றுகிறார்.

எனச் சுட்டியிருப்பதை நோக்கத் தம் கருத்தை எழுதுவதில் அவருக்கிருந்த துணிவையும் துல்லியப் பார்வையையும் காண

முடிகிறது. காட்சிகளைக் கவனித்து எழுதும் திறனாய்வுக்கு 'தேசிங்கு ராஜன்' படத்தில் வரும் ஒரு நிகழ்ச்சியை எடுத்துக் காட்டியுள்ளார்.

> மகமத்கான் (ஸ்ரீ.வி.எஸ்.மணி) மணவறையில் இருக்கும் போது தேசிங்கு சண்டைக்குப்பின் புறப்படும் செய்தி வருகிறது. அந்த 'லிகிதத்தை' வாங்கிப் படிக்கிறான், மகமத்கான். பூமாலைதான் முகமுழுவதையும் மறைந் திருக்கிறதே. எவ்வாறு கடிதத்திலுள்ள விஷயத்தைப் படிக்க முடிந்தது? இது சமயோசித நடிப்பிலுள்ள குறை அல்லவா?

என எழுதிச் செல்கிறார்

1954 இல் வெளிவந்து பாடலே இல்லாத படமாக வரவேற்பைப் பெற்ற அந்த நாள் படத்தைப் பற்றி எழுதும்போது, 'வெற்றிப்படமான இப்படத்தில் ஒலியின் அமைப்பை வேண்டிய அளவுக்குப் பயன்படுத்திக் கொள்ளவில்லை டைரக்டர் பாலச்சந்தர்' (வீணை பாலசந்தர்) எனச் சுட்டியுள்ளமை நுணுக்கமான திறனாய்வுப் பார்வையாகும். அதேபோலச் சில படங்களுக்கு மிகவும் கடுமையான திறனாய்வு எழுதியுள்ளமையையும் காணலாம்

> என்னுடைய துரதிருஷ்டம் 'தாரா தசாங்கம்', தமிழ்ப் படத்தை எவ்வகையிலோ பார்க்கும்படி நேர்ந்து விட்டது. இப்படத்தைப் பற்றி விமர்சனம் எழுத என் கை கூசுகிறது.

எனவும், இல்லறஜோதி (1954) படம் பற்றி,

> 1954 ஆம் ஆண்டில் இல்லறஜோதி கதை போன்ற பைத்தியக்காரக் கதையை (கதையில் வரும் கதாநாயகன் பைத்தியம் அல்ல) இப்படிப்பட்ட கதையைக் காரண மின்றி ஆதரிக்கும் நாம்தான் பைத்தியம்.

எனவும், ஔவையார் (1953) படம் பற்றி,

> முக்கியமான நிகழ்ச்சிகளையெல்லாம் விட்டுவிட்டு நடக்காததும் நம்பத்தகாததும் நடக்க முடியாததுமான கட்டுக்கதைகளை மட்டுமே பொறுக்கி எடுத்துப் படம் தயாரித்திருக்கிறார்கள். நம் நாட்டு அறிஞர்கள் ஔவையார் என்ற முதிர்ந்த அறிவுக்கு ஓர் உருவம் கற்பித் திருக்கிறார்களே. அந்த உயர்ந்த சித்திரத்தைச் சின்னா பின்னப் படுத்திவிட்டார்கள் ஜெமினி கோஷ்டியினர்.

எனவும் எழுதிக் கலைக் கண்ணோட்டத்தில் தமது துணி வாண்மையைப் புலப்படுத்தியுள்ளார்.

கலைத் திறனாய்வாளர் என்ற முறையில் துரைக்கண்ணனைப் பற்றி 18 12 60 இல் பம்பாய் தமிழ்ச்சங்கக் கூட்டத்தில் டி கே. எஸ்

சண்முகம் பேசியதை இங்கு எடுத்துக் காட்டுவது பொருந்தும்.

> *கலை இலக்கியங்களை விமர்சனம் செய்வதில் கல்கியும் ஜீவாவும் ஈடு இணை யற்றவர்கள்; இருவருக்கும் ஒரு சிறு வேற்றுமை என்ன வென்றால், கல்கி சிலரிடம் தாட்சண்யம் காட்டி எழுதுவார்; ஜீவா எழுதும் விமர்சனத்துக்குத் தாட்சண்யத்திற்கே இடமிருக்காது*
>
> *(பிரசண்ட விகடன் ஏப்ரல் 15, 1961)*

என்று பேசியிருப்பதிலிருந்து துரைக்கண்ணனின் 'பேனா ஆளுமை' எத்தகைய கூரியதான பார்வையைத் துணிவோடு எழுதி வந்தது என்பதைக் காட்டும்.

## கட்டுரைகளின் வகை

துரைக்கண்ணன் கட்டுரைகள், காலத்தின் தேவை கருதி இதழ்களில் அவ்வப்போது வெளிவந்தன. அவை பல தரப்பட்ட நோக்கின; லியோ, தமிழ்த்தும்பி, துரை, முதலிய பெயர்களில் கட்டுரைகள் எழுதினார்; இலக்கியக் கட்டுரைகள், பழஞ்செய்யுளின் காட்சிகள் ஆகியவை விளக்கமாக எழுதப்பட்டுள்ளன; பெரும் பாலும் சங்க இலக்கியக் காட்சிகள் 'தமிழ்த்தும்பி' என்ற பெயரில் வெளிவந்தன பயணக்கட்டுரைகளும் பிற கட்டுரைகளும் பல்வேறு புனை பெயர்களில் எழுதப்பட்டுள்ளன; பருந்துப்பார்வை, காலச்சக்கரம், அரிமா நோக்கு ஆகிய பகுதிகள், பிரசண்ட விகடனில் வெளிவந்த செய்தித் துணுக்குகளும், நாட்டு நடப்புகளும் ஆகும். இவற்றை 'லியோ' என்ற பெயரில் எழுதி வந்தார். கட்டுரைகள், பெரும்பாலும் தகவல்களை எளிய நடையில் தந்தன; அவற்றில் திறனாய்வுக் கண்ணோட்டமும் சமூகச் சிந்தனையும் ஒளிரக் காணலாம். துரைக்கண்ணன் தாம் பழகிய அறிஞர்களின் மறைவினை உணர்ச்சிகரமாகப் பதிவு செய்துள்ளதை இதழ்களில் காணலாம். கவிமணி இறந்தபோது ஈரிதழ்களில், 'புகழுடம்பு எய்திய கவிமணி' என்ற தலைப்பில் தம் தவிப்பையும் அவரோடு பழகிய நாள்களையும் குறித்துள்ளார்.

> *என் பேச்சும் மூச்சும் சில கணங்கள் செயலற்று நின்றே விட்டன; துக்கம் நெஞ்சை அடைத்து விட்டது; கண்ணீர் பார்வையை மறைத்து விட்டது; செவிகளில் வேறெதுவும் விழவே இல்லை; பஞ்சபூதங்களும் ஒடுங்கிப்போய்த் தன்னுணர்வற்று இருந்தேன்*
>
> *(பிரசண்ட விகடன் 15.10.54)*

என எழுதினார். அடுத்த இருமாதங்களில் கல்கி இறந்தார். இராஜாஜி மண்டபத்தில் கவிமணிக்காக இரங்கற்கூட்டம் நடந்தது அக் கூட்டத்தில் கல்கி பேசிய பேச்சை, கல்கி இறந்துபோனபோது நினைவூட்டி எழுதிய துரைக்கண்ணன்,

> இராஜாஜி மண்டபத்தில் நடந்த இரங்கற் கூட்டத்தன்று கூட, கல்கி நான் முதலில் பேசி விடுகிறேன். மற்றவர்கள் பேசி முடிக்கும்வரை நான் உயிரோடு இருப்பேனா இருக்கமாட்டேனா என்று சொன்னாராம். கவிமணியின் அநுதாபக் கூட்டத்துக்கு அடுத்த நாளே கல்கி இறந்துவிட்டதை எண்ணி அவர் அவ்வாறு சொன்னதை ஒப்பிட்டுப்பார்க்கிறேன்
>
> *(பிரசண்ட விகடன் 15.12.1954)*

எனக் குறிப்பிட்டுள்ளார் வ ரா திரு.வி.க. ரசிகமணி, பாரதிதாசன் முதலிய அறிஞர்கள் இறந்ததுபற்றி உணர்வுடன் எழுதியுள்ளார். கையறு நிலைக் கட்டுரைகள் படிப்போரின் நெஞ்சம் கசியுமாறு செய்வன. கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும் மிக்கவராகவே விளங்கினார் துரைக்கண்ணன் துணிவும் நடுநிலைமையும் கொண்டு ஒவ்வொரு கட்டுரையும் அமைந்திருப்பினும் கூற வேண்டிய கருத்தை அமைதியாக ஆய்ந்து எழுதியுள்ளார் எனலாம். பொறுமையாக நாட்டு நடப்புகளையும், பிறவற்றையும் அறிந்து அவற்றைத் தக்க நேரத்தில் கட்டுரையாகப் படைத்து வழங்கியுள்ளதை ஒவ்வோர் இதழிலும் காண முடிகிறது. ஓர் எழுத்தாளனுக்கு இதழாளராகத் தகுதி உண்டு என்பதனை அவர் பணியாற்றிய ஈரிதழ்களின் வழியே சிறக்க அறியமுடிகிறது சிறந்த திறனாய்வாளரும், மார்க்சியக் கண்ணோட்டமும் நிறைந்த கலாநிதி கைலாசபதி 'இலக்கியமும் திறனாய்வும்', என்ற நூலில் தமிழறிஞர்கள் சிலரை வகைப் படுத்தியுள்ளார்

> நிதானம், நேர்மை, நுனித்து நோக்கும் திட்பம், நெஞ்சுறுதி ஆகிய சிறப்பியல்புகளினால் ஒருமைப் பாடுடையராய் இருக்கின்றனர்.
>
> *(இலக்கியமும் திறனாய்வும் பக். 163)*

எனக்கூறித் திறனாய்வாளர்கள் சிலரை 'முதலாவது உப பிரிவிலே', அடக்கியுள்ளார்; அவர்களில் துரைக்கண்ணனையும் ஒருவராகக் கருதியுள்ளார்.

மேற்கூறிய கருத்து எவ்விதத்திலும் முரணாகாவாறு துரைக் கண்ணனின் படைப்பாண்மையும், நெஞ்சுரமும் எழுத்துப்பணியோடு இரண்டறக் கலந்துவிட்டிருந்தன என்று கூறுவது பொருந்தும்

எத்தகைய இழப்புத் தமக்கு ஏற்படினும் நெஞ்சுறுதி தளராமல் பணியாற்றிய செயலைப் பலரும் போற்றியுள்ளனர்.

## முகம் காட்டும் முன்னுரைகள்

எழுத்தாளன் தன்னைப் பற்றியும் தன் எழுத்துகள் பற்றியும் பதிவு செய்யாமல் இருப்பதில்லை வெளிப்படையாகவும் குறிப்பாகவும் அவற்றை வெளிப்படுத்துவதுண்டு எழுத்தாளனின் உண்மை முகம் என்பதை இனம் காணுமாறு, எழுத்தாளர் சிலர் தம்மை அடையாளப்படுத்திக் கொள்வதுண்டு அப்படிப்பட்ட உண்மை முகத்தை, உள்ளார்ந்த உணர்வின் வெளிப்பாட்டை முன்னுரையின் முகாந்திரமாகக் காணலாம் எனவேதான், முன்னுரை என்பதே எழுத்தாளனின் முகவரி என்பதைக் கூறிக் கொள்ள நேருகிறது. பெர்னாட்சா போன்ற உலக அறிஞர்களின் முன்னுரைகள் நல்லதோர் இலக்கியமாகவும் அமைந்திருப்பதை எண்ண முடிகிறது.

துரைக்கண்ணன் தம் படைப்புகளுக்கும் பிறருடைய படைப்புகளுக்கும் அளித்த முன்னுரைகள் பல்வேறான போக்குகளில் அமைந்திருப்பினும் அவற்றில் வாழ்வியல் செய்திகள் வடிக்கப் பெற்றிருக்கும் ஆசிரியர் தம் நோக்கத்தையும் குறிக்கோளையும் கருத்தியலாகக் காட்டக் கூடிய முன்னுரைகள் அவை. அவற்றைத் தொகுத்தால் அதுவே சிறந்த முன்னுரை இலக்கியமாகக் கருதக் கூடிய அளவிற்கு மதிக்கப்பெறும். தமது நெஞ்சார்ந்த ஏக்க வெளிப்பாட்டைத் தம்மைச் சார்ந்த நிலையிலும், சமூக மறுமலர்ச்சி பற்றிய சூழலிலும் எடுத்துக்காட்ட விரும்பிய துரைக்கண்ணன்,

> *உலகியலையும் மக்கள் இயற்கையையும் நுணுகி ஆராய்ந்து சமுதாயத்தில் நிகழும் நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு கதைகளை எழுதி அவைகள் வாயிலாக மக்களின் இதயங்களைப் பண்படுத்த முயலவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடும் நம்பிக்கையோடும் இலக்கியச் சேவை செய்துவரும் நான், என் இலட்சியக் கொள்கைகள் நிறைவேற்றுவதற்கு நாடக உலகையும், சினிமா உலகையும் உறுதுணையாகக் கொள்ள எண்ணினேன். சனசமூக அமைப்பில் காணப் படும் குறைபாடுகளையும், ஊழல்களையும் எழுத்துச் சித்திரமாகத் தீட்டிக் காட்டும் என் கதைகள் நாடக மேடைகளிலும் வெள்ளித் திரைகளிலும் தத்ரூபமாக நடித்துக் காட்டப்படுமானால், மக்கள் உள்ளங்களில் நல்லவிதமான பெருமாறுதல் ஏற்பட்டு நான் கருதிய பலன்*

*எளிதில் நிறைவேறும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு*

என அவர் தம் கதை ஒன்றற்கு முன்னுரை தந்திருப்பதிலிருந்து அவரது கனவு புலனாகிறது. ஆனால் அக்கனவு அவர் காண விரும்பிய, திரை உலகக் கனவு'. எனவே, வெறுங்கனவாகவே போய்விட்டது. அவர் நினைத்திருந்த அந்த எண்ணம் (பெரு மாறுதலை ஏற்படுத்தும் என்றது) ஒரு வீண் கனவுதான்! எனினும் நோக்கம் மனத்தளவில் உயர்ந்ததாக இருந்திருக்கிறது. திரைப் படத்திற்குரிய கதையாக இருக்குமானால் அதனைத் தமக்கென்று தமதாகவே மாற்றி அமைத்துக் கொண்டு யார் பெயரிலேயோ வெளிவருவது திரை உலக மரபல்லவா? *நடுத்தெரு நாராயணன், காதலனா? காமுகனா?* உயிரோவியம், தாசி ரமணி முதலிய இவரது நாவல்கள், இவரது காலத்திலேயே திரைப்படமாகவும், நாவலாகவும் உருமாறிப்போய் வெளிவந்தன. இவர் எழுதிய கதைகளின் கரு ஒரு சிலரால் எடுத்துக் கொள்ளப்பட்டது உண்மை. தரங்கிணி நாவலின் முன்னுரையில் சமூக அக்கறையை முன்னிருத்தி - குறிப்பாகப் பெண்களின் முன்னேற்றத்திற்கும், அவர்களின் மேம்பாட்டிற்குமாகத் தமது கருத்தை வெளிப்படுத்தும் துரைக்கண்ணன்

> *பெண்கள் பிரச்னையும் பெண்களைப் பெற்றவர்களின் பிரச்னையும் முக்கியமாகத் திருமணப் பிரச்னையும் என்றும் மாறாதவையாக இருக்கின்றன. எனவே பெண்களின் திருமணப் பிரச்னைதான் என் கவனத்தில் அடிக்கடி தென் படுகின்றன. இப்பிரச்னையில் அவ்வப் போது எழும் சிந்தனைகள்தாம் பல கதைகளாக உருக்கொள்கின்றன.*

எனச் சுட்டிக் காட்டியிருப்பதிலிருந்து 'தரங்கிணி' படைப்பின் நோக்கம் புலனாகிறது. அவருடைய படைப்புகள் பிறவற்றிலும் ஊடு பொருளாய் இருப்பது. பெண்களுக்கு உரிய வாழ்க்கைச் சிக்கலே! கைம்பெண் துயரம், குழந்தை மணம், ஆடவரால் நேரும் கொடுமையும் அல்லலும் எனப் பல்வேறு பார்வைகள் பெண்கள் தொடர்பான கதைகள் எழுதத் தூண்டியதை அவருடைய முன்னுரையில் காணலாம்

உயிரோவியம் முன்னுரையில்;

> *உயிரோவியம் என்னுடைய இலக்கியப் பிரயாணத்தில் ஒரு மைல் கல். ஏறக்குறைய இருபத்திரண்டு ஆண்டுகளாக நடத்தி வரும் எனது இலக்கிய வாழ்வில் விதவிதமான அநுபவங்கள் ஏற்பட்டதுண்டு. ஆனால் உயிரோவியம் என் உள்ளத்தில் உருவானபோது உண்டான இன்ப அனுபவம் நூதனமானது'.*

எனச் சுட்டியதோடு (நாடக முன்னுரை) அதன் முடிவு குறித்து 'வாதப்பிரதிவாதம்' நடந்ததாயும் உணர்த்துகிறார். மக்களிடையே அது ஏற்படுத்திய பரபரப்பையும், புதுமையான முடிவையும் நோக்க அவருடைய இலக்கிய வாழ்வில் 'உயிரோவியம்' ஏற்படுத்திய விளைவு வியப்பைத் தருகிறது. எனவேதான், 'நாவலில் உள்ள உணர்ச்சி வேகத்தை நாடகத்தில் கொண்டு வருவது அவ்வளவு எளிதான காரியமல்ல' என்று எழுதியுள்ளார் துரைக்கண்ணன்.

வேலைக்காரி என்ற நாவல் 1938 இல் தொடராக வெளி வந்தது. அறிஞர் அண்ணாவும் இதே பெயரில் பின்னாளில் ஒரு நாடகம் தீட்டியுள்ளார் வேலைக்காரி நாவலின் முன்னுரையில் நாரண. துரைக்கண்ணன் கூறும்செய்தி பின்வருமாறு:

> *என் உள்ளத்தை ஒருங்கே கவர்ந்த உலக இலக்கியங்களில் லியோ டால்சுடாய் என்னும் உருசிய பேரறிஞர் எழுதிய* Resurrection *என்னும் நவீனமும் ஒன்றாகும். இதுபோன்று உன்னத வாழ்க்கைச் சித்திரத்தை வேறு யாரால் எழுத முடியும் என்று வியந்து கொண்டிருந்த சமயத்தில் தற்செயலாக* Hall cain *என்னும் ஆங்கில ஆசிரியர் எழுதிய* The Master of Man *என்ற நாவலைப் படிக்க நேர்ந்தது!.... மேற்குறித்த இரு நாவல்களைப் போல் தமிழிலும் ஒரு நவீனம் வந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்ற எண்ணமுண்டாயிற்று. இவ்வெண்ண முயற்சியின் பயனாக, என் சிந்தனை ஊற்றிலிருந்து கிளர்ந்து எழுந்த சிருட்டிதான் வேலைக்காரி என்னும் இந்த நவீனம் ஆகும்.*

எனச் சுட்டியிருப்பது தமிழ்ப் படைப்பு, மேனாட்டுப் படைப்புக்குச் சற்றும் குறைந்ததன்று எனச் சொல்லும் அளவிற்கு வரவேண்டும் என்பதை முன்மொழிந்துள்ளார்.

இவ்வாறு தம் எண்ணங்களை வாசகர்களுக்கு முன்னுரை வழி எடுத்துரைக்கும் துரைக்கண்ணன் உண்மையான வெளிப்பாட்டினை நேரடியாக உரைப்பதனை உணரலாம்.

துரைக்கண்ணன் ஆங்கிலமும் அறிந்தவர். இளம்வயதில் ஆங்கில நூல் படிக்கும் ஆர்வத்தை வளர்த்துக் கொண்டார். ஆங்கிலேயரே அக்காலங்களில் ஆங்கிலப் பாடங்களை நடத்தி வந்தனர் இலக்கியத் தாகம் கொண்ட துரைக் கண்ணன் ஆங்கில இலக்கிய நூல்கள் படிப்பதிலும் ஈடுபாடு உடையவராயிருந்தார் புதுமையான உரைநடை நூல்கள் படைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் எழுதிய அக்கால கட்டத்து எழுத்தாளர்கள் பலரும் ஆங்கிலக் கல்வியின் தாக்கத்தைப் பெற்றவர்களே ஆங்கிலத்

தழுவல்கள், மொழிபெயர்ப்புகள் தமிழில் வெளிவரத் தொடங்கின. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலுமாக இப்போக்கு காணப்பட்டது. அன்று முன்னணி எழுத்தாளர் என்று முத்திரை குத்தப்பட்டோர் ஆங்கிலத் தழுவலை அடித்தளமாகக் கொண்டிருந்தனர்

துரைக்கண்ணன் இதழ்களில் ஆசிரியராக ஆவதற்கு முன் பல இதழ்களில் எழுதி வந்தார். அவற்றில் பல்வேறு கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதி வந்தார் தமிழ் நாடு (வரதராசுலு நாயுடு-ஆசிரியர்) இதழிலும், கலாநிலையம் இதழிலும் ஆங்கில மொழி பெயர்ப்புக் கட்டுரைகளையும், தழுவல் கதைகளையும் துரைக் கண்ணன் எழுதி வந்தார். ரால்ப் வால்டோ எமர்சன் என்ற ஆங்கில மெய்ஞானி கருத்துகளைப் பல்வேறு கட்டுரைப் பொருள்களில் தொடர்ந்து மொழி பெயர்த்து எழுதினார்.

டி என். சேசாசலம், துரைக்கண்ணன் நட்பு மலர்ந்தபோது, முன்னவர் நடத்திய சிறந்த இலக்கிய இதழான கலா நிலையத்தில் எழுதி வந்தார். அதில் வெளி வந்த தழுவல் நாவலே 'புருடோத்தமன் அல்லது கோனாட்சியின் வீழ்ச்சி'யாகும். துரைக்கண்ணன் அதன் பின் ஆங்கில மொழி பெயர்ப்புக் கட்டுரைகள் ஒருசில எழுதி வந்தார். மொழியாக்கமாக நான்கு படைப்புகளை வெளியிட்டார். தம் உள்ளங்கவர்ந்த ஆங்கில நூல்களே மொழியாக்கத்திற்கு அவரைத் தூண்டின.

# 6
# எஞ்சி நிற்கும் புகழ்

சராசரி உயரத்தை விடச் சற்றே குறைவான உருவம்; பாட்டாளி வர்க்கத்துக்கே உரிய கருநிறம்; அந்நிறத்தை எடுப்பாக்கும் நீறு நிறைந்த நெற்றி. அகன்று விரிந்து சமூகத்தை ஊடுருவிப் பார்க்கும் கண்கள். முழங்கையைத் தாண்டி விரலுக்குக் குடைபிடிக்கும் முழுநீள ஜிப்பா. தும்பைப்பூ நிறத்தில் வெள்ளை வெளேர் என்றிருக்கும் கதர்வேட்டி; தோள்மேல் படுத்துக் கிடக்கும் கதர்த்துண்டு. இவைதாம் நாரண. துரைக்கண்ணனின் புறத்தோற்றம் -

வேட்டி கூட விலாசம் கேட்கும் வெள்ளை மனசு; கள்ளமில்லாத பேச்சு; கனிவாய் மற்றவர் பேச்சைக் கேட்கும் பெருந்தகைமை; எல்லோருக்கும் இனியவராய் இருக்கும் எளிய பண்பு. மானிட நேயத்தோடு எல்லோரிடமும் பழகும் அருமை; யாவரிடமும் பாகுபாடு காட்டாத பரந்த உள்ளம்; தம்மைவிட வயதில் சிறியவராக இருப்பவர்களிடம் காட்டும் தனி அன்பும், அக்கறையும் அத்தகையோரின் தகுதிகளை மதித்துப் போற்றிப் பாராட்டும் பண்பு; தம்மைக் காண வருவோரை வாசல் வரை வந்து வழியனுப்பும் பண்பாடு. இவை அவரது அகத்தோற்றம்.

இவற்றை எண்ணும்போது நாரண. துரைக்கண்ணன் நினைவுக்கு வருகிறார். அவருக்கிருந்த எழுத்துத் தாகம் கடல் போன்றது அது தணியாததாகவே இறுதிவரை இருந்துள்ளது. இலக்கியத் தாகத்திற் குரிய விடாய் தீராதல்லவா?

துரைக்கண்ணன் விட்டுச்சென்ற புத்தக பூமியில் இருந்து புறப்பட்டு வந்து நம்மோடு பேசுகிறார்கள் அவரது கதைமாந்தர்கள் நம்மோடு உறவாடுகிறார்கள் கற்பகத்தையும், காமாட்சியையும், நடராசன், தியாகராஜன் போன்றோரையும் மற்றும் நாதபிரம்மம் போன்றோரையும் மறத்தற்கு இயலுமா? இவர்களின் சாயல்களில் - பல்வேறு கதைமாந்தர்கள் வெவ்வேறு வகைகளில் பின்னர் எழுத வந்த கதாசிரியர்களிடம் காணப்படலாம். எழுத்தாளர் மறைந்த பின்னும்

அவர்கள் படைத்த மாந்தர்கள் உலவிக் கொண்டுதான் இருக்கிறார்கள் இத்தகைய திறன் படைப்பாளர்க்குக் கிடைத்த வெற்றியல்லவா?

ஓர் எழுத்தாளரை மற்ற எழுத்தாளரே நன்கு இனங்காண முடியும். அவ்வகையில் துரைக்கண்ணனை இனம் கண்டு உணர்த்திய எழுத்தாளர் பலர். அந்த அளவிற்கு அவரிடம் மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தனர்.

> இவருடைய நாவல்களும் கதைகளும் நாடகமும் கட்டுரைகளும் சிறப்பானவை. இவரைக் கொண்டாடுவது மூத்த தமிழ் எழுத்தைக் கொண்டாடிப் போற்றுவதற்கு ஒப்பாகும். காந்திய எழுத்துக் காலத்தின் எல்லையில் புகழ்மிக்க ஓரிடத்தைப் பெற்ற முதுபெரும் புலமை யாளரைக் கொண்டாடும் பெருமை துரைக்கண்ண னாரைக் கொண்டாடுவதன் மூலம் நமக்குக் கிடைக் கிறது. மேலும் முதியவர்க்கு நண்பர்; இளைஞர்களுக்கு ஆசிரியர்; சமூகத்துக்குத் தொண்டர். நட்புக்கு இனியவர்; நாடறிந்த பெரியவர்

என நாரண. துரைக்கண்ணனை மதிப்பிட்டுப் பாராட்டும் பேருள்ளம் கொண்ட தீபம். நா. பார்த்தசாரதியின் மனம் திறந்த சொற்கள் மிகைப் படுத்திச் சொல்லப்பட்டவை அல்ல. அந்தளவிற்கு நாரண. துரைக் கண்ணன் காந்தியின் பற்றாளராக இருந்ததோடு, சிறந்த பண்பாள ராகவும், மனிதநேயத் தொண்டராகவும், குறிக்கோள் நெறியை எழுத்தில் பதிவு செய்வதை நோக்கமாகக் கொண்டவராகவும் செயல் பட்டிருக்கிறார் என்பதை அறிய முடிகிறது. எழுத்துப்பணியை மட்டுமே தம் வாழ்வில் மூச்சாகக் கொண்டு வாழ்ந்து, தொண்ணூறு வயது வரை மண்ணில் உலவிய காலத்தில் அவர் விட்டுச் சென்றது தனிப்பட்ட புகழே! அது தமிழ் உள்ளளவும் நிற்கும்; நிலைக்கும்!!

> நாரண. துரைக்கண்ணன் எழுத்துக்களில் உயிர் இருக்கும்; ஜீவன் இருக்கும்; ஜீவாவின் புரட்சிமிக்க எழுத்துக்கள் இடம்பெறாத பத்திரிகைகளே தமிழகத்தில் இல... தமிழர்களில் இவர் எழுத்துக்களைப் படிக்காதவர்கள் மிகச் சிலரே. கல்கிக்கு முன்னாலேயே தமிழர்களைக் கதை படிக்க வைத்த கதாசிரியர் என்ற பெருமை இந்த ஜீவாவுக்கே உரியது.

என எழுபது வயது நிறைந்தபோது, துரைக்கண்ணனுக்குப் பாராட்டு விழா எடுத்த நிலையில், அவரைப் பற்றி வி.எஸ்.மணி மேற்கோளாகக் காட்டிய தமிழ்வாணனின் கருத்து, தமிழருள்ளங்களில் என்றும் பசுமையாக இருக்கும்

# பின் இணைப்பு

## துரைக்கண்ணன் படைத்த நூல்கள்

**நாவல்கள்**

புருடோத்தமன் அல்லது கோனாட்சியின் வீழ்ச்சி
தாசிரமணி
உயிரோவியம்
யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்?
காதலனா? காதகனா?
இவ்வுலகைத் திரும்பிப்பாரேன்
வேடதாரி
புதுமைப் பெண்
கோகிலா (கடிதம் விடு தூது)
நடுத்தெரு நாராயணன்
தும்பைப்பூ
வேலைக்காரி
தியாகத் தழும்பு
சீமான் சுயநலம்
தரங்கிணி
கண்ணழகி
மைத்துனி
காமப்பேய்
கொள்ளைக்காரன்
தரும பூஷணம்
இலட்சியப் புருஷன்

**சிறுகதைகள்**

முத்தம் படா அதரம்
சபலம்
ஹம்சா நந்தி
அழகாம்பிகை

ஜீவாவின் சிறுகதைகள் I & II
தேவகி
பார்வதி
மேனகா

**கட்டுரை நூல்கள்**

அரசியல் சிந்தனைகள்
அறிவுக்கு விருந்து
எழுத்தாளர் சகோதரர்களுக்கு
இலக்கியக் குரல்
தன்மதிப்பு
தமிழகத்தின் தனித் தலைவர்கள்
இயக்கத் தோன்றல்கள்
பல்லவபுரத்து அடிகள்
பம்பாயைப் பாரீர்
புதுடில்லியைப் போய்ப் பாருங்கள்
இலக்கியக் கதம்பம்
இலக்கியம் பலவிதம்

**நாடகங்கள்**

தீண்டாதார் யார்?
உயிரோவியம்
அகலிகை காதல்
புலிக்குப் பிறந்தது
கங்கை முதல் காஷ்மீர் வரை
சதுரங்கம்
மாணிக்கவாசகர்
திருவள்ளுவர்
திருவருள் பிரகாச வள்ளலார்
பந்த பாசம்
சீவக நம்பி

**கவிதை நூல்கள்**

திருமயிலைக் கவிராயர் கவிதைகள்
இதயகீதம்
அருட்கவி அமுதம்

**மொழியாக்கம்**

கண்ணன் ஞானோபதேசம்
சீமாட்டி கார்த்தியாயினி
சர்வ பரித்தியாகம்

**ஆராய்ச்சி நூல்கள்**

தமிழர் யார்?
ஏனாதி நாயனார் வரலாறும் காலமும்
சிவகாமி சரித ஆராய்ச்சி
சம்பந்தருக்கு முன்னும் பின்னும்
தமிழ் நாடகம்

**வாழ்க்கை வரலாறு**

இராஜாஜி சரிதம்
சுபாஷ் சந்திர போஸ்
பெரியார்
சங்கரர்
இராமானுஜர்
மாத்வர்
இராமகிருஷ்ணர்
விவேகானந்தர்
இராமதீர்த்தர்
வள்ளலார்
சாரதாமணி
அரவிந்தர்
ரமணர்
காந்தி
பாரதி

## வகித்த பதவிகள் - பொறுப்புகள்

| | |
|---|---|
| 1946-50 | தமிழ்நாடு தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் |
| 1947-48 | சென்னை கம்பன் கழகச் செயலாளர் |
| 1947-49 | தமிழ்நாடு பத்திரிகையாளர் பெருமன்றச் செயற்குழு உறுப்பினர் |
| 1949 | நடராசா கல்விக் கழகக் காப்பாளர் |
| 1949-52 | முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தலைவர் |
| 1950 | பாரதியார் சங்கச் செயற்குழு உறுப்பினர் |
| 1955-65 | சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத் துணைத் தலைவர் |

| | |
|---|---|
| 1960-62 | நாடகக் கழகத் துணைத் தலைவர் |
| 1963 | செங்கல்பட்டு மாவட்ட எழுத்தாளர் சங்கத் தலைவர் |
| 1966-71 | சென்னை மகாஜன சபை செயற்குழு உறுப்பினர் |
| 1972 | சென்னை மகாஜன சபை செயற்குழு உறுப்பினர் துணைத் தலைவர் |
| 1967 | தமிழக அரசு நாடகத் தேர்வுக் குழு உறுப்பினர் |
| 1972 | தமிழ்நாடு அரசு படத் தேர்வுப் பரிசளிப்புக் குழுத்தேர்வு உறுப்பினர் |
| 1973 | தமிழ் வாசகர் சங்கத் தலைவர்/ செங்கை மாவட்டக் கவிஞர் மன்றத் தலைவர் |
| 1974 | தமிழ்நாடு மக்கள் பேரவைத் துணைத்தலைவர் |

## பெற்ற விருதுகள் - பட்டங்கள்

| | |
|---|---|
| 1964 | செங்கை மாவட்ட எழுத்தாளர் சங்கக் கேடயம்/'கலைமாமணி' பட்டம் வழங்குதல் |
| 1965 | சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் பாரதி உருவம் பொறித்த கேடயம் வழங்குதல் /நடராசா கல்விக் கழக ஆண்டுவிழாவில் 'பேராசிரியர்' பட்டம் வழங்கப்பட்டது |
| 1971 | சென்னை பாரதி இளைஞர் சங்கம் பாராட்டெடுத்தல் |
| 1972 | அன்னை கலை இலக்கிய நற்பணி மன்றம் பணமுடிப்பு வழங்குதல்/ 'நற்கலை நம்பி' என்ற பட்டத்தை குன்றக்குடி அடிகளார் வழங்கிப் பொற்பதக்கம் அளித்தமை |
| 1974 | இலக்கியச் செம்மல் பட்டம் பெற்றமை தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றச் சார்பில் கலைஞர் |

மு.கருணாநிதி பொற்கிழி வழங்கியமை
1975 ரெயில்வே முத்தமிழ் மன்றத்தினர் புரட்சித் தலைவர் எம்.ஜி ஆரைக் கொண்டு பொன்னாடை போர்த்திச் சிறப்புச் செய்தமை/ முதல் மாநிலத் தமிழ்க்கவிஞர் மன்ற மாநாட்டில் வெள்ளிக் கேடயம் வழங்கப்பட்டமை
1995 தினத்தந்தி நிறுவனர் ஆதித்தன் நினைவாக ரூ 50,000 மும், தமிழ் முதறிஞர் விருதும் வழங்கப்பட்டன (28 / 09 / 1995)

## வரலாற்று நிகழ்வுக் குறிப்பு

1906 நடராசன் (துரைக்கண்ணன்) பிறப்பு - (ஆகஸ்டு - 24)

1924 முதல் கட்டுரை - (சரஸ்வதி பூசை) சுதேசமித்திரனில் வெளிவந்தது
1927 தீண்டாதார் யார்? நூல் வெளியீடு
1929 முதல் சிறுகதை (அழகாம்பிகை) ஆனந்தபோதினியில் வெளி. வந்தது
1931 புருடோத்தமன் அல்லது கோனாட்சியின் வீழ்ச்சி - நாவல்
1932 ஆனந்தபோதினி ஆசிரியர் குழுவில் இடம்பெறுதல்
1932 பெரியாரிடம் நட்பு ஏற்படுதல்
1934 யான் ஏன் பெண்ணாய் பிறந்தேன்? நாவல் வெளியீடு
1938 இராஜாஜி சரிதம் நூல் வெளியீடு /
1939 உயிரோவியம் தொடர்கதையாக பிரசண்ட விகடனில் வெளிவந்தமை
1942 உயிரோவியம் நூல்வடிவம் பெற்று 60,000 படிகள் விற்றமை

1944 முதல் தமிழ் எழுத்தாளர் மாநாடு, கோவை
1945 காந்தியடிகள் சந்திப்பு
1946 தமிழ்நாடு தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர்
1947 சென்னை கம்பன் கழகச் செயலாளர்
1948 தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் கவிமணியைப் பங்கேற்கச் செய்தல்
1949 பாரதி பாடல்களை நாட்டுடைமை ஆக்கியதில் பெரும்பங்கு வகித்தமை
1965 மணிவிழா
1977 எழுபது நிறைவு - எழுத்து வேந்தருக்கு எழுபது - (சிறுநூல் வி எஸ் மணி எழுதியது) வெளியீடு
1980 திரு வி.க விருது பெறுதல்
1982 துணைவியார் மறைவு
1996 துரைக்கண்ணன் மறைவு (மதியம் 12 10 மணி) (ஜூலை-23)

# பயன்பட்ட நூல்கள்

## நாரண. துரைக்கண்ணன் பற்றியவை

எழுத்து வேந்தருக்கு எழுபது - வி எஸ். மணி (1977)

நாடு போற்றும் நாரண துரைக்கண்ணன் - மு.பரமசிவம், கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை (1989)

நாரண துரைக்கண்ணன் - தி நா. அறிவு ஒளி

'ஜீவா' நாரண.துரைக்கண்ணன் - (தொகுப்பு) முகம். மாமணி திருக்குறள் பதிப்பகம், 66/1, பெரியார் தெரு,எம்.ஜி.ஆர் நகர், சென்னை-78 (1998)

# துணை நூல்கள்


அசோக மித்திரன் — **அசோகமித்திரன் கட்டுரைகள்** கலைஞன் பதிப்பகம் சென்னை (2001)

இராமலிங்கம் மா (எழில் முதல்வன்) — **புனைகதை வளம்** தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்க வெளியீடு சென்னை (1974)

கைலாசபதி. கலாநிதி — **இலக்கியமும் திறனாய்வும்** சென்னை புக் ஹவுஸ் (1981)

சாலை இளந்திரையன் — **சிறுகதைச் செல்வம்** தமிழ்ப்புத்தகாலயம், சென்னை (1974)

சீனிவாசன் முக்தா — **இணையற்ற சாதனையாளர்கள்** வானதி, சென்னை (2002)

சுந்தர ராஜன் (சிட்டி) பெ கோ.சிவபாத் சுந்தரம் — **தமிழ் நாவல் நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும்** கிறிஸ்துவ இலக்கியச் சங்கம் (1977)

சுந்தர ராஜன் (சிட்டி) பெ கோ சிவபாத சுந்தரம் — **தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும்** க்ரியா, சென்னை (1992)

தேவ சகாய குமார். எம் — **தமிழ்ச் சிறுகதை வரலாறு - I** ஜெயக்குமார் ஸ்டோர்ஸ், நாகர்கோயில் (1976)

ஜீவா என்னும் பெயர் கொண்ட **நாரண. துரைக் கண்ணன்**(1906-1996) எளிமையான குடும்பத்தில் பிறந்தவர்; அச்சுக்கோப்பாளராக வாழ்க்கையைத் தொடங்கிய இவர், இதழாசிரியராகச் சிறக்கப் பணியாற்றியவர். சிறுகதை, நாவல், கவிதை, நாடகம், கட்டுரை, மொழிபெயர்ப்பு முதலிய பல இலக்கிய வடிவங்களில் எழுதிப் புகழ் பெற்றார்; நூற்றுக்கணக்கான நூல்களைப் படைத்த இவர், எழுத்தாளர்கள் பலரை உருவாக்கிய எழுத்து வேந்தர். பன்முக ஆற்றல் பெற்ற துரைக்கண்ணனின் ஆளுமையை எளிய முறையில் விளக்க முயல்கிறது இந்நூல்.

**முனைவர் இராம. குருநாதன்**, சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறையில் முப்பது ஆண்டுகளாகப் பணியாற்றி வருபவர். பழந்தமிழ் இலக்கியம், நிகழ்கால இலக்கியம் ஆகியவற்றில் மிக்க ஈடுபாடு கொண்டவர். தமிழிலும் ஆங்கிலத் திலுமாக, சுமார் எழுபது கட்டுரைகள் படைத் துள்ளார். *குறிஞ்சிவளம், சங்கப்பாட்டும் ஜப்பானியக் கவிதையும், புறநானூறு - ஒரு புதிய பார்வை* ஆகியவை இவர் எழுதிய குறிப்பிடத்தக்க நூல்களாகும். இவர் இந்நூலில் நாரண.துரைக் கண்ணனின் பல்வேறு ஆளுமைகளைப் புலப் படுத்தியுள்ளார்.

*Narana.Duraikkanna(Jeeva)*(Tamil)

**Rs.25**

ISBN 81-260-1536-5

இருபத்திரண்டு இந்திய மொழிகளில் நூல்கள் வெளியிடும் சாகித்திய அக்காதெமி, உலகிலேயே மிகப் பெரிய வெளியீட்டகம்.